அரசு மைய அச்சகம், சென்னை - 600 079.

# ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

# கொள்கை விளக்கக் குறிப்பு

## மானியக் கோரிக்கை எண். 42

**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி**

**2017 - 2018**

**திரு. எஸ்.பி. வேலுமணி**

நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும்
சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்

©
தமிழ்நாடு அரசு
2017

## பொருளடக்கம்


| வ.எண் | | பொருள் | பக்கம் எண் |
| --- | --- | --- | --- |
| 1. | | **முன்னுரை** | 1 |
| 2. | | **ஊராட்சி நிர்வாகம்** | 11 |
| 3. | | **மாநில அரசுத் திட்டங்கள்** | |
| | 3.1 | முதலமைச்சரின் சூரிய மின் சக்தியுடன் கூடிய பசுமை வீடுகள் திட்டம் | 83 |
| | 3.2 | தமிழ்நாடு குக்கிராமங்கள் மேம்பாட்டுத் (தாய்) திட்டம் | 89 |
| | 3.3 | அம்மா பூங்கா | 93 |
| | 3.4 | அம்மா உடற்பயிற்சி கூடம் | 96 |
| | 3.5 | ஊரக உட்கட்டமைப்பு – சாலைகள் | 97 |
| | 3.6 | தமிழ்நாடு ஊரகச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் | 101 |
| | 3.7 | நபார்டு சாலைகள் | 103 |
| | 3.8 | ஒருங்கிணைந்த பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் | 109 |
| | 3.9 | சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் | 111 |

| வ.எண் | | பொருள் | பக்கம் எண் |
|---|---|---|---|
| | 3.10 | தன்னிறைவுத் திட்டம் | 118 |
| | 3.11 | முழு சுகாதார தமிழகம் – மாநில அரசின் முன்முயற்சிகள் | 121 |
| | 3.12 | ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாகங்கள் புனரமைத்தல் | 123 |
| | 3.13 | ஒருங்கிணைந்த ஆண்கள் சுகாதார வளாகங்கள் | 124 |
| | 3.14 | தூய்மையான கிராம இயக்கம் | 125 |
| | 3.15 | தனிநபர் இல்லக் கழிப்பறை அமைக்கப்படுவதில் அரசினால் மேற்கொள்ளப்படும் உத்திகள் | 126 |
| | 3.16 | ஊரகப் பகுதிகளில் திடக் கழிவு மேலாண்மைத் திட்டம் | 132 |
| | 3.17 | சமூக பொருளாதார மேம்பாட்டுத் திட்டம் | 139 |
| 4 | | **மத்திய அரசுத் திட்டங்கள்** | |
| | 4.1 | மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் | 142 |
| | 4.2 | பிரதம மந்திரி குடியிருப்பு திட்டம் (ஊரகம்) | 170 |
| | 4.3 | நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத்திட்டம் | 173 |

| வ.எண் | | பொருள் | பக்கம் எண் |
|---|---|---|---|
| | 4.4 | பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம் | 174 |
| | 4.5 | தூய்மை பாரத இயக்கம் ( ஊரகம்) | 178 |
| | 4.6 | தேசிய ரூர்பன் இயக்கம் | 182 |
| | 4.7 | நாடாளுமன்ற உறுப்பினர் மாதிரி கிராமத் திட்டம் | 187 |
| | 4.8 | தேசிய கரிமவாயு மற்றும் உர மேலாண்மைத் திட்டம் | 190 |
| 5 | | **மனித வள மேம்பாடு** | |
| | 5.1 | அரசிதழ் பதிவு பெற்ற பணியாளர் பணியமைப்பு | 194 |
| | 5.2 | பொறியியல் பணியமைப்பு | 195 |
| | 5.3 | முதுநிலை அலுவலர்களை பிற துறைக்கு மாற்றுப் பணியில் அனுப்புதல் | 197 |
| | 5.4 | அரசிதழ் பதிவு பெறாத பணியாளர் பணியமைப்பு | 198 |
| | 5.5 | திறன் மேம்பாடு | 204 |
| 6 | | **தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம்** | 229 |
| 7 | | **தமிழ்நாடு புது வாழ்வு திட்டம்** | 277 |

| வ.எண் | பொருள் | பக்கம் எண் |
| --- | --- | --- |
| 8 | பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதியத்தின் உதவியுடன் கூடிய சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் | 312 |
| 9 | வரவு செலவுத் திட்டம் 2017–18 | 327 |
| 10 | முடிவுரை | 329 |

# 1. முன்னுரை

# ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை
# கொள்கை விளக்கக் குறிப்பு
# 2017–18

## முன்னுரை

**“எங்களுடைய செயல் மற்றும் திட்டங்கள் அனைத்தும் மக்களுக்காகத்தான். எங்களுக்கென்று எந்த சுய நலமும் இல்லை; பொது நலன் மற்றும் மக்கள் நலன் மட்டும் தான்.”**

**– மாண்புமிகு முன்னாள் தமிழ்நாடு முதலமைச்சர்**
**புரட்சித் தலைவி அம்மா அவர்கள்**

கிராமப் புறங்களில் வசிக்கும் மக்களின் நலன் மற்றும் வளர்ச்சியே சமூகப் பொருளாதார கொள்கைகளை உருவாக்கி, அக்கொள்கைகளை நிறைவேற்ற பல்வேறு ஊரக வளர்ச்சித் திட்டங்களை வடிவமைக்க, இந்த அரசின் உந்து சக்தியாக திகழ்கிறது. நிலையான வாழ்வாதார வாய்ப்புகளை உருவாக்குதல் மற்றும் அடிப்படை உட்கட்டமைப்பு மற்றும் சேவைகளை ஊரகப் பகுதிகளில் வழங்குவதன் மூலம் வறுமையை ஒழிப்பதே, பல்வேறு ஊரக வளர்ச்சித் திட்டங்களின் முதன்மை நோக்கங்களாகும்.

முதலமைச்சரின் சூரிய மின்சக்தியுடன் கூடிய பசுமை வீடுகள் திட்டம் இந்த அரசின் சிறப்புமிக்க முயற்சிகளில் ஒன்றாகும். இத்திட்டம், கிராமப்புறங்களில் வீட்டு வசதி வாய்ப்புகளை ஏற்படுத்துவதோடு, பசுமை எரிசக்தியை ஊக்குவிக்கும் வகையிலும்

வடிவமைக்கப்பட்டுள்ளது. இது இந்த வகையில் நாட்டிலேயே செயல்படுத்தப்படும் முதல் திட்டமாகும். 2011–12 முதல் 2015–16 வரை, ரூ.5,940 கோடி மதிப்பீட்டில் 3 இலட்சம் பசுமை வீடுகள் கட்டப்பட்டுள்ளன. ஒவ்வொரு வீடும் 300 சதுர அடி பரப்பளவுடன் கட்டப்பட்டு, சோலார் விளக்குகளும் பொருத்தப்படுகின்றன. இத்திட்டம், 2016–17 ஆம் ஆண்டு முதல் மேலும் ஐந்தாண்டுகளுக்கு விரிவு படுத்தப்பட்டுள்ளது.

ஊரகப் பகுதிகளின் சமூகப் பொருளாதார வளர்ச்சியில் ஊரகச் சாலைகள் முக்கிய பங்காற்றுகின்றன. சாலைகள், ஊரகப் பகுதிகளுக்கு பல்வேறு சமூகப் பொருளாதார பலன்களை அளிப்பதன் வாயிலாக, வேளாண்மை சார்ந்த ஊரகப் பொருளாதாரத்தினை வலுவடையச் செய்கிறது. தமிழ்நாட்டில் 1.48 இலட்சம் கி.மீ. நீளமுள்ள ஊரகச் சாலைகள் உள்ளன. இந்த ஊரகச் சாலைகள் தொகுப்பின் மேம்பாட்டிற்கு, சீரான இடைவெளியிலும், உரிய நேரத்திலும் நிதி அளிப்பது மிகப் பெரிய சவாலாக உள்ளது. பல்வேறு திட்டங்களை ஒருங்கிணைத்து 2015–16ம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட தமிழ்நாடு ஊரகச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் (TNRRIS) மற்றும் இந்த அரசால் வடிவமைக்கப்பட்ட தமிழ்நாடு ஊரகச் சாலைகள் பராமரிப்புக் கொள்கை ஆகியன இந்த சவாலுக்கு தீர்வாக அமைந்துள்ளது.

2011–12 ஆம் ஆண்டு குக்கிராமங்களை அலகாகக் கொண்டு தமிழக அரசால் தமிழ்நாடு குக்கிராமங்கள் மேம்பாட்டுத் (தாய்) திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு செயல்படுத்தப்பட்டுள்ளது. வள ஆதாரங்களை விகிதாச்சார முறையில் பகிர்ந்தளித்ததன் மூலம் அனைத்து கிராம ஊராட்சிகளுக்கும் தாய் திட்டம் சமமான வாய்ப்பினை அளித்தது. தாய் திட்டம் 2011–12 முதல் 2015–16 வரை 5 ஆண்டுகளில் ரூ.3,680 கோடி நிதி ஒதுக்கீட்டில் 79,394 குக்கிராமங்களிலும் செயல்படுத்தப்பட்டுள்ளது. தாய் திட்டத்தின் கீழ் குடிநீர் விநியோகம், தெருவிளக்குகள், சாலைகள், சுடுகாடு / இடுகாடு, சுடுகாடு / இடுகாட்டிற்கு சாலை வசதிகள் போன்ற அடிப்படை வசதிகளும், அங்கன்வாடி மையம், பொது விநியோகக் கடை, சுய உதவிக்குழு கட்டிடம், கதிரடிக்கும் களம், விளையாட்டு மைதானம் மற்றும் இதர அத்தியாவசிய பணிகளும் எடுக்கப்பட்டுள்ளன.

அனைத்து குக்கிராமங்களிலும் அடிப்படை வசதிகள் பெரும்பாலான அளவில் நிறைவு செய்யப்பட்டுள்ள நிலையில், ஊரகப்பகுதி மக்களின் தேவைக்கேற்ப 2016–17ம் ஆண்டில் தாய் திட்டத்தின் முன்னுரிமைகள் மாற்றம் பெற்றன. அதற்கிணங்க, சிறுபாசன ஏரிகளை புனரமைத்தல், ஊரக,, சாலைகளை மேம்படுத்துதல், குடிநீர் விநியோகம், தெருவிளக்குகள், தெருக்கள் மேம்பாடு செய்தல் போன்ற அடிப்படை உட்கட்டமைப்பு பணிகள் எடுக்கப்பட்டுள்ளன.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தினை சிறந்த முறையில் செயல்படுத்த இந்த அரசு பல முயற்சிகளை எடுத்ததன் மூலம், தமிழ்நாடு, தேசிய அளவில், இத்திட்ட செயலாக்கத்தில் முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது. உடல் மற்றும் மன அளவிலான மாற்றுத்திறனாளிகளின் நலனுக்காக, தனித்துவம் வாய்ந்த ஒரு முயற்சியாக, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டப் பணிகளில் அவர்கள் பங்கேற்றிட ஏதுவாக சிறப்பு விலை விகித அட்டவணை அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த முயற்சிக்காக, 2012–13ம் ஆண்டு 'சமூக உள்ளாக்கம்' என்ற தலைப்பின் கீழ் சிறந்த மாநிலத்திற்கான தேசிய அளவிலான விருது தமிழ்நாட்டிற்கு கிடைக்கப்பெற்றது.

திடக்கழிவு மேலாண்மைப் பணிகளை மேற்கொள்ள மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தில் பணிபுரியும் பணியாளர்களை "தூய்மைக் காவலர்களாக" நியமனம் செய்து, தினசரி திடக்கழிவுகளை ஊரக குடியிருப்புகளிலிருந்து அகற்ற பயன்படுத்துவது இந்த அரசின் மற்றுமொரு தனித்துவம் வாய்ந்த முன் முயற்சியாகும். மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் உரக்குழிகளை அமைத்து, சேகரிக்கப்படும் கழிவுகள், மக்கும் மற்றும் மக்காத கழிவுகளாகப் பிரிக்கப்பட்டு, அவைகள் முறையே உரமாகவும், மறுசுழற்சிக்கும் பயன்படுத்தப்படுகின்றன.

சுற்றுச்சூழல் சீர்கேட்டின் தீய விளைவுகளைத் தடுக்க, பசுமைப் பரப்பை இந்த அரசு தொடர்ந்து

அதிகரித்து வருகிறது. புவி வெப்ப மயமாதல், மண் அரிப்பு மற்றும் சுற்றுச்சூழல் மாசுபடுவதை தடுக்கவும், உயிர் பன்முகத்தன்மையைக் காத்து உயிரியல் சமநிலையை பேணும் நோக்கத்திலும், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் மிக அதிக அளவில் காடு வளர்ப்புப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இத்தகைய காடு வளர்ப்புப் பணிகள், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் தனியாகவும், வனத்துறையோடு ஒருங்கிணைந்தும் மேற்கொள்ளப்படுகின்றன. ஊராட்சி/ வருவாய்த்துறைக்கு சொந்தமான மற்றும் பொது இடங்களிலும், சாலையோரங்களிலும் நிழல் தரும் மரக்கன்றுகள் நடும் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

சமூக, பொருளாதார மற்றும் உடல் நலம் சார்ந்த குறியீடுகளுக்கும் சுகாதார வசதிகளுக்கும் இடையே நேரடி தொடர்பு இருப்பதையும், ஊரக மக்களின் நல வாழ்விற்கு சுகாதாரம் அடித்தளமாக உள்ளது என்பதையும் இந்த அரசு நன்கு உணர்ந்துள்ளது. எனவே, தமிழ்நாட்டிலுள்ள வலுவான சமூக மூலதனமாகத் திகழும் மகளிர் சுய உதவிக்குழுக்கள், கிராம அளவில் சுகாதாரத்தை மேம்படுத்தும் நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். மேலும், சுகாதார நலனில் தொடர்புடைய துறைகளான சுகாதாரம் மற்றும் குடும்ப நலம், பள்ளி, கல்வி மற்றும் சமூக நலம் ஆகிய துறைகளின் களப்பணியாளர்களை ஒருங்கிணைத்து விழிப்புணர்வு மற்றும் மனமாற்ற நடவடிக்கைகளில் தீவிரமாக

ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இத்தகைய முன்முயற்சிகள் காரணமாக ஊரக சுகாதார நிலை கடந்த ஓராண்டில் 62 விழுக்காட்டிலிருந்து 73 விழுக்காடாக அதிகரித்துள்ளது.

தமிழ்நாட்டில் மகாத்மா காந்தி ஊரக வேலை உறுதித் திட்டத்துடன் இணைந்து தூய்மை காவலர்களை ஈடுபடுத்தி செயல்படுத்தப்படும் புதுமையான மாதிரி திடக் கழிவு மேலாண்மைத் திட்டத்திற்கு சிறந்த நடைமுறைக்கான நல் ஆளுமை விருது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 15.8.2016 அன்று வழங்கப்பட்டது. இத்திட்டம் தேசிய அளவில் பாராட்டுதல்களை பெற்றதுடன், மத்திய அரசு இத்திட்டத்தின் சிறப்பு அம்சங்களை பிற மாநில அரசுகளுக்கு அனுப்பி இதனை முன்மாதிரியாக கொண்டு செயல்படுத்த அறிவுரை வழங்கியுள்ளது. மேற்கண்ட முன்முயற்சிகள் நமது மாநிலத்தை ‘‘முழு சுகாதார தமிழகம்– முன்னோடி தமிழகம்’’ என்ற இலக்கினை நோக்கி விரைந்து செல்வதற்கு வழிவகை செய்துள்ளது.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், மகளிருக்கு நிதி சார்ந்த நடவடிக்கைகளுக்கு உதவி அளிப்பதின் மூலம் அவர்களின் சமூக பொருளாதார நிலையை மேம்படுத்தி மகளிரை அதிகாரப்படுத்துவதற்காக 1983ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. இந்நிறுவனம் மகளிர் திட்டம், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மற்றும் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கம் ஆகிய மூன்று முக்கிய திட்டங் களை செயல்படுத்தி வருகிறது. மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு சேமிப்பு பழக்கம் ஏற்படுத்துதல், அடிப்படை பயிற்சியை வழங்குதல், அவர்களுக்குள்

உட்கடன் பழக்கம் ஏற்படுத்துதல், வங்கிக்கடன் இணைப்பு தருதல், தொழில் வாய்ப்பு உருவாக்குதல் என பல்வேறு வழிகளில் துணை நின்று தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் அவர்களை ஊக்கப்படுத்தி வருகிறது. தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், மகளிர் சுய உதவிக் குழுவினரிடையே சேமிப்புப் பழக்கத்தினை ஏற்படுத்தி, அவர்கள் கடன் சுமையில் விழாமல் பாதுகாக்கிறது. மேலும் அவர்கள் வங்கிக்கடன் பெற்று வருமானம் ஈட்டக்கூடிய தொழில்கள் தொடங்கி, தங்கள் வாழ்வாதாரத்திற்கான வருவாயினை ஈட்டவும் ஊக்குவிக்கிறது.

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் விடுபட்ட ஏழைமக்கள் குறிப்பாக விதவைகள், கணவனால் கைவிடப்பட்டவர்கள், சமூகத்தில் விளிம்பு நிலையில் வாழும் மக்கள் ஆகியோரை சுய உதவிக் குழுக்கள் இயக்கத்திற்கு கொண்டு வந்து அவர்களின் வறுமையை முற்றிலுமாக நீக்கவும் இதற்கு துணை புரிகின்ற சமுதாய நிறுவனங்களை ஏற்படுத்தி அவைகளை வலுப்படுத்தியும், சமூக மூலதனம் மற்றும் நிதி உள்ளாக்கம் உள்ளிட்ட பல்வேறு நீடித்த வாழ்வாதார வாய்ப்புகளை ஏழைமக்களுக்கு உருவாக்கி அவர்களின் திறமையை வளர்த்து முழுமையாக வறுமையை ஒழிப்பதும் இதன் தலையாய நோக்கமாகும். இத்திட்டம் தமிழ்நாட்டில் உள்ள **265** ஊராட்சி ஒன்றியங்களில் **3** கட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

அடித்தட்டு அளவில் ஏழைகளுக்கான வலுவான நிறுவன அமைப்புகளை உருவாக்கித் தருவதன் மூலம்

நகர்ப்புர ஏழைக் குடும்பங்களின் ஏழ்மைமற்றும் நலிவுற்ற தன்மையினைக் குறைத்து, இலாபம் தரக்கூடிய சுய வேலைவாய்ப்பு மற்றும் திறன் வேலைவாய்ப்புகளைப் பெற்றுத் தர வழிவகை செய்து, அதன் பயனாக தொடர் வாழ்வாதார மேம்பாட்டினை உறுதி செய்வதே தீன் தயாள் அந்தியோதய யோஜனா – தேசிய நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் (DAY-NULM) நோக்கமாகும். இத்திட்டம் **2014–15** ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மத்திய அரசுத் திட்டமான தேசிய நகர்ப்புர வாழ்வாதார இயக்கம் **2015–16**ஆம் ஆண்டு முதல் மத்திய மற்றும் மாநிலஅரசுகளால் **60:40** என்ற நிதி விகிதாச்சார அடிப்படையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**2005** ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் துவக்கப்பட்ட தமிழ்நாடு புது வாழ்வு திட்டம் மாநிலத்தின் **26** மாவட்டங்களில் உள்ள **120** பின்தங்கிய வட்டாரங்களில் **4,174** ஊராட்சிகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. சமுதாயம் முன்னெடுத்துச் செல்லும் வளர்ச்சி அணுகுமுறை மூலம் மகளிரை ஆற்றல்படுத்துவதும், கிராமப்புற வறுமையை திட்டப் பகுதியில் குறைப்பதும் உலக வங்கி நிதியுதவியுடன் கூடிய இத்திட்டத்தின் நோக்கமாகும். சமுதாய அமைப்புகளை கட்டமைத்தல், அவைகளைத் தகுதிப்படுத்துதல், வங்கிகளின் வாயிலாக நிதி ஆதாரங்களுக்கு வழி காட்டுதல் மற்றும் வருமானம் ஈட்டக்கூடிய தொழில்களை ஊக்கப்படுத்தி ஏழைகளின் வாழ்வு நிலையை உயர்த்துதல் ஆகியன இத்திட்டத்தின்

முக்கிய குறிக்கோள்களாகும். மிகவும் ஏழை, ஏழை, நலிவுற்றோர் மற்றும் மாற்றுத்திறனாளிகள் போன்ற இலக்கு மக்களைக் கண்டறியவும், உதவி செய்யவும் புது வாழ்வு திட்டத்தின் சிறந்த செயல்பாடுகளில் ஒன்றாக மக்கள் நிலை ஆய்வு திகழ்கிறது. இத்திட்டத்தின் கீழ் சமுதாய அமைப்புகளான சுய உதவிக்குழுக்கள், கிராம வறுமை ஒழிப்பு சங்கங்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள், ஒத்த தொழில் குழுக்கள், ஒத்த தொழில் கூட்டமைப்புகள், மக்கள் கற்றல் மையங்கள் போன்றன ஆற்றலளிப்பு மற்றும் வறுமை நீக்கும் செயல்பாடுகளை மேற்கொண்டு வருகின்றன.

மாண்புமிகு முன்னாள் தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எண்ணியவாறு, அமைதி, வளம் மற்றும் வளர்ச்சிக்கான காலகட்டத்திற்கு தமிழகத்தை அழைத்துச்செல்ல, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை அர்ப்பணிப்புடனும், உறுதியுடனும் தனது கடமையினை தொடர்ந்து ஆற்றும்.

# 2. ஊராட்சி நிர்வாகம்

## 2. ஊராட்சி நிர்வாகம்

"உண்மையான ஜனநாயக இந்தியாவின் அடிப்படை அலகு கிராமம். ஒவ்வொரு கிராமத்தின் மக்களாலும் கீழிருந்து உண்மையான ஜனநாயகம் உருவாக்கப்பட வேண்டும். என்னால் உருவகிக்கப்படும் கிராம அலகு என்பது வலிமையிலும் வலிமையானது. இத்தகைய அலகுகள் சுயசார்பு அடிப்படையில் நன்கு அமைக்கப்பட்டால் இவைகள் தங்களுடைய சிறப்பான தன்மையை வெளிப்படுத்தும். இப்படிப்பட்ட ஒரு சிறந்த மாதிரி கிராமத்தை ஒருவர் உருவாக்கினால், அவர் இந்த நாட்டிற்கு மட்டுமல்ல, அகில உலகத்திற்கே ஒரு மாதிரி அமைப்பினை உருவாக்கி கொடுக்கிறார்".

– மகாத்மா காந்தி

தமிழ்நாட்டில் சுமார் 1000 ஆண்டுகளுக்கு முற்பட்ட வரலாற்று காலத்திலேயே வளர்ச்சி அடைந்த உள்ளாட்சி நிர்வாகம் நடைமுறையிலிருந்தது. உள்ளூர் சுயாட்சி அமைப்புகள் சோழர் ஆட்சிக் காலத்தில் சிறப்பாக செயல்பட்டதற்கான வரலாற்றுச் சான்றுகள் காஞ்சிபுரம் மாவட்டம் உத்திரமேரூரில் அமைந்துள்ள ஸ்ரீ வைகுண்டப் பெருமாள் கோவிலில் உள்ள கல்வெட்டுகளில் உள்ளன. அக்காலத்தில் கிராமக் கூட்டம் நடைபெற்ற இடத்தைச் சுற்றியுள்ள சுவர்களில் தேர்தல் விதிமுறைகள் மற்றும் தேர்ந்தெடுக்கப்படும் முறைகள் விரிவாகப் பொறிக்கப்பட்டுள்ளது. இக்கல்வெட்டுகள், பராந்தகச்

சோழர் ஆட்சி செய்த கி.பி.**920**–ஆம் ஆண்டினைச் சார்ந்ததாகும். இத்தகைய மக்களாட்சி அமைப்பில் கிராமக்குழுக்களின் உறுப்பினர்கள் இரகசியக் 'குடவோலை' முறை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு கிராம அளவில் பொருளாதார மற்றும் நிர்வாகப் பொறுப்புகளை முழுமையான சுதந்திரத்துடன் செயல்படுத்தி வந்தனர்.

சோழர் ஆட்சிக் காலத்தின் இரகசிய வாக்குப்பதிவே இன்றைய தேர்தல் முறையின் அடித்தளமாகும். பெரிய குடம் ஒன்று கிராமத்தின் முக்கியமான பகுதியில் வைக்கப்பட்டு, வாக்குப்பெட்டியாகப் பயன்படுத்தப்பட்டது. வாக்குரிமை பெற்றோர் தங்களுக்கு விருப்பமான வேட்பாளரின் பெயரை பனை ஓலையில் எழுதி அக்குடத்தில் போடுவர். இறுதியாகக் குடத்தில் உள்ள ஓலைகள் வெளியே எடுக்கப்பட்டு, வேட்பாளர்கள் வாரியாக எண்ணப்பட்டு அதிக வாக்குகள் பெற்றவர்கள் கிராமக் குழுவின் உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். கிராமக் குழுவின் உறுப்பினராகப் போட்டியிடுவதற்கான தகுதிகள் மற்றும் தகுதியின்மைக்கான விதிகள் வகுக்கப்பட்டிருந்தது கவனத்தில் கொள்ள வேண்டிய அம்சமாகும்.

சுதந்திரத்திற்குப் பின், அரசியலமைப்புச் சட்டம் பகுதி IV, பிரிவு **40**ல் கிராம ஊராட்சிகளை அமைத்து அவற்றுக்கு அதிகாரங்களும், பொறுப்புகளும் வழங்க வழிவகை செய்யப்பட்டது. மத்திய அரசால் அமைக்கப்பட்ட திரு.பல்வந்த்ராய் மேத்தா அவர்கள் தலைமையிலான குழு,

1957ஆம் ஆண்டு ஜனவரி மாதம் சமர்ப்பித்த அறிக்கையில் ஜனநாயக அடிப்படையில் அதிகார பரவலாக்கம் என்ற தத்துவத்தின் அடிப்படையில் ஊராட்சி அமைப்புகளுக்கு உரிய அதிகாரம் வழங்கிட பரிந்துரைத்தது.

இதன் அடிப்படையில் மதராஸ் அரசு கீழ்க்கண்ட முக்கிய அம்சங்களை கொண்ட மதராஸ் பஞ்சாயத்துச் சட்டம் 1958 மற்றும் மதராஸ் மாவட்ட வளர்ச்சி மன்றச் சட்டம் 1958 ஆகியவற்றை இயற்றியது.

1. ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் கிராம ஊராட்சிகள் என்ற இரண்டு அடுக்கு முறை.
2. சமுதாய வளர்ச்சி வட்டார எல்லையின் அடிப்படையில் ஊராட்சி ஒன்றியங்களை உருவாக்குதல்.
3. கிராம ஊராட்சித் தலைவர்கள் ஊராட்சி ஒன்றியக் குழுவின் அலுவல் சார்ந்த உறுப்பினர்களாக இருப்பர். ஊராட்சி ஒன்றியக் குழு தலைவரை நேரிடையான / மறைமுகமான தேர்தல் செய்தல் மூலம் தேர்வு செய்தல்.
4. பல்வேறு வளர்ச்சி மற்றும் நலப்பணிகளை ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் கிராம ஊராட்சிகளிடம் ஒப்படைத்தல்.
5. மாவட்ட கழகங்களை கலைத்தல்
6. மாவட்ட வளர்ச்சி மன்றக் குழு என்ற ஆலோசனை வழங்கும் அமைப்பினை ஏற்படுத்துதல்.

## 2.1. 73–வது அரசியலமைப்புச் சட்டத் திருத்தம்

73–வது அரசியலமைப்புச் சட்டத் திருத்தம், 1992 ஆம் ஆண்டு இயற்றப்பட்டு 1993 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் இருந்து நடைமுறைக்கு வந்தது. இந்திய அரசியலமைப்புச் சட்டம், பிரிவு 243 ஜி ஊராட்சி அமைப்புகளுக்கு அதிகாரங்கள் மற்றும் பொறுப்புகளை பகிர்ந்தளிக்க வகை செய்கிறது. அரசியலமைப்புச் சட்டத்தில் 11–வது அட்டவணையில் 29 இனங்கள் பட்டியலிடப்பட்டுள்ளன. 74–வது அரசியலமைப்பு சட்டத்திருத்தம் மாவட்ட திட்டக் குழு அமைக்க வகை செய்கிறது. இவற்றின் அடிப்படையில், தமிழ்நாடு அரசு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994–ஐ இயற்றியது. இச்சட்டமானது 22.04.1994 அன்று நடைமுறைக்கு கொண்டு வந்தது.

## 2.2. தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994 கீழே குறிப்பிட்டவாறு பல மாறுதல்களை தமிழ்நாட்டில் உள்ள ஊராட்சி அமைப்புகளில் கொண்டு வந்தது.

i) தமிழ்நாட்டில் கிராம ஊராட்சி, வட்டார ஊராட்சி மற்றும் மாவட்ட ஊராட்சி என மூன்றடுக்கு ஊராட்சி முறை அறிமுகப்படுத்தப்பட்டது.

ii) உள்ளாட்சி அமைப்புகளுக்கு 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை அவற்றின் பதவிக்காலம் முடிவதற்கு

முன்பாக கட்டாய தேர்தல் அல்லது அவை கலைக்கப்பட்ட தேதியிலிருந்து 6 மாத காலம் முடிவதற்கு முன்பு தேர்தல் நடத்துதல்.

iii) ஒவ்வொரு உள்ளாட்சி அமைப்பிலும் உள்ள மொத்த மக்கள் தொகையில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் விகிதாச்சாரத்தின் அடிப்படையில் பதவியிடங்கள் (வார்டு உறுப்பினர்கள்) மற்றும் தலைமைப் பதவியிடங்களுக்கு (ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர் / ஊராட்சித் தலைவர்) சுழற்சி முறையுடன் கூடிய இட ஒதுக்கீடு கொண்டு வருதல்.

iv) மொத்தப் பதவி மற்றும் தலைமைப் பதவியிடங்களில் மூன்றில் ஒரு பங்கு பெண்களுக்கு சுழற்சி முறையுடன் கூடிய இட ஒதுக்கீடு செய்யும் முறையை கொண்டு வருதல்.

v) ஊரக மற்றும் நகர்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு உரிய காலத்தில் தேர்தல் நடத்த தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையம் என்ற சுதந்திரமான அமைப்பினை ஏற்படுத்துதல்.

vi) மாநில அரசின் நிதி ஆதாரங்களை ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு பகிர்ந்தளித்திட பரிந்துரை செய்யும் வகையில் ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை மாநில நிதி ஆணையத்தினை ஏற்படுத்துதல்

vii) ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் தயாரித்துள்ள திட்டங்களைத் தொகுத்து மாவட்டத்திற்கான விரிவான வளர்ச்சித் திட்டத்தினைத் தயாரித்திட ஏதுவாக மாவட்ட திட்டக்குழுவினை ஏற்படுத்துதல்.

viii) கிராம ஊராட்சியிலுள்ள அனைத்து வாக்காளர்களையும் உள்ளடக்கிய 'கிராம சபை' என்ற அமைப்பினைக் கொண்டு வருதல்.

## 2.3. தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994–ன் கீழ் வெளியிடப்பட்ட முக்கிய விதிகள்

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் **1994**ன் பிரிவுகளின் அடிப்படையில் ஊரக உள்ளாட்சி அமைப்புகள் தொடர்புடைய அனைத்து விதிகளையும் வெளியிட அரசுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. அரசால் உருவாக்கப்படும் விதிகள் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் **1994**ல் தெரிவிக்கப்பட்ட அம்சங்களை செயல்படுத்த தொடர்புடைய அமைப்புகளுக்கும், அலுவலர்களுக்கும் உறுதுணையாகத் திகழ்கின்றன.

### 2.3.1. தமிழ்நாடு ஊராட்சிகள் (கிராம ஊராட்சி கூட்டத்தினை கூட்டுவது மற்றும் நடத்துவதற்கான குறைவெண் வரம்பு மற்றும் நடைமுறைகள்) விதிகள், 1999

ஊராட்சி மன்றக் கூட்டங்களுக்கிடையிலான கால இடைவெளி, கூட்டம் நடத்துவதற்கான அறிவிப்பு மற்றும்

பொருள்கள் சார்வு செய்தல், குறைவெண் வரம்பு, வருகைப் பதிவு, தீர்மானம் நிறைவேற்றுதல், கூட்ட நடவடிக்கைக் குறிப்புகள் தயார் செய்தல் மற்றும் ஆவணங்களைப் பாதுகாத்தல் ஆகியவை குறித்து இவ்விதிகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### 2.3.2. கிராம சபை நடத்துவது தொடர்பான விதிகள்

தமிழ் நாடு கிராம சபை (கூட்டுதல் மற்றும் நடத்துவதற்கான நடைமுறைகள்) விதிகள் 1998 மற்றும் அவ்விதிகளுக்கு 2006–ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட திருத்தங்களில் கிராம சபை கூட்டம் நடத்துவதற்கான வழிகாட்டி நெறிமுறைகள் விரிவாக குறிப்பிடப்பட்டுள்ளன. அரசாணையின்படி குறைந்தபட்சம் ஆண்டுக்கு 4 முறை, அதாவது ஜனவரி 26, மே 1, ஆகஸ்டு 15 மற்றும் அக்டோபர் 2 ஆகிய நாட்களில் கிராம சபை நடத்துவது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கிராம சபை நடத்துவதற்கான நெறிமுறைகள், குறைவெண் வரம்பு, கூட்டப்பொருள், வருகைப் பதிவு, தீர்மானங்கள் இயற்றுதல் மற்றும் கூட்ட நடவடிக்கைக் குறிப்புகளைத் தயார் செய்தல் ஆகியவை குறித்த நெறிமுறைகள் இவ்விதிகளில் தெளிவாக விவரிக்கப்பட்டுள்ளன.

### 2.3.3. தமிழ்நாடு ஊராட்சிகள் (தேர்தல்) விதிகள், 1995

ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு நேரடி மற்றும் மறைமுகத் தேர்தல்களை நடத்துவது குறித்து இவ்விதிகளில்

குறிப்பிடப்பட்டுள்ளது. தேர்தல் நடத்தும் அலுவலர்கள் நியமனம், வாக்காளர் பட்டியல் தயாரித்தல் மற்றும் வெளியிடுதல், தேர்தல் அறிவிப்பு வெளியிடுதல், வேட்பு மனு தாக்கல், வாக்குப்பதிவு, வாக்குகளை எண்ணுதல், ஊராட்சி ஒன்றியம் மற்றும் மாவட்ட ஊராட்சிகளின் தலைவர் மற்றும் துணைத் தலைவர் தேர்தல், கிராம ஊராட்சித் தலைவர் மற்றும் துணைத் தலைவர் தேர்தல், தேர்தல் செலவினங்கள், தேர்தல் வழக்குகள் ஆகியவை குறித்து இவ்விதிகளில் விரிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

### 2.3.4. தமிழ்நாடு ஊராட்சிகள் (இட ஒதுக்கீடு மற்றும் இட ஒதுக்கீட்டிற்கான சுழற்சி முறை) விதிகள், 1995

மூன்றடுக்கு ஊரக உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள பதவியிடங்களில் ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் பெண்களுக்கான இட ஒதுக்கீடு மற்றும் இட ஒதுக்கீட்டிற்கான சுழற்சி முறை ஆகியவை குறித்து இவ்விதிகளில் விவரிக்கப்பட்டுள்ளன.

### 2.3.5. தமிழ்நாடு ஊராட்சிகள் கட்டட விதிகள், 1997

ஊரகப் பகுதிகளில் மனைப் பிரிவுகள் அங்கீகாரம் மற்றும் கட்டட வரைபடங்களை அங்கீகரித்தல் ஆகியவற்றுக்கான நடைமுறைகள் இவ்விதிகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்விதிகளின்படி, 200 சதுர மீட்டருக்கு மிகாத குடியிருப்பு கட்டடங்களுக்கும், 100 சதுர மீட்டருக்கும் மிகாத வணிக கட்டடங்களுக்கும் சில வரைமுறைகளுக்குட்பட்டு கட்டட வரைபட அனுமதி அளிக்க

சம்மந்தப்பட்ட ஊராட்சி மன்ற தலைவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளன. பின்னர், கட்டட வரைபட அனுமதி அளிக்கும் அதிகார வரம்பு குடியிருப்பு கட்டடங்களுக்கு 4000 சதுர அடியாகவும், வணிக கட்டடங்களுக்கு 2000 சதுர அடியாகவும் உயர்த்தி நகர் மற்றும் ஊரமைப்பு இயக்குநர் அவர்களால் ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட பரப்பளவிற்கு மிகையான கட்டட வரைபடங்களுக்கும், அனைத்து மனைப்பிரிவுகளுக்கும் நகர் மற்றும் ஊரமைப்பு இயக்குநரின் தொழில்நுட்ப அனுமதி பெற்று கிராம ஊராட்சி மன்றத் தலைவர் அனுமதி அளிக்க இவ்விதிகள் வகை செய்கின்றன.

### 2.3.6. தமிழ்நாடு ஊராட்சிகள் (வரிவிதிப்பு மற்றும் வசூலித்தல்) விதிகள், 1999

கிராம ஊராட்சிகளில் வீட்டுவரி நிர்ணயித்தல், வீட்டு வரி செலுத்துவோர் பட்டியல் தயாரித்தல், வீட்டு வரி விதிப்பின் மீதான மேல்முறையீடு, வீட்டு வரியை வசூல் செய்வதற்கான வழிமுறைகள் ஆகியவை இவ்விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளன.

### 2.3.7. தமிழ்நாடு ஊராட்சிகள் (பணிகளுக்கான திட்டங்கள் மற்றும் மதிப்பீடுகள் தயாரித்தல் மற்றும் ஒப்பந்தங்களுக்கான வழிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்) விதிகள், 2007

கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகள் ஆகியவற்றின் பொது நிதி, மத்திய

மற்றும் மாநில அரசுகளின் மூலம் பெறப்படும் திட்ட நிதி ஆகியவற்றைக் கொண்டு மேற்கொள்ளப்படும் பணிகளுக்கான திட்டங்கள் மற்றும் மதிப்பீடுகள் தயாரித்தல் மற்றும் ஒப்பந்தங்களுக்கான வழிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் ஆகியவை குறித்து இவ்விதிகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### 2.3.8. தமிழ்நாடு ஊராட்சிகள் (கிணறுகள் தோண்டுதல் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளை ஒழுங்கு முறைப்படுத்துதல்) விதிகள், 2015

ஊரகப் பகுதிகளில், ஆழ்துளைக் கிணறுகள், குழாய் கிணறுகள் மற்றும் திறந்த வெளிக் கிணறுகள் வெட்டும் பணிகளை மேற்கொள்ளும்போது எதிர்பாராத விதமாக நேரக்கூடிய விபத்துக்கள் மற்றும் குழந்தைகள் மரணத்தை தவிர்க்கும் நோக்கில் மேற்கொள்ளப்பட வேண்டிய பாதுகாப்பு நடைமுறைகள் குறித்து இவ்விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்விதிகளின்படி கிணறு தோண்டும் இயந்திர உரிமையாளர் மற்றும் இயக்குபவர் பதிவு செய்வது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. மேலும், இவ்விதிகளில் பொதுமக்கள் பாதுகாப்பை உறுதி செய்ய பின்பற்றவேண்டிய நடைமுறைகள் குறித்தும் தெளிவாக விவரிக்கப்பட்டுள்ளன.

## 2.4. மாநிலத் தேர்தல் ஆணையம்

மாநிலத்திலுள்ள நகர்ப்புற மற்றும் ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் தேர்தல்கள் நடத்துவதற்காக தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம் ஒரு சுதந்திரமான தன்னாட்சி

அதிகாரம் கொண்ட அரசியலமைப்பு நிறுவனமாக 1994ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது. வாக்காளர் பட்டியல் தயாரித்தலை கண்காணித்து, இயக்கி, கட்டுப்படுத்தும் அதிகாரம் தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம் வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994, பிரிவு 239 உட்பிரிவு (3)–ன்படி தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையர் மற்றும் நிர்வாக பணியாளர்கள் நியமிக்கப்படுவார்கள். மாநில தேர்தல் ஆணையர் இரண்டு ஆண்டுகளுக்குப் பதவி வகிப்பார். மேலும், இப்பதவியினை ஆறு ஆண்டுகளுக்கு மிகாமல் இரண்டு முறை நீட்டிப்பு செய்யலாம். மாநிலத் தேர்தல் ஆணையராக நியமிக்கப்பட்டவருக்கு 65 வயது நிறைவடையும் நிலையில் அவருக்கு ஓய்வளிக்கப்பட வேண்டும்.

## 2.5. உள்ளாட்சித் தேர்தல் நடத்துதல்

தமிழ்நாட்டில், 1994–ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் இயற்றப்பட்ட பின் மூன்றடுக்கு ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான சாதாரண தேர்தல்கள் அக்டோபர் 1996–ம் ஆண்டு நடத்தப்பட்டது. உள்ளாட்சி அமைப்புகளுக்கான இரண்டாவது, மூன்றாவது, நான்காவது சாதாரண தேர்தல்கள் முறையே அக்டோபர் 2001, அக்டோபர் 2006 மற்றும் அக்டோபர் 2011–ல் நடத்தப்பட்டது.

மாவட்ட ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர் மற்றும் வார்டு உறுப்பினர்களுக்கான

தேர்தல்களை கட்சி அடிப்படையில் நடத்த மாநில தேர்தல் ஆணையம் அறிக்கை வெளியிடுகிறது. ஆனால், கிராம ஊராட்சித் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களுக்கான பதவியிடங்களுக்கு கட்சி சாரா அடிப்படையில் தேர்தல்கள் நடத்தப்படுகின்றன. 2011ம் ஆண்டு அக்டோபர் மற்றும் நவம்பர் மாதம் நடைபெற்ற தேர்தல்களில் மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கான பதவியிடங்கள் மற்றும் தலைமைப் பதவியிடங்களுக்கான விபரங்கள் பின்வரும் அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 2.1.**

**மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளில் பதவியிடங்கள் மற்றும் தலைமைப் பதவியிடங்கள் விவரம்**

| வ. எண். | பதவியிடம் குறித்த விபரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | கிராம ஊராட்சி வார்டுகள் | 99,333 |
| 2 | ஊராட்சி ஒன்றிய வார்டுகள் | 6,471 |
| 3 | மாவட்ட ஊராட்சி வார்டுகள் | 655 |
| 4 | கிராம ஊராட்சித் தலைவர்கள் | 12,524 |
| 5 | ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர்கள் | 385 |
| 6 | மாவட்ட ஊராட்சித் தலைவர்கள் | 31 |
| மொத்தம் | | 1,19,399 |

## 2.6 கிராம ஊராட்சிகளில் பல உறுப்பினர் வார்டுகளை ஓர் உறுப்பினர் வார்டுகளாக மாற்றியமைத்தல்

தமிழ்நாட்டில் மாவட்ட ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஓர் உறுப்பினர் வார்டு முறை இருந்தாலும் கிராம ஊராட்சியில் ஓர் உறுப்பினர் வார்டு மற்றும் பல உறுப்பினர் வார்டு என்ற இரண்டு நிலையும் இருந்தது.

இந்நிலையின் அடிப்படையில் அக்டோபர் 2006 ஆம் ஆண்டு வரை சாதாரண தேர்தல் நடத்தப்பட்டது.

அரசாணை எண். 63 ஊரக வளர்ச்சி (பரா 2) ஊராட்சித் துறை நாள்.14.9.2011–ன்படி, 2011ம் ஆண்டு செப்டம்பர் மாதம் தமிழ்நாடு ஊராட்சிகள் (உறுப்பினர்கள் எண்ணிக்கை நிர்ணயம் செய்தல் மற்றும் வார்டுகளை பிரித்தல்) விதிகள் 1995–ல் திருத்தம் கொண்டு வரப்பட்டு, கிராம ஊராட்சியில் ஒரு உறுப்பினர் வார்டு முறை கொண்டுவரப்பட்டது.

1991 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி, கிராம ஊராட்சியில், 40,879 பல உறுப்பினர் வார்டுகளில் 97,458 வார்டு உறுப்பினர்கள் இருந்தனர். 2001ம் ஆண்டு மக்கள்தொகைக் கணக்கெடுப்பின் அடிப்படையில் ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும் பல உறுப்பினர் வார்டுகளை ஒரு உறுப்பினர் வார்டுகளாக மாற்றியமைக்க மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வாயிலாக, கிராம ஊராட்சி வார்டுகள் மற்றும் உறுப்பினர்களின் எண்ணிக்கை 99,333 ஆக உள்ளது.

## 2.7. ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான பதவியிடங்கள் மற்றும் தலைமைப் பதவியிடங்களுக்கு இட ஒதுக்கீடு மற்றும் சுழற்சி முறை

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு ஊராட்சி அமைப்புகளின் பல்வேறு பதவியிடங்களுக்கு மக்கள்

தொகை விகிதத்தின் அடிப்படையில் உரிய இட ஒதுக்கீடு வழங்கப்பட வேண்டும். இந்திய அரசியலமைப்புச் சட்டம், சட்டக்கூறு 243D–ன்படி ஊராட்சி அமைப்புகளில் ஆதிதிராவிடர்கள் மற்றும் பழங்குடியினருக்கான பதவியிடங்களுக்கு இட ஒதுக்கீடு மற்றும் சுழற்சி முறை செய்யப்பட வேண்டும். அதில் மூன்றில் ஒரு பங்குக்கு குறையாமல் ஆதிதிராவிடர், பழங்குடியினப் பெண்களுக்கு ஒதுக்கப்படும் எண்ணிக்கையையும் உள்ளடக்கி மொத்த ஒதுக்கீட்டில் மூன்றில் ஒரு பங்குக்குக் குறையாமல் பெண்களுக்கு ஒதுக்கீடு செய்திட வேண்டும். இதற்காக, 1994–ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டப் பிரிவுகள் 11, 20, 32, 57 மற்றும் 1995–ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் ( பதவிடங்களுக்கான இட ஒதுக்கீடு மற்றும் சுழற்சி முறை ) விதிகள் ஆகியவற்றில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு இட ஒதுக்கீடு மற்றும் சுழற்சி செய்வது குறித்து தெளிவாக, கூறப்பட்டுள்ளது.

### 2.8. ஊரக உள்ளாட்சி அமைப்புகளில் பெண்களுக்கு உயர்த்தி வழங்கப்பட்ட இட ஒதுக்கீடும் பதவிகளும் (50 விழுக்காடு ஒதுக்கீடு)

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994 (தமிழ்நாடு சட்டம் 21,1994)–ல் கிராம ஊராட்சி, ஊராட்சி ஒன்றியக்குழு மற்றும் மாவட்ட ஊராட்சிகளில் உள்ள பதவியிடங்கள் மற்றும் தலைமை பதவியிடங்கள் மூன்றில் ஒரு பங்கு மகளிருக்கு ஒதுக்கீடு செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது.

ஆனால், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், உள்ளாட்சி நிர்வாகத்தில் மகளிர் பங்கேற்பினை அதிகப்படுத்தவும் மகளிருக்குரிய அதிகாரம் வழங்கிடவும் மூன்றில் ஒரு பங்கு இட ஒதுக்கீட்டினை 50 விழுக்காடாக உயர்த்துவது அவசியம் எனக் கருதியதால், மகளிருக்கான இடஒதுக்கீடு மூன்றில் ஒரு பங்கு என்பதை 50 விழுக்காடாக இட ஒதுக்கீடு செய்யும் வகையில், தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994 மற்றும் தமிழ்நாடு ஊராட்சிகள் (இட ஒதுக்கீடு மற்றும் சுழற்சி முறை இட ஒதுக்கீடு) விதிகள் 1995–ல் திருத்தம் செய்து, அதன் அடிப்படையில் அரசு ஆணை எண். 60 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (ப.ரா1) துறை, நாள் 23.05.2016–ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. இவ்வாணையின்படி, எதிர்வரும் ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தலில் மகளிருக்கான உயர்த்தப்பட்ட இட ஒதுக்கீடு நடைமுறைக்கு வரும்.

## 2.9. கிராம ஊராட்சி

31 மாவட்டங்களில் 79,394 குக்கிராமங்களை உள்ளடக்கிய 12,524 கிராம ஊராட்சிகள் உள்ளன. கிராம ஊராட்சி என்பது, அதற்கென தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்டு ஊராட்சிகளின் ஆய்வாளர் அறிவிக்கையில் குறிப்பிட்ட தேதியிலிருந்து அமைக்கப்படும். ஒவ்வொரு கிராம ஊராட்சியும் உரிய காரணங்களால் கலைக்கப்படாதவரை ஒவ்வொரு சாதாரணத் தேர்தலுக்குப் பின்னர் நடைபெறும் முதற்கூட்டத்திலிருந்து 5 ஆண்டு காலம் ஊராட்சி நிர்வாகம் ,செயல்பாட்டில் இருக்கும். கிராம

ஊராட்சியின் தலைவர், கிராம ஊராட்சியின் செயல் அலுவலர் ஆவார்.

மக்கள் தொகை கணக்கெடுப்பு இயக்குநரகத்துடன் ஒருங்கிணைந்து கிராம ஊராட்சி வாரியாக **2011** ஆம் ஆண்டு கணக்கெடுப்பின் படி, **31** மாவட்டங்களில் உள்ள **12,524** கிராம ஊராட்சிகளுக்கும் ஊரக மக்கள் தொகை விபரம் ஆகஸ்ட் **2014**ல் வெளியிடப்பட்டுள்ளது. அவ்வாறு கிராம ஊராட்சி வாரியாக வெளியிடப்பட்ட மக்கள் தொகையில் தாழ்த்தப்பட்ட / பழங்குடி இனத்தவர் மற்றும் பெண்கள் குறித்த விவரங்களும் அடங்கும். மேலும், மேற்கண்ட விவரங்கள் www.tnrd.gov.in என்ற இணையதளத்திலும் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

**அட்டவணை 2.2.**
**2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை**
**அடிப்படையில் கிராம ஊராட்சிகள் விவரம்**

| வ. எண். | மக்கள் தொகை | கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | 500 மற்றும் அதற்குக் கீழ் | 46 |
| 2 | 501–1000 | 833 |
| 3 | 1001–3000 | 6,821 |
| 4 | 3001–5000 | 2,781 |
| 5 | 5001–10000 | 1,753 |
| 6 | 10,000க்கு மேல் | 290 |
| | **மொத்தம்** | **12,524** |

மாவட்ட வாரியாக ஊரக மக்கள் தொகை விவரம் பின்வருமாறு:

## அட்டவணை 2.3.
## மாவட்ட வாரியான ஊரக மக்கள் தொகை விவரம்

| வ. எண் | மாவட்டம் | ஊரக மக்கள் தொகை | பெண்கள் | பழங் குடியினர் | பழங் குடியினர் விழுக்காடு | ஆதி திராவிடர் | ஆதி திராவிடர் விழுக்காடு |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் | 18,61,789 | 9,24,124 | 29,706 | 1.60 | 6,24,458 | 33.54 |
| 2 | திருவள்ளூர் | 15,85,280 | 7,90,170 | 37,708 | 2.38 | 5,04,115 | 31.80 |
| 3 | கடலூர் | 18,00,133 | 8,91,507 | 10,082 | 0.56 | 6,25,788 | 34.76 |
| 4 | விழுப்புரம் | 29,12,960 | 14,45,062 | 71,289 | 2.45 | 9,19,308 | 31.56 |
| 5 | வேலூர் | 24,82,556 | 12,41,612 | 65,230 | 2.63 | 6,05,248 | 24.38 |
| 6 | திருவண்ணாமலை | 20,39,049 | 10,14,486 | 87,096 | 4.27 | 5,02,044 | 24.62 |
| 7 | சேலம் | 19,57,105 | 9,45,014 | 1,12,334 | 5.74 | 3,54,545 | 18.12 |
| 8 | நாமக்கல் | 10,87,895 | 5,37,918 | 55,417 | 5.09 | 2,48,100 | 22.81 |
| 9 | தர்மபுரி | 12,90,530 | 6,24,646 | 60,609 | 4.70 | 2,13,538 | 16.55 |
| 10 | கிருஷ்ணகிரி | 14,65,743 | 7,17,175 | 20,980 | 1.43 | 2,20,945 | 15.07 |
| 11 | ஈரோடு | 11,30,722 | 5,59,797 | 19,084 | 1.69 | 2,16,689 | 19.16 |
| 12 | திருப்பூர் | 11,39,466 | 5,68,772 | 1,947 | 0.17 | 2,63,539 | 23.13 |
| 13 | கோயம்புத்தூர் | 10,21,359 | 5,10,409 | 19,565 | 1.92 | 2,13,492 | 20.90 |
| 14 | நீலகிரி | 3,10,591 | 1,59,447 | 22,767 | 7.33 | 91,446 | 29.44 |
| 15 | தஞ்சாவூர் | 16,67,809 | 8,46,926 | 1,465 | 0.09 | 3,84,291 | 23.04 |
| 16 | நாகப்பட்டினம் | 12,61,288 | 6,37,194 | 2,214 | 0.18 | 4,60,876 | 36.54 |
| 17 | திருவாரூர் | 10,06,482 | 5,06,528 | 939 | 0.09 | 3,88,740 | 38.62 |
| 18 | திருச்சிராப்பள்ளி | 14,71,945 | 7,39,563 | 14,519 | 0.99 | 3,05,109 | 20.73 |
| 19 | கரூர் | 6,68,360 | 3,36,684 | 201 | 0.03 | 1,59,718 | 23.90 |
| 20 | பெரம்பலூர் | 4,68,017 | 2,34,113 | 2,136 | 0.46 | 1,50,504 | 32.16 |
| 21 | அரியலூர் | 6,71,100 | 3,37,847 | 9,946 | 1.48 | 1,63,770 | 24.40 |
| 22 | புதுக்கோட்டை | 13,41,111 | 6,75,896 | 845 | 0.06 | 2,51,552 | 18.76 |
| 23 | மதுரை | 13,00,481 | 6,44,431 | 4,896 | 0.38 | 2,72,494 | 20.95 |
| 24 | தேதனி | 5,75,394 | 2,84,527 | 1,377 | 0.24 | 1,43,589 | 24.95 |
| 25 | திண்டுக்கல் | 14,57,412 | 7,25,917 | 4,580 | 0.31 | 3,34,064 | 22.92 |
| 26 | இராமநாதபுரம் | 10,09,270 | 5,01,016 | 526 | 0.05 | 2,13,583 | 21.16 |
| 27 | விருதுநகர் | 12,86,543 | 6,44,603 | 1,197 | 0.09 | 3,15,796 | 24.55 |
| 28 | சிவகங்கை | 9,52,610 | 4,77,215 | 518 | 0.05 | 1,88,454 | 19.78 |
| 29 | திருநெல்வேலி | 16,45,509 | 8,32,916 | 4,099 | 0.25 | 3,58,487 | 21.79 |
| 30 | தூத்துக்குடி | 9,71,273 | 4,92,268 | 1,921 | 0.20 | 2,48,752 | 25.61 |
| 31 | கன்னியாகுமரி | 6,46,441 | 3,25,257 | 3,893 | 0.60 | 26,546 | 4.11 |
| | **மொத்தம்** | **4,04,86,223** | **2,01,73,040** | **6,69,086** | **1.65** | **99,69,580** | **24.62** |

## 2.10. மாவட்டவாரியான ஊரக பரப்பளவு விவரம்

மாநிலத்தில் ஊரகப் பகுதிகளின் மொத்தப் பரப்பளவு **1,04,149.61** சதுர கி.மீ. ஆகும். மாவட்ட வாரியான ஊரக பரப்பளவு விபரம் பின்வருமாறு:

# அட்டவணை 2.4.

## மாவட்ட வாரியாக கிராம ஊராட்சிகளின் சராசரி பரப்பளவு விவரம்

| வ. எண் | மாவட்டம் | ஊராட்சிகளின் எண்ணிக்கை | குக்கிராமங்களின் எண்ணிக்கை | குக்கிராமங்களின் சராசரி எண்ணிக்கை | பரப்பளவு (சதுர கி.மீ) | ஊராட்சியின் சராசரி பரப்பளவு (சதுர கி.மீ) |
|---|---|---|---|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் | 633 | 3,512 | 6 | 3,851.45 | 6.08 |
| 2 | திருவள்ளூர் | 526 | 3,862 | 7 | 2,859.84 | 5.44 |
| 3 | கடலூார் | 683 | 2,403 | 4 | 2,942.24 | 4.31 |
| 4 | விழுப்புரம் | 1,099 | 3,487 | 3 | 6,509.43 | 5.92 |
| 5 | வேலூார் | 743 | 6,109 | 8 | 4,022.30 | 5.41 |
| 6 | திருவண்ணாமலை | 860 | 4,267 | 5 | 4,826.27 | 5.61 |
| 7 | சேலம் | 385 | 5,109 | 13 | 4,561.41 | 11.85 |
| 8 | நாமக்கல் | 322 | 2,520 | 8 | 3,119.43 | 9.69 |
| 9 | தர்மபுரி | 251 | 2,835 | 11 | 4,407.43 | 17.56 |
| 10 | கிருஷ்ணகிரி | 333 | 3,983 | 12 | 4,965.73 | 14.91 |
| 11 | ஈரோடு | 225 | 3,199 | 14 | 2,626.99 | 11.68 |
| 12 | திருப்பூர் | 265 | 2,455 | 9 | 4,545.50 | 17.15 |
| 13 | கோயம்புத்துார் | 228 | 1,200 | 5 | 2,534.24 | 11.12 |
| 14 | நீலகிரி | 35 | 1,282 | 37 | 1,170.39 | 33.44 |
| 15 | தஞ்சாவூர் | 589 | 2,260 | 4 | 3,657.67 | 6.21 |
| 16 | நாகப்பட்டினம் | 434 | 2,054 | 5 | 2,400.31 | 5.53 |
| 17 | திருவாரூர் | 430 | 1,704 | 4 | 2,322.69 | 5.40 |
| 18 | திருச்சிராப்பள்ளி | 404 | 2,210 | 5 | 4,028.00 | 9.97 |
| 19 | கரூர் | 157 | 2,179 | 14 | 2,656.25 | 16.92 |
| 20 | பெரம்பலூார் | 121 | 314 | 3 | 1,609.54 | 13.30 |
| 21 | அரியலூார் | 201 | 710 | 4 | 1,710.17 | 8.51 |
| 22 | புதுக்கோட்டை | 497 | 4,062 | 8 | 4,433.78 | 8.92 |
| 23 | மதுரை | 420 | 1,946 | 5 | 3,183.18 | 7.58 |
| 24 | தேனி | 130 | 607 | 5 | 1,159.89 | 8.92 |
| 25 | திண்டுக்கல் | 306 | 3,083 | 10 | 4,401.34 | 14.38 |
| 26 | இராமநாதபுரம் | 429 | 2,306 | 5 | 4,116.19 | 9.59 |
| 27 | விருதுநகர் | 450 | 1,760 | 4 | 3,282.08 | 7.29 |
| 28 | சிவகங்கை | 445 | 2,723 | 6 | 3,075.90 | 6.91 |
| 29 | திருநெல்வேலி | 425 | 2,337 | 5 | 4,283.06 | 10.08 |
| 30 | தூத்துக்குடி | 403 | 1,761 | 4 | 4,260.78 | 10.57 |
| 31 | கன்னியாகுமரி | 95 | 1,155 | 12 | 626.14 | 6.59 |
| **மொத்தம்** | | **12,524** | **79,394** | **6** | **1,04,149.61** | **8.32** |

### 2.10.1. கிராம ஊராட்சிகளின் வருமான அடுக்கு

மாநிலத்தில் மொத்தம் **12,524** கிராம ஊராட்சிகள் உள்ளன. **2016 – 2017**ம் ஆண்டின் ஊராட்சிகளின் வருவாய் விவரங்கள் பின்வருமாறு.

**அட்டவணை 2.5**

**கிராம ஊராட்சிகளின் ஆண்டு வருவாய் விவரங்கள்**

| வருமான அடுக்கு | கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை |
|---|---|
| ரூ. 8–10 இலட்சம் | 271 |
| ரூ.10–20 இலட்சம் | 7168 |
| ரூ. 20– 50 இலட்சம் | 4470 |
| ரூ. 50 இலட்சம் – 1 கோடி | 510 |
| ரூ. 1 கோடிக்கும் மேல் | 105 |
| **மொத்தம்** | **12524** |

### 2.11. கிராம சபை

கிராம சபை என்பது ஒவ்வொரு கிராம ஊராட்சி அளவிலும் உள்ள அடித்தள ஜனநாயக அமைப்பாகும். பல்வேறு திட்டங்களுக்கு ஒப்புதல் அளித்தல், சமூக தணிக்கை ஆகியவற்றில் பொதுமக்களின் பங்கேற்பினை உறுதிபடுத்தி வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்பான நிர்வாகத்திற்கு வழிவகுக்கிறது. சட்டப்படி, இரண்டு கிராமசபைக் கூட்டங்களுக்கு இடையே உள்ள காலம் ஆறு மாதங்களுக்கு மிகாமல் இருக்கும் வகையில் கிராம சபைக் கூட்டங்கள் கூட்டப்பட வேண்டும். கிராம ஊராட்சியில் உள்ள மக்கள் தொகை அடிப்படையில் அரசு கீழ்க்கண்டவாறு குறைவெண் வரம்பு நிர்ணயம் செய்துள்ளது.

## அட்டவணை 2.6

### கிராம சபைக் கூட்டத்திற்கான குறைவெண் வரம்பு

| வ. எண். | கிராம ஊராட்சியின் மக்கள் தொகை | கிராம சபைக் கூட்டத்திற்கான குறைவெண் வரம்பு |
|---|---|---|
| 1 | 500 வரை | 50 |
| 2 | 501 முதல் 3,000 வரை | 100 |
| 3 | 3,001 முதல் 10,000 வரை | 200 |
| 4 | 10,000க்கு மேல் | 300 |

கிராம சபை கூட்ட நடவடிக்கைகளை முறையாக பதிவேடுகளில் பதிவு செய்வது மற்றும் புகைப்பட ஆவணங்களை வைத்திருப்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

கிராம சபை பின்வரும் செயல்படுகளை மேற்கொள்கிறது.

1. கிராம ஊராட்சி வளர்ச்சித் திட்டத்திற்கு ஒப்புதல் வழங்குதல்.
2. கிராம ஊராட்சியின் வரவு-செலவு திட்டத்திற்கு ஒப்புதல் வழங்குதல்.
3. அரசின் பல்வேறு திட்டங்கள் குறித்து தகவல் தெரிவித்து வளர்ச்சிக்கான விழிப்புணர்வு ஏற்படுத்துதல்.
4. பல்வேறு வளர்ச்சித் திட்டங்களுக்காகத் தேர்ந்தெடுக்கப்படும் பயனாளிகளின் பட்டியலுக்கு ஒப்புதல் வழங்குதல் மற்றும் பல்வேறு திட்டங்களுக்கான பணி பட்டியல்களுக்கு ஒப்புதல் வழங்குதல்.

5. திட்டப்பணிகள் செயல்பாட்டின் முன்னேற்றத்தை ஆய்வு செய்தல்.
6. கிராம ஊராட்சி தணிக்கை அறிக்கை மற்றும் பல்வேறு திட்டங்களுக்கான சமூக தணிக்கை அறிக்கைகளுக்கு ஒப்புதல் வழங்குதல்.
7. இன மற்றும் சமூக நல்லிணக்கத்தை ஊக்குவித்தல்.

## 2.12. கிராம ஊராட்சிகளின் சட்டரீதியான கடமைகள்

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994, பிரிவு 110–ன் படி கீழே குறிப்பிடப்பட்டுள்ள பணிகளை மேற்கொள்ளுதல் கிராம ஊராட்சிகளின் கட்டாய கடமைகளாகும்.

i) அனைத்து கிராமச்சாலைகள், பாலங்கள், சிறுபாலங்கள், தடுப்புச்சுவர்கள் மற்றும் தரைப்பாலங்களை அமைத்தல், பழுது பார்த்தல் மற்றும் பராமரித்தல் (நெடுஞ்சாலைகள் மற்றும் ஊராட்சி ஒன்றியச் சாலைகள் தவிர)

ii) குடியிருப்பு பகுதிகளில் தெரு விளக்குகள் அமைத்தல்.

iii) கழிவு நீர்க் கால்வாய் அமைத்துக் கழிவுநீரை வெளியேற்றுதல்.

iv) தெருக்களை சுத்தம் செய்தல் மற்றும் திடக்கழிவு மேலாண்மை செயல்பாட்டின் மூலமாக சுகாதாரத்தை மேம்படுத்துதல்.

v) பொதுக்கழிப்பிட வசதி ஏற்படுத்துதல்

vi) இடுகாடுகள் மற்றும் சுடுகாடுகளை ஏற்படுத்திப் பராமரித்தல்.

vii) குடிநீர் வழங்குதல்.

viii) சமுதாய சொத்துக்களை பராமரித்தல்

ix) கிணறுகள் தோண்டுதல் மற்றும் பராமரித்தல் மற்றும் குளம் தோண்டுதல், பராமரித்தல் மற்றும் பழுதுபார்த்தல்.

x) அவ்வப்போது அரசு அறிவிக்கை வாயிலாகப் பணிக்கக்கூடிய பிற கடமைகள்

### 2.12.1. குடிநீர் வழங்கல்

ஊரகப் பகுதிகளில் குடிநீர் வழங்கும் பணி, கிராம ஊராட்சியின் அடிப்படைக் கடமைகளில் ஒன்றாகும். கிராம ஊராட்சிகளில், கைப்பம்புகள் மற்றும் விசைப்பம்புகள் முதன்மைக் குடிநீர் ஆதாரமாகவும், மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி, தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டி மற்றும் சிறிய நீர்த்தேக்கத் தொட்டிகள் முதன்மைக் குடிநீர் சேகரிப்பு அமைப்புகளாகவும் விளங்குகின்றன. **31.3.2017** அன்றைய நிலையில் ஊரகப் பகுதிகளில் உள்ள குடிநீர் ஆதாரங்கள் மற்றும் குடிநீர் சேகரிப்பு அமைப்புகளின் விபரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

# அட்டவணை 2.7.

## பயன்பாட்டில் உள்ள குடிநீர் ஆதாரங்கள் குறித்த மாவட்ட வாரியான விவரம்

| வ.எண் | மாவட்டம் | கைப்பம்பு எண்ணிக்கை | மின்விசைப்பம்பு எண்ணிக்கை | சிறு மின்விசைப்பம்பு எண்ணிக்கை | கூட்டுக் குடிநீர் திட்டங்களின் எண்ணிக்கை | கூட்டுக்குடிநீர் வழங்கப்படும் கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் | 5996 | 4178 | 4007 | 20 | 69 |
| 2 | திருவள்ளூர் | 4140 | 3598 | 2340 | 9 | 36 |
| 3 | கடலூர் | 7944 | 3529 | 3518 | 12 | 60 |
| 4 | விழுப்புரம் | 8095 | 5039 | 7197 | 11 | 78 |
| 5 | வேலூர் | 7376 | 6419 | 10685 | 20 | 46 |
| 6 | திருவண்ணாமலை | 10472 | 4531 | 7648 | 25 | 240 |
| 7 | சேலம் | 3142 | 3967 | 2860 | 9 | 262 |
| 8 | நாமக்கல் | 1320 | 2736 | 1084 | 12 | 298 |
| 9 | தர்மபுரி | 9864 | 3492 | 3789 | 8 | 66 |
| 10 | கிருஷ்ணகிரி | 6706 | 3218 | 2948 | 18 | 93 |
| 11 | ஈரோடு | 2735 | 5203 | 2168 | 40 | 192 |
| 12 | திருப்பூர் | 1390 | 3464 | 780 | 17 | 265 |
| 13 | கோயம்புத்தூர் | 115 | 2550 | 560 | 9 | 228 |
| 14 | நீலகிரி | 18 | 1207 | 0 | 1 | 4 |
| 15 | தஞ்சாவூர் | 7618 | 5078 | 3097 | 6 | 90 |
| 16 | நாகப்பட்டினம் | 24445 | 2773 | 1966 | 12 | 291 |
| 17 | திருவாரூர் | 6294 | 2734 | 1714 | 4 | 96 |
| 18 | திருச்சிராப்பள்ளி | 9132 | 4127 | 5556 | 25 | 327 |
| 19 | கரூர் | 2011 | 2701 | 3128 | 12 | 92 |
| 20 | பெரம்பலூர் | 2876 | 704 | 894 | 4 | 65 |
| 21 | அரியலூர் | 837 | 1434 | 973 | 7 | 168 |
| 22 | புதுக்கோட்டை | 6601 | 3802 | 5211 | 46 | 208 |
| 23 | மதுரை | 2752 | 2585 | 4361 | 7 | 182 |
| 24 | தேனி | 623 | 817 | 1095 | 24 | 106 |
| 25 | திண்டுக்கல் | 1557 | 4599 | 3281 | 32 | 116 |
| 26 | இராமநாதபுரம் | 690 | 1216 | 1248 | 52 | 429 |
| 27 | விருதுநகர் | 4109 | 3166 | 3487 | 12 | 153 |
| 28 | சிவகங்கை | 3586 | 2925 | 5455 | 33 | 129 |
| 29 | திருநெல்வேலி | 4124 | 3728 | 3913 | 26 | 388 |
| 30 | தூத்துக்குடி | 7282 | 2085 | 2174 | 22 | 354 |
| 31 | கன்னியாகுமரி | 85 | 1206 | 1473 | 13 | 44 |
| | **மொத்தம்** | **1,53,935** | **98,811** | **98,610** | **548** | **5,175** |

ஏற்கனவே உள்ள குடிநீர் ஆதாரங்களுடன், 2016–17–ம் ஆண்டில் 51,895 குடிநீர் பணிகள் தமிழ்நாடு குக்கிராம வளர்ச்சித் திட்டம், உட்கட்டமைப்பு இடைநிரவல் நிதி திட்டம், மாநில நிதிக்குழு மானியம் மற்றும் கிராம ஊராட்சிகளின் பொது நிதி ஆகிய திட்டங்களில் ரூ. 544.65 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**2.12.2 வறட்சிக் காலத்தில் குடிநீர் விநியோகம்**

2016–17ம் ஆண்டில், பருவ மழை பொய்த்ததன் காரணமாக, மாநிலத்தில் கடும் வறட்சி ஏற்பட்டது. 140 ஆண்டுகளில் இல்லாத அளவில் கடந்த ஆண்டு மிகக் குறைந்த அளவில் மழை பெய்தது. இதன் விளைவாக நிலத்தடி நீர் மட்டம் குறைந்ததோடு மட்டுமல்லாமல் குடிநீர் ஆதாரங்களும் வறண்டு விட்டதால், ஊரக பகுதிகளில் குடிநீர் விநியோகம் செய்யும் பணி ஊராட்சி நிர்வாகத்திற்கு சவாலாக இருந்தது. இருப்பினும் இப்பிரச்சினைகளை சமாளிக்க அனைத்து நிதி ஆதாரங்களையும் ஒருங்கிணைத்து தேவையான முன் ஏற்பாட்டு நடவடிக்கைகளை இத்துறை மேற்கொண்டு, முறையாக குடிநீர் விநியோகம் செய்தது.

**2.12.3 நிலைமையை கையாள பின்பற்றிய வழிமுறைகள்**

கீழ்க்காணும் நடடிவக்கைகளை குடிநீர் தேவையை பூர்த்தி செய்ய பின்பற்றுமாறு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

- அனைத்து குடிநீர் ஆதாரங்களும் டிசம்பர் 2016ல் மதிப்பீடு செய்யப்பட்டு குடிநீர் பிரச்சினையை எதிர்கொள்ள கிராம ஊராட்சி வாரியாக செயல் திட்டம் தயாரிக்கப்பட்டது. மொத்தம் 18510 பணிகள் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகிறது.
- போர்க்கால அடிப்படையில் பழுது நீக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு குடிநீர் ஆதாரங்கள் செயல்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டன.
- ஊரக வளர்ச்சித் துறை, குடிநீர் வடிகால் வாரியம் மற்றும் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழக அலுவலர்களுடன் ஒருங்கிணைப்பு கூட்டம் மாவட்ட ஆட்சியர்கள் தலைமையில் வாரந்தோறும் நடத்தப்பட்டு வருகிறது.
- மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து பெறப்பட்ட ரூ.15 கோடி குடிநீர் பணிகளுக்காக செலவிடப்பட்டது.

- குடிநீர் பற்றாக்குறை நிலவும் ஊரகப்பகுதிகளில் மத்திய மற்றும் மாநில நிதிக்குழு மானியம், ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய், கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியப் பொது நிதி ஆகியவற்றை குடிநீர் விநியோக பணிகளுக்கு மட்டும் ஊரக உள்ளாட்சி அமைப்புகள் பயன்படுத்தின.

- குடிநீர் விநியோகத்தை கிராம ஊராட்சி அளவில் கண்காணிப்பதற்கு மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர்களும், வட்டார அளவில் கண்காணிப்பதற்கு உதவி இயக்குநர் நிலையிலான அலுவலர்களும் நியமனம் செய்யப்பட்டனர்.

- குடிநீர் தட்டுப்பாடு தொடர்பான புகார்களை பதிவு செய்ய மாநில, மாவட்ட மற்றும் வட்டார அளவில் குறை தீர் மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. மே **2017** வரை, **12461** புகார்கள் பெறப்பட்டு உரிய நடவடிக்கைகள் மேற்கொண்டு குறைகள் தீர்க்கப்பட்டுள்ளன.
- சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் வரையறுக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்படாத கூறுகளும் குடிநீர் விநியோக பணிகளுக்கு பயன்படுத்தப்பட்டன.

**2.12.4. குக்கிராம அளவில் தினசரி குடிநீர் விநியோகத்தினை இணையதளம் மூலம் கண்காணித்தல்.**

தேசிய தகவலியல் மையத்தின் உதவியோடு ஊரகப் பகுதிகளில் குக்கிராம அளவில் குடிநீர் விநியோகம் செய்யப்படுவதை தினசரி இணையதளம் மூலம் கண்காணிக்கும் வசதி ஏற்படுத்தப்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

## 2.12.5. தெரு விளக்குகள் பராமரித்தல்

ஊரக பகுதிகளில் தெருவிளக்குகளை பராமரிப்பது, கிராம ஊராட்சிகளின் அடிப்படை கடமைகளில் ஒன்றாகும். **31.3.2017** அன்றைய நிலையில் மாநிலத்தில் ஊரகப்பகுதிகளில் **27.35** லட்சம் தெரு விளக்குகள் உள்ளன. கிராம ஊராட்சிகளில் பராமரிக்கப்படும் பல்வேறு வகையான தெருவிளக்குகள் விவரம் பின்வருமாறு:

### அட்டவணை 2.8

### மாவட்ட வாரியான தெருவிளக்குகள் விவரம்

| வ.எண் | மாவட்டம் | குழல் விளக்கு | பாதரச ஆவி விளக்கு | சோடியம் ஆவி விளக்கு | ஆடர் ஒளி விளக்கு | சூரியசக்தி தெரு விளக்கு | எல்இடி விளக்கு | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் | 38405 | 514 | 12163 | 23082 | 1538 | 40099 | 115801 |
| 2 | திருவள்ளூர் | 6496 | 664 | 4622 | 83035 | 1122 | 39911 | 135850 |
| 3 | கடலூர் | 32235 | 596 | 10150 | 30461 | 2001 | 41494 | 116937 |
| 4 | விழுப்புரம் | 27717 | 26 | 6412 | 36404 | 1020 | 62295 | 133874 |
| 5 | வேலூர் | 84504 | 772 | 4767 | 9784 | 2529 | 58102 | 160458 |
| 6 | திருவண்ணாமலை | 47013 | 883 | 5792 | 21110 | 1485 | 40742 | 117025 |
| 7 | சேலம் | 83419 | 341 | 2566 | 14854 | 1514 | 48418 | 151112 |
| 8 | நாமக்கல் | 34250 | 96 | 856 | 15587 | 1451 | 22958 | 75198 |
| 9 | தர்மபுரி | 8887 | 543 | 1287 | 11343 | 420 | 26679 | 49159 |
| 10 | கிருஷ்ணகிரி | 2679 | 295 | 864 | 39470 | 1235 | 28900 | 73443 |
| 11 | ஈரோடு | 52174 | 170 | 1975 | 3061 | 1075 | 23764 | 82219 |
| 12 | திருப்பூர் | 32762 | 349 | 1451 | 3627 | 1611 | 23164 | 62964 |
| 13 | கோயம்புத்தூர் | 30277 | 370 | 1828 | 12389 | 840 | 19740 | 65444 |
| 14 | நீலகிரி | 2945 | 0 | 1173 | 1415 | 220 | 6459 | 12212 |
| 15 | தஞ்சாவூர் | 79000 | 1887 | 6478 | 46083 | 1980 | 33250 | 168678 |
| 16 | நாகப்பட்டினம் | 52044 | 95 | 1991 | 29074 | 1315 | 28284 | 112803 |
| 17 | திருவாரூர் | 40280 | 352 | 792 | 44403 | 898 | 18409 | 105134 |
| 18 | திருச்சிராப்பள்ளி | 61372 | 611 | 3394 | 5720 | 1546 | 38212 | 110855 |
| 19 | கரூர் | 23267 | 182 | 750 | 11013 | 760 | 13667 | 49639 |
| 20 | பெரம்பலூர் | 6404 | 37 | 547 | 9056 | 105 | 13670 | 29819 |
| 21 | அரியலூர் | 15245 | 369 | 2565 | 8340 | 650 | 9054 | 36223 |
| 22 | புதுக்கோட்டை | 44338 | 205 | 3200 | 12200 | 1910 | 30086 | 91939 |
| 23 | மதுரை | 34878 | 110 | 1261 | 5786 | 610 | 25211 | 67856 |
| 24 | தேனி | 20852 | 1173 | 78 | 1343 | 616 | 11708 | 35770 |
| 25 | திண்டுக்கல் | 28364 | 259 | 646 | 29551 | 1369 | 3051 | 63240 |

| வ.எண் | மாவட்டம் | குழல் விளக்கு | பாதரச ஆவி விளக்கு | சோடியம் ஆவி விளக்கு | ஆடர் ஒளி விளக்கு | சூரியசக்தி தெரு விளக்கு | எல்இடி விளக்கு | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 26 | இராமநாதபுரம் | 21819 | 182 | 1385 | 38887 | 633 | 20505 | 83411 |
| 27 | விருதுநகர் | 65166 | 511 | 1700 | 15699 | 1574 | 23366 | 108016 |
| 28 | சிவகங்கை | 25667 | 61 | 1285 | 13530 | 840 | 15430 | 56813 |
| 29 | திருநெல்வேலி | 67091 | 420 | 3840 | 1210 | 1860 | 43770 | 118191 |
| 30 | தூத்துக்குடி | 58332 | 88 | 1435 | 3926 | 1500 | 16862 | 82143 |
| 31 | கன்னியாகுமரி | 36133 | 7 | 1051 | 11937 | 506 | 13655 | 63289 |
| | **மொத்தம்** | **1164015** | **12168** | **88304** | **593380** | **36733** | **840915** | **2735515** |

## 2.13. அடிப்படைப் பணிகளுக்கான பயன்பாடு மற்றும் பராமரிப்பு செலவின வழிமுறைகள்:

அரசு ஆணை எண். 157 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மா.அ.தி) துறை நாள். 21.12.2015ல் அடிப்படை பணிகளுக்கான செயல்பாடு மற்றும் பராமரிப்பிற்கான வழிகாட்டி நெறிமுறைகள் மற்றும் செலவின அளவை திருத்தி கீழ்க்கண்டவாறு அரசு உத்திரவிட்டுள்ளது.

### (i) கை பம்பு (கூலி மட்டும்)

| | |
|---|---|
| **கை பம்பு** | ரூ.1000/- (கூலி மட்டும்) |

### (ii) மின்விசை பம்பு பராமரிப்பிற்காக பொருட்கள் மற்றும் கூலியாக ஓர் ஆண்டுக்கு நிர்ணயிக்கப்பட்ட தொகை

| | |
|---|---|
| 2 குதிரை திறன் மின்விசை பம்புகள் | ரூ.7,500 |
| 5 குதிரை திறன் மின்விசை பம்புகள் | ரூ.10,000 |
| 7.5 குதிரை திறன் மின்விசை பம்புகள் | ரூ.12,000 |

## (iii) தெருவிளக்குகள் பொருத்துவதற்கான கூலி

| | |
|---|---|
| தெரு விளக்கு மற்றும் சோடியம் ஆவி விளக்கு | ரூ.50/- |
| சோக் / ஸ்டார்ட்டர் / கன்டன்ஸர் | ரூ.25 |

## 2.14. புதிய முயற்சிகள்

### 2.14.1. ஊரகப் பகுதிகளில் குழல் விளக்குகளை எல்.இ.டி விளக்குகளாக மாற்றியமைத்தல்

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் **1994,** பிரிவு **110–**ன்படி ஊரகப் பகுதிகளில் தெருவிளக்குகள் அமைத்தல் மற்றும் பராமரித்தல் கிராம ஊராட்சிகளின் அடிப்படை கடமைகளில் ஒன்றாகும்.

கிராம ஊராட்சியின் வருவாயில் பெரும்பகுதி மின் கட்டணம் செலுத்துவதற்கும், தெரு விளக்குகள் பராமரிப்பதற்கும் செலவிடப்படுகிறது. மின்திறன் மேம்பாடு, நீடித்த தன்மை மற்றும் திறம்பட்ட மேலாண்மை ஆகியவற்றை உறுதி செய்திட ஊரக பகுதியில் உள்ள அனைத்து குழல் தெரு விளக்குகளையும் எல் இ டி விளக்குகளாக மாற்றிட அரசு முடிவு செய்தது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் சட்ட மன்ற பேரவையில் விதி **110–** ன் கீழ் வெளியிட்ட அறிவிப்பின் அடிப்படையில் தமிழ்நாட்டில் உள்ள **17.06** லட்சம் குழல் தெரு விளக்குகள் எல் இ டி விளக்குகளாக மாற்றி அமைக்கப்பட்டு வருகிறது. இந்த நடவடிக்கையின் மூலம் இந்தியாவில் ஊரக

பகுதிகளில் உள்ள அனைத்து குழல் தெரு விளன்குகளையும் எல் இ டி விளக்குகளாக மாற்றும் மாபெரும் திட்டத்தை மேற்கொள்ளும் முதல் மாநிலமாக தமிழ்நாடு விளங்குகிறது.

### 2.14.2 மின் இணைப்புகளை முறைப்படுத்துதல்

மின் நுகர்வினை திறம்பட மேலாண்மை செய்யும் வகையில் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் ஒருங்கிணைப்போடு அனைத்து நிலைகளிலும் பல தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்த முயற்சிகளின் ஒரு பகுதியாக கீழ்காணும் மும்முனை உத்திகள் பின்பற்றபட்டன.

- அனைத்து மின் இணைப்புகளையும் ஒழுங்குபடுத்தி மின் மீட்டர்கள் பொருத்துதல்.
- கிராம ஊராட்சி நிர்வாகத்திற்கு தொடர்பில்லாத மின் இணைப்புகளை பயன்பாட்டு துறைக்கு மாற்றுதல்.
- கிராம ஊராட்சிகளுக்கு தொடர்புடைய பயன்பாட்டில் இல்லாத மின் இணைப்புகளை துண்டித்தல்.

மேற்கண்ட நடவடிக்கைகளினால் கிராம ஊராட்சி நிர்வாகத்திற்கு தொடர்பில்லாத 22,587 மின் இணைப்புகளுக்கு ஊராட்சிகளினால் மின் கட்டணம் செலுத்துவது தவிர்க்கப்பட்டது, 713 மின் இணைப்புகளுக்கு புதிய மீட்டர்கள் பொருத்தப்பட்டன. மேலும் 12,617 பயன்பாட்டில் இல்லாத மின் இணைப்புகள் துண்டிக்கப்பட்டன.

### 2.14.3 தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் மற்றும் தமிழ்நாடு ஊரக வளர்ச்சி துறையின் இயங்குதள வழங்கிகளை (Server) ஒருங்கிணைத்தல்

மின் நுகர்வு கட்டண விவரங்களை பகிர்ந்து கொள்ளும் வகையில் ஊரக வளர்ச்சி துறையின் இயங்குதள வழங்கியும் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழக இயங்குதள வழங்கியும் இணைக்கப்பட்டுள்ளன. இந்த இயங்குதள வழங்கிகளை ஒருங்கிணைத்தன் மூலம் மின் இணைப்புகள் வாரியான தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகத்தின் கேட்பு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறையின் இணைதளத்தில் பிரதிபலிப்பதால் கிராம ஊராட்சி அளவிலும், வட்டார அளவிலும், மாவட்ட அளவிலும் மின் கட்டணங்களை ஒத்திசைவு செய்வது எளிமையாக உள்ளது. இனி வரும் காலங்களில் புதிய மின் இணைப்பு தேவைப்படும் பட்சத்தில்அதற்கான படிவம் ஊரக வளர்ச்சி துறையின் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டு, புதிய மின் இணைப்புகளை பெற வழிவகை செய்யப்படும்.

### 2.15. சுகாதாரம் – கிராம ஊராட்சிகளில் தூய்மை மற்றும் சுத்தத்தினை பேணிக் காத்தல்.

ஊரகப் பகுதிகளை சுத்தமான நிலையிலும் தூய்மையாகவும் வைத்திருப்பது கிராம ஊராட்சியின் கட்டாயக் கடமைகளில் ஒன்றாகும். இது தொடர்பாக கிராம ஊராட்சிகள் கீழ்க்கண்ட சுகாதார நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன.

i) தெருக்கள் மற்றும் ஊராட்சி சாலைகளை சுத்தம் செய்தல்.

ii) கழிவு நீர்க்கால்வாய் கட்டுதல், சுத்தம் செய்தல் மற்றும் கழிவு நீரை முறையாக வெளியேற்றுதல்.

iii) குப்பை குவியல்கள் மற்றும் முட்புதர்களை அகற்றுதல்.

iv) பொதுக் கழிப்பிடங்களை பராமரித்தல்.

v) சுடுகாடு/இடுகாடு ஆகியவற்றை அமைத்தல் மற்றும் பராமரித்தல்.

vi) பயன்பாட்டில் இல்லாத கிணறுகள், சுகாதாரமற்ற குட்டைகள், குளங்கள், சாக்கடைகள், குழிகள் அல்லது பள்ளங்கள் ஆகியவற்றை மூடுதல்,

ஊரகப் பகுதிகளில் சுகாதாரத்தை பராமரித்திட **2013**–ம் ஆண்டு நியமிக்கப்பட்ட **16,726** கூடுதல் துப்புரவு பணியாளர்கள் உட்பட தற்போது மொத்தம் **26,622** துப்புரவு பணியாளர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். தற்போது, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் மற்றும் மாநில அரசு திட்டங்களை ஒருங்கிணைத்து திடக் கழிவு மேலாண்மை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மாநிலத்திலுள்ள அனைத்து கிராம ஊராட்சிகளிலும் **65,988** பணியாளர்கள் தூய்மை காவலர்களாக இந்த நடவடிக்கைகளில் ஈடுப்படுத்தப்பட்டுள்ளனர்.

## 2.16. ஊரகப் பகுதிகளில் தொற்று நோய் தடுப்பு நடவடிக்கைகள்

ஊரகப் பகுதிகளை சுத்தமாக பராமரித்து, தொற்று நோய்கள் பரவுவதைத் தடுக்கும் வகையில் ஊராட்சி நிறுவனங்கள் சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறையுடன் இணைந்து செயல்படுகின்றன. ஊரகப் பகுதிகளில் தொற்று நோய்களைத் தடுக்கும் பொருட்டு கீழ்கண்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

i) அனைத்து வகையான தொடர்பு சாதனங்கள் மற்றும் சமூதாய சார்ந்த அமைப்புகள் மூலம் தகவல் கல்வி தொடர்பு நடவடிக்கைகள் மேற்கொண்டு பொது மக்களிடையே தொற்று நோய்கள் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

ii) மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி, தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டி மற்றும் கைப்பம்புகளை ஒட்டியுள்ள பகுதிகளை குறிப்பிட்ட கால இடைவெளிகளில் சுத்தம் செய்து குளோரின் முறையாக கலந்து குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

iii) ஒட்டுமொத்த துப்புரவு நடவடிக்கைகள் மூலம் குப்பைகளை அகற்றி அனைத்து பகுதிகளும் அவ்வப்போது சுத்தம் செய்யப்பட்டு வருகின்றன.

iv) அரசு மற்றும் தனியார் மருந்துவமனைகளில் காய்ச்சலுக்காக சிகிச்சை பெறும் நோயாளிகளின்

பட்டியலை தினந்தோறும் சுகாதாரத் துறையிடமிருந்து பெற்று, கள அளவில் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

v) சுகாதாரத் துறை மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அலுவலர்களிடையே ஒருங்கிணைப்பு கூட்டம் முறையாக நடத்தப்பட்டு வருகிறது.

vi) தீவிர கட்டுப்பாடு மற்றும் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள ஊராட்சி ஒன்றியங்களின் தேவையின் அடிப்படையில் மஸ்தூர்கள் தேர்வு செய்து, வட்டார மருத்துவ அலுவலர்களின் கட்டுப்பாட்டில் பணிபுரிய ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளது.

## 2.17 விருப்புரிமைப் பணிகள்

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994 பிரிவு 111–ன்படி ஊராட்சியின் தேவைக்கேற்பவும் நிதி ஆதாரங்களைக் கணக்கில் கொண்டும் பின்வரும் கடமைகளை கிராம ஊராட்சிகள் நிறைவேற்றிட வேண்டும்.

i) மரங்களை நட்டு பாதுகாத்தல்.

ii) குடியிருப்பு இல்லாத பொது இடங்கள் மற்றும் சாலைகளில் தெரு விளக்குகள் அமைத்தல்

iii) சந்தைகள் ஏற்படுத்தி பராமரித்தல்

iv) விழாக்கள் மற்றும் பொருட்காட்சிகளை ஒழுங்குபடுத்துதல்.

v) வண்டிகள் நிறுத்துமிடங்கள், கால்நடைத் தொழுவங்கள், இறைச்சிக்கூடங்கள் மற்றும் படிப்பகங்களை ஏற்படுத்தி பராமரித்தல்.

vi) விளையாட்டுத் திடல்கள், பூங்காக்கள், உடற் பயிற்சி கூடங்கள் ஏற்படுத்தி பராமரித்தல்.

## 2.18. நிதி ஆதாரங்கள்

மாநிலத்தில் மூன்றடுக்கு ஊரக உள்ளாட்சி அமைப்புகளில் வரி விதிப்பு செய்ய அதிகாரம் பெற்ற ஒரே அமைப்பு கிராம ஊராட்சியாகும். கிராம ஊராட்சிகள் வரி, வரியில்லா வருவாய் மற்றும் மானியம் மூலம் வருமானம் பெறுகின்றன.

### 2.18.1. வரி வருவாய்

கிராம ஊராட்சிகள் கீழ்க்கண்ட வரி இனங்களிலிருந்து வருவாய் பெற உரிமை பெற்றுள்ளன.

i) வீட்டு வரி / சொத்து வரி

ii) தொழில் வரி

iii) விளம்பர வரி

#### i) வீடு / சொத்து வரி

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் **1994**, பிரிவு **172** மற்றும் அரசாணை எண். **255**, ஊரக வளர்ச்சித் துறை, நாள் **13.12.1999**–ன்படி ஊரகப் பகுதிகளில் கட்டப்படும் ஒவ்வொரு கட்டடத்திற்கும் வீட்டு வரி / சொத்து வரி, சம்பந்தப்பட்ட

கிராம ஊராட்சியால் விதிக்கப்படுகிறது. பொது கட்டிடங்கள் மற்றும் அரசு கல்வி நிலையங்களுக்கு இவ்வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது. 2008–09ம் ஆண்டு முதல் அரசு உதவி பெறாத சுயநிதிக்கல்வி நிறுவனங்களின் கட்டடங்களுக்கு சொத்து வரி வசூலிக்கப்படுகிறது. மாவட்ட வாரியாக வசூலிக்கப்பட்ட வீட்டு வரி / சொத்து வரி விவரம் பின்வருமாறு:

## அட்டவணை 2.9.
## 2016–17 ஆம் ஆண்டில் மாவட்ட வாரியாக வசூலிக்கப்பட்ட வீட்டு வரி / சொத்து வரி விவரம்

**(ரூபாய் கோடியில்)**

| வ.எண் | மாவட்டத்தின் பெயர் | வீட்டு வரி ரூ. கோடியில் | சுயநிதி கல்வி நிறுவனங்கள் மீதான சொத்து வரி ரூ. கோடியில் | மொத்தம் ரூ. கோடியில் |
|---|---|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் | 35.80 | 3.16 | 38.96 |
| 2 | திருவள்ளூர் | 15.50 | 2.32 | 17.82 |
| 3 | கடலூர் | 7.79 | 0.55 | 8.34 |
| 4 | விழுப்புரம் | 6.16 | 0.47 | 6.63 |
| 5 | வேலூர் | 5.40 | 1.44 | 6.84 |
| 6 | திருவண்ணாமலை | 5.81 | 0.74 | 6.55 |
| 7 | சேலம் | 5.84 | 2.18 | 8.02 |
| 8 | நாமக்கல் | 3.09 | 2.09 | 5.18 |
| 9 | தர்மபுரி | 1.90 | 0.39 | 2.30 |
| 10 | கிருஷ்ணகிரி | 5.74 | 0.44 | 6.18 |
| 11 | ஈரோடு | 6.57 | 1.45 | 8.02 |
| 12 | திருப்பூர் | 7.66 | 0.49 | 8.15 |
| 13 | கோயம்புத்தூர் | 15.49 | 1.79 | 17.28 |
| 14 | நீலகிரி | 2.47 | 0.11 | 2.58 |
| 15 | தஞ்சாவூர் | 8.65 | 0.72 | 9.36 |
| 16 | நாகப்பட்டினம் | 3.04 | 0.37 | 3.41 |
| 17 | திருவாரூர் | 2.66 | 0.16 | 2.83 |
| 18 | திருச்சிராப்பள்ளி | 6.93 | 1.14 | 8.07 |
| 19 | கரூர் | 4.73 | 0.56 | 5.29 |
| 20 | பெரம்பலூர் | 1.88 | 0.65 | 2.54 |
| 21 | அரியலூர் | 4.25 | 0.24 | 4.50 |
| 22 | புதுக்கோட்டை | 4.59 | 0.80 | 5.39 |
| 23 | மதுரை | 8.01 | 0.65 | 8.66 |
| 24 | தேனி | 2.59 | 0.25 | 2.84 |

| வ.எண் | மாவட்டத்தின் பெயர் | வீட்டு வரி ரூ. கோடியில் | சுயநிதி கல்வி நிறுவனங்கள் மீதான சொத்து வரி ரூ. கோடியில் | மொத்தம் ரூ. கோடியில் |
|---|---|---|---|---|
| 25 | திண்டுக்கல் | 7.93 | 0.61 | 8.53 |
| 26 | இராமநாதபுரம் | 5.39 | 0.30 | 5.70 |
| 27 | விருதுநகர் | 8.23 | 0.79 | 9.02 |
| 28 | சிவகங்கை | 4.46 | 0.28 | 4.73 |
| 29 | திருநெல்வேலி | 5.54 | 0.36 | 5.90 |
| 30 | தூத்துக்குடி | 4.15 | 0.27 | 4.42 |
| 31 | கன்னியாகுமரி | 3.23 | 0.45 | 3.68 |
| மொத்தம் | | **211.48** | **26.22** | **237.70** |

## ii) தொழில் வரி

கிராம ஊராட்சிகள் தொழில் வரி வசூலிக்கும் அதிகாரம் பெற்றவை. தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் **1994**, பிரிவு **198 B**–ல் தொழிலாளர்களின் ஊதியம் அல்லது கூலித்தொகையிலிருந்து தொழில் வரி விதிக்கவும் உரிமை உள்ளது. தொழிலாளர்களின் ஊதியத்திலிருந்து பிடித்தம் செய்த தொகையினை தொடர்புடைய கிராம ஊராட்சிக்கு செலுத்திடவும் வகை செய்கிறது. அதன்படி **2016–17**ம் ஆண்டில் ரூ. **104.00** கோடி தொழில் வரி வசூலிக்கப்பட்டது.

### அட்டவணை 2.10.
### மாவட்ட வாரியான தொழில்வரி விவரம் – 2016–17

(ரூபாய் கோடியில்)

| வ.எண் | மாவட்டத்தின் பெயர் | வசூல் |
|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் | 11.93 |
| 2 | திருவள்ளூர் | 6.55 |
| 3 | கடலூார் | 2.75 |
| 4 | விழுப்புரம் | 5.40 |
| 5 | வேலூார் | 5.85 |
| 6 | திருவண்ணாமலை | 4.43 |
| 7 | சேலம் | 3.54 |
| 8 | நாமக்கல் | 2.24 |

| வ.எண் | மாவட்டத்தின் பெயர் | வசூல் |
|---|---|---|
| 9 | தர்மபுரி | 1.79 |
| 10 | கிருஷ்ணகிரி | 3.34 |
| 11 | ஈரோடு | 2.13 |
| 12 | திருப்பூர் | 1.72 |
| 13 | கோயம்புத்தூர் | 5.57 |
| 14 | நீலகிரி | 0.58 |
| 15 | தஞ்சாவூர் | 3.18 |
| 16 | நாகப்பட்டினம் | 2.05 |
| 17 | திருவாரூர் | 3.12 |
| 18 | திருச்சிராப்பள்ளி | 3.93 |
| 19 | கரூர் | 2.03 |
| 20 | பெரம்பலூர் | 0.86 |
| 21 | அரியலூர் | 2.35 |
| 22 | புதுக்கோட்டை | 2.55 |
| 23 | மதுரை | 2.64 |
| 24 | தேனி | 1.69 |
| 25 | திண்டுக்கல் | 3.42 |
| 26 | இராமநாதபுரம் | 3.62 |
| 27 | விருதுநகர் | 5.05 |
| 28 | சிவகங்கை | 2.60 |
| 29 | திருநெல்வேலி | 3.26 |
| 30 | தூத்துக்குடி | 2.56 |
| 31 | கன்னியாகுமரி | 1.27 |
| **மொத்தம்** | | **104.00** |

## iii) விளம்பர வரி

தமிழ்நாடு ஊராட்சி சட்டம் **1994,** பிரிவு **172, 220** மற்றும் **242**ல் அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி, ஊரக உள்ளாட்சி அமைப்புகள் விளம்பர வரி விதிக்கும் தகுதி பெற்றுள்ளன. தமிழ்நாடு ஊராட்சி ( உரிமம் வழங்குதல் மற்றும் வரி விளம்பரங்களுக்கு வரி விதித்து வசூலித்தல்) விதி **1999**ன்படி ஊரகப் பகுதிகளில் விளம்பர பலகைகள் நிறுவ அனுமதி பெற்றவர்களிடம் வசூலிக்கப்பட வேண்டிய

ஒரு ஆண்டிற்கான குறைந்த மற்றும் அதிக பட்ச தொகையினை அரசு நிர்ணயிக்க வகை செய்கிறது.

சம்மபந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்பின் நிர்வாக அலுவலர் ஆண்டு கட்டணத்தை வசூல் செய்து தொடர்புடைய உள்ளாட்சி அமைப்பின் பொது நிதிக் கணக்கில் செலுத்த வேண்டும்.

### 2.18. 2 வரியல்லாத வருவாய்

கீழ்க்கண்ட இனங்களிலிருந்து வரியல்லாத வருவாய் பெற கிராம ஊராட்சிகள் உரிமை பெற்றுள்ளன.

i) மனைப் பிரிவுகள் மற்றும் கட்டட வரைபட அனுமதிக்கான உரிமக் கட்டணம்

ii) அபாயகரமான மற்றும் கேடு விளைவிக்கக் கூடிய தொழில்களுக்கான கட்டணங்கள்

iii) சந்தைக் கட்டணம்

iv) குடிநீர் கட்டணம்

v) வண்டி நிலையங்களுக்கான கட்டணம்

vi) சமூகக் காடுகள் ஏலம்

vii) மீன்பாசி குத்தகை

viii) 2சி பட்டா கட்டணம்

ix) சந்தை மற்றும் பொருட்காட்சிகளிலிருந்து பெறப்படும் வருமானங்கள்

x) படகுக் குழாம் மூலம் பெறப்படும் கட்டணங்கள்

xi) அபராதங்கள் மற்றும் தண்டத்தீர்வை.

xii) கனிமம் மற்றும் சுரங்க உரிம தொகை

## i) மனைப்பிரிவுகள் மற்றும் கட்டட வரைபட அனுமதிக்கான உரிமக் கட்டணம்

ஊரகப் பகுதிகளில் உள்ள மனைப்பிரிவுகள் மற்றும் கட்டிட வரைபடங்களுக்கு அனுமதி அளித்தல் தொடர்பாக தமிழ்நாடு ஊராட்சிகள் கட்டட விதிகள் 1997ல் விதிமுறைகள் வெளியிடப்பட்டுள்ளது.

தமிழ்நாடு ஊராட்சிகள் கட்டட விதிகள், 1997 விதி 3–ன்படி கிராம ஊராட்சித் தலைவரால், நகர் மற்றும் ஊரமைப்பு இயக்குநர் அல்லது அவரால் அங்கீரிக்கப்பட்ட இணை இயக்குநர் அல்லது துணை இயக்குநர் முன் அனுமதியுடன் மனைப்பிரிவு அனுமதி வழங்கப்படவேண்டும். மனைப்பிரிவு அனுமதிக்கான விண்ணப்பம் கிராம ஊராட்சித் தலைவரிடம் விண்ணப்பதாரரால் அளிக்கப்பட வேண்டும். கிராம ஊராட்சித் தலைவர், அவ்விண்ணப்பத்தை நகர் மற்றும் ஊரமைப்பு இயக்குநருக்கு தொழில்நுட்ப அனுமதிக்காக பரிந்துரைக்க வேண்டும். விண்ணப்பதாரரால் கிராம ஊராட்சிகளுக்கு ஒப்பளிப்பு செய்திட வேண்டிய பொது உபயோகத்திற்கான திறந்த வெளி இடம் மற்றும் வளர்ச்சிக் கட்டணம் உள்ளிட்ட நிபந்தனைகளுக்குட்பட்டு நகர் மற்றும் ஊரமைப்பு இயக்குநரால் மனைப்பிரிவுகளுக்கு தொழில்நுட்ப அனுமதி வழங்கப்படும். அதனடிப்படையில்

கிராம ஊராட்சித் தலைவரால் மனைப்பிரிவுகளுக்கான இறுதி ஒப்புதல் வழங்கப்படும்.

தமிழ்நாடு ஊராட்சிகள் கட்டட விதிகள், 1997 விதி 4–ன்படி குறிப்பிட்ட வரையறைகளுக்குட்பட்டு கட்டட வரைபட அனுமதி கிராம ஊராட்சித் தலைவரால் வழங்கிட வழிவகை செய்யப்பட்டுள்ளது. 4,000 சதுர அடி பரப்பளவுக்கு மிகாத குடியிருப்பு கட்டடங்கள் மற்றும் 2,000 சதுர அடி பரப்பளவுக்கு மிகாத வணிக கட்டடங்களுக்கு வரைபட அனுமதியினை கிராம ஊராட்சித் தலைவர் வழங்கலாம். இவ்வரம்பிற்கு மேற்பட்ட கட்டடங்களுக்கு நகர் மற்றும் ஊரமைப்பு இயக்குநரின் தொழில்நுட்ப அனுமதியுடன் கட்டட வரைபட அனுமதியினை கிராம ஊராட்சித் தலைவர் வழங்கலாம்.

காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் உள்ள குறிப்பிட்ட சில கிராம ஊராட்சிகள், சென்னை பெருநகரப் பகுதிக்குள் 1975ம் ஆண்டு முதல் கொண்டு வரப்பட்டு மனைப்பிரிவு மற்றும் கட்டட வரைபட அனுமதிக்காக சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் அதிகார வரம்பெல்லைக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது.

### ii) அபாயகரமான மற்றும் கேடு விளைவிக்கக் கூடிய தொழில்களுக்கான உரிமக்கட்டணம்

ஊரகப் பகுதிகளில் அபாயகரமான மற்றும் கேடு விளைவிக்கக் கூடிய தொழில்களுக்கான உரிமங்களை கிராம ஊராட்சிகள் வழங்குகின்றன. அபாயகரமான மற்றும்

கேடு விளைவிக்கக் கூடிய பொருட்கள் தொடர்புடைய தொழில் அல்லது தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994 பிரிவு 159–ல் தெரிவித்துள்ள இயந்திரங்களைக் கொண்டு புதிய தொழில் தொடங்கவோ அல்லது புதுப்பிக்கவோ விரும்பும் விண்ணப்பதாரர், தொடர்புடைய கிராம ஊராட்சியில் விண்ணப்பித்திட வேண்டும்.

அதன்படி 2016–17ம் ஆண்டில் 2,47,747 வணிக நிறுவனங்களுக்கு கிராம ஊராட்சிகளில் தொழில் தொடங்க / புதுப்பிக்க உரிமம் வழங்கப்பட்டதுடன் உரிமக்கட்டணமாக ரூ.12.42 கோடி வசூல் செய்யப்பட்டுள்ளது.

### iii) குடிநீர் கட்டணங்கள்

ஊரகப் பகுதிகளில் வீடுகளுக்கான குடிநீர் இணைப்பிற்கு கிராம ஊராட்சிகள் குடிநீர் கட்டணம் விதிக்கின்றன. தனி நபர் வீட்டு குடிநீர் இணைப்பு வழங்குவதற்கு பிணையத் தொகை ரூ.1000 வசூலிக்கப்படுகிறது. ஒவ்வொரு வீட்டு குடிநீர் இணைப்பிற்கும் மாதக்கட்டணம் ரூ.50 செலுத்த வேண்டும். அதன்படி 2016–17–ம் ஆண்டில் குடிநீர் கட்டணமாக ரூ. 75.49 கோடி வசூலிக்கப்பட்டது. மாவட்ட வாரியான குடிநீர் கட்டண விபரம் பின்வருமாறு:

## அட்டவணை 2.11.

## 2016–17 ஆம் ஆண்டிற்கான மாவட்ட வாரியான குடிநீர் கட்டணம் வசூலிக்கப்பட்ட விபரம்

(ரூபாய் கோடியில்)

| வ.எண் | மாவட்டத்தின் பெயர் | வசூல் |
|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் | 2.87 |
| 2 | திருவள்ளூர் | 2.28 |
| 3 | கடலூர் | 1.44 |
| 4 | விழுப்புரம் | 0.34 |
| 5 | வேலூர் | 4.35 |
| 6 | திருவண்ணாமலை | 2.70 |
| 7 | சேலம் | 1.98 |
| 8 | நாமக்கல் | 1.68 |
| 9 | தர்மபுரி | 0.25 |
| 10 | கிருஷ்ணகிரி | 0.27 |
| 11 | ஈரோடு | 1.83 |
| 12 | திருப்பூர் | 3.62 |
| 13 | கோயம்புத்தூர் | 8.33 |
| 14 | நீலகிரி | 0.14 |
| 15 | தஞ்சாவூர் | 6.01 |
| 16 | நாகப்பட்டினம் | 1.04 |
| 17 | திருவாரூர் | 2.34 |
| 18 | திருச்சிராப்பள்ளி | 6.01 |
| 19 | கரூர் | 2.55 |
| 20 | பெரம்பலூர் | 0.89 |
| 21 | அரியலூர் | 1.69 |
| 22 | புதுக்கோட்டை | 1.23 |
| 23 | மதுரை | 1.78 |
| 24 | தேனி | 3.38 |
| 25 | திண்டுக்கல் | 2.39 |
| 26 | இராமநாதபுரம் | 2.00 |
| 27 | விருதுநகர் | 3.08 |
| 28 | சிவகங்கை | 1.94 |
| 29 | திருநெல்வேலி | 2.10 |
| 30 | தூத்துக்குடி | 1.26 |
| 31 | கன்னியாகுமரி | 3.72 |
| மொத்தம் | | **75.49** |

**2.18.3. மானியம்**

**i) மாநில நிதிக்குழு மானியம்**

73–வது அரசியலமைப்பு சட்டத்திருத்தம் மற்றும் 1994–ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் பிரிவு 198–ன்படி, தமிழ்நாட்டில் தொடர்ந்து ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை மாநில நிதி ஆணையம் அமைக்கப்பட்டு வருகிறது. மாநில நிதி ஆணையத்தின் வரம்பெல்லைகள் மற்றும் வரையறைகளாவன:–

1. அரசால் விதிக்கப்படும் வரி, தீர்வை, சுங்கம் மற்றும் கட்டணங்கள் மூலம் பெறப்படும் மொத்த வருவாயில் மாநிலத்திற்கும், உள்ளாட்சி அமைப்புகளுக்கும் பிரித்து வழங்கும் முறையினை உருவாக்குதல்.
2. ஊராட்சிகளுக்கு ஒதுக்கப்பட வேண்டிய வரிகள், தீர்வை, சுங்கங்கள் மற்றும் கட்டணங்கள் ஆகியவற்றை நிர்ணயித்தல்.
3. மாநிலத்தின் மொத்தத் தொகுப்பு நிதியிலிருந்து ஊராட்சிகளுக்கு வழங்கப்பட வேண்டிய மானியங்கள்.
4. ஊராட்சிகளின் நிதி நிலையினைப் பெருக்குவதற்கான வழிமுறைகள்.

தமிழ்நாடு அரசு ஆணை எண்.350 நிதித்துறை நாள் 23.04.2014ன் மூலம் தமிழகத்தில் "முதல் மாநில நிதிக்குழு" ஏற்படுத்தப்பட்டது. இந்தியாவில் மாநில நிதிக்குழு அமைத்த

முதன்மை மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்றாகும். ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிதி பகிர்வு செய்திட இதுவரை ஐந்து மாநில நிதி குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

### 2.19 முதல் மாநில நிதி ஆணையம்

முதல் மாநில நிதி ஆணையம் 1997–98 முதல் 2001–2002 வரை உள்ள காலத்திற்கு அமைக்கப்பட்டது. முதல் மாநில நிதிக்குழுவின் பரிந்துரையின்படி மாநில நிதிக்குழு மான்ய தொகையை ஊரக மற்றும் நகர்புற அமைப்புகள் 55:45 என்கிற விகிதத்தில் பகிர்ந்து கொள்ள அரசு ஆணை (நிலை) எண்.225 நிதி (வருவாய் இனங்கள்) துறை நாள் 2.5.1997 மூலம் உத்திரவிடப்பட்டது. ஊரக உள்ளாட்சிகளுக்கான 55 விழுக்காடு முறையே கிராம ஊராட்சி, வட்டார ஊராட்சி மற்றும் மாவட்ட ஊராட்சி ஆகியவற்றிற்கு 45:45:10 என்கிற விகிதத்தில் முறையே பகிர்வு செய்யப்பட்டது.

### 2.20 இரண்டாவது மாநில நிதி ஆணையம்

இரண்டாவது மாநில நிதி ஆணையம் 2002 –2003 முதல் 2006 – 2007 வரை உள்ள காலத்திற்கு அமைக்கப்பட்டது. இரண்டாவது மாநில நிதிக்குழுவின் பரிந்துரையின்படி ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு உரிய மானிய தொகையானது முறையே மாவட்ட ஊராட்சி, வட்டார ஊராட்சி மற்றும் கிராம ஊராட்சி ஆகியவற்றிற்கு 8:45:47 என்கிற விகிதத்தில் பகிர்ந்தளிக்க அரசு ஆணை எண்284, நிதி (நி.கு iv) துறை நாள் 12.08.2002ல் உத்தரவிடப்பட்டது.

## 2.21 மூன்றாவது மாநில நிதி ஆணையம்

மூன்றாவது மாநில நிதி ஆணையம் 2007 – 2008 முதல் 2011 – 2012 வரை உள்ள காலத்திற்கு அமைக்கப்பட்டது. மூன்றாவது மாநில நிதிக்குழுவின் பரிந்துரையின்படி மாநிலத்தின் சொந்த வரி வருவாயில் 9 சதவீதம், ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு 58:42 என்கிற விகித அடிப்படையில் ஒதுக்கப்பட்டது. ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான மானியத் தொகையானது கிராம ஊராட்சி, வட்டார ஊராட்சி மற்றும் மாவட்ட ஊராட்சி ஆகியவற்றிற்கு முறையே 60:32:8 என்கிற விகிதத்தில் பகிர்ந்தளிக்க அரசு ஆணை (நிலை) எண்.199 நிதி (நி.கு.iv)துறை நாள்.25.05.2007 மூலம் உத்தரவிடப்பட்டு செயல்படுத்தப்பட்டது.

## 2.22. நான்காவது மாநில நிதி ஆணையம்

நான்காவது மாநில நிதி ஆணையம் 2012–13 முதல் 2016–17 வரை உள்ள காலத்திற்கு அமைக்கப்பட்டது. இப்பரிந்துரைகள் அரசால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. நான்காவது மாநில நிதி ஆணைய பரிந்துரைகளில் கீழ்க்கண்டவை முக்கியமானவைகளாகும்.

அ) ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு 58 : 42 என்ற விகிதத்தில் பகிர்வு மானியம் பகிர்ந்தளிக்கப்பட்டது.

ஆ) ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான மானியத் தொகை, கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகளுக்கு **60:32:8** என்ற விகிதத்தில் பகிர்ந்தளிக்கப்பட்டது.

இ) **2013–14** ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு கிராம ஊராட்சிக்கும் குறைந்தபட்ச மானியம் ரூ.**5** இலட்சம் ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்பட்டது.

ஈ) கிராம ஊராட்சிகளைப் பொறுத்தவரை, **2011** ஆம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கீட்டின்படி ஊராட்சியின் மொத்த மக்கள் தொகை, ஆதிதிராவிடர் / பழங்குடியினர் மக்கள்தொகை மற்றும் ஊராட்சியின் பரப்பளவு ஆகியவற்றின் அடிப்படையில் **60:20:20** என்ற விகிதத்தில் நிதி விடுவிக்கப்பட்டது. ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகளுக்கு **2011**–ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி **100** விழுக்காடு நிதி விடுவிக்கப்படுகிறது.

உ) ஊராட்சி ஒன்றியங்களுக்கான குறைந்தபட்ச மானியம் ரூ.**30** இலட்சம் ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்பட்டது.

## 2.23. ஐந்தாவது மாநில நிதி ஆணையம்

மாநில அரசால் நியமிக்கப்பட்டிருந்த ஐந்தாவது மாநில நிதி ஆணையம், **2017–18** முதல் **2021–22** வரையிலான காலத்திற்கு தனது பரிந்துரையை டிசம்பர் **2016**ல் அளித்தது. ஐந்தாவது மாநில நிதிக்குழு

பரிந்துரைகளை அரசு ஏற்று அதன்படி சட்டமன்ற பேரவையில் **24.03.2017** அன்று வைக்கப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டது. கீழ்க்காணும் முக்கிய பரிந்துரைகளின் மீது அரசு ஆணை வெளியிட்டுள்ளது.

அ) மாநிலத்தின் சொந்த வரி வருவாயில் **10** விழுக்காடு ஊரக மற்றும் நகர்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு பகிர்ந்து அளிக்கப்படும்.

ஆ) பகிர்வு மானியம் ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கிடையே **56:44** என்கிற விகிதத்தில் பகிர்ந்தளிக்கப்படும்.

இ) ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு மத்தியில் நிலையான பகிர்வு முறையே மாவட்ட ஊராட்சி, வட்டார ஊராட்சி மற்றும் கிராம ஊராட்சிகளுக்கு **8: 37: 55** ஆகும்.

ஈ) **2017–18** ம் ஆண்டு முதல் கிராம ஊராட்சிகளுக்கான குறைந்தபட்ச மான்யம் ரூ.**5** இலட்சத்திலிருந்து ரூ.**7** இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது.

உ) ஊராட்சி ஒன்றியங்களுக்கான குறைந்தபட்ச மான்யம் ஆண்டுக்கு ரூ.**40** இலட்சம் என உயர்த்தப்பட்டுள்ளது.

ஊ) ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு அடுக்குகளுக்குகிடையேயான மாநில நிதிக்குழு மான்ய

தொகை பகிர்வு கீழ்காணும் வழிமுறைகளை கொண்டிருக்கும்.

| | | |
|---|---|---|
| 1 | 2011ம் ஆண்டின் கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை | 60% |
| 2 | பரப்பளவு | 15% |
| 3 | ஆதிதிராவிடர்/ மலைவாழ் மக்கள் தொகை | 15% |
| 4 | தனிநபர் செலவு நுகர்வு இடைவெளி | 10% |

எ) ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு உரிய பங்குத் தொகையில் 20 விழுக்காடு ஒதுக்கீடு செய்யப்பட்டு உட்கட்டமைப்பு இடை நிரவல் நிதிக்கு பதிலாக மூலதன மானிய நிதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

ஏ) ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான மொத்த தொகையில் 10 விழுக்காடு தொகையினை பற்றாக்குறை ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான தொகுப்பு நிதியாக ஏற்படுத்தப்பட்டுள்ளது.

2017–2018ம் ஆண்டிற்கான மதிப்பீட்டில் அரசு ரூ.5159 கோடி ஊரக உள்ளாட்சியில் அமைப்புகளுக்கு மானியமாக ஒதுக்கீடு செய்துள்ளது.

**2.24. மூலதன மானிய நிதி**

ஏற்கனவே நடைமுறையில் இருந்த உட்கட்டமைப்பு இடை நிரவல் நிதிக்கு பதிலாக ஐந்தாவது மாநில நிதி ஆணையத்தின் பரிந்துரையின் அடிப்படையில் மூலதன மான்ய நிதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு அளிக்கப்படும் பகிர்மான நிதி தொகுப்பில் 20 விழுக்காடு மூலதன மான்ய நிதிக்கு வழங்கப்படும்.

மாநில அளவில் முக்கியமானதாக கருதப்படும் திட்டங்களை செயல்படுத்த இதில் 20 விழுக்காடு தனியே ஒதுக்கீடு செய்யப்பட்டு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை செயலர், ஊரக வளர்ச்சி இயக்குநர், நிதித்துறை பிரதிநிதி ஒருவர் மற்றும் மாநில திட்டக்குழு உறுப்பினர் செயலர் அடங்கிய குழுவால் இப்பணிகள் தேர்வு செய்யப்பட்டு ஒப்புதல் வழங்கப்படும். எஞ்சியுள்ள 80 விழுக்காடு நிதி மாவட்ட ஊராட்சிகளுக்கு ஏற்றுக் கொள்ளப்பட்ட ஊரக உள்ளாட்சி அமைப்பிற்கு இடையேயான பகிர்மான விகிதத்தின் அடிப்படையில் மாவட்ட வாரியாக பகிர்ந்து அளிக்கப்படும். நிதித் துறை, திட்டம் மற்றும் வளர்ச்சித் துறையின் ஆலோசனையின்படி ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி துறையினால் வெளியிடப்படும் அரசாணையின் அடிப்படையில் தேர்வு செய்யப்படும் திட்டங்களுக்கு மாவட்ட திட்டக் குழுவால் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

## 2.25. பற்றாக்குறை ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான நிதி

ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் ஒட்டு மொத்த பகிர்மான நிதியில் 10 விழுக்காட்டினை கொண்டு பற்றாக்குறை ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான தொகுப்பு நிதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதில் 40 விழுக்காடு தொகை அதாவது ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான ஒட்டு மொத்த பகிர்மான நிதியில் 4 விழுக்காடு, கடந்த ஐந்து ஆண்டுகளில் குறைந்தது மூன்று ஆண்டுகளில் நிதி பற்றாக்குறை உள்ள ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் கிராம

ஊராட்சிகளுக்கு இடையே ஐந்தாவது நிதி ஆணைய காலத்தின் முதல் மூன்று ஆண்டுகளுக்கு ஊரக வளர்ச்சி இயக்குநரால் பகிர்ந்து அளிக்கப்படும். இதில் 20 விழுக்காடு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் வசம் இருக்கும். 20 விழுக்காடு தொகை மாவட்ட ஊராட்சிகளுக்கு, மாநில நிதி ஆணையம் பரிந்துரைத்த விகிதாச்சார அடிப்படையில் மாவட்டங்களுக்கு பிரித்து வழங்கப்படும். மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் ஊரக வளர்ச்சி இயக்குநர் இத்தொகையினை வேறு எந்த திட்டத்திலும் அல்லது வழிமுறையிலும் தீர்க்க முடியாத பிரச்சினைகளுக்குத் தீர்வு காண சம்மபந்தப்பட்ட கிராம ஊராட்சி அல்லது ஊராட்சி ஒன்றியத்திற்கு இத்தொகையினை மானியமாக வழங்க வேண்டும். மீதமுள்ள 20 விழுக்காடு தொகை கூட்டு குடிநீர் திட்டத்திலுல்ல பற்றாக்குறையினைப் போக்க தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு மானியமாக விடுவிக்கப்படும்.

## 2.26. கிராம ஊராட்சி வளர்ச்சித் திட்டம் தயாரிப்பதற்கான வழிகாட்டி நெறிமுறைகள்

உள்ளூர் சுயாட்சி அமைப்பான கிராம ஊராட்சிகள் உள்ளூர் குடிமக்களுக்குத் தேவையான அடிப்படை சேவைகளை வழங்குவதோடு ஏழைகள் மற்றும் ஒடுக்கப்பட்டோரின் பாதிப்பை சரி செய்யும் பொறுப்புள்ளது.

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994, பிரிவு 240ன் படி ஒவ்வொரு கிராம ஊராட்சியும் ஓர் ஆண்டு வளர்ச்சித்

திட்டத்தினை ஒவ்வொரு ஆண்டும் தயார் செய்திட வேண்டும்.

மக்கள் பங்கேற்புடன் கூடிய திட்டமிடல், நியாயமான, வெளிப்படையான மற்றும் தரமான வகையில் நிதி மற்றும் பிற வளங்களை பயன்படுத்துவதை உறுதி செய்வது மிகவும் முக்கியமானதாகும். அதற்கிணங்க 14வது நிதிக்குழு மானியத்தை அடித்தள அளவிலான திட்டமிடல் அடிப்படையில் பயன்படுத்திட அரசாணை எண் 34 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (ப.ரா.1) துறை நாள். 02.03.2016ல் விரிவான வழிகாட்டி நெறிமுறைகள் வெளியிடப்பட்டுள்ளது.

## 2.27 மத்திய நிதி ஆணைய மானியம்

பதினான்காவது நிதி ஆணைய குழு கிராம ஊராட்சிகளுக்கு அடிப்படை மான்யம் மற்றும் செயலாக்க மானியம் ஆகிய இரு மானியங்களை பரிந்துரை செய்துள்ளது. மொத்த மானிய தொகையில் 90 விழுக்காடு அடிப்படை மானியமாகும். 10 விழுக்காடு செயலாக்க மானியமாகும். 2015–16 முதல் 2019–20ம் ஆண்டு வரையிலான காலத்திற்கு தமிழ்நாட்டுக்கு உரிய பங்கு விவரம் கீழ்குறிப்பிடப்பட்டுள்ளது.

**அட்டவணை 2.12**
**மத்திய நிதி ஆணைய மானிய விவரம்**

**(ரூபாய் கோடியில்)**

| மானியம் | 2015-16 | 2016-17 | 2017-18 | 2018-19 | 2019-20 | மொத்தம் (2015-20) |
|---|---|---|---|---|---|---|
| அடிப்படை மான்யம் | 947.65 | 1312.19 | 1516.12 | 1753.87 | 2369.86 | 7899.69 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| செயலாக்க மான்யம் | -- | 172.12 | 194.78 | 221.20 | 289.64 | 877.74 |
| **மொத்தம்** | **947.65** | **1484.31** | **1710.90** | **1975.07** | **2659.50** | **8777.43** |

**i) 14 வது மத்திய நிதி ஆணைய அடிப்படை மானியம்**

2015–16–ம் ஆண்டிற்கான பதினான்காவது மத்திய நிதி ஆணைய அடிப்படை மானியத்தொகையாக ரூ. 947.65 கோடியை ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு மத்திய அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. இதேபோன்று 2016–17 ஆண்டிற்கு ரூ.1312.19 கோடி நிதியினை மத்திய அரசு விடுவித்துள்ளது. இத்தொகை முழுவதும் மக்கள் தொகை அடிப்படையில் கிராம ஊராட்சிகளுக்கு விடுவிக்கப்பட்டுள்ளது. ஊராட்சிகளில் அடிப்படை பணிகளான குடிநீர் விநியோகம், தெரு விளக்குகள் பராமரிப்பு, சுகாதாரம், மின்கட்டணம் மற்றும் குடிநீர் கட்டணம் செலுத்தவும் இம்மானியம் பயன்படுத்தப்படுகிறது. இத்தொகை மாநில அரசின் மானியத்தோடு இணைக்கப்பட்டு கிராம ஊராட்சியின் விருப்புரிமை பணிகளான அம்மா பூங்கா, உடற்பயிற்சி கூடம் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படுகிறது.

**ii)14வது மத்திய நிதி ஆணைய செயலாக்க மானியம்**

கீழே குறிப்பிடப்பட்டுள்ள இரண்டு நிபந்தனைகளுக்கு உட்பட்டு கிராம ஊராட்சிகளுக்கு செயலாக்க மானியம் வழங்க தேவையான விரிவான நடைமுறைகள், செயல்பாட்டு அளவுகோல் மற்றும் கிராம ஊராட்சிகளுக்கு விடுவிக்கப்பட வேண்டிய

ஊக்கத்தொகையின் அளவு உள்ளிட்ட அனைத்தையும் மாநில அரசே தீர்மானித்திட 14வது நிதிக்குழு ஆணையம் பரிந்துரைத்துள்ளது.

1. கிராம ஊராட்சிகள் செயலாக்க மானியம் கோரும் ஆண்டின் முந்தைய இரண்டு ஆண்டுகளுக்கு மிகாத ஊராட்சி கணக்கு தணிக்கை அறிக்கையினை சமர்ப்பிக்க வேண்டும்.

2. கிராம ஊராட்சிகளின் சொந்த வருவாய் முந்தைய ஆண்டைவிட அதிகரித்திருப்பது அத்தணிக்கை அறிக்கையில் பிரதிபலிக்க வேண்டும்.

கிராம ஊராட்சிகள் பதினான்காவது மத்திய நிதி ஆணைய செயலாக்க மானியம் பெறுவதற்கான வழிகாட்டு நெறிமுறைகள் அரசு ஆணை எண்.55 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (ப.ரா.1) துறை, நாள் 05.05.2016–ல் வெளியிடப்பட்டுள்ளது. தமிழ்நாடு அரசிதழ் எண்.117 நாள். 20.05.2016–ல் இதற்கான அறிவிக்கையும் வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி செயலாக்க மானியம் பெற கிராம ஊராட்சிகள் கீழ்க்கண்ட இரண்டு நிபந்தனைகளை நிறைவேற்றிருக்க வேண்டும்.

1. சம்பந்தப்பட்ட ஆண்டுகளின் தணிக்கை அறிக்கையினை சமர்ப்பிக்க வேண்டும்.

2. கிராம ஊராட்சியின் சொந்த வருவாய் முந்தைய ஆண்டை விட குறைந்தது 5 விழுக்காடு அதிகரித்து தணிக்கை அறிக்கையில் பிரதிபலிக்க வேண்டும்.

**2015 –16** ஆண்டில் செயலாக்க மானியம் பெற தகுதியுடைய **6,482** கிராம ஊராட்சிகளுக்கு மத்திய அரசால் ரூ.**172.12** கோடி அனுமதிக்கப்பட்டு, பெறப்பட்ட தொகை தொடர்புடைய கிராம ஊராட்சிகளுக்கு விடுவிக்கப்பட்டது.

## 2.28. ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய்

ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு பகிர்ந்தளிக்கப்படும் முத்திரைத்தாள் வரி, கேளிக்கை வரி ஆகியவற்றிலிருந்து பெறப்படும் வருவாயினை மாநில அளவில் ஒருங்கிணைத்து ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியங்களுக்கு பிரித்து வழங்கப்படுகிறது. அதன்படி, **2016–17** ஆம் ஆண்டுக்கான ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய் ரூ.**666.45** கோடியினை பின்வருமாறு அனுமதித்து அரசு ஆணையிட்டது.

i) **50** விழுக்காடு தொகையினை ரூ.**333.23** கோடி நிதி கிராம ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களுக்கு **67:33** என்ற விகிதத்தில் **2011** மக்கள் தொகை அடிப்படையில் பிரித்தளிக்கப்பட்டது. அவ்வாறு ரூ.**223.26** கோடி கிராம ஊராட்சிகளுக்கும், ரூ.**109.97** கோடி ஊராட்சி ஒன்றியங்களுக்கும் வரையறுக்கப்படாத நிதியாக பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.

ii) மீதமுள்ள 50 விழுக்காடு நிதியான ரூ.**333.22** கோடி குறிப்பிட்ட வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ளும் வகையில் ஊரகப் பகுதிகளில் முன்னுரிமைத்

திட்டங்களுக்காகவும், தமிழ்நாடு குக்கிராமங்கள் மேம்பாட்டுத் திட்டத்திற்காகவும் (தாய்) 50:50 என்ற விகிதத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 2.29 ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய் திட்டக் கூறு நிதி

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை செயலரைத் தலைவராகக் கொண்ட குழுவிற்கு ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய் திட்ட கூறு நிதியிலிருந்து பணிகளுக்கு ஒப்புதல் அளிக்கும் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடங்கள், பாலங்கள், சாலைகள் போன்ற கட்டமைப்புப் பணிகளை செயல்படுத்துவதற்காக 2016–17 ஆம் ஆண்டில் ரூ.166.61 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 2.30. கிராம ஊராட்சிகளுக்கான உட்கட்டமைப்பு வசதிகள்

### 2.30.1. அலுவலகக் கட்டடங்கள்

தமிழ் நாட்டில் உள்ள 12,524 கிராம ஊராட்சிகளுக்கும் நிலையான அலுவலக கட்டடங்கள் உள்ளன. இருப்பினும் நீண்டநாள் பயன்பாட்டிற்குப் பின் பழுதடைந்த கிராம ஊராட்சி அலுவலகக் கட்டடங்கள் இடிக்கப்பட்டு புதிய கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம், உட்கட்டமைப்பு இடைநிரவல் நிதி மற்றும் மத்திய அரசின் ஊராட்சிகளை வலிமைப்படுத்தும் திட்டம் ஆகியவற்றின் கீழ் 2011–12 முதல் 2014–15ம் ஆண்டு வரை ரூ.128.75 கோடி

செலவில் 1,481 ஊராட்சி அலுவலகக் கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. உள்ளாட்சி நிதி/மாநில அரசு நிதியைக் கொண்டு பழுதுநீக்கம் மற்றும் புனரமைப்பு பணிகளும் ஒவ்வொரு ஆண்டும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதன்படி, 2011–12ம் ஆண்டு முதல் 2014–15ம் ஆண்டு வரை ரூ.64.64 கோடி செலவில் 6,561 ஊராட்சி அலுவலகக் கட்டடங்கள் புனரமைக்கப்பட்டுள்ளன. இதுவரை 12524 கிராம ஊராட்சி சேவை மையங்கள் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் கட்டப்பட்டு கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கும் பொது சேவை மைய பயன்பாட்டிற்காக அளிக்கப்பட்டுள்ளது.

### 2.30.2. கணினி மற்றும் இணைய வசதிகள்

மக்களாட்சியின் அடித்தள அலகான கிராம ஊராட்சிகள் தொழில் நுட்ப ரீதியிலும் வலுப்பெறும் வகையில்

12,524 கிராம ஊராட்சிகளிலும் தடையில்லா மின்சார வசதியுடன் கணினி மற்றும் பிரிண்டர் ஆகியவை வழங்கப்பட்டுள்ளன.கிராம ஊராட்சிகளில் அகன்ற அலைவரிசை இணையதள வசதிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## 2.31. ஊராட்சி ஒன்றியம்

தமிழ்நாட்டில் இடைநிலை அளவில் 385 ஊராட்சி ஒன்றியங்கள் (வட்டார ஊராட்சிகள்) உள்ளன. ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியமும், 5000 மக்கள் தொகை கொண்ட ஊராட்சி ஒன்றிய வார்டுகளை உள்ளடக்கிய வளர்ச்சி

வட்டாரங்களாகும். ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர்கள் தொடர்புடைய வார்டில் உள்ள மக்களால் நேரடியாக தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர்களால், மறைமுகத் தேர்தலின் மூலம் ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் தேர்வு செய்யப்படுகிறார்.

## அட்டவணை 2.13
## கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை அடிப்படையில் ஊராட்சி ஒன்றியங்களின் விவரம்

| ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள ஊராட்சிகளின் வரம்பு விவரம் | ஊராட்சி ஒன்றியங்களின் எண்ணிக்கை |
|---|---|
| 10– மற்றும் அதற்கு குறைவாக | 23 |
| 11 முதல் 20 வரை | 80 |
| 21 முதல் 30 வரை | 80 |
| 31 முதல் 40 வரை | 83 |
| 41 முதல் 50 வரை | 65 |
| 51 மற்றும் அதற்கு அதிகமாக | 54 |
| **மொத்தம்** | **385** |

மாவட்ட வாரியான ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் கிராம ஊராட்சிகளின் பரப்பளவு விபரம் பின்வருமாறு :–

## அட்டவணை 2.14
## மாவட்ட வாரியாக ஊராட்சி ஒன்றியங்களின் விபரம்

| வ.எண் | மாவட்டம் | ஊராட்சி ஒன்றியங்களின் எண்ணிக்கை | கிராம ஊராட்சி களின் எண்ணிக்கை | ஊராட்சிகளின் சராசரி எண்ணிக்கை | ஊரக பரப்பளவு (ச.கிமீ) | ஊராட்சி ஒன்றியத்தின் சராசரி பரப்பளவு (ச.கிமீ) |
|---|---|---|---|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் | 13 | 633 | **49** | 3,851.45 | 296.27 |
| 2 | திருவள்ளூர் | 14 | 526 | **38** | 2,859.84 | 204.27 |
| 3 | கடலூர் | 13 | 683 | **53** | 2,942.24 | 226.33 |

| வ.எண் | மாவட்டம் | ஊராட்சி ஒன்றியங்களின் எண்ணிக்கை | கிராம ஊராட்சி களின் எண்ணிக்கை | ஊராட்சிகளின் சராசரி எண்ணிக்கை | ஊரக பரப்பளவு (ச.கிமீ) | ஊராட்சி ஒன்றியத்தின் சராசரி பரப்பளவு (ச.கிமீ) |
|---|---|---|---|---|---|---|
| 4 | விழுப்புரம் | 22 | 1,099 | **50** | 6,509.43 | 295.88 |
| 5 | வேலூர் | 20 | 743 | **37** | 4,022.30 | 201.12 |
| 6 | திருவண்ணாமலை | 18 | 860 | **48** | 4,826.27 | 268.13 |
| 7 | சேலம் | 20 | 385 | **19** | 4561.41 | 228.07 |
| 8 | நாமக்கல் | 15 | 322 | **21** | 3,119.43 | 207.96 |
| 9 | தர்மபுரி | 8 | 251 | **31** | 4,407.43 | 550.93 |
| 10 | கிருஷ்ணகிரி | 10 | 333 | **33** | 4,965.73 | 496.57 |
| 11 | ஈரோடு | 14 | 225 | **16** | 2,626.99 | 187.64 |
| 12 | திருப்பூர் | 13 | 265 | **20** | 4,545.50 | 349.65 |
| 13 | கோயம்புத்தூர் | 12 | 228 | **19** | 2,534.24 | 211.19 |
| 14 | நீலகிரி | 4 | 35 | **9** | 1,170.39 | 292.60 |
| 15 | தஞ்சாவூர் | 14 | 589 | **42** | 3,657.67 | 261.26 |
| 16 | நாகப்பட்டினம் | 11 | 434 | **39** | 2,400.31 | 218.21 |
| 17 | திருவாரூர் | 10 | 430 | **43** | 2,322.69 | 232.27 |
| 18 | திருச்சிராப்பள்ளி | 14 | 404 | **29** | 4,028.00 | 287.71 |
| 19 | கரூர் | 8 | 157 | **20** | 2,656.25 | 332.03 |
| 20 | பெரம்பலூர் | 4 | 121 | **30** | 1,609.54 | 402.39 |
| 21 | அரியலூர் | 6 | 201 | **34** | 1,710.17 | 285.03 |
| 22 | புதுக்கோட்டை | 13 | 497 | **38** | 4,433.78 | 341.06 |
| 23 | மதுரை | 13 | 420 | **32** | 3,183.18 | 244.86 |
| 24 | தேனி | 8 | 130 | **16** | 1,159.89 | 144.99 |
| 25 | திண்டுக்கல் | 14 | 306 | **22** | 4,401.34 | 314.38 |
| 26 | இராமநாதபுரம் | 11 | 429 | **39** | 4,116.19 | 374.20 |
| 27 | விருதுநகர் | 11 | 450 | **41** | 3,282.08 | 298.37 |
| 28 | சிவகங்கை | 12 | 445 | **37** | 3,075.90 | 256.33 |
| 29 | திருநெல்வேலி | 19 | 425 | **22** | 4,283.06 | 225.42 |
| 30 | தூத்துக்குடி | 12 | 403 | **34** | 4,260.78 | 355.07 |
| 31 | கன்னியாகுமரி | 9 | 95 | **11** | 626.14 | 69.57 |
| **மொத்தம்** | | **385** | **12,524** | **33** | **1,04,149.61** | **270.52** |

வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி), ஊராட்சி ஒன்றியத்தின் செயல் அலுவலர் ஆவார். அவருக்கு உதவியாக நிர்வாகப் பிரிவு மற்றும் பொறியியல் பிரிவுகள் உள்ளன. தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் **1994**,

பிரிவு **112**–ன்படி ஊராட்சி ஒன்றியக் குழு மேற்கொள்ளும் பணிகளில் முக்கியமானவைகள் பின்வருமாறு:

1. ஊராட்சி ஒன்றிய சாலைகள், சிறுபாலங்கள், பாலங்கள், தடுப்புச் சுவர்கள், தரைப்பாலங்கள் அமைத்தல், பழுதுபார்த்தல் மற்றும் பராமரித்தல்.

2. ஊராட்சி ஒன்றிய ஆரம்ப மற்றும் நடுநிலைப் பள்ளிகளுக்கான கட்டடங்கள் கட்டுதல் மற்றும் பராமரித்தல்.

3. ஊராட்சி ஒன்றியத்தின் கட்டுப்பாட்டில் உள்ள நீர்நிலைகளான சிறுபாசனக் குளங்கள், குட்டைகள், ஊரணிகள் ஆகியவற்றை பராமரித்தல் மற்றும் புதிதாக அமைத்தல்

4. தொற்றுநோய் பரவாதவண்ணம் தடுப்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்

5. ஊராட்சி ஒன்றியக் குழுக்களால் வரையறுக்கப்பட்ட கண்காட்சி மற்றும் விழாக்கள் நடத்துதல்.

6. ஊராட்சி ஒன்றியச் சந்தைகளாக வகைப்படுத்தப்பட்டவற்றை பராமரித்தல்.

**1994**–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், பிரிவு **114**ன்படி பொருளாதார வளர்ச்சி குறித்த திட்டங்கள் மற்றும் இதர செயல்பாடுகளை ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் செயல்படுத்தும்படி அரசு பணிக்கலாம்.

## 2.32. நிதி

1. ஊராட்சி ஒன்றிய குழுவிற்கு வரி விதித்திடும் அதிகாரம் இல்லை.
2. வரியில்லா வருவாய், ஒப்படைக்கப்பட்ட / பகிர்ந்தளிக்கப்பட்ட வருவாயில் ஒரு பகுதி, கட்டணங்கள், வாடகை, அபராதம் மற்றும் தண்டதீர்வை.
3. மாநில நிதி ஆணையத்தால் விடுவிக்கப்படும் மானியங்களான மக்கள் தொகை அடிப்படையிலான மானியம் மற்றும் குறைந்த பட்ச மானியம், ஆகியன ஊராட்சி ஒன்றியத்திற்கு மானியங்களாக வழங்கப்படுகிறது. ஐந்தாவது மாநில நிதி ஆணையத்தின் பரிந்துரை அடிப்படையில குறைந்தபட்சமான மானியம் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஆண்டிற்கு ரூ.40 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது.

## 2.33. ஊராட்சி ஒன்றியங்களுக்கான உட்கட்டமைப்பு வசதிகள்

### 2.33.1. அலுவலகக் கட்டடங்கள்

தமிழ் நாட்டிலுள்ள 385 ஊராட்சி ஒன்றியங்களுக்கும் நிலையான அலுவலகக் கட்டடங்கள் உள்ளன. நீண்ட காலமாக பயன்படுத்தப்பட்டு பழுதடைந்த பழைய கட்டடங்களுக்குப் பதிலாக ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய் திட்டக்கூறு நிதியினை

கொண்டு புதிய கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. **2011–12**ம் ஆண்டு முதல் **2015–16**ம் ஆண்டு வரை ரூ.**148.25** கோடி செலவில் **78** ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. **2016–17** ஆண்டில் ரூ. **28.35** கோடி மதிப்பீட்டில் **10** புதிய ஊராட்சி ஒன்றிய கட்டடங்கள் கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது**.**

### 2.33.2. கணினி மற்றும் இணையதள வசதிகள்

அனைத்து **385** ஊராட்சி ஒன்றியங்களிலும் தடையில்லா மின்சார வசதியுடன் கூடிய கணினி, பிரிண்டர் மற்றும் இணையதள வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

### 2.33.3. ஊராட்சி ஒன்றிய சேவை மையம்

வட்டார அளவில் பல்வேறு துறைகள் சார்ந்த சேவைகளை வழங்குவதற்கும் வளர்ச்சிப் பணிகளுக்கு உறுதுணையான இணையதள பரிமாற்றங்களை மேற்கொள்ளவும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் **2013–14**ம் ஆண்டில் ரூ.**32.81** கோடி மதிப்பீட்டில் **120** ஊராட்சி ஒன்றிய சேவை மையப் பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டன. அதேபோல, **2014–15**ம் ஆண்டில் ரூ.**45.28** கோடி மதிப்பீட்டில் **150** ஊராட்சி ஒன்றிய சேவை மையப் பணிகள் எடுக்கப்பட்டன.

### 2.34. நீராதார அமைப்புகள்

ஊரகப் பகுதிகளில் உள்ள குளங்கள், குட்டைகள் மற்றும் சிறுபாசன ஏரிகள் ஆகியன ஊரக உள்ளாட்சி

அமைப்புகளின் முக்கியமான சொத்துக்களில் சிலவாகும். மாவட்ட வாரியாக சிறுபாசன ஏரிகள் மற்றும் குளங்கள்/குட்டைகள் எண்ணிக்கை பின்வருமாறு

## அட்டவணை 2.15
## மாவட்ட வாரியாக சிறுபாசன கண்மாய்கள், குட்டைகள் / ஊரணிகள் விவரம்

| வ.எண் | மாவட்டம் | சிறுபாசன கண்மாய்கள் | ஊரணிகள்/ குட்டைகள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் | 1,100 | 1,240 | 2,340 |
| 2 | திருவள்ளூர் | 649 | 2,059 | 2,708 |
| 3 | கடலூார் | 254 | 2,304 | 2,558 |
| 4 | விழுப்புரம் | 1,257 | 3,551 | 4,808 |
| 5 | வேலூர் | 633 | 854 | 1,487 |
| 6 | திருவண்ணாமலை | 1,250 | 2,027 | 3,277 |
| 7 | சேலம் | 242 | 375 | 617 |
| 8 | நாமக்கல் | 152 | 422 | 574 |
| 9 | தர்மபுரி | 555 | 628 | 1,183 |
| 10 | கிருஷ்ணகிரி | 1,172 | 1,211 | 2,383 |
| 11 | ஈரோடு | 19 | 597 | 616 |
| 12 | திருப்பூர் | 10 | 1,434 | 1,444 |
| 13 | கோயம்புத்தூர் | 9 | 709 | 718 |
| 14 | நீலகிரி | 0 | 225 | 225 |
| 15 | தஞ்சாவூர் | 63 | 3,131 | 3,194 |
| 16 | நாகப்பட்டினம் | 0 | 3,979 | 3,979 |
| 17 | திருவாரூர் | 0 | 3,602 | 3,602 |
| 18 | திருச்சிராப்பள்ளி | 1,406 | 705 | 2,111 |
| 19 | கரூர் | 108 | 388 | 496 |
| 20 | பெரம்பலூர் | 477 | 1,615 | 2,092 |
| 21 | அரியலூர் | 138 | 753 | 891 |
| 22 | புதுக்கோட்டை | 3,824 | 1,795 | 5,619 |
| 23 | மதுரை | 1,029 | 3,233 | 4,262 |
| 24 | தேனி | 26 | 319 | 345 |
| 25 | திண்டுக்கல் | 1,577 | 1,000 | 2,577 |
| 26 | இராமநாதபுரம் | 818 | 2,499 | 3,317 |
| 27 | விருதுநகர் | 300 | 1,730 | 2,030 |
| 28 | சிவகங்கை | 2,776 | 4,156 | 6,932 |
| 29 | திருநெல்வேலி | 769 | 769 | 1,538 |
| 30 | தூத்துக்குடி | 397 | 1,148 | 1,545 |
| 31 | கன்னியாகுமரி | 599 | 300 | 899 |
| **மொத்தம்** | | **21,609** | **48,758** | **70,367** |

## 2.35. மாவட்ட ஊராட்சி

தமிழ் நாட்டில் 31 மாவட்ட ஊராட்சிகள் உள்ளன. 1994ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், பிரிவு 24–ன்படி ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஊராட்சி அமைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர்கள், மக்களால் நேரடித் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர்களால் மறைமுகத் தேர்தல் மூலம் மாவட்ட ஊராட்சித் தலைவர் தேர்வு செய்யப்படுகிறார்.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில், உதவி இயக்குநர் நிலையில் ஒரு அலுவலர் ஒவ்வொரு மாவட்ட ஊராட்சிக்கும் செயலராக நியமிக்கப்பட்டு பணியாற்றி வருகிறார். அவருக்கு உறுதுணையாகப் பணியாளர்கள் உள்ளனர். மாவட்ட ஊராட்சி, சம்மந்தப்பட்ட துறைகளோடு ஒருங்கிணைந்து செயல்பட பின்வரும் நிலைக்குழுக்களை அமைக்கலாம்.

1. உணவு மற்றும் வேளாண்மை
2. தொழிற்சாலைகள் மற்றும் தொழிலாளர்கள்
3. பொதுப் பணிகள்
4. கல்வி
5. மது விலக்கு உள்ளிட்ட சுகாதாரம் மற்றும் மக்கள் நலவாழ்வு.

இக்குழுக்கள் தவிர, தேவையின் அடிப்படையில் மாவட்ட ஊராட்சியால் கூடுதல் நிலைக் குழுக்களை

அமைத்துக் கொள்ளலாம். ஒவ்வொரு நிலைக் குழுவும், தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்ட ஊராட்சி உறுப்பினர்களில் ஒருவரைத் தலைவராகத் தேர்வு செய்திட வேண்டும். மாவட்ட ஊராட்சித் தலைவர், மேற்படி நிலைக் குழுக்களின் பதவி வழி உறுப்பினர் ஆவார்.

### 2.35.1. செயல்பாடுகள்

1. மாவட்ட வளர்ச்சித் திட்டம் தயாரித்தல்.
2. ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் கிராம ஊராட்சிகளின் நிர்வாக அறிக்கைகளை ஒருங்கிணைத்தல் மற்றும் மாவட்டத்தின் ஆண்டறிக்கையைத் தயாரித்தல்.
3. விவசாயம், நிலவள மேம்பாடு, கால்நடை பராமரிப்பு, பால்வளம், கோழிப்பண்ணை, மீன்வளம் மற்றும் கிராமத் தொழில்கள் ஆகியவற்றைத் திட்டமிடல் மற்றும் ஆய்வு செய்தல்.
4. ஊரக வீட்டு வசதி (குறிப்பாக ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு உரிய வீட்டு வசதி திட்டங்களை) திட்டமிடல் மற்றும் ஆய்வு செய்தல்
5. பெரிய அளவிலான குடிநீர் திட்டப் பணிகளைக் கண்டறிதல்.

### 2.35.2. நிதி

மாவட்ட ஊராட்சிகளுக்கு வரி விதிக்கும் அதிகாரம் ஏதும் இல்லை. மாநில நிதி ஆணைய மானியம் மட்டுமே முதன்மையான வருவாயாகும். குறிப்பிட்ட சில இனங்களில்

மாவட்ட ஊராட்சிக்கு சொந்தமான நிலம் மற்றும் கட்டடம் மூலமாக கிடைக்கும் வருவாய் முக்கியமானவையாகும். ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கப்படும் நிதியில் 8 விழுக்காடு மாவட்ட ஊராட்சிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இந்த மானியம் ஒவ்வொரு மாதமும் மாவட்ட ஊராட்சிகளுக்கு விடுவிக்கப்படுகிறது.

### 2.35.3 மாவட்ட திட்டக் குழு

மாவட்டத் திட்டக் குழு என்ற அமைப்பினை ஏற்படுத்திட 74வது இந்திய அரசியலமைப்புத் திருத்தச் சட்டம் வழிவகுத்துள்ளது. அதன்படி மாவட்டத் திட்டக் குழு 31 மாவட்டங்களிலும் அமைக்கப்பட்டுள்ளது. மாவட்டத் திட்டக்குழுவின் தலைவராக மாவட்ட ஊராட்சித் தலைவரும், துணைத்தலைவராக மாவட்ட ஆட்சித் தலைவரும் உள்ளனர். நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் நிர்ணயிக்கப்பட்ட விகிதாச்சாரத்திற்கேற்ப உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோர் இக்குழுவின் உறுப்பினர்களாவர். மாவட்டத் திட்டக்குழுவின் பணிகள் பின்வருமாறு:

1. மாவட்டப் பரவலாக்கப்பட்ட திட்டம் தயாரிப்பதற்குத் தேவையான மாவட்ட அளவிலான வள ஆதாரங்கள் விபரங்களை சேகரித்தல், தொகுத்தல் மற்றும் நாளது தேதிவரையிலான விபரங்களைப் பெறுதல்.
2. தேவைகளைக் கண்டறிந்து முன்னுரிமை அளித்தல்

3. மாவட்டத்தின் வளர்ச்சிக்குத் தேவையான கொள்கைகள், திட்டங்களைத் தயாரித்தல் மற்றும் முன்னுரிமை அளித்தல்.

4. மாவட்டத்தில் உள்ள ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் தயாரித்த திட்டங்களை ஒருங்கிணைத்து மாவட்ட வளர்ச்சித் திட்டம் தயாரித்தல். மாவட்டத் திட்டக்குழு தயாரிக்கும் வளர்ச்சித் திட்டம், மாநிலத் திட்டக்குழு தயாரிக்கும் மாநில அளவிலான திட்டத்திற்கு உதவியாக இருத்தல்.

5. மாவட்டத்தில் நடைபெறும் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களைக் கண்காணித்தல் மற்றும் ஆய்வு செய்தல்.

6. வளர்ச்சித் திட்டங்களில் தொண்டு நிறுவனங்களின் பங்கேற்பை ஊக்குவித்தல்.

7. மாநில அரசுத் திட்டங்களைச் செயல்படுத்துதல் தொடர்பான ஆலோசனைகளை மாநில அரசுக்கு வழங்குதல்.

8. மாநில அரசால் அவ்வப்போது ஒப்படைக்கப்படும் இதர பணிகளை நிறைவேற்றுதல்.

மேலே விவரிக்கப்பட்ட பணிகளை தவிர 5 வது மாநில நிதிக்குழுவின் பரிந்துரையின்படி 80 % மூலதன மாநில நிதி பணிகளுக்கு ஒதுக்கீடு செய்வது மாவட்ட திட்டக்குழுவின் பொறுப்பாகும். மூலதன மாநில நிதியில் 80 விழுக்காடு நிதி மாவட்ட ஊராட்சிகளுக்கு ஏற்றுக் கொள்ளப்பட்ட ஊரக உள்ளாட்சி அமைப்பிற்கு இடையேயான பகிர்மான விகிதத்தின் அடிப்படையில் மாவட்ட வாரியாக பகிர்ந்து

அளிக்கப்படும். நிதித் துறை, திட்டம் மற்றும் வளர்ச்சித் துறையின் ஆலோசனையின்படி ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி துறையினால் வெளியிடும் அரசாணையின் அடிப்படையில் தேர்வு செய்யப்படும் திட்டங்களுக்கு மாவட்ட திட்டக் குழுவால் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**2.36. மாவட்ட ஊராட்சிகளுக்கான உட்கட்டமைப்பு வசதிகள்**

மாநில அளவில் **31** மாவட்ட ஊராட்சிகளுக்கும் சொந்த கட்டடங்கள் உள்ளன. **31** மாவட்ட ஊராட்சிகளிலும் கணினி, பிரிண்டர் மற்றும் இணையதள வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளன.

**2.37. விருதுகள்**

மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளின் சிறந்த முயற்சிகள் மற்றும் நடவடிக்கைகளை ஊக்குவிக்கும் வகையில் தமிழ்நாடு அரசு மற்றும் மத்திய அரசு பல்வேறு விருதுகளை ஏற்படுத்தியுள்ளன.

**2.37.1. ஊராட்சிகளை வலிமைப்படுத்தும் விருது**

ஊராட்சிகளுக்கு அதிக அதிகாரங்கள், கூடுதல் நிதி மற்றும் பணியாளர்களை அளிப்பதுடன் ஊராட்சிகளின் திறனை மேம்படுத்த ஏதுவாக மாநில அரசுகளுக்கு உறுதுணையாக, ஊராட்சிகளுக்கு அதிகாரமளித்தல் மற்றும் பொறுப்புணர்வு ஆகியவற்றிற்கு ஊக்கத்தொகை அளிக்கும் விருதினை ஊராட்சிகளை வலிமைப்படுத்தும் விருது என மாற்றி மத்திய அரசின் ஊராட்சி அமைச்சகம் அறிவித்துள்ளது.

2015–16 –ஆம் ஆண்டில் 6 கிராம ஊராட்சிகளுக்கும் 2 ஊராட்சி ஒன்றியங்களுக்கும் மற்றும் ஒரு மாவட்ட ஊராட்சிக்கும் விருதுடன் ஊக்கத்தொகையும் வழங்கப்பட்டுள்ளது. விவரங்கள் வருமாறு :

| **ஊராட்சிகளை வலிமைப்படுத்தும் விருது 2015 –16 மாவட்ட ஊராட்சி** | |
|---|---|
| **வ.எண்.** | மாவட்ட ஊராட்சியின் பெயர் |
| **1** | கோயம்புத்தூர் |

| **ஊராட்சிகளை வலிமைப்படுத்தும் விருது 2015 – 16 வட்டார ஊராட்சி** | | |
|---|---|---|
| **வ.எண்.** | **மாவட்ட ஊராட்சியின் பெயர்** | **வட்டார ஊராட்சியின் பெயர்** |
| **1** | சேலம் | எடப்பாடி |
| **2** | திருவண்ணாமலை | பெர்ணமல்லூர் |

| **ஊராட்சிகளை வலிமைப்படுத்தும் விருது 2015 – 16 கிராம ஊராட்சி** | | | |
|---|---|---|---|
| **வ.எண்.** | **மாவட்ட ஊராட்சியின் பெயர்** | **வட்டார ஊராட்சியின் பெயர்** | **கிராம ஊராட்சியின் பெயர்** |
| **1** | கடலூர் | அண்ணா கிராமம் | அகரம் |
| **2** | வேலூர் | வாலாஜா | திருப்பாற்கடல் |
| **3** | சேலம் | பி என் பாளையம் | சி.கே.உறில்ஸ் வடக்கு நாடு |
| **4** | நீலகிரி | கோத்தகிரி | கொடநாடு |
| **5** | திருச்சி | மணச்சநல்லுார் | இருகளுர் |
| **6** | கரூர் | கடவூர் | தென்னிலை |

### 2.37.2. ராஷ்ட்ரிய கௌரவ கிராம சபை விருது

வலுவான கிராம சபையின் மூலம் சிறப்பான சாதனைகள் புரியும் கிராம ஊராட்சிகளை அங்கீகரிக்கவும், ஊக்கமளிக்கவும் ஏதுவாக 2012ஆம் ஆண்டு முதல் மத்திய அரசின் ஊராட்சி அமைச்சகம், ராஷ்ட்ரிய கௌரவ கிராம சபை விருதினை ஏற்படுத்தியுள்ளது.

2015–16–ம் ஆண்டிற்கான விருதிற்கு ஈரோடு மாவட்டம் நம்பியூர் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள எம்மபூண்டி கிராம ஊராட்சியை மத்திய அரசு தேர்வு செய்து விருதுடன் ரொக்கப்பரிசும் வழங்கியுள்ளது.

# 3. மாநில அரசு திட்டங்கள்

## 3.1. முதலமைச்சரின் சூரிய மின்சக்தியுடன் கூடிய பசுமை வீடுகள் திட்டம்

முதலமைச்சரின் சூரிய மின்சக்தியுடன் கூடிய பசுமை வீடுகள் திட்டம் 2011–12 ஆம் ஆண்டில் துவக்கப்பட்டது. தமிழக அரசின் சிறப்புமிக்க முயற்சியான முதலமைச்சரின் சூரிய மின்சக்தியுடன் கூடிய பசுமை வீடுகள் திட்டம், கிராமப்புற ஏழை மக்களின் வீட்டு வசதி தேவைகளை பூர்த்தி செய்வதோடு பசுமை எரிசக்தியை ஊக்குவிக்கும் வகையிலும் வடிவமைக்கப்பட்டுள்ளது என்பதால், இத்திட்டமானது “அனைவருக்கும் வீடு” திட்டத்திற்கு முன்னோடியாக உள்ளது. விலையில்லா வீடு வழங்கும் இத்திட்டத்தின் கீழ் 2011–12 முதல் 2015-16 ஆம் ஆண்டு வரை ரூ.5,940 கோடி மதிப்பீட்டில் 3 இலட்சம் பசுமை வீடுகள் கட்டப்பட்டுள்ளன.

நாட்டிலேயே வேறெங்கும் இதுபோன்ற விலையில்லா வீடு வழங்கும் திட்டத்தில், 300 சதுர அடி பரப்பளவு மற்றும் சூரிய மின்சக்தி கொண்ட வீடுகள் வழங்கப்படவில்லை. இத்திட்டமானது பயனாளிகள் நலன் கருதியே உள்ளதாலும் மற்றும் இதர குடியிருப்புத் திட்டங்களைக் காட்டிலும் அலகுத் தொகை கூடுதலாக உள்ளதாலும் தமிழக மக்களின் மத்தியில் மிகுந்த வரவேற்பினைப் பெற்றுள்ளது. இத்திட்டம் மேலும் அடுத்த 5 ஆண்டுகளுக்கு நீட்டிக்கப்பட்டு, ஊரகப் பகுதியில் உள்ள ஏழை மக்களின் நலனுக்காக 2016–17 முதல் அடுத்த

ஐந்தாண்டுகளில் வருடத்திற்கு 20,000 வீடுகள் வீதம் 1 இலட்சம் சூரிய மின்சக்தியுடன் கூடிய பசுமை வீடுகள் ரூ.2.10 இலட்சம் அலகுத் தொகையில் (ரூ.1.80 இலட்சம் கட்டுமானத்திற்கும், ரூ.30,000 சூரிய மின்சக்தி விளக்கு அமைப்பதற்கும்) கட்டப்படும். கட்டுமான பணிகளுடன் சூரிய மின்சக்தி விளக்குகள் பொருத்தும் பணிகளும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறையாலேயே மேற்கொள்ளப்படும்.

**3.1.1 இத்திட்டத்தின் சிறப்பம்சங்கள்**

- ஒவ்வொரு வீடும் 300 சதுர அடி பரப்பளவில், ரூ. 2.10 லட்சம் அலகுத் தொகையில் மாநில அரசின் முழுமையான நிதி உதவியால் கட்டப்படுகிறது.
- ஒவ்வொரு வீடும், வசிக்கும் அறை, படுக்கை அறை, சமையல் அறை, கழிப்பறை தாழ்வாரம் ஆகியவற்றுடன் மழைநீர் சேகரிப்பு அமைப்பும் கொண்டிருக்கும்.
- ஒவ்வொரு வீட்டிலும் சூரிய ஒளி சக்தியில் எரியும் 5 ஒளி உமிழும் இருமுனைய (LED) விளக்குகள், படுக்கை அறை, வசிக்கும் அறை, சமையல் அறை, கழிப்பறை மற்றும் தாழ்வாரம் ஆகியவற்றில் தலா ஒரு விளக்கு வீதம் அமைக்கப்படும். பயனாளிகளின் விருப்பத்தின்படி, தமிழ்நாடு மின்சார வாரியத்திலிருந்து மீட்டர் அளவீடுடன் கூடிய மின் இணைப்பு பெறவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

- ஒரு வீட்டிற்கான அலகுத் தொகை ரூ. 2.10 லட்சம் ஆகும். இதில் ரூ.1.80 லட்சம் கட்டுமானத்திற்கும் ரூ.0.30 லட்சம் சூரிய சக்தி விளக்குகள் அமைப்பதற்கும் ஒதுக்கீடு செய்யப்படும்.
- பசுமை வீடுகள், பயனாளிகளின் குடியிருப்பு அமைந்துள்ள இடம் அல்லது கிராம ஊராட்சியின் பிற பகுதியில் அமைந்துள்ள பயனாளிக்கு சொந்தமான இடங்களில் கட்டப்பட வேண்டும்.

### 3.1.2 . மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்துடன் ஒருங்கிணைப்பு

- ரூ.2.10 இலட்சம் அலகுத் தொகையுடன் கூடுதலாக மற்ற திட்டங்களுடன் ஒருங்கிணைக்கும் நோக்கத்துடன் ஒவ்வொரு பயனாளிக்கும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்துடன் ஒருங்கிணைந்து தினக்கூலி அடிப்படையில் 90 மனித நாட்களுக்கான ஊதியம் அளிக்கப்பட வேண்டும்.
- மேலும் பயனாளிக்கு தனி நபர் இல்லக் கழிப்பறை கட்ட ரூ.12,000 மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்துடன் ஒருங்கிணைந்து வழங்கப்படும்.

### 3.1.3. பயனாளிகளின் தகுதிகள்

பயனாளிகள் கீழ்க்கண்ட தகுதிகளை பெற்றிருக்க வேண்டும்.

- சம்மந்தப்பட்ட கிராம ஊராட்சியில் வசிப்பவராகவும், ஏழ்மை நிலையிலும் இருக்க வேண்டும்.
- 300 சதுர அடிக்கு குறையாத வீட்டு மனை சொந்தமாக இருக்க வேண்டும்.
- குடும்ப தலைவரின் பெயரிலோ அல்லது குடும்ப உறுப்பினர் எவரேனும் ஒருவர் பெயரிலோ வில்லங்கமற்ற வீட்டு மனைப்பட்டா இருக்க வேண்டும்.
- தொடர்புடைய கிராமத்தில் அல்லது வேறு எங்கும் கான்கிரீட் கூரை போடப்பட்ட சொந்த வீடு எதுவும் இருக்கக் கூடாது.
- அரசின் இதர வீடு கட்டும் திட்டங்களில் பயன் பெற்றவராக இருக்கக் கூடாது.

### 3.1.4 பயனாளிகளை தெரிவு செய்யும் முறை

- இத்திட்டத்தின் கீழ் பயனாளிகள் ஏழை மக்களிலிருந்து தேர்வு செய்யப்படுவர். புது வாழ்வு திட்டம் மற்றும் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வதார இயக்கத்தால் தயார் செய்யப்பட்டுள்ள மக்களின் பங்கேற்புடன் கண்டறியப்பட்ட இலக்கு மக்கள்

பட்டியலிலிருப்பவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படவேண்டும்.

- மேற்படி பட்டியல் தயார் செய்யப்படும்போது நலிவுற்றவர்கள் என்று தெரிவு செய்யப்பட்டதன் அடிப்படையில் முன்னுரிமை அளிக்கப்பட்டு, அவை கிராம சபையில் சமர்ப்பிக்கப்பட்டு ஒப்புதல் பெற வேண்டும்.

- பயனாளிகள் பட்டியல் தயாரிக்கப்படும் போது, கீழ்கண்ட நபர்களுக்கு, அதாவது மாற்றுத் திறனாளிகள், விதவைகள், ஆதரவற்ற மற்றும் கணவனால் கைவிடப்பட்ட பெண்கள், பெண்களைத் தலைவராகக் கொண்ட குடும்பங்கள், முன்னாள் இராணுவத்தினர் மற்றும் ஓய்வு பெற்ற முன்னாள் துணை இராணுவ படையினர், ஊரகப் பகுதிகளில் வாழும் ஊட்டச்சத்து குறைவினால் பாதிக்கப்பட்ட ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத் துறையால் (ICDS) அடையாளம் காணப்பட்ட குழந்தைகளை, கொண்ட குடும்பங்கள், திருநங்கைகள், துணை இயக்குநரால் (மருத்துவப் பணிகள்) சான்றிதழ் வழங்கப்பட்ட ஹெச்ஐவி/எய்ட்ஸ்/காசநோய் ஆகிய நோய்களால் பாதிக்கப்பட்டவர்கள், தீ விபத்து, வெள்ளம் போன்ற இதர பிற இயற்கை இடர்பாடுகளால் பாதிக்கப்பட்டோர் ஆகியோருக்கு முன்னுரிமை அளிக்கப்படவேண்டும். மேலும், மனநலம் குன்றியோர் உள்ள குடும்பங்களுக்கும் முன்னுரிமை அளிக்கப்படவேண்டும்.

- ஓராண்டிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட மொத்தம் 20,000 வீடுகளில் 29 விழுக்காடு அதாவது 5,800 வீடுகள் ஆதி திராவிடர்களுக்கும், 1 விழுக்காடு அதாவது 200 வீடுகள் பழங்குடியினர்களுக்கும், மீதமுள்ள 70 விழுக்காடு அதாவது 14,000 வீடுகள் இதர இனத்தவர்களுக்கும் வழங்கப்படவேண்டும்.

- மாவட்ட வாரியான ஒதுக்கீட்டில் 3 விழுக்காடு மாற்று திறனாளிகளுக்கு பிரத்தியேகமாக ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும்.

- பயனாளிகள் தேர்வு, வீடுகள் ஒதுக்கீடு, கட்டுமானப் பொருட்கள் விநியோகம் மற்றும் இத்திட்டம் தொடர்பாக நடைமுறைப்படுத்தப்படும் வழிகாட்டு நெறிமுறைகள் அரசாணை (நிலை) எண். 60, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மாஅதி–1) துறை நாள். 06.06.2017–ல் உள்ளது.

### 3.1.5 முதலமைச்சரின் சூரிய மின் சக்தியுடன் கூடிய பசுமை வீடுèœ திட்ட சாதனைகள்

மூன்று இலட்சம் பசுமை வீடுகள் ரூ. 5,940 கோடி மதிப்பீட்டில் 2011–12 முதல் 2015–16 ஆம் ஆண்டு வரை கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 2016–17 ஆம் ஆண்டில் ரூ. 420 கோடி மதிப்பீட்டில் 20,000 பசுமை வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. மேலும் 2017–18 ஆம் ஆண்டில் ரூ. 420 கோடி மதிப்பீட்டில் 20,000 பசுமை வீடுகள் கட்டப்பட உள்ளன.

## 3.2. தமிழ்நாடு குக்கிராமங்கள் மேம்பாட்டுத் (தாய்) திட்டம்

### தாய் திட்டம் – I

தமிழ்நாட்டில் மொத்தம் 12,524 கிராம ஊராட்சிகளில் 79,394 குக்கிராமங்கள் உள்ளன. இருப்பினும், கிராம ஊராட்சியில் உள்ள குக்கிராமங்களின் எண்ணிக்கை மாவட்டத்திற்கு மாவட்டம் வேறுபடுகிறது. பல்வேறு எண்ணிக்கையிலான குக்கிராமங்களைக் கொண்ட கிராம ஊராட்சிகளுக்குச் சம அளவிலான நிதி ஒதுக்கீடு அளித்தது வளர்ச்சி நிலையில் வேறுபாட்டினையும், பொதுச் சொத்துகள் உருவாக்குவதில் மாறுபாட்டினையும் முன்னேற்றத்தில் ஏற்ற தாழ்வுகளையும் உருவாக்கியது. எனவே இந்த வேறுபாடுகளை களையும் வகையில் குக்கிராமங்களை அடிப்படை அலகாக கொண்டு ஆண்டிற்கு ரூ.750 கோடி வீதம் மாநில அரசு நிதி உதவியுடன் தமிழ்நாடு குக்கிராமங்கள் மேம்பாட்டுத் திட்டம் (தாய்) 2011–12ம் ஆண்டு முதல் அறிமுகப்படுத்தப்பட்டது.

இத்திட்டம், 5 கட்டங்களாக 2011–12 முதல் 2015–16 வரை மொத்தம் ரூ.3,680 கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் குடிநீர் விநியோகம், தெருவிளக்குகள், சாலைகள், சுடுகாடு / இடுகாடு மேம்பாடு, சுடுகாடு / இடுகாட்டிற்கு சாலை வசதிகள் போன்ற அடிப்படை வசதிகளும், அங்கன்வாடி மையம், பொது விநியோகக் கடை, சுய உதவிக்குழு கட்டிடம், கதிரடிக்கும் களம், விளையாட்டு மைதானம் போன்ற கூடுதல்

தேவைகளும் மற்றும் இதர அத்தியாவசிய பணிகளும் எடுத்து செயல்படுத்தப்பட்டன. மொத்தம் **2,31,807** பணிகள் எடுக்கப்பட்டு முடிக்கப்பட்டுள்ளன. எனவே, குக்கிராமங்களை அடிப்படை வளர்ச்சி அலகாக கொண்டு இம்முன்னோடித்திட்டத்தை செயல்படுத்தும் ஒரே மாநிலம் தமிழ்நாடு ஆகும்.

**தாய் திட்டம் II**

இன்னும், ஒருபடி முன்னோக்கி செல்லும் பொருட்டு கிராம ஊராட்சிகளில் உள்ள குக்கிராமங்களில் பல்வேறு உட்கட்டமைப்பு வசதிகளை நிலைத்த தன்மையுடன் உருவாக்கிடவும், மேம்பாடு செய்திடவும் தாய் திட்டம் **2016–17**ம் ஆண்டில் தாய் II திட்டமாக நீட்டிக்கப்பட்டுள்ளது.

**1. திட்ட செயலாக்கம்**

**2016–17**ம் ஆண்டில் தாய் II திட்டம் ரூ.**750** கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட்டுள்ளது.

தாய் II திட்டதின் கீழ் பணிகள் தெரிவு செய்தல் மற்றும் இறுதி செய்வதற்கு ஊராட்சி ஒன்றியம் / வட்டாரம் அலகு ஆகும்.

**2. திட்டக் கூறுகள்**

தமிழ்நாட்டில் உள்ள **12,524** கிராம ஊராட்சிகளிலும் “தாய் I” திட்டத்தின் கீழ் அடிப்படை வசதிகள் நிறைவு செய்யப்பட்டுள்ள நிலையில், **2016–17**ம் ஆண்டில் “தாய் II”

திட்டத்தில் கீழ்கண்ட பணிகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது.

1. சிறுபாசன ஏரிகள் புனரமைத்தல் / மேம்படுத்துதல்
2. அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சாலைகள்.

**2.1 சிறு பாசன ஏரிகள் புனரமைத்தல் / மேம்படுத்துதல்**

**2016–17** ம் ஆண்டில், மாண்பு மிகு தமிழக முதல்வர் அவர்கள் சட்டப்பேரவை விதி எண்.**110**–ன் கீழ் 'தாய்–II' திட்டத்தில் ஊராட்சி ஒன்றியங்களின் பராமரிப்பில் உள்ள **1,200** சிறுபாசன ஏரிகள் ரூ.**300** கோடி மதிப்பீட்டில் விரிவான முறையில் மேம்படுத்தப்படும் என்று அறிவித்துள்ளார்கள்.

சிறுபாசன ஏரிகளில் சீரமைக்கப்படாமல் பழுதடைந்த நிலையில் உள்ள அடிப்படைக் கட்டமைப்புகளான நீர் வழிந்தோடிகள் மற்றும் மதகுகள் ஆகியவற்றை விரிவான முறையில் புனரமைப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இதன் மூலம் குக்கிராமங்களில் குடிநீர் தட்டுப்பாட்டினை களையவும், நிலத்தடி நீர் மட்டத்தினை உயர்த்திடவும், சிறுபாசன ஏரிகளின் முழு கொள்ளவினை மீட்கவும், நீர்நிலைகளில் அதிகப்படியாக வழிந்தோடும் நீரினை தடுத்திடவும், குடிநீர் மற்றும் விவசாயத் தேவைகளுக்கான நீரினை சேமித்து முறைப்படுத்தி தடையில்லா குடிநீர் விநியோகம் செய்யவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தினை செயல்படுத்துவதன் மூலம் கிராமப்புற விவசாயிகளின் நீண்டகால கோரிக்கைகள் நிறைவேற்றப்படும்.

**2016–17**ம் ஆண்டில் சிறுபாசன ஏரிகளில் உள்ள முட்புதற்களை அகற்றி இயந்திரங்களின் மூலம் ஏரிகளை தூர்வாரவும், மதகு மற்றும் கலங்கல்களை புதிதாக கட்டவும், பழுதுபார்த்திடவும், கரைகளை பலப்படுத்திடவும் விரிவான முறையில் சிறுபாசன ஏரிகளை புனரமைப்பு செய்திடவும் **1,200** பணிகள் எடுக்கப்பட்டுள்ளன.

## 2.2 அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சாலைகள்.

தாய் II திட்டத்தின் கீழ் குறிப்பாக, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் குடியிருப்புகள், ஆதிதிராவிடர் காலனிகள், முக்கிய குடியிருப்புகள் அரசால் செயல்படுத்தப்படும் குடியிருப்புத் திட்டங்களின் கீழ், புதிதாக உருவாக்கப்பட்டுள்ள குடியிருப்புகளில் தேவைப்படும் அடிப்படை உட்கட்டமைப்பில் உள்ள இடைவெளிகளை கண்டறிந்து நிறைவு செய்ய முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. குடிநீர் விநியோகம், தெரு விளக்குகள், தெருக்கள் மற்றும் சந்துகள் மேம்படுத்துதல், சுடுகாடு மற்றும் இடுகாடு மேம்பாடு மற்றும் சுடுகாடு/ இடுகாட்டிற்கு சாலைகள் ஆகிய பணிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது. மேலும், தார் இடப்படாத சாலைகளை தார்ச்சாலைகளாக மேம்படுத்துதல், சேதமடைந்த தார்ச்சாலைகளை வலுப்படுத்துதல் மற்றும் தார்ச்சாலைகளை பராமரித்தல் போன்ற சாலைப் பணிகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது.

## 3. திட்ட செயலாக்கம் 2016–17

- தாய் II திட்டம் அனைத்து கிராம ஊராட்சிகளிலும் ரூ.750 கோடி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.
- ரூ.300 கோடி மதிப்பீட்டில் 1,200 சிறுபாசன ஏரிகள் புனரமைத்தல் / மேம்படுத்துதல் பணிகள் எடுக்கப்பட்டுள்ளன.
- குடிநீர் விநியோகம், தெருவிளக்குகள், சாலைகள், சுடுகாடு / இடுகாடு மேம்பாடு, சுடுகாடு / இடுகாட்டிற்கு சாலை வசதிகள் போன்ற 7,282 அடிப்படை உட்கட்டமைப்பு பணிகள் ரூ.150 கோடி மதிப்பீட்டில் எடுக்கப்பட்டுள்ளன.
- 1,369 ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளை மேம்படுத்துதல், வலுப்படுத்துதல் மற்றும் புதுப்பித்தல் ஆகிய பணிகள் ரூ.300 கோடி மதிப்பீட்டில் எடுக்கப்பட்டுள்ளன.

## 3.3. அம்மா பூங்கா

### முன்னுரை

ஊரகப் பகுதிகளிலுள்ள மக்களின் நலனுக்காக விளையாட்டு மைதானங்கள், பூங்காக்கள், விளையாட்டு மன்றங்கள் மற்றும் கலாச்சார மையங்கள் ஆகியவற்றை அமைத்தல் கிராம ஊராட்சியின் விருப்பக் கடமைகளில் (Discretionary duty) ஒன்றாகும்.

அதனடிப்படையில், 2016–17 ஆம் நிதியாண்டில் நகர பகுதிகளுக்கு இணையாக ஊரக பகுதிகளில் கேளிக்கை உட்கட்டமைப்பு வசதிகளுடன் ரூ.100 கோடி மதிப்பீட்டில் பூங்கா ஒன்றுக்கு ரூ.20 இலட்சம் வீதம் 500 அம்மா பூங்காக்கள் அமைக்கும் பணிகள் எடுக்கப்பட்டுள்ளன.

**அம்மா பூங்காக்கள் தெரிவு செய்தல் மற்றும் அதன் திட்ட, கூறுகள்**

அம்மா பூங்காக்கள், ஆண்டு வருமானம் ரூ.20 இலட்சத்திற்கு மேலாகவும் மற்றும் 14வது நிதிக்குழு மானியத்தின் மூலம் ரூ.20 இலட்சத்திற்கு மேலாக வருமானம் பெறக்கூடியதாகவும் உள்ள கிராம ஊராட்சிகளில் அமைக்கப்படும். அம்மா பூங்கா கிராம ஊராட்சிகளில் குடியிருப்புகளுக்கு நடுவில் சுமார் 15,000 முதல் 20,000 சதுர அடி வரை கிராம ஊராட்சிக்கு சொந்தமான நிலம் அல்லது ஒப்படைக்கப்பட்ட திறந்த வெளி பாதுகாக்கப்பட்ட இடத்தில் அமைக்கப்படும்.

அம்மா பூங்கா அமைக்கப்படும் புற நகரம் / நகரத்தை ஒட்டியுள்ள கிராம ஊராட்சிகளில் பெண்கள், இளைஞர்கள் மற்றும் குழந்தைகளை மகிழ்விக்கும் வகையில் விளையாட்டு சாதனங்களுடன் கூடிய அனைத்து வசதிகளும் ஏற்படுத்தப்படும்.

**அம்மா பூங்கா கீழ் கண்ட வசதிகளுடன் அமைக்கப்படும்.**

அ) சிமெண்ட் கான்கிரீட் அல்லது பேவர் பிளாக் நடைபாதை

ஆ) LED விளக்குகளுடன் கூடிய ஒளி அமைப்புகள்.

இ) சிமெண்ட்/கிரானைட் பெஞ்சுகள் அல்லது எஃகினால் (Stainles steel) ஆன பெஞ்சுகள்.

ஈ) பெண்கள், குழந்தைகள் மற்றும் முதியோர்களுக்கான கழிப்பறை.

உ) குடிநீர் வசதிகள் மற்றும் தோட்டப் பராமரிப்பு, கழிப்பறைகளுக்கு தேவையான தண்ணீர் வசதி.

ஊ) விளையாட்டு பொருட்களுடன் கூடிய குழந்தைகள் விளையாடும் பகுதி.

எ) கொடிகளுடன் கூடிய நல்வரவு வளைவு மற்றும் வெளியே செல்லும் வழி.

ஏ) பாதுகாப்பு கம்பிகளுடன் (Grill or precast materials) கூடிய சுற்றுசுவர் வசதிகள்.

ஐ) தலைப்புகளுடன் கூடிய தகவல் மற்றும் அறிவிப்பு பலகைகள் உரிய இடங்களில் வைக்கப்படும்.

ஓ) கூழாங்கல் நடைபாதை மற்றும் எட்டு வடிவிலான கூழாங்கல் நடைபாதை தேவையான இடங்களில் அமைக்கப்படும்.

## 3.4. அம்மா உடற்பயிற்சி கூடம்

### முன்னுரை

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 பிரிவு 111 ன்படி ஊரகப்பகுதியிலுள்ள மக்களின் நலனுக்காக உடற்பயிற்சி கூடங்கள், பூங்காக்கள், விளையாட்டு மன்றங்கள் மற்றும் கலாச்சார மையங்கள் போன்ற தேவையான வசதிகளை வழங்குதல் கிராம ஊராட்சியின் விருப்பக் கடமைகளில் (Discretionary Duty) ஒன்றாகும். அதனடிப்படையில், 2016–17 ஆம் நிதியாண்டில் ஊரக இளைஞர்களின் உடல் ஆரோக்கியத்தையும் மன வளத்தையும் மேம்படுத்த அம்மா உடற்பயிற்சி கூடம் ஒன்றுக்கு ரூ.10 இலட்சம் வீதம் ரூ.50 கோடி மதிப்பீட்டில், 1,161 சதுர அடி பரப்பளவில் 500 அம்மா உடற்பயிற்சி கூடங்கள் அமைக்கும் பணிகள் எடுக்கப்பட்டுள்ளன.

### அம்மா உடற்பயிற்சி கூடத்தின் நன்மைகள்

- ஊரகப் பகுதி இளைஞர்கள் உடற்பயிற்சி செய்யவும், தங்களது உடலினை கட்டுக்கோப்பாக வைத்திருக்கவும் உதவுகிறது.
- ஊரக பகுதி மக்களின் சுகாதார உணர்வினை (Health consciousness) அதிகரிக்கிறது.

- இளைஞர்களின் மன உறுதியை மற்றும் ஒருமித்த உணர்வினை (Team spirit) வளர்க்கிறது.
- விளையாட்டு போட்டிகளுக்கு இளைஞர்களை தயார்படுத்துகிறது.

அம்மா உடற் பயிற்சி கூடம், அம்மா பூங்காவிற்குள் அமைக்கப்பட்டு கிராம ஊராட்சிகளால் பராமரிக்கப்படும்.

### 3.5. ஊரக உட்கட்டமைப்பு – சாலைகள்

சாலை இணைப்பு வசதி மற்றும் ஊரகச் சாலைகளின் நிலை ஊரக மக்களின் வாழ்க்கைத் தரத்தினை எடுத்துக் காட்டுவதாக உள்ளது. ஊரகச் சாலைகளின் மேம்பாடு ஊரக வளர்ச்சித் துறையின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாகும். தமிழ்நாட்டில் உள்ள பரந்த ஊரகச் சாலைகள் தொகுப்பினை பயன்படுத்தத்தக்க வகையில், ஏற்கனவே உள்ள சாலைகளை பராமரிக்கவும் புதிய சாலைகள் அமைக்கவும், உகந்த அளவில் நிதியினை வழங்குவது இந்த அரசின் நோக்கமாகும்.

ஊரகச் சாலைகளின் ஒட்டுமொத்த தொகுப்பினுள், இணைப்பு வசதி இல்லாத குக்கிராமங்களுக்கு இணைப்புச் சாலையினை ஏற்படுத்துதல், பேருந்து செல்லும் சாலைகள், சந்தைகள், கல்வி மற்றும் சுகாதார சேவைகளை இணைக்கும் முக்கிய இணைப்புச் சாலைகள் மேம்பாடு ஆகியவை இத்துறையின் முன்னுரிமைகளாகும்.

கடந்த **6** ஆண்டுகளில், கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளை மேம்பாடு செய்ய

மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் இத்துறையின் அணுகுமுறையை நன்கு வரையறுக்கும் அளவீடாக உள்ளது.

- **2011–12–**ம் ஆண்டில் கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளின் விவரங்களைப் புதுப்பிக்கும் நடவடிக்கையினை இத்துறை மேற்கொண்டது. ஒவ்வொரு சாலைக்கும் தனி சாலைக் குறியீடு (Road code) வழங்கப்பட்டு, அனைத்து கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளின் பட்டியல் www.tnrd.gov.in இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டது.
- **2012–13, 2013–14** மற்றும் **2014–15**ம் ஆண்டுகளில் தாரிடப்படாத சாலைகளை தார்ச்சாலைகளாக மேம்படுத்திட இத்துறை விரிவான மேம்பாட்டுத் திட்டத்தினை அறிமுகப்படுத்தி, அதன் மூலம் முன்னுரிமைச் சாலைகளை திட்ட வடிவில் மேம்பாடு செய்வதை உறுதி செய்துள்ளது.
- **2015–16–**ம் ஆண்டில், அனைத்து வகையான சாலைகளை மேம்பாடு செய்யவும், தேவையின் அடிப்படையில் நிதி ஒதுக்கீடு வழங்கவும், பல்வேறு வகையான சாலைத் திட்டங்களை ஒருங்கிணைத்து, தமிழ்நாடு ஊரகச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் என்ற உள்ளடக்கிய திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.
- **2016–17–**ம் ஆண்டில் கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகள் பராமரிப்பிற்காக விரிவான செயல்பாட்டு வழிமுறைகள் வடிவமைக்கப்பட்டது, இது

சாலைப் பணிகளின் சரியான திட்டமிடல் மற்றும் செயல்பாட்டிற்கு வழிவகை செய்துள்ளது.

**ஊரகச் சாலைகள் தொகுப்பு**

கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளின் மார்ச் 2017 வரையிலான புதுப்பிக்கப்பட்ட விவரம் பின்வருமாறு.

**அட்டவணை3.1.**

**கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகள்**

| வ. எண் | மேற்பரப்பு வகை | கிராம ஊராட்சி சாலை௨ை | ஊராட்சி ஒன்றிய சாலைகள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| | | நீளம் (கி.மீ) | | |
| 1 | தார் சாலை | 67,900 | 29,195 | **97,095** |
| 2 | சிமெண்ட் சாலை | 2,942 | 304 | **3,246** |
| 3 | ஈரடுக்கு கப்பிசாலை | 2,356 | 355 | **2,711** |
| 4 | ஓரடுக்கு கப்பிசாலை | 6,742 | 435 | **7,177** |
| 5 | சரளைக்கல் சாலை | 6,024 | 278 | **6,302** |
| 6 | மண்சாலை | 31,110 | 1,131 | **32,241** |
| | **மொத்தம்** | **1,17,074** | **31,698** | **1,48,772** |

கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளைப் பராமரிப்பது, கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியங்களின் கடமையாகும். இந்த அரசு, பெருகி வரும் ஊரகச் சாலைகள் தொகுப்பின் மேம்பாட்டிற்கு பல்வேறு மாநில மற்றும் மத்திய திட்டங்களின் வாயிலாக தொடர்ந்து நிதியுதவி வழங்குகிறது.

அரசாணை எண்.117, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மஅதி–II) துறை நாள்:3.9.2015–ன் வாயிலாக, அரசு, ஊரகச் சாலைகள் பராமரிப்புக் கொள்கைக்கு அனுமதி அளித்து, அதற்கு ரூ.200 கோடி நிதியினை ஒதுக்கீடு செய்துள்ளது. ஊரகச் சாலைகள் பராமரிப்புக் கொள்கையினை செயல்படுத்துவதற்காக, இதற்கான செயல்பாட்டு வழிமுறைகளுக்கு, அரசாணை எண்.140, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மஅதி–II) துறை நாள்:24.11.2016–ன் வாயிலாக அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

கடந்த 6 ஆண்டுகளில், 62,999 கி.மீ நீளம் என்ற அளவிலிருந்த தார்ச்சாலைகள் 97,095 கி.மீ. நீளமாக அதிகரித்துள்ளது. இது 50%க்கும் அதிகமானதாகும்.

ஊரகச் சாலைகளுக்கு கணிசமான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, தொடர் முயற்சிகள் மேற்கொண்ட போதிலும், மண்சாலைகள் தொடர்ந்து அதிகரித்துள்ளது, 2011–ஆம் ஆண்டில், 12,731 கி.மீ. ஆக இருந்த மண் சாலைகளின் நீளம் 32,241 கி.மீ. என கிட்டத்தட்ட இரண்டரை மடங்கு அளவிற்கு அதிகரித்துள்ளதே இதற்கு சான்றாகும்.

இந்த பின்னணியில், கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளை மேம்படுத்த மேற்கொள்ளப்படும் திட்டங்களில் சில நடவடிக்கைகளை அறிமுகப்படுத்த இத்துறை உத்தேசித்துள்ளது.

i. வட்டார அளவில், அனைத்து ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளும் பல்வேறு பயன்பாட்டு காரணிகளின் அடிப்படையில் வகைப்படுத்தப்படும்.

ii. ஒவ்வொரு நிதியாண்டிற்கும், வட்டார அளவிலான சாலை ஆண்டு வரவு செலவு அறிக்கை தயாரிக்கப்பட்டு, அதன் வாயிலாக ஊரகச் சாலைகளை மேம்படுத்தவும், பராமரிக்கவும், கால வரையறையுடனான திட்டம் வகுக்கப்படும்.

iii. ஊரகச் சாலைகளின் தொடர் பராமரிப்பு தமிழ்நாடு ஊரகச் சாலைகள் பராமரிப்புக் கொள்கை மற்றும் செயல்பாட்டு வழிமுறைகளில் குறிப்பிட்டுள்ளவாறு மேற்கொள்ளப்படும்.

iv. புதிய சாலை மேம்பாட்டுப் பணிகள், சாலை வகைப்பாட்டின் அடிப்படையில் சரியான முறையில் தேர்வு செய்யப்படும்.

v. மாற்று தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தி, அனைத்து பருவ காலங்களிலும் பயன்படுத்தக்கூடிய வகையில் மண்சாலைகளை மேம்பாடு செய்வது ஊக்குவிக்கப்படும். இதன் வாயிலாக சுற்றுச் சூழலுக்கு உகந்த, குறைந்த செலவிலான அனைத்து பருவ காலங்களுக்கும் ஏற்ற சாலைகள் உருவாக்கப்படும்.

## 3.6. தமிழ்நாடு ஊரகச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் (TNRRIS)

கடந்த 2015–16ஆம் ஆண்டில், பல்வேறு சாலைத் திட்டங்களை இணைத்து, தமிழ்நாடு ஊரகச் சாலைகள்

மேம்பாட்டுத் திட்டம் மாநில நிதியளிப்பின் மூலம் ரூ.800 கோடி ஒதுக்கீட்டில் அறிமுகப்படுத்தபட்டது.

**தமிழ்நாடு ஊரகச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் சிறப்பு அம்சங்கள்**

i. இத்திட்டம் மூன்று பிரிவுகளாக செயல்படுத்தப்படுகிறது. தார் இடப்படாத சாலைகளை தார்ச் சாலைகளாக மேம்பாடு செய்தல், ஏற்கனவே உள்ள பழுதடைந்த தார்ச் சாலைகளை வலுப்படுத்துதல் மற்றும் ஏற்கனவே உள்ள பழுதடைந்த தார்ச் சாலைகளை புதுப்பித்து பராமரித்தல் ஆகியவை தமிழ்நாடு ஊரகச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் எடுத்துக் கொள்ளப்படுகின்றன

ii. மாவட்டங்களில் உள்ள பல்வேறு வகையான சாலைகளை தேவையின் அடிப்படையில் தேர்வு செய்ய போதிய நெகிழ்வுத்தன்மையை தமிழ்நாடு ஊரகச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் அளிக்கிறது.

**அட்டவணை – 3.2**

**தமிழ்நாடு ஊரகச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் எடுத்துக் கொள்ளப்பட்ட பணிகளின் விவரம்**

| வ. எண். | ஆண்டு | எண்ணிக்கை | நீளம் (கி.மீ) | மதிப்பு (ரூ.கோடியில்) |
|---|---|---|---|---|
| 1 | 2015–16 | 2,386 | 4,225 | 800 |
| 2 | 2016–17 | 2,563 | 4,650 | 800 |
| **மொத்தம்** | | **4,949** | **8,875** | **1,600** |

தமிழ்நாடு ஊரகச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் 2017–18 ம் நிதியாண்டில் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

## 3.7. நபார்டு – ஊரக உட்கட்டமைப்பு வளர்ச்சி நிதி (NABARD-RIDF)

விவசாய உற்பத்திப் பொருட்களை சந்தைப் படுத்துவதை உறுதி செய்யும் வகையில் சாலை இணைப்பினை ஏற்படுத்தும் நோக்கத்துடன், அரசு, நபார்டு ஊரக உட்கட்டமைப்பு வளர்ச்சி நிதி மூலமாக ஊரகச் சாலை மேம்பாட்டிற்கு தொடர்ந்து நிதி ஒதுக்கீடு செய்து வருகிறது.

கடந்த 6 ஆண்டுகளில், 6,042.50 கி.மீ. நீளமுள்ள கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகள் மற்றும் 127 பாலங்கள் ரூ.1,500.61 கோடி மதிப்பீட்டில் மேம்பாடு செய்ய எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

கடந்த 6 ஆண்டுகளில், நபார்டு திட்டத்தின் கீழ் ஆண்டு வாரியாக எடுக்கப்பட்ட சாலைகள் மற்றும் பாலங்களின் விவரம் பின்வருமாறு-

**அட்டவணை 3.3.**
**கடந்த 6 ஆண்டுகளில் நபார்டு திட்டத்தின் கீழ் எடுக்கப்பட்ட சாலைகள் மற்றும் பாலங்களின் விவரம் (2011–12 முதல் 2016–17 வரை)**

| வ. எண். | ஆண்டு | எண்ணிக்கை | நீளம் (கி.மீ.) | மதிப்பு (ரூ. கோடியில்) |
|---|---|---|---|---|
| 1 | 2011-12 | 958 | 2,598.65 | 451.77 |
| 2 | 2012-13 | 381 | 1,000.46 | 198.07 |
| 3 | 2013-14 | 185 | 367.63 | 100.00 |
| 4 | 2014-15 | 615 | 1,183.03 | 339.61 |

| வ. எண். | ஆண்டு | எண்ணிக்கை | நீளம் (கி.மீ.) | மதிப்பு (ரூ. கோடியில்) |
|---|---|---|---|---|
| 5 | 2015-16 | 232 | 369.92 | 160.20 |
| 6 | 2016-17 | 300 | 522.81 | 250.96 |
| | **மொத்தம்** | **2,671** | **6,042.50** | **1,500.61** |

## அட்டவணை 3.4.
## திட்ட வாரியாக கடந்த 6 ஆண்டுகளில் எடுக்கப்பட்ட சாலைகள் மற்றும் பாலங்களின் விவரம்
## (2011–12 முதல் 2016–17 வரை)

| வ.எண். | திட்டத்தின் பெயர் | நீளம் (கி.மீ) | மதிப்பு (ரூ. கோடியில்) |
|---|---|---|---|
| 1 | தமிழ்நாடு குக்கிராமங்கள் மேம்பாட்டுத் (தாய்) திட்டம் | 9,723.97 | 1,487.54 |
| 2 | தமிழ்நாடு ஊரகச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் | 8,875.72 | 1,600.00 |
| 3 | நபார்டு–ஊரக உட்கட்டமைப்பு வளர்ச்சி நிதி | 6,042.50 | 1,500.61 |
| 4 | பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம் | 4,045.19 | 1,876.74 |
| 5 | ஊரக உட்கட்டமைப்பு திட்டம் | 4,318.92 | 616.67 |
| 6 | பேருந்து செல்லும் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் | 1,399.28 | 300.00 |
| 7 | பிளாஸ்டிக் கழிவுகளைக் கொண்டு தார்ச்சாலை அமைத்தல் | 429.87 | 37.50 |
| 8 | மாநில நிதிக்குழு மானியம் | 1,552.46 | 304.30 |
| 9 | ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய் திட்டம் | 1,211.46 | 412.22 |
| 10 | 13வது நிதிக்குழு மான்யம் | 6,573.13 | 622.00 |
| 11 | ஊரகச் சாலைகள் பராமரிப்புத் திட்டம் | 3,649.19 | 381.07 |
| 12 | சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் | 1,399.79 | 226.31 |

| வ.எண். | திட்டத்தின் பெயர் | நீளம் (கி.மீ) | மதிப்பு (ரூ. கோடியில்) |
|---|---|---|---|
| 13 | பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் | 823.93 | 134.81 |
| 14 | இதர திட்டங்கள் | 6,358.56 | 1,536.41 |
| | **மொத்தம்** | **56,403.97** | **11,036.18** |

## தரக் கட்டுப்பாடு

ஊரக வளர்ச்சித் துறையின் மூலம் செயல்படுத்தப்படும் அனைத்து திட்டப் பணிகளுக்கும் தரக்கட்டுப்பாடு என்பது ஒரு அடிப்படை கோட்பாடாக கருதப்படுகிறது. ஊரக வளர்ச்சித் துறை பணிகளைக் கண்காணிக்க, அகநிலை தரக்கட்டுப்பாட்டு மற்றும் தனிப்பட்ட மூன்றாந்தரப்பு தரக்கட்டுப்பாட்டு தணிக்கை முறை ஆகியவை இணைந்த ஒரு கட்டமைப்பை உருவாக்கியுள்ளது. மேலும், உள்தரக்கட்டுப்பாட்டு அமைப்பை வலுப்படுத்த இத்துறை சீரான தொடர் முயற்சிகளை எடுத்து வருகிறது. ஏற்கனவே உள்ள மாவட்ட தரக்கட்டுப்பாட்டு ஆய்வகங்களுடன் சேர்த்து மாநில அளவிலான தரக்கட்டுப்பாட்டு ஆய்வகம் ஒன்று திருச்சியில் அமைக்கப்பட்டுள்ளது. களப்பொறியாளர்களுக்கு தரக்கட்டுப்பாட்டுச் சோதனைகள் குறித்த செய்முறைப் பயிற்சி அளிக்க, 5 மண்டல ஊரக வளர்ச்சி நிறுவனங்களில் தரக்கட்டுப்பாட்டு ஆய்வுக் கூடங்கள் நிறுவப்பட்டு வருகின்றன. புதிய முயற்சியாக, இத்துறை 5 நடமாடும் தரக்கட்டுப்பாட்டு ஆய்வுக்கூடங்களை நிறுவியுள்ளது. இது மாவட்ட அளவில் உள்ள தரக்கட்டுப்பாட்டு

செயல்முறைகளை மேம்பாடு செய்வதில் இன்னொரு மைல் கல்லாகும்.

மேலும், இத்துறை மூலம், **120** உதவிப் பொறியாளர்கள் மற்றும் உதவி செயற் பொறியாளர்களுக்கு நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்தில் அவர்களின் திறனை மேம்படுத்தவும், புதிய நுட்பங்கள் மற்றும் நடைமுறைகளுக்கு இணையாக அவர்களை மேம்படுத்திக்கொள்ள ஏதுவாகவும் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று கண்காணிப்புப் பொறியாளர்கள், செயற்பொறியாளர்கள், உதவி செயற் பொறியாளர்கள், உதவிப் பொறியாளர்கள், முதுநிலை வரைதொழில் அலுவலர்கள் மற்றும் பணி மேற்பார்வையாளர்கள் என **1,612** பொறியாளர்களுக்கு தமிழ்நாடு பாசன மேலாண்மை பயிற்சி நிலையம் (IMTI), துவாக்குடி, திருச்சியில் சிறுபாசன ஏரிகளைப் புனரமைத்தல் குறித்து சிறப்பு பயிற்சி, மொத்தம் ரூ.**59.38** இலட்சம் செலவில் அளிக்கப்பட்டது. இது தவிர, **110** பொறியாளர்களுக்கு இந்திய நெடுஞ்சாலைப் பொறியாளர் கழகம் (IAHE), புதுடெல்லி மற்றும் தேசிய ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் நிலையம், ஹைதராபாத் ஆகியவற்றில் பயிற்சி அளிக்கப்பட்டது.

### ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு தொழில்நுட்ப முயற்சிகள்

பிளாஸ்டிக் கழிவுகளைக் கொண்டு தார் சாலைகள் அமைப்பதில் தமிழ்நாடு ஒரு முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது. சுற்றுச்சூழல் பாதுகாப்பினை ஊக்குவிக்கும்

வகையில் அரசு 2011–ஆம் ஆண்டு பிளாஸ்டிக் கழிவு சேகரிப்பு மற்றும் மறுசுழற்சி மையங்கள் ஏற்படுத்த நிதி ஒதுக்கீடு செய்தது. பிளாஸ்டிக் கழிவுகளைப் பயன்படுத்தி நபார்டு, தமிழ்நாடு ஊரகச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம், ஊரக உட்கட்டமைப்புத் திட்டம், ஊரகச் சாலைகள் பராமரிப்புத் திட்டம், 13–வது நிதிக்குழு மான்யம் மற்றும் பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம் ஆகிய திட்டங்களின் கீழ், இதுவரை 11,575 கி.மீ. நீளமுள்ள சாலைகள் ரூ.1,625 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ளது.

இதுபோன்று, பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டத்தின்கீழ், ஊரக வளாச்சித் துறை சிமெண்ட்டின் மூலம் நிலைப்படுத்துதல், மண் நிலைப்படுத்துதல், தென்னை நார், பிளாஸ்டிக் கழிவுகள், மிக நுண்ணிய தொழில்நுட்பம், தார் குளிர்கலவை தொழில்நுட்பம் போன்ற பல்வேறு மாற்றுத் தொழில்நுட்பங்களை பயன்படுத்தியுள்ளது. பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டத்தின் பகுதி –VIII, IX மற்றும் X–ன் கீழ் 886 கி.மீ. நீளமுள்ள சாலைகள் ரூ.445.99 கோடி மதிப்பீட்டில் எடுக்கப்பட்டுள்ளன.

**சொத்து உருவாக்கம் மற்றும் மேலாண்மை**

ஊரக வளர்ச்சித் துறை, ஊரகப் பகுதிகளில் பல்வேறு நோக்கங்களை பூர்த்தி செய்யும் வகையில் பலவகையான தனிநபர் மற்றும் பொது பயன்பாட்டு உட்கட்டமைப்புகளை உருவாக்கி வருகிறது. இக்கட்டமைப்புகளின் திட்ட வடிவமைப்புகள், இக்கட்டமைப்புகளைப் பயன்படுத்து–

வோரின் தன்மைகள், செயல்பாட்டுத் தேவைகள் மற்றும் செலவு போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் பள்ளிக் கட்டடங்கள், உள்ளாட்சி அமைப்புகளுக்கான அலுவலக கட்டடங்கள் மற்றும் பொது கழிப்பிடக் கட்டடங்கள் போன்ற 28 வகையான கட்டடங்களுக்கு மாதிரி வடிவமைப்புகள் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த மாதிரி வடிவமைப்புகள், அவ்வப்போது தேவையின் அடிப்படையில், ஊரக வளர்ச்சித் துறையின் வடிவமைப்பு அலகின் மூலமாக மேம்படுத்தப்படுகிறது அல்லது மாற்றி அமைக்கப்படுகிறது. மேலும், ஊரக வளர்ச்சித் துறையில் கட்டப்படும் உயர் மதிப்புக் கட்டடங்களின் கட்டுமான வடிவமைப்பினை சரிபார்க்கும் பொறுப்பும் இத்துறையின் வடிவமைப்புப் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இத்துறைக்கு சொந்தமான பொது சொத்துக்களை புவிசார் அமைப்பு மூலம் நிர்வகிப்பதற்காக இத்துறை அண்ணா பல்கலைக் கழகத்தைச் சார்ந்த தொலை உணர்வு நிலையத்துடன் (IRS) புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளது. இந்த புவிசார் தகவல் அமைப்பில் குக்கிராமங்கள், சாலைகள், நீர் நிலைகள் ஆகியவற்றின் வெளிசார்ந்த தகவல்கள் இருக்கும். இது ஊரக வளர்ச்சி இயக்குநரகத்தில் உள்ள புவிசார் அமைப்பு அலகின் 3 உதவிப் பொறியாளர்கள் மூலம் கண்காணிக்கப்படுகிறது.

## 3.8. ஒருங்கிணைந்த பள்ளிகள் உட்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டம்

இந்த அரசு "ஒருங்கிணைந்த பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம்" எனும் திட்டத்தை 2011–12ம் ஆண்டு துவங்கியது. ஊரகப் பகுதிகளிலுள்ள ஊராட்சி ஒன்றிய ஆரம்ப மற்றும் நடுநிலைப் பள்ளிகளுக்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளான புதிய கட்டடங்கள், சமையல் அறை, குடிநீர்வசதி மற்றும் கழிப்பறைகள் ஆகியவற்றை ஏற்படுத்துதல் மற்றும் தேவைப்படும் இடங்களில் பழுதுபார்த்தல் மற்றும் புதுப்பித்தல் போன்ற பணிகளை மேற்கொள்ளுதல் இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். மேலும், இத்திட்டம் பேரூராட்சிகள் மற்றும் நகராட்சிப் பகுதிகளில் உள்ள ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளிலும் செயல்படுத்தப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் புதிய பள்ளிக் கட்டடங்கள் கட்டித்தரப்படுகிறது; அவை புதிய வகுப்பறை அல்லது கான்கிரீட் கூரைகளுடன் கூடிய கூடுதல் கட்டடங்களாக அமைத்துத் தரப்படுகின்றன. உணவுப் பொருட்களை இருப்பு வைத்துக்கொள்ளும் வகையில் கூடுதல் அறைகளுடன் கூடிய புதிய சமையல் அறைக் கட்டடங்களும் கட்டித் தரப்படுகிறது. அவசியமான இடங்களில் தேவையின் அடிப்படையில் பழுதுபார்த்தல் மற்றும் குடிநீர் குழாய் நீட்டிப்பு பணிகள் மேற்கொள்ளப்படுகிறது மற்றும் தேவைப்படும் இடங்களில் புதிய குடிநீர் இணைப்புகளும் வழங்கப்படுகிறது.

சுத்தமான சூழ்நிலையை அமைக்கவும், சுகாதார பழக்க வழக்கங்களை சிறுவர், சிறுமியர்களிடையே ஏற்படுத்தவும், அனைத்து ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளிலும் மாணவ மாணவிகளுக்குத் தனித்தனியாக, கழிப்பறைகள் அமைத்துத் தரப்பட்டுள்ளது.

**திட்ட செயலாக்கம் 2011 – 12 முதல் 2015 – 16 வரை**

**2011–12** முதல் **2015–16** வரை இத்திட்டத்திற்காக ரூ.**500** கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. மொத்தம் **48012** பணிகள் ரூ.**497.29** கோடி மதிப்பீட்டில் எடுக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 3.5.**

ஆண்டு வாரியான பணிகளின் விவரம் :

| வ. எண் | பணிகளின் விவரம் | பணிகளின் எண்ணிக்கை | | | | | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| | | 2011–12 | 2012–13 | 2013–14 | 2014–15 | 2015–16 | |
| புதிய பணி | | | | | | | |
| 1 | பள்ளி கட்டடம் | 155 | 58 | 113 | 84 | 152 | 562 |
| 2 | சமையல் கூடம் | 1049 | 618 | 232 | 107 | 41 | 2047 |
| 3 | கழிப்பறை | 847 | 523 | 563 | 375 | 302 | 2610 |
| 4 | குடிநீர் வழங்கல் | 2217 | 893 | 1267 | 924 | 455 | 5756 |
| 5 | சுற்றுச் சுவர் | 9 | 1191 | 544 | 1108 | 571 | 3423 |
| **துணை மொத்தம்** | | 4277 | 3283 | 2719 | 2598 | 1521 | 14398 |
| | II. | **பழுதுபார்ப்பு பணிகள்** | | | | | |
| 1 | பள்ளி கட்டடம் | 1228 | 2063 | 3536 | 4590 | 4664 | 16081 |
| 2 | சமையல் கூடம் | 1397 | 1189 | 1099 | 839 | 652 | 5176 |
| 3 | கழிப்பறை | 3516 | 2534 | 2686 | 2024 | 1597 | 12357 |
| **துணை மொத்தம்** | | 6141 | 5786 | 7321 | 7453 | 6913 | 33614 |
| **பெரு மொத்தம்** | | 10418 | 9069 | 10040 | 10051 | 8434 | 48012 |

**திட்ட செயலாக்கம் – 2016–17**

ஒருங்கிணைந்த பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டம் **2016–17**ன் கீழ் ரூ.**100** கோடி நிதி ஒதுக்கீட்டில் மொத்தம் **6,138** பணிகள் எடுக்கப்பட்டுள்ளன.

## 3.9. சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம்

சட்டமன்ற உறுப்பினர் தமது தொகுதியில் தேவையான அடிப்படை உள்கட்டமைப்பு வசதிகளில் உள்ள இடைவெளிகளை கண்டறிந்து அவற்றுக்கான பணிகளை தேர்வு செய்து செயல்படுத்துவதே சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டம் ஊரகம் மற்றும் நகர்ப்புற பகுதிகளில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ், ஒவ்வொரு தொகுதிக்கும் ஒரு ஆண்டுக்கான நிதி ஒதுக்கீடு ரூ.**2** கோடி ஆகும்.

சட்டமன்ற உறுப்பினர்களால் தேர்வு செய்யப்படும் பணிகளுக்கு அந்தந்த மாவட்ட ஆட்சியர்களால் நிர்வாக அனுமதி வழங்கப்படுவதுடன், பணிகளை செயல்படுத்துவதற்கான செயலாக்கத் துறைகளும் நிர்ணயிக்கப்படுகின்றன. வரையறுக்கப்பட்ட கூறு நிதியாக ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ.**1.10** கோடியில் குடிநீர் பணிகள் மட்டுமே எடுத்துச் செய்யப்பட வேண்டும். வரையறுக்கப்படாத கூறு நிதி ரூ.**90** லட்சத்தில் சட்ட மன்ற உறுப்பினர்கள் அவர் தம் விருப்பத்தினைஅடிப்படையில்

வழிகாட்டு நெறிமுறைகளின்படி, பணிகளை தேர்வு செய்யலாம்.

**வரையறுக்கப்பட்ட கூறு நிதியான ரூ. 1.10 கோடியில் எடுத்துச் செய்யக் கூடிய பணிகள்: (2017-18–ஆம் ஆண்டில் குடிநீர் திட்டப் பணிகள் மட்டும் )**

2016–ம் ஆண்டில் தமிழ்நாட்டில், வடகிழக்கு பருவமழை வழக்கத்தைவிட 62 சதவீதம் குறைவாகப் பெய்துள்ளதன் காரணமாக முன்னெப்பொழுதும் இல்லாத வகையில் வறட்சி நிலவுவதால், நிலத்தடி நீர் மட்டம் குறைந்ததோடு, குடிநீர் ஆதாரங்களில் நீர் இருப்பும் வறண்டு விட்டது. எனவே, சீரான குடிநீர் விநியோகத்தை உறுதி செய்யவும் குடிநீர் பிரச்னைகளை எதிர்கொள்ளவும், ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும் வரையறுக்கப்பட்ட கூறு நிதியிலிருந்து ரூ.1.10 கோடியில் குடிநீர் திட்டப் பணிகளை மேற்கொள்ள வேண்டும். இந்த முன்னுரிமை ஒதுக்கீடு 2017–18 ம் ஆண்டுக்கு மட்டும் பொருந்தும்.

**வரையறுக்கப்படாத தொகையான ரூ.90 இலட்சத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள்**

வரையறுக்கப்படாத கூறு நிதியினை, “எதிர்மறை பட்டியல் / தடை செய்யப்பட்ட பணிகள்” தவிர பிற எந்தப் பணிகளையும் மேற்கொள்ள பயன்படுத்தலாம். அதே போல் வரையறுக்கப்பட்ட கூறு நிதியில் எடுத்து செய்யப்படக் கூடிய பணிகளையும் வரையறுக்கப்படாத கூறு நிதியான ரூ.90.00 இலட்சத்தில் இருந்து மேற்கொள்ளலாம். பயணிகள்

நிழற்குடை அமைப்பது இக்கூறில் எடுத்துச் செய்திட அனுமதிக்கப்படுகின்றது.

**சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தில் எதிர்மறையான பட்டியல் / தடை செய்யப்பட்ட பணிகள் பட்டியல்:**

1. மத்திய மற்றும் மாநில அரசுத் துறைகள் (பொதுத்துறை நிறுவனங்கள் உட்பட), கூட்டுறவு நிறுவனங்கள் மற்றும் சங்கங்கள் ஆகியவற்றுக்கான அலுவலகக் கட்டடங்கள் மற்றும் வசிப்பிடங்கள் கட்டுதல். **விதிவிலக்கு :-** i) நேரடிக் கொள்முதல் நிலையங்கள் (Direct Procurement Centres), கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கக் கட்டடங்கள், மொத்த குளிர்பதன மைய (Bulk Chilling Centre) கட்டடங்கள் கட்டுதல். ii)அரசாணை நிலை எண். 179, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மா.அ.தி-1) துறை, நாள். 19.12.2013ன் படி, மொத்த மதிப்பீட்டுத் தொகை ரூ. 213.15 இலட்சத்தில் 84 சட்டமன்ற உறுப்பினர் அலுவலகங்களுக்கு சுற்றுச்சுவர் கட்டுதல். iii) மாநில அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் பேருந்து பணிமனைகளுக்கான பேருந்து பராமரிப்புக் கூடம், சுற்றுச் சுவர் மற்றும் கான்க்ரீட் தளம் அமைத்தல்.
2. தனிநபர் / குடும்பப் பயனுக்காக சொத்துக்களை உருவாக்குதல். **(விதிவிலக்கு :-** பிரதம மந்திரி குடியிருப்புத் திட்டம் (ஊரகம்)—ன் வழிகாட்டு

நெறிமுறைகளுக்குட்பட்டு பேரூராட்சிப் பகுதிகளில் புதிய வீடுகள் கட்டுதல்.)

3. அனைத்து வகையான புதுப்பித்தல் பராமரிப்பு மற்றும் பழுது பார்த்தல் மற்றும் பணிகள் மேற்கொள்ளுதல். **விதிவிலக்கு :-** அரசுத் திட்டங்களின் கீழ் 31.12.2007 வரை கட்டப்பட்ட இந்திரா நினைவு குடியிருப்பு, தாட்கோ மற்றும் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் மூலம் கட்டப்பட்ட வீடுகளை ஒரு வீட்டிற்கு ரூ.50,000/-(ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்)—க்கு மிகாமல் பழுது நீக்கம் செய்தல். இவ்வாறு, வீடுகளை பழுது நீக்கம் செய்யும் பணிகளை எடுத்துக் கொள்ளும் முன்னர் தமிழ்நாடு குடிசைமாற்று வாரியம் / தாட்கோ நிறுவனத்திடமிருந்து உரிய அனுமதி பெறப்பட வேண்டும்.

4. அசையும் பொருட்கள், உபகரணங்கள் மற்றும் தளவாடச் சாமான்கள் வாங்குதல்:-

**விதிவிலக்கு:** i) 2016—17ம் ஆண்டில் 15வது சட்டமன்றப் பேரவைக்கு புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் மற்றும் 14—வது சட்டமன்றப் பேரவையில் பணியாற்றி தற்போது மீண்டும் 15வது சட்டமன்றப் போரவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் மடிக்கணினி (Laptop) அல்லது மேசைக் கணினி (Desktop), பிரிண்டர் (Laser / Inkjet) மற்றும் அகண்ட அலைவரிசை இணையதள இணைப்பு வசதி (Broadband / Internet Data card connection) ஆகியவற்றை ஒரு

முறை மட்டும் தேவைக்கேற்ப கொள்முதல் செய்து கொள்ள வழிவகை செய்யப்பட்டிருந்தது. கடந்த ஆண்டில் அவ்வாறு கணினி, பிரிண்டர் மற்றும் அகண்ட அலைவரிசை இணைய இணைப்பு வசதிகள் வாங்கப்படாமல் விடுபட்டு இருப்பின், அவ்வினங்களில் மட்டும், சட்டமன்ற உறுப்பினர்களுக்கு **2017–18**ம் ஆண்டின் வரையறுக்கப்படாத கூறு நிதியில் இருந்து அரசாணை எண். **95** ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி **(**மா.அ.தி**–1)** துறை நாள்**– 18–8–2016**ல் அனுமதி அளித்துள்ளவாறு வழிகாட்டி நெறிமுறைகளுக்குட்பட்டு கொள்முதல் செய்து கொள்ளுதல். ii) அரசுப் பள்ளிகள், ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள், ஆதிதிராவிடர் நலப் பள்ளிகள், கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள், அரசுக் கல்லூரிகள், அரசு விடுதிகள், அரசு மருத்துவ மனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் அரசு கால்நடை மருத்துவமனைகள், அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் அரசு பாலிடெக்னிக்குகள் ஆகியவற்றிற்கு தளவாட சாமான்கள் மற்றும் உபகரணங்கள் வாங்குதல். iii) மாற்றுத் திறனாளிகளுக்கு கருவிகள் மற்றும் உபகரணங்கள் வாங்குதல். iv) போலியோ மற்றும் மூளை முடக்கு வாதத்தால் பாதிக்கப்பட்டோருக்காக CP Chair வாங்குதல் மற்றும் மனவளர்ச்சி குன்றிய அரசு சிறப்பு பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு அறிவுத்திறனை மேம்படுத்தும் பொருட்டு, மனவளர்ச்சி குன்றிய மாற்றுத் திறனாளி குழந்தைகளுக்கு கற்பிக்கும் கருவி கலப் பெட்டிகள் வாங்குதல்.

v) உடற்பயிற்சி / ஜிம்னாசிய கூடத்தில் (physical fitness centre /Gymnasium) உடற்பயிற்சி செய்ய தேவையான கருவிகள் வாங்குதல். vi) தற்போதுள்ள அரசு கட்டடங்களில் சூரியசக்தி மின்கலன்கள் (Solar Power Equipement) நிறுவுவதற்காக உபகரணங்கள் வாங்குதல்.

5. அரசு நிதி உதவி பெறும் பள்ளிகள், அரசு நிதி உதவி பெறும் கல்லூரிகள் மற்றும் சுயநிதிப் பள்ளிகள், சுயநிதிக் கல்லூரிகளில் எவ்விதப்பணிகளையும் மேற்கொள்ளுதல்.
6. அனைத்து வணிக நிறுவனங்கள்/ அலகுகள் குறித்த பணிகள்.
7. மானியம் மற்றும் கடன், மத்திய, மாநில மற்றும் யூனியன் பிரதேசங்களின் நிவாரண நிதிக்கு பங்களித்தல்.
8. நில எடுப்பு அல்லது நில எடுப்பிற்கான ஈட்டுத் தொகை வழங்குதல்.
9. முழுமையாக முடிக்கப்பட்ட பணிகள், பகுதியாக முடிக்கப்பட்ட பணிகள் அல்லது இனங்களுக்கான தொகை மீளச் செலுத்துதல்.
10. அனைத்து வரவினங்கள் மற்றும் தொடர் செலவினங்கள்.
11. மத வழிபாட்டு இடங்களில் பணிகள் மற்றும் மத அமைப்புகள் / குழுக்களுக்கு சொந்தமான நிலங்களில் பணிகள்.

12. குட்டைகள், ஊரணிகள், ஆறுகள், குளங்கள், கால்வாய்கள் மற்றும் வாய்க்கால்கள் போன்றவைகளைத் தூர் வாருதல்.
13. சரளை / கப்பி சாலைகள் (தார்சாலை வரை அமைக்கும் சாலைப்பணிகளை மட்டுமே எடுத்துக்கொள்ளலாம்).
14. உயர் கோபுர மின் விளக்குகள் பொருத்துதல்

## 2016–17ம் ஆண்டில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட செயலாக்கம்

2016–17ம் ஆண்டில், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், ரூ. 470 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பல்வேறு பணிகள் கீழ்க்காணும் அட்டவணையில் கண்டுள்ள விவரப்படி செயல்படுத்தப்பட்டுள்ளன.

### அட்டவணை – 3.6.
### சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் எடுக்கப்பட்ட பணிகள் விவரம்

| வ.எண் | பணிகள் | பணிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | கட்டிடங்கள் | 2002 |
| 2. | சாலைகள் | 2074 |
| 3. | குடிநீர் வழங்கல் | 2506 |
| 4. | வடிகால் மற்றும் பாசன கால்வாய் பணிகள் | 950 |
| 4. | இதர பணிகள் | 1926 |
| **மொத்தம்** | | **9458** |

இத்திட்டத்தின் கீழ் 2017–18–ம் ஆண்டில் ரூ.470 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 3.10. தன்னிறைவுத் திட்டம்

ஊரகப் பகுதி மக்களிடையே சுய–சார்பு மற்றும் பொது மக்கள் பங்கேற்பு ஆகியவற்றை ஊக்குவிக்கும் வகையில் தன்னிறைவுத் திட்டம் 2011–12ம் ஆண்டு முதல் அரசால் மீண்டும் அறிமுகப்படுத்தப்பட்டது. சுயசார்பு மற்றும் சுயஉதவி மனப்பான்மையை ஊக்குவித்து மக்கள் தங்களது தேவையை தங்களின் பங்கேற்புடன் செயல்படுத்துவதற்கான திட்டமே தன்னிறைவுத் திட்டமாகும். மக்களின் உணரப்பட்ட தேவைகள் இத்திட்டத்தின் கீழ் நிறைவேற்றப்படுகிறது. ஊரக மற்றும் நகர்ப்புற பகுதிகளில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. பொதுமக்கள் தேர்வு செய்யப்பட்ட பணியின் மதிப்பீட்டுத் தொகையில் மூன்றில் ஒரு பங்குக்கு குறையாமல் பங்களிப்பு செய்யவேண்டும்.

### பணிகளை தேர்வு செய்தல்

1) தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் பணிகளை எடுத்து செய்வதற்கான தேவை தனிநபர், குழுக்கள், நிறுவனங்கள், பொது அல்லது தனியார் பெருநிறுவனங்கள் அல்லது சமூக அமைப்புகள் மூலமாக உருவாகலாம்.
2) தேர்வு செய்யப்பட்ட பணி குறித்த விண்ணப்பமும், மதிப்பீட்டில் மூன்றில் ஒரு பங்கிற்கு குறையாமல்

தொகையினை வழங்குவதற்கான ஒப்புதல் கடிதத்தினையும் பொது மக்களிடமிருந்து மாவட்ட ஆட்சித் தலைவர் பெற வேண்டும்.

3) மாவட்ட ஆட்சித் தலைவர், மேற்கொள்ளப்பட வேண்டிய பணியின் அத்தியாவசியத் தேவை மற்றும் அதனை நடைமுறைப்படுத்தக்கூடிய சாத்தியக்கூறுகள் குறித்து பரிசீலனை செய்வார். பணியின் தேவை நிறைவு அளிக்கும்பட்சத்தில், திட்டப் பணியினை மேற்கொள்ளவிருக்கும் முகமையிடம் விளக்கமான மதிப்பீட்டினை மாவட்ட ஆட்சித் தலைவர் கோருவார். அனுமதி வழங்க ஏதுவாக, விண்ணப்பதாரர் உரிய தொகைக்கான கேட்பு வரைவோலையை மாவட்ட ஆட்சியர் அல்லது மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநரிடம் செலுத்த வேண்டும்.

4) உள்ளாட்சி அமைப்பு, பல்கலைக் கழகங்கள் வழங்கும் பங்களிப்பு நிதி இத்திட்டத்தின் கீழ் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

5) பணிகளை மேற்கொள்ள உள்ளாட்சி அமைப்பு அல்லது சம்மந்தப்பட்ட துறையின் அனுமதி தேவையெனில் அதற்கான அனுமதி, நிர்வாக அனுமதி வழங்குவதற்கு முன் பெறப்படவேண்டும்.

6) உருவாக்கப்படும் சொத்துக்கள், உள்ளாட்சி அமைப்பு அல்லது துறையின் பராமரிப்பின் கீழ் இருக்கவேண்டியிருப்பின், அச்சொத்துக்களை

உருவாக்க, உள்ளாட்சி அமைப்பு/துறையின் ஒப்புதலை பெறவேண்டும்.

7) இத்திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு போதுமானதாக இல்லாத நிலையில் பல்வேறு பணிகளை செய்ய கோரிக்கைகள் வரப்பெறின் அவற்றுள், மிக அதிக அளவில் சமுதாயத்திற்கு பயன்தரும் பணிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் கண்டறிந்து அத்தகைய பணிகளுக்கு முன்னுரிமை கொடுக்கவேண்டும்.

**பணிகளை நிறைவேற்றுதல்**

சம்மந்தப்பட்ட துறைகள் அல்லது உள்ளாட்சி அமைப்புகளின் மூலம் தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம், 1998 மற்றும் விதிகள் 2000–ன்படி ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் செயல்படுத்தப்படும்.

இத்திட்டத்தின் கீழ் பெரிய அளவிலான மக்கள் பங்கேற்பு ஊக்குவிக்கப்படுகிறது. பொது மக்களின் பங்களிப்பு, மதிப்பீட்டில் 50 சதவீதம் அல்லது அதற்கு மேல் இருந்தால் பங்களித்தவரையோ அல்லது அவரின் முகவரையோ அப்பணியை செயல்படுத்த மாவட்ட ஆட்சித் தலைவர் அனுமதி வழங்குவார். ஆனால், பொதுப்பணித் துறை கட்டுப்பாட்டில் உள்ள குளங்கள் மற்றும் நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளின் கட்டுப்பாட்டில் உள்ள நீராதாரக் குளங்களைத் தூர்வாரும் பணியின் மதிப்பீட்டில் 50 விழுக்காட்டிற்கும் மேலாக பொதுமக்களின் பங்களிப்புத்

தொகை இருப்பினும், ஒப்பந்தப்புள்ளி முறையைப் பின்பற்றியே அப்பணியை மேற்கொள்ள வேண்டும்.

**2011 – 12 முதல் 2015 – 16 வரையிலான திட்ட செயல்பாடு**

**2011–12** முதல் **2015–16** வரை மொத்தம் **10,781** சமுதாயத்திற்கு பயன்தரத்தக்க சொத்துக்கள் ரூ.**454.74** கோடி அரசு மான்யம் மற்றும் ரூ.**248.86** கோடி பொதுமக்கள் பங்களிப்புடன் உருவாக்கப்பட்டுள்ளன.

**திட்ட செயலாக்கம் – 2016–17**

தன்னிறைவுத் திட்டம் **2016–17**–ன் கீழ் மொத்தம் **708** பணிகள் எடுக்கப்பட்டுள்ளன.

**திட்ட செயலாக்கம் – 2017–18**

**2017–18**–ம் ஆண்டில் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

**3.11. முழு சுகாதார தமிழகம்**

சமூக, பொருளாதார மற்றும் சுகாதார குறியீடுகளில் ஒரு பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் வகையில் மக்களுக்கு தீமை ஏற்படுத்தும் பழக்கமான திறந்த வெளியில் மலம் கழிக்கும் பழக்கம் அமைந்துள்ளது. எனவே, அனைத்து பங்கேற்பாளர்களின் ஒருங்கிணைந்த நடவடிக்கை மூலம் திறந்த வெளியில் மலம் கழித்தல் பழக்கத்தினை களைவது என்பது அவசியமாகிறது. அதனடிப்படையில் திறந்த வெளியில் மலம் கழித்தல் அற்ற ‘‘முழு சுகாதார தமிழகம்’’

என்ற குறிக்கோளை அடைய அனைத்து பங்கேற்பாளர்களையும் மக்கள் இயக்கமாக ஒருங்கிணைக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**மாநில அரசின் முன்முயற்சிகள்**

மாநிலத்தில் சுகாதாரப் புரட்சி ஏற்படுத்தும் விதமாக தமிழ்நாடு அரசு பல்வேறு முன்னோடி முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. ஊரக மகளிர் மற்றும் குழந்தைகளுக்கு அடிப்படை சுகாதார வசதிகள் மேற்கொள்ளும் பொருட்டு ஊராட்சிக்கு ஒன்று வீதம், அப்போது இருந்த 12,618 கிராம ஊராட்சிகளில், ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாகங்கள் 2001–04 வரையிலான காலத்தில் கட்டப்பட்டன. முழுமையான சுகாதாரத்தை எய்துவதற்கான தாக்கத்தினை ஏற்படுத்தும் பொருட்டு, 2003ம் ஆண்டு, தூய்மையான கிராம இயக்கம் அறிமுகப்படுத்தப்பட்டது. தனிநபர் இல்லக் கழிப்பறை கட்ட அப்போது இருந்த அலகுத் தொகை குறைவாக இருந்ததால், 2012–13ம் ஆண்டில் மாநில அரசின் கூடுதல் பங்குத் தொகையாக கழிப்பறை ஒன்றுக்கு ரூ. 1,500 வீதம் வழங்கப்பட்டது. ஊரக மகளிருக்கு சுகாதார வசதிகள் ஏற்படுத்தப்பட்டதை போன்று, 2012–13ம் ஆண்டு ஒருங்கிணைந்த ஆண்கள் சுகாதார வளாகங்கள் கட்டும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

கிராம அளவில் சமூகம் சார்ந்த அமைப்புகளான கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் / ஊராட்சி அளவிலான

மகளிர் சுய உதவிக்குழுக்களின் கூட்டமைப்பு ஆகியவற்றை தனிநபர் இல்லக் கழிப்பறை கட்டுதல் மற்றும் அதன் பயன்பாட்டைக் கண்காணித்தல் ஆகிய பணிகளில் ஈடுபடுத்தப்படுதல் என்பது சுகாதார வசதிகளை மேம்படுத்துவதற்கான ஒரு சிறப்பான உத்தியாக அமைந்துள்ளது. தமிழகத்திலுள்ள அனைத்து 12,524 கிராம ஊராட்சிகளிலும் திடக்கழிவு மேலாண்மை திட்ட நடவடிக்கைகள் மேற்கொள்வதில், “தூய்மைக் காவலர்கள்” அறிமுகப்படுத்தியதன் மூலம் மேற்படி கிராமங்கள் தூய்மையாக பராமரிக்கப்படுவதை தெளிவாக உணர முடிவதுடன் அது வெளிப்படையான ஒரு தாக்கத்தையும் ஏற்படுத்தியுள்ளது. ஊரக பகுதியில் உள்ள அரசு பள்ளிகளில் சுகாதார வசதிகளை தொடர்ந்து பராமரித்திட தேவையான தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டு பள்ளி கழிப்பறைகள் சுத்தமாக பராமரிப்பதுடன் அவை பயன்பாட்டில் உள்ளதையும் உறுதி செய்யப்பட்டுள்ளது. மாநில அரசின் இந்த அனைத்து முன்முயற்சிகளும் தேசிய அளவில் முன்னோடியாக திகழ்கின்றன.

## 3.12. ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாகங்கள் புனரமைத்தல்.

2001–2004ம் ஆண்டுகளில், மகளிருக்கான சுகாதார வளாகங்கள் அனைத்து கிராம ஊராட்சிகளிலும், சுமார் 750 சதுர அடி பரப்பளவில், கட்டப்பட்டது. ஒவ்வொரு வளாகத்திலும் 14 கழிப்பறைகள், 2 குளியலறைகள், 1

விசைப்பம்பு அறை, 1 தண்ணீர் தொட்டி மற்றும் துணி துவைக்கும் மேடை ஆகிய வசதிகள் செய்து தரப்பட்டன. குளிக்கவும், துணி துவைக்கவும், தேவையான தண்ணீர் வசதியும் ஏற்படுத்தப்பட்டது. தண்ணீர் வசதி மற்றும் விளக்குகளுக்கு தேவையான மின் வசதியைக் கிராம ஊராட்சிகள் செய்து கொடுக்கின்றன. ஒவ்வொரு வளாகத்திலும் நாப்கின்களை பாதுகாப்பான முறையில் அப்புறப்படுத்திட எரியூட்டிகள் அமைக்கப்பட்டுள்ளது.

பயன்படுத்தாமல், பழுதடைந்திருந்த 12,796 ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாகங்கள், 2011–12ம் ஆண்டு ரூ.170 கோடி செலவில் புதுப்பிக்கப்பட்டு ஊரகப் பெண்களுக்கு அடிப்படை சுகாதாரம் உறுதி செய்யப்பட்டுள்ளது. சுகாதார வளாகங்களின் தொடர் பராமரிப்பினை சம்பந்தப்பட்ட கிராம ஊராட்சிகளும், தினசரி பராமரிப்பினை பயன்படுத்துவோர் குழுக்களும் மேற்கொள்கின்றன.

### 3.13. ஒருங்கிணைந்த ஆண்கள் சுகாதார வளாகங்கள்

மகளிருக்கான ஒருங்கிணைந்த சுகாதார வளாகம் அமைத்து கொடுத்தது போன்ற சுகாதார வசதிகள் அமைத்துக் கொடுக்குமாறு ஊரகப் பகுதிகளிலுள்ள ஆடவர்கள் கேட்டுக் கொண்டதின் அடிப்படையில், 2012–13ம் ஆண்டு ஒருங்கிணைந்த ஆண்கள் சுகாதார வளாகங்கள் அமைக்கப்பட்டது. ஒவ்வொரு வளாகமும், 570 சதுர அடி பரப்பளவில் 8 கழிப்பறைகளுடன்

கட்டப்பட்டுள்ளது. இதில் முதியோர் / மாற்றுத்திறனாளிகள் பயன்படுத்தும் வகையில் ஒரு நவீன கழிப்பறையும், இளம்சிறார்கள் பயன்படுத்தக் கூடிய வகையில் குழந்தை நேயக் கழிப்பறையும் (Baby Friendly Toilet), தண்ணீர் வசதியுடன் கூடிய குளிக்கும் இடம், துணி துவைக்கும் மேடை ஆகியவை உள்ளடக்கியதாகவும் அமைக்கப்படுகிறது. இதன் தொடர் பயன்பாட்டிற்காக ஒவ்வொரு வளாகத்திலும் தனியாக தண்ணீர் வசதி செய்யப்பட்டுள்ளது. ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாகங்கள் பராமரிக்கப்படுவது போல, இந்த வளாகங்களின் தினசரி பராமரிப்பு பயன்படுத்துவோர் குழுக்களால் மேற்கொள்ளப்படுகிறது. தமிழ்நாட்டில், இதுவரை **1,199** ஒருங்கிணைந்த ஆண்கள் சுகாதார வளாகங்கள் கட்டப்பட்டுள்ளன.

## 3.14. தூய்மையான கிராம இயக்கம்

தமிழ்நாட்டில் சுகாதாரப் புரட்சியினை உருவாக்கும் முனைப்பில், **2003**ம் ஆண்டில் ‘‘தூய்மையான கிராம இயக்கம்’’ என்ற திட்டம் இந்த அரசால் தொடங்கப்பட்டது. தனிநபர் சுகாதாரத்தை மேம்படுத்துவதுடன், சுற்றுச் சூழல் மாசுப்படாமல் பாதுகாப்பாக கழிவுகளை அப்புறப்படுத்தச் செய்வதும் இந்தத் திட்டத்தின் நோக்கமாகும். திறந்தவெளியில் மலம் கழித்தல் அற்ற நிலை மற்றும் தூய்மையான சுற்றுச்சூழல் உடைய கிராம ஊராட்சிகள்

மாநில அரசு வழங்கும் விருது தொகை ரூபாய் 5 இலட்சம் பெற பரிந்துரை செய்ய தகுதியானதாகும்.

2006ம் ஆண்டு கைவிடப்பட்ட இத்திட்டம் 2011–12ம் ஆண்டில் மீண்டும் அறிமுகப்படுத்தப்பட்டு, ஆண்டுதோறும் ரூ.1.55 கோடி நிதி ஒதுக்கீட்டுடன் ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் ஒரு கிராம ஊராட்சி வீதம் தேர்வு செய்யப்பட்டு, 31 கிராம ஊராட்சிகளுக்கும் ஒரு ஊராட்சிக்கு ரூ.5 இலட்சம் என்ற அடிப்படையில் பரிசுத் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

## 3.15. தனிநபர் இல்லக் கழிப்பறை அமைக்கப்படுவதில் அரசினால் மேற்கொள்ளப்படும் உத்திகள்

தமிழ்நாட்டை திறந்த வெளியில் மலம் கழித்தல் அற்ற மாநிலம் என்ற குறிக்கோளை அடைய பல்முனை உத்திகளை மேற்கொண்டு, அனைத்து பங்கேற்பாளர்களையும் ஒருங்கிணைத்து, மக்கள் இயக்கமாக சுகாதார எழுச்சி உருவாக்கி, அதன் மூலம் திறந்த வெளியில் மலம் கழிக்கும் பழக்கம் வேரறுக்கப்பட வேண்டும். கிராம ஊராட்சி அளவில் தனிநபர் இல்லக் கழிப்பறைகள் கட்டுவதற்கு திட்டமிடுதல், நடைமுறைபடுத்துதல் மற்றும் அதன் பயன்பாட்டை கண்காணித்தல் மற்றும் ஊக்கத்தொகை அளித்தல் குறித்த விரிவான வழிகாட்டு நெறிமுறைகள் அரசால் வெளியிடப்பட்டுள்ளது. இந்த வழிகாட்டி நெறிமுறைகளின் நோக்கமானது, திறந்த வெளியில் மலம் கழித்தலை அறவே ஒழிக்க, பல்வேறு பங்கேற்பாளர்களான ஊராட்சி

அமைப்புகள், சுய உதவிக் குழுக்கள், கிராம வறுமை ஒழிப்பு சங்கம், ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு, பல்வேறு அரசுத் துறைகளின் களப்பணியாளர்கள், ஊக்குவிப்பாளர்கள் ஆகியோரை ஈடுபடுத்துதல் போன்ற நடவடிக்கைகளை உள்ளடக்கியதாகும்.

மேற்குறிப்பிட்ட விரிவான வழிகாட்டு நெறிமுறைகள், கிராம ஊராட்சி அளவில் செயல்படும் சமூகம் சார்ந்த அமைப்புகளான கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் மற்றும் மகளிர் சுய உதவிக் குழுக்களின் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு ஆகியவற்றின் ஈடுபாட்டுடன், சுகாதார மேம்பாட்டில் இணைந்துள்ள பங்கேற்பாளர்களை விரிவடையச் செய்து உரிய நோக்கத்தினை அடையும் முயற்சிகள் வலுப்பெற்றுள்ளது. தற்போது திறந்தவெளியில் மலம் கழிக்கும் குடும்பத்தினர், கழிப்பறையைக் கட்டிப் பயன்படுத்திட, நேர்முக தகவல் பரிமாற்றம் (Inter-Personal Communication) மற்றும் தகவல் தொடர்பினால், அவர்களின் பழக்க வழக்கத்தை மாற்றம் செய்வது சாத்தியம் ஆகும். எனவே, சமூகம் சார்ந்த அமைப்புகளான கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு உறுப்பினர்கள் திறந்தவெளி மலம் கழித்தல் இல்லாத கிராமங்களை உருவாக்கும் நோக்கத்தினை அடைய பெரிய அளவில் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியவர்களாக உள்ளனர்.

இத்திட்டத்தைப் பயனுள்ள வகையில் செயல்படுத்திட வசதியாக கீழ்க்கண்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு அவை தொடர்ந்து கண்காணிக்கப்படுகின்றன:

**(அ) சமுதாய மூலதனத்தை பயன்படுத்துதல்:**

தமிழ்நாட்டின் மாபெரும் சமுதாய மூலதனம், மாநிலத்தில் சிறப்பாக செயல்படும் பெண்கள் சுய உதவிக் குழு அமைப்புகளே ஆகும். எனவே, தமிழகத்தை திறந்த வெளியில் மலம் கழித்தல் அற்ற நிலையை விரைவாக எய்த மகளிர் திட்டம் / புது வாழ்வு திட்டம் செயல்படுத்தப்படும் பகுதிகளை சார்ந்த கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் / சுய உதவிக் குழுக்களின் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு உறுப்பினர்கள், முழு சுகாதார தமிழகம் என்ற சுகாதாரத்தை மேம்படுத்தும் நேர்முக தகவல் பரிமாற்றம் தொடர்பான செயல்பாடுகளில் முழு அளவில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

**(ஆ) சுகாதாரத்தோடு தொடர்புடைய துறைகளை ஒருங்கிணைத்தல்:**

திறந்த வெளியில் மலம் கழிக்கும் பழக்கம், சிறார்களின் உடல் வளர்ச்சிக்கும் மற்றும் மன வளர்ச்சிக்கும் ஒரு எதிர்மறை தாக்கத்தை ஏற்படுத்துவது மட்டுமல்லாது, அவர்களுக்கு இரத்த சோகை மற்றும் குடற்புழு தொற்று ஏற்படுவதற்கும் மூல காரணமாக அமைந்துள்ளது. எனவே, திறந்த வெளியில் மலம் கழிக்கும் பழக்கமுடைய மக்களிடையே மனமாற்றத்தை ஏற்படுத்துவது என்பது மிக

முக்கியமானதாகும். அதன் மூலம் மட்டுமே திறந்த வெளி மலம் கழித்தல் அற்ற நிலையை அடைவதுடன், அவர்கள் தொடர்ந்து கழிப்பறை பயன்படுத்தும் பழக்கத்தை தக்க வைக்க இயலும். எனவே, பல்வேறு இதர துறைகளின் பங்கேற்பாளர்கள் மூலமாகவும் சுகாதாரம் குறித்த தகவல்களை தொடர்ந்து வலியுறுத்துவதின் மூலமாகவே இந்த நோக்கம் சாத்தியமாகும். மேற்படி வழியில், சுகாதாரம் மற்றும் குடும்ப நலம், பள்ளிக்கல்வி மற்றும் சமூக நலம் ஆகிய அரசு துறைகளின் மாநில மற்றும் மாவட்ட அளவிலான ஒருங்கிணைந்த கூட்டு முயற்சிகள் மூலம் செயலாற்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.

**(இ) ஊக்குவிப்பாளர்களை ஈடுபடுத்துதல்:**

சமூக அணுகுமுறையில் பயிற்சி அளிக்கப்பட்ட ஊக்குவிப்பாளர்கள் (Motivators) கிராம சமுதாயத்தை தூண்டுதல் (Triggering) மூலம் திறந்த வெளியில் மலம் கழித்தல் அற்ற நிலையை அடையவும், கழிப்பறை பழக்கத்தை தொடர்ந்து கடைப்பிடித்து அந்நிலையை தக்க வைக்கும் பணிகளிலும் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இந்த ஊக்குவிப்பாளர்கள், பெரும்பாலும் சுய உதவிக்குழுக்கள் / ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு ஆகியவற்றிலிருந்து கண்டறியப்படுகிறார்கள். திறந்த வெளியில் மலம் கழித்தலற்ற ஊராட்சியாக மாற்ற இலக்கிடப்பட்ட கிராம ஊராட்சியில், சமூக அணுகுமுறையில் பயிற்சிபெற்ற,

அதிகபட்சமாக இரண்டு ஊக்குவிப்பாளர்கள் ஈடுபடுத்தப் படுகிறார்கள்.

**(ஈ) தொழில் நுட்பம் சார்ந்த பயிற்சி:**

மாதிரி வடிவமைப்புகள் மற்றும் விரிவான மதிப்பீடு வழங்கப்பட்டதன் மூலம் கழிப்பறை கட்டுமானத்தில் தொழில் நுட்பத் தன்மை உறுதி செய்யப்பட்டுள்ளது. கழிப்பறை கட்டுமானத்தில் தொழில்நுட்பத் தன்மை குறித்த குறும்படம் ஒன்று தயாரிக்கப்பட்டு அனைத்து தொழில்நுட்ப பணியாளர்களுக்கும் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. மேற்படி குறும்படத்தில் கழிப்பறை கட்டுமானத்தின் பல்வேறு மாதிரிகளான உறிஞ்சு குழி மாதிரி (தேன்கூடு வடிவமைப்பு மற்றும் வட்ட வடிவிலான உறை வடிவமைப்பு ) மற்றும் கழிவுத் தொட்டி மாதிரி முதலியன குறித்து எளிதாக புரிந்து கொள்ளும் வகையில் காண்பிக்கப்பட்டுள்ளது. இத்திட்டச் செயல்பாட்டில் ஈடுபடுத்தப்படும் தொழில்நுட்பம் சார் பணியாளர் மற்றும் தொழில் நுட்பம் சாரா பணியாளர் ஆகிய இருதரப்பினரும் இதன் மூலம் பயனடைந்துள்ளனர். கழிப்பறை கட்டுமானம் குறித்து கொத்தனார்களுக்கும் பயிற்சி அளிக்கப்படுகிறது.

**(உ) ஊக்கத் தொகை விடுவித்தல்:**

இத்திட்டத்தின் கீழ் பயனாளிக்கு இரண்டு தவணைகளில் நிதி விடுவிப்பதை விரைவுபடுத்த வேண்டி, பணி மதிப்பீட்டுச் சான்று அறிமுகப்படுத்தப்பட்டதன் மூலம் தொழில் நுட்ப அலுவலர் (பணி மேற்பார்வையாளர்)

அளவீடுகள் செய்யும் நடைமுறை எளிமைப்படுத்தப்பட்டுள்ளது. ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும், பணிப்பார்வையாளர்கள் தங்கள் பகுதிக்குட்பட்ட தனிநபர் இல்லக் கழிப்பறை பணிகளை பார்வையிட்டு பணி முன்னேற்றத்தின் அடிப்படையில் பணி மதிப்பீட்டுச் சான்று வழங்குவார்கள். இதன் மூலம் தொகை விடுவிப்பு நடைமுறை எளிமைப்படுத்தப்பட்டுள்ளது.

ஒவ்வொரு தனிநபர் இல்லக் கழிப்பறைக்கும் அதிகபட்ச ஊக்க நிதியாக ரூ.300 கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் / ஊராட்சி அளவிலான கூட்டமைப்பிற்கு இரண்டு கட்டமாக வழங்கப்படுகிறது. முதல் கட்ட ஊக்கத்தொகை ரூ.200, தனிநபர் இல்லக் கழிப்பறை கட்டி முடிக்கப்பட்டு தொடர்ந்து ஆறு மாத காலத்திற்கு பயன்படுத்தப்பட்ட பின்னர் விடுவிக்கப்படுகிறது. இரண்டாவது கட்டமாக ரூ.100, மேற்படி கழிப்பறை ஒரு ஆண்டிற்கு மேல் தொடர்ச்சியாக பயன்பாட்டில் இருப்பதை உறுதி செய்த பின்னர் விடுவிக்கப்படுகிறது.

**(ஊ) கண்காணிப்பு:**

கழிப்பறைகள் தரமான முறையில் கட்டுவதையும், அதன் தொடர் பயன்பாட்டினை உறுதி செய்யும் வகையிலும் வட்டார, மாவட்ட அளவிலான உயர் அலுவலர்கள் மூலம் தொடர்ந்து கள ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது. மேலும், மாநில தர கண்காணிப்பு அலுவலர்கள் மூலம் தனிநபர்

இல்லக் கழிப்பறை கட்டுமானம் குறித்து பிரத்யேகமாகவும் ஆய்வு மேற்கொள்ள அனுப்பப்படுகின்றனர்.

**(ஏ) திறந்தவெளியில் மலம் கழித்தல் அற்ற நிலையினை அடைதல்:**

கிராம ஊராட்சிகள் திறந்தவெளியில் மலம் கழித்தல் அற்ற நிலையினை அடைவதற்கு சமூக அணுகுமுறை விரிவாக பயன்படுத்தப்படுகிறது. திறந்தவெளி மலம் கழித்தல் அற்ற நிலையினை அடையும் கிராம ஊராட்சிகள் கிராம சபை கூட்டங்கள் நடைபெற நிர்ணயிக்கப்பட்ட நாட்களில் அல்லது சிறப்பு கிராம சபை கூட்டங்களில், இது தொடர்பான அறிவிப்பினை செய்வதுடன் தொடர்ந்து அதே நிலை நீடித்திட தீர்மானம் இயற்றப்படுகிறது. மேற்படி கிராம ஊராட்சியின் அறிவிப்பின் அடிப்படையில், வழிகாட்டு நெறிமுறைகளின்படி மாவட்ட அளவிலான சரிபார்த்தலும் அதன் பிறகு மாநில அளவிலான சரிபார்த்தலும் நடத்தப்பட்டு, திறந்த வெளியில் மலம் கழித்தல் அற்ற நிலை அங்கீகாரம் மற்றும் உறுதி செய்யப்படும். **2015–16** மற்றும் **2016–17** ஆகிய ஆண்டுகளில், இதுவரை **5,738** கிராம ஊராட்சிகள், திறந்த வெளியில் மலம் கழித்தல் அற்ற ஊராட்சிகளாக தாங்களாகவே அறிவிப்பு செய்துள்ளன.

## 3.16. ஊரகப் பகுதிகளில் திடக் கழிவு மேலாண்மைத் திட்டம்

கிராம ஊராட்சிகள் தூய்மையாகவும் மற்றும் சுகாதாரமாகவும் இருப்பதற்கு, அரசு தொடர்ந்து அதிக

முன்னுரிமை அளித்து வருவதுடன் கிராம ஊராட்சிகளில் மறுசுழற்சி மற்றும் குப்பைகள் அகற்றுவதற்கான வசதிகளுடன் கூடிய முறையான திடக்கழிவு மேலாண்மை அமைப்புகள் ஏற்படுத்த, விரிவானவழிகாட்டி நெறிமுறைகள் வெளியிடப்பட்டுள்ளது. முதற்கட்டமாக, 10,000க்கும் மேற்பட்ட மக்கள் தொகை உள்ள கிராம ஊராட்சிகள், நகர்ப்புறத்தை ஒட்டிய பெரிய கிராம ஊராட்சிகள், முக்கியத்துவம் வாய்ந்த சுற்றுலா மற்றும் புனிதத்தலங்கள் உள்ள கிராம ஊராட்சிகள், பெரிய தொழிற்சாலைகள் / வணிக அமைப்புகள், கல்வி நிறுவனங்கள் செயல்படும் கிராம ஊராட்சிகள், ஆகிய ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட தன்மைகள் கொண்ட கிராம ஊராட்சிகள் கண்டறியப்பட்டு, ரூ.110 கோடி மதிப்பீட்டில் 2,000 கிராம ஊராட்சிகளில் திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு, தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டம், மாநகராட்சி ஒட்டியுள்ள கிராம ஊராட்சிகள், சிறப்பு நிலை நகராட்சிகள், மாவட்ட தலைநகரங்கள் உள்ள கிராம ஊராட்சிகள் மற்றும் 300 குடும்பங்களுக்கு மேலாக உள்ள கிராம ஊராட்சிகள் போன்ற குறிப்பிட்ட தன்மைகள் உடைய கிராம ஊராட்சிகள் கண்டறியப்பட்டு, ரூ.300 கோடி மதிப்பீட்டில் இரண்டாம் கட்டமாக 7,000 கிராம ஊராட்சிகளில் விரிவுபடுத்தப்பட்டது. பின்னர், இத்திட்டம் ரூ.200 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாட்டில் உள்ள இதர 3,524 கிராம ஊராட்சிகளுக்கும் விரிவுபடுத்தப்பட்டு செயல்படுத்தப்படுகிறது.

**இத்திட்டத்தின் முக்கிய அம்சங்கள் பின்வருமாறு**

- பொதுவாக, ஒரு கிராம ஊராட்சியே இத்திட்டம் செயல்படுத்துவதற்கான அலகாக எடுத்துக் கொள்ளப்படுகிறது. ஒன்றுக்கு மேற்பட்ட குக்கிராமங்கள் இருப்பின் ஒரு குக்கிராமம் அல்லது குக்கிராமங்களின் தொகுப்பு இத்திட்டம் செயல்படுத்தும் அலகாக எடுத்துக் கொள்ளப்படுகிறது.

- அனைத்து கிராம ஊராட்சிகளிலும் 300 வீடுகளுக்கு ஒரு மூன்று சக்கர மிதி வண்டி / தள்ளு வண்டி வீதமும், 900 குடும்பங்களுக்கும் கூடுதலாக உள்ள அனைத்து கிராம ஊராட்சிகளுக்கு கூடுதலாக ஒரு மூன்று சக்கர வண்டி/தள்ளு வண்டி திடக் கழிவு மேலாண்மைத் திட்ட நிதியிலிருந்து வழங்கப்படுகிறது.

- அனைத்து கிராம ஊராட்சிளிலுள்ள ஒவ்வொரு குக்கிராமத்திற்கும் தெருவில் வைக்கும் குப்பைத் தொட்டி ஒன்று வீதமும், 7,500க்கும் அதிகமாக மக்கள் தொகை கொண்ட கிராம ஊராட்சியில் உள்ள ஒவ்வொரு குக்கிராமத்திற்கும் கூடுதலாக ஒரு குப்பைத் தொட்டியும் திடக்கழிவு மேலாண்மைத் திட்ட நிதியிலிருந்து வழங்கப்படுகிறது.

- திட்ட நிதியிலிருந்து தூய்மைப்படுத்தத் தேவையான உபகரணங்கள், தூய்மைக் காவலர்களுக்கு மேல்

சட்டை, கையுறை, தொப்பி, வெட்டும் இயந்திரம் மற்றும் தூய்மைப்படுத்தும் இயந்திரம் ஆகியவை வழங்கப்படுகிறது.

- திடக்கழிவுகள், அப்புறப்படுத்துவதற்கு முன்பு அவை மக்கும் குப்பை (Bio-degradable) மற்றும் மக்காத குப்பைகளாக (Non-Biodegradable) பிரிக்கப்படுகிறது.
- மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ், மக்கும் கழிவுகள் மூலம் உரம் தயாரிப்பதற்கு இரண்டு குழிகளும், மீதமுள்ள மீள மறு சுழற்சி செய்ய இயலாத திடக்கழிவுகளை சேகரித்து வைப்பதற்கு ஒரு குழியும் தோண்டப்படுகிறது.
- கிராம ஊராட்சியில், **150** குடும்பங்களுக்கு ஒரு பணியாளர் வீதம் திடக்கழிவு மேலாண்மைத் திட்ட நடவடிக்கைகளில், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டப் பணியாளர்கள் ஈடுபடுத்தப்படுகிறார்கள். இவர்கள், வீடு வீடாக குப்பைகளை சேகரித்தல், பிரித்தல் மற்றும் கழிவுகளை குழிகளில் இருந்து அப்புறப்படுத்துதல் போன்ற பணிகளில் ஈடுபடுத்தப்படுகின்றனர்.
- இப்பணியாளர்களுக்கான ஊதியம், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட நிதியிலிருந்து

வழங்கப்படுகிறது. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட பணியாளர்களுக்கு 100 நாட்களுக்கு மட்டுமே பணி வழங்க முடியும் என்பதால் குறிப்பிட்ட நிதியாண்டில், ஏற்கெனவே 100 நாட்கள் பணி முடித்த தூய்மைக் காவலர்களாக ஈடுபடுத்தப்படும் நபர்களுக்கு பதில், புதிய தொகுப்பு, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட பணியாளர்கள் தூய்மைக் காவலர்களாக ஈடுபடுத்தப்படுகிறார்கள். அதே போல, பணித்தள மேற்பார்வையாளர்கள், ஒவ்வொரு 100 நாட்களுக்கு பிறகு மாற்றப்படுகிறார்கள். இதன் மூலம் புதிய நபர்கள் மேற்பார்வை பணியில் அனுபவம் பெறுவதை உறுதிச் செய்யப்படுகிறது.

- கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் / ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு ஆகியவை, தூய்மைக் காவலர்களின் பணிகளை கண்காணிக்கும் ஒருங்கிணைப்பு முகமையாக செயல்படுகிறது.

**பயிற்சி திட்டங்கள்:**

இத்திட்டத்தை சிறப்பாக செயல்படுத்தும் பொருட்டு, மாவட்ட, வட்டார மற்றும் கிராம ஊராட்சி அளவில் உள்ள அலுவலர்கள், ஊராட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் இதர பங்கேற்பாளர்களுக்கும் தகுந்த பயிற்சியும், திட்டம் குறித்த விழிப்புணர்வும் ஏற்படுத்தப்படுகிறது.

**கணக்குகளை பராமரித்தல்:**

கிராம ஊராட்சிகள், திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தினை செயல்படுத்துகிறது. இத்திட்டத்திற்காக பெறப்படும் நிதியினை கண்காணிக்கவும், திட்டம் நீடித்து செயல்படுவதை உறுதி செய்யவும், கிராம ஊராட்சிகள் இதற்கென சேமிப்பு வங்கி கணக்கினை தனியாக பராமரிக்க வேண்டும். மக்கிய உரம், மண்புழு உரம், மறு சுழற்சி கழிவுகளை விற்பனை செய்வதன் மூலம் கிராம ஊராட்சிக்கு கிடைக்கும் வருமானத்தை, கிராம ஊராட்சியின் திடக் கழிவு மேலாண்மைத் திட்ட வங்கிக் கணக்கில் மட்டுமே செலுத்தப்படவேண்டும்.

**சமூகத் தணிக்கை:**

சம்பந்தப்பட்ட கிராம ஊராட்சியைப் பொருத்தமட்டில், திடக்கழிவு மேலாண்மைத் திட்ட செயல்பாடுகளுக்கான சமூக தணிக்கையை கிராம சபை மேற்கொள்ளும். இத்திட்டத்தின் வெளிப்படை தன்மையை உறுதிப்படுத்தும் வகையிலும், ஆலோசனைக்காகவும் மற்றும் மேம்பாட்டிற்காகவும், அனைத்து செயல்பாடுகள் குறித்த வரவு செலவுத் திட்டம் மற்றும் செலவினங்கள் ஆகியவை அனைத்து கிராம சபை கூட்டங்களிலும் வைக்கப்படவேண்டும்.

**பள்ளிக் கழிப்பறை பராமரித்தல்:**

மாணவர்களின் ஒட்டுமொத்த வளர்ச்சி, அவர்களது உடல் நலம் மற்றும் ஆரோக்கியத்தை பேணுவதில் சுகாதார

வசதிகள் மிக முக்கிய பங்கு வகிக்கின்றது. ஊரக பகுதிகளிலுள்ள 28,031 ஊராட்சி ஒன்றிய ஆரம்ப/நடுநிலைப் பள்ளிகளிலும் மற்றும் 6,916 அரசு பள்ளிகளிலும் போதுமான அளவில், மாணவ மாணவியருக்கு தனித்தனியே கழிப்பிட வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன. அரசு பள்ளிகளிலுள்ள பள்ளிக்கழிப்பறைகளை சுத்தமாக பராமரிப்பதற்காக கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் அல்லது ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு அல்லது இதர தனியார் நிறுவனங்கள் மூலமாக ஈடுபடுத்தப்படும் சுகாதார பணியாளர்களின் மாத ஊதியத்திற்கும், தூய்மைப்படுத்த தேவையான பொருட்களையும் வாங்குவதற்கும் அரசால் திடக்கழிவு மேலாண்மைத் திட்ட நிதியிலிருந்து 2015–16 மற்றும் 2016–17 ஆகிய ஆண்டுகளில், ரூ.84.46 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பெண்கள் பள்ளிகளில், பெண் சுகாதார பணியாளர் மட்டுமே ஈடுபடுத்தப்படுகிறார்கள். தினந்தோறும் காலையிலும் மாலையிலும் இருமுறை கழிப்பறைகள் சுத்தம் செய்யப்படுகிறது.

பள்ளியில் உள்ள கழிப்பறை சுத்தமாக இருப்பதை கண்காணிப்பது, சம்பந்தப்பட்டப் பள்ளி தலைமையாசிரியரின் பொறுப்பாகும். குறைந்தபட்சம் வாரத்தில் ஒருமுறை, கிராம ஊராட்சித் தலைவர், சம்பந்தப்பட்ட வார்டு உறுப்பினர் மற்றும் பெற்றோர் ஆசிரியர் கழக உறுப்பினர்கள், பள்ளியில் உள்ள கழிப்பறை சுத்தமாக இருப்பதை பார்வையிட்டு ஆய்வு செய்வார்கள். வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி), வட்டார வள

மையத்தின் மேற்பார்வையாளர் மற்றும் உதவி தொடக்கக் கல்வி அலுவலர்/ கூடுதல் உதவி தொடக்கக் கல்வி அலுவலர் ஆகியோர் இணைந்து ஒவ்வொரு காலாண்டும், பள்ளிக் கழிப்பறை சுத்தமாக பராமரிப்பது குறித்து பள்ளி தலைமை ஆசிரியர்களை ஆய்வு செய்வார்கள். மேலும், பள்ளிக் கழிப்பறை சுத்தமாக பராமரிப்பதை ஆய்வு செய்வதற்கும், கண்காணிப்பதற்கும், மாவட்ட ஆட்சித்தலைவர்கள், பள்ளி, கல்வித்துறை மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையை சார்ந்த மாவட்ட அலுவலர்களை ஒவ்வொரு வட்டாரத்திற்கும் மண்டல அலுவலர்களாக நியமனம் செய்துள்ளார்கள்.

## 3.17. சமூக பொருளாதார மேம்பாட்டுத் திட்டம்

தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில், நக்சலைட்டுகளின் பிரச்னைகளை தடுத்திடும் வகையில் சமூக பொருளாதார மேம்பாட்டிற்கான சிறப்புத் திட்டமாக 2003–04ம் ஆண்டு சமூக பொருளாதார மேம்பாட்டுத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு, ஒவ்வொரு ஆண்டும் தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களுக்கு முறையே தலா ரூ.700 இலட்சம் மற்றும் ரூ. 50 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ் பசுமை வீடுகள் கட்டுதல், ஆவின் பாலகம் கட்டுதல், வேளாண் கூலி விவசாயிகளுக்கு பூச்சி மருந்து தெளிப்பான் வாங்குதல், ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு மருத்துவ உபகரணங்கள் வாங்குதல்,

ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர் திட்டத்தில் குடிநீர் குழாய் விரிவாக்கம் செய்தல், அங்கன்வாடி மையங்களை நவீனப்படுத்துதல் உள்ளிட்ட பணிகளும் பல்வேறு பயிற்சித் திட்டங்களும் **2015–16**ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் எடுத்துக்கொள்ளப்பட்டன.

**2016–17**ம் நிதியாண்டிற்கும் இத்திட்டத்திற்காக ரூ.**7.50** கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

# 4. மத்திய திட்டங்கள்

## 4.1 . மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் (MGNREGS)

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டம் 02.02.2006 ல் தொடங்கப்பட்டது. ஒவ்வொரு நிதியாண்டிலும் ஊரகப் பகுதிகளில் திறன்சாரா, உடல் உழைப்பினை மேற்கொள்ள விருப்பமுள்ள, வயது வந்தோர் உள்ள ஒவ்வொரு குடும்பத்திற்கும் 100 நாட்களுக்கு குறையாமல் வேலை வாய்ப்பினை அளிக்க இச்சட்டம் உறுதி செய்கிறது. ஊரகப்பகுதியில் வாழும் ஏழைமக்களுக்கு அடிப்படை உரிமையான ‘சமத்துவ உரிமையை’ உணர்ந்து கொள்ளும் விதமாக இச்சட்டம் இயற்றப்பட்டுள்ளது. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட இத்திட்டம் மட்டுமே ‘‘வேலை செய்யும் உரிமையை’’ உறுதிப்படுத்தும் சட்டப்பூர்வ பாதுகாப்பு கொண்ட ஒரே வறுமை ஒழிப்பு திட்டமாகும்.

இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோள்கள் கீழ்கண்டவாறு திருத்தியமைக்கப்பட்டுள்ளன.

அ) ஒவ்வொரு நிதியாண்டிலும், ஊரகப் பகுதிகளில் திறன்சாரா, உடல் உழைப்பினை மேற்கொள்ள விருப்பமுள்ள, வயது வந்தோர் உள்ள ஒவ்வொரு குடும்பத்திற்கும் 100 நாட்களுக்குக் குறையாமல் வேலை வாய்ப்பினை அளிப்பதன் மூலம் நிர்ணயிக்கப்பட்ட தரமான மற்றும் நிலையான சொத்துக்களை உருவாக்குதல்.

ஆ) ஏழை மக்களின் வாழ்வாதாரத்தை வலுப்படுத்தும் அடிப்படை வளத்தை உருவாக்குதல்.

இ) சமூகப் பங்களிப்பை உறுதி செய்ய திறம்பட செயலாற்றுதல்.

ஈ) ஊராட்சி அமைப்பு முறையை வலுப்படுத்துதல்.

தமிழ்நாட்டில், முதலில் இத்திட்டம் 6 மாவட்டங்களில் 2.2.2006ல் அறிமுகப்படுத்தப்பட்டது. பின்னர் படிப்படியாக அனைத்து மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டது.

## 4.1.1. திட்டத்தின் சிறப்பம்சங்கள்

1) ஊரகப் பகுதிகளில் திறன்சாரா உடல் உழைப்பினை மேற்கொள்ள விருப்பமுள்ள, வயது வந்தோர் உள்ள, பதிவு செய்யப்பட்ட ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒவ்வொரு நிதியாண்டிலும் 100 நாட்களுக்கு வேலை வாய்ப்பினை உறுதி செய்தல்.

2) 10 முக்கியச் சட்ட உரிமைகள் பின்வருமாறு:

   i) வேலை அட்டை (Job card) உரிமை
   ii) வேலை கோரிய பதினைந்து தினங்களுக்குள் வேலை பெறுதலுக்கான உரிமை
   iii) வேலைவாய்ப்பில்லா படி பெறுவதற்கான உரிமை
   iv) பணிகள் தொகுத்தல் மற்றும் திட்டமிட்டு தயார்செய்தல்
   v) 5 கி.மீ க்குள் வேலை பெறுதலுக்கான உரிமை
   vi) பணிதளத்தில் அத்தியாவசிய தேவைகள் பெறுவதற்கான உரிமை
   vii) அறிவிக்கப்பட்ட ஊதியம் பெறுவதற்கான உரிமை

viii) பதினைந்து தினங்களுக்குள் ஊதியம் பெறுவதற்கான உரிமை

ix) காலங்கடந்து ஊதியத்தொகை வழங்கியதற்கான இழப்பீடு

x) மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்ட அனைத்து செலவுகள், தொடர் தணிக்கை மற்றும் சமூக தணிக்கை மேற்கொள்ளுதல் மற்றும் துயர்தீர் நடவடிக்கைகள் எடுத்து உரிய காலத்திற்குள் பதிலளித்தல்.

3) கட்டுமானப் பொருட்களின் செலவினம், திறன் சார்ந்த (skilled labour) மற்றும் பகுதி திறன் சார்ந்த தொழிலாளர்களின் (semi-skilled labour) ஊதியச் செலவு, மத்திய அரசு மற்றும் மாநில அரசால் 75:25 என்ற விகிதாச்சாரத்தில் வழங்கப்படுகிறது. திறன்சாரா உடல் உழைப்புத் தொழிலாளர்களுக்கான (unskilled labour) ஊதியச் செலவு 100 விழுக்காடு மத்திய அரசால் வழங்கப்படுகிறது.

4) அனைத்து ஊராட்சிகள் (ம) முகமைகள் மூலம் இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் அனைத்துப் பணிகளுக்குண்டான ஊதியம் (ம) பொருட்கள் 60:40 எனும் விகிதாச்சார அடிப்படையில் மாவட்ட அளவில் கணக்கிடப்படும்.

5) ஒப்பந்ததாரர்கள் அல்லது தொழிலாளர்களுக்கு மாற்றான இயந்திரங்களுக்கு அனுமதி இல்லை.

6) திறன்சாரா உடல் உழைப்பு மேற்கொள்ள விருப்பம் உள்ள வயது வந்தோர், திறன்சாரா வேலையினை

மேற்கொள்வதற்கான விருப்பத்தினை வாய் மொழியாகவோ, எழுத்து மூலமாகவோ, கிராம ஊராட்சிக்கு தெரிவித்து பதிவு செய்துகொள்ள வேண்டும்.

7) ஊரக பகுதிகளில் உள்ள ஒவ்வொரு குடும்பமும் வேலைக்கு விண்ணப்பித்து அவ்வேலையினை பெறும் பொருட்டு வேலை அட்டையினை பெற உரிமை பெற்றுள்ளது. ஒவ்வொரு 5 ஆண்டிற்கு ஒருமுறை புதிய வேலை அட்டை வழங்கப்படுகிறது.

8) அனைத்து ஊராட்சிகளிலும் தினசரி வருகைப்பட்டியல் இருப்பு பதிவேடு மற்றும் வேலை அட்டை வழங்கும் இருப்பு பதிவேடு ஆகிய 2 பதிவேடுகள் உட்பட, 9 புதிய பதிவேடுகள் பராமரிக்கப்பட்டு வருகிறது.

9) மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தில் ஒவ்வொரு வாரமும் வியாழக்கிழமை வேலை ஆரம்பித்து அடுத்த புதன்கிழமை வேலை முடிகிறது.

10) வேலை நடைபெறும் இடம் கிராமத்திலிருந்து 5 கி.மீ. தூரத்திற்கு மேல் இருக்கும் பட்சத்தில், போக்குவரத்து மற்றும் வாழ்வாதாரத் தொகையாக ஊதியத்தில் 10 விழுக்காடு கூடுதலாக வழங்கப்படும். இருப்பினும் தமிழ்நாட்டில் வேலை நடைபெறும் இடம் 2 கி.மீ சுற்றளவிற்குள் இருக்குமாறு பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

11) திறன்சாரா தொழிலாளர்களுக்கான ஊதியம் ஊரக விலைப் பட்டியலின் அடிப்படையில் நிர்ணயம்

செய்யப்படுகிறது. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி சட்டத்தின் திருத்திய அட்டவணை–I ன்படி திறன்சாரா தொழிலாளர்களுக்கான விலைப் பட்டியலின்படியான ஊதியமானது ஓர் வயது வந்த நபர் 1 மணி நேர உணவு இடைவேளையுடன் கூடிய 8 மணி நேர பணியில் பெறக்கூடிய (அதாவது 7 மணி நேர வேலை) ஊதியத்திற்கு சமமாக நிர்ணயிக்கப்படுகிறது.

12) மாற்றுத் திறனாளிகளுக்கென சிறப்பு ஊரக விலைப்புள்ளி பட்டியல் தயாரித்து அரசாணை வெளியிடப்பட்டது. மாற்றுத் திறனாளிகளுக்கென சிறப்பு நடவடிக்கைகள் அல்லது சிறப்பு விதிகள் மண் வேலை தொடர்பான பணிகளில் இருக்கவேண்டும் என அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

13) மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்ட தொழிலாளர்களுக்கு கூடுதலாக வேலை வழங்கும் பொருட்டு, கிராம ஊராட்சியில் உள்ள குக்கிராமங்களை ஒரு தொகுப்பாக உருவாக்கி, கூடுதலாக பணிகள் மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளது.

14) ஆண்கள் மற்றும் பெண்களுக்குச் சம அளவிலான ஊதியம் வழங்கப்படும். 2016–17ஆம் ஆண்டிற்கான அறிவிக்கப்பட்ட ஊதியம் நாளொன்றுக்கு ரூ.203 ஆகும். 2017–18 ஆம் ஆண்டுக்கு அறிவிக்கப்பட்ட ஊதியம் 01.04.2017 லிருந்து ரூ.205 ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

15) 07.11.2016 முதல் தேசிய நிதி மேலாண்மை முறை (Ne-FMS) மூலம் ஊதியம் செலுத்தப்படுகின்றது.

16) பணித்தளத்தில் குடிநீர், முதலுதவிப்பெட்டி, நிழற் கூடங்கள் போன்ற வசதிகள் செய்து தரப்படுகிறது.

17) வேலை நடைபெறும் அனைத்து இடங்களிலும் வேலையின் பெயர், அனுமதிக்கப்பட்ட தொகை, பணி நடைபெற்ற காலம் போன்ற விவரங்களுடன் குடிமக்களுக்கான தகவல் பலகை (Citizen Information Board) வைக்கப்படும்.

18) கிராம சபா கூட்டங்களில் கலந்து கொள்வதற்கும், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் அந்த கிராம ஊராட்சிகளில் எடுத்து செய்ய இருக்கும் பணிகளின் தொகுப்பு மற்றும் முன்னுரிமை அடிப்படையில் பணிகளை தேர்வு செய்வதற்கும் அனைத்து தொழிலாளர்களுக்கும் உரிமை உள்ளது.

19) மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் சமூகத் தணிக்கையினை, அதற்காக அமைக்கப்பட்டுள்ள "கிராம சமூகத் தணிக்கையாளர்கள்" மூலம் கிராம சபை மேற்கொள்கின்றது.

20) குறைகளை தீர்க்கும் வகையில் குறை தீர்க்கும் அமைப்பின் ஒரு பகுதியாக கட்டணம் இல்லாத் தொலைபேசி சேவை (Toll free Helpline) "**1299**" ஒவ்வொரு மாவட்டத்திலும் செயல்படுகிறது.

## 4.1.2. அனுமதிக்கப்பட்ட பணிகள்

மத்திய அரசு வழிகாட்டு நெறிமுறைகளின்படி அனுமதிக்கப்பட்ட பணிகளின் விவரம் பின்வருமாறு:

### அட்டவணை 4.1.
### மத்திய அரசு வழிகாட்டு நெறிமுறைகளின்படி அனுமதிக்கப்பட்ட பணிகளின் விவரம்

| வகைப்பாடு – அ | வகைப்பாடு – ஆ | வகைப்பாடு – இ | வகைப்பாடு – ஈ |
|---|---|---|---|
| **இயற்கை வள மேலாண்மையுடன் தொடர்புடைய பொதுப்பணிகள்** | **நலிவுற்ற இனத்திற்கான தனிநபர் சொத்துக்கள் / பொது சொத்துக்களை உருவாக்குதல்.** | **பொது உட்கட்டமைப்பு வசதிகள் தேசிய ஊரக வாழ்வாதார இயக்கத்திற்கு இணக்கமான சுயஉதவிக் குழுக்கள் உட்பட.** | **ஊரக உட்கட்டமைப்பு வசதிகள்** |
| • நீராதாரங்களைப் பாதுகாத்தல் மற்றும் நீர் சேகரிப்பு கட்டமைப்புகள்<br>• நீர் மேலாண்மைப் பணிகள்<br>• சிறு மற்றும் குறு நீர்ப்பாசனப் பணிகள்<br>• பாரம்பரிய நீராதாரங்களை சீரமைத்தல்<br>• காடு வளர்ப்பு<br>• மரக்கன்றுகள் நடுதல்<br>• பழ மரக் கன்றுகள் நடுதல்.<br>• பொது இடங்களில் நில மேம்பாட்டு பணிகள் | • கிணறுகள்<br>• பண்ணைக் குட்டைகள்<br>• இதர நீராதாரப் பணிகள்,<br>• தோட்டக்கலை சார்ந்த பணிகள், பட்டு வளர்ப்பு, மரக் கன்றுகள் நடுதல், மற்றும் காடு வளர்ப்பு.<br>• தரிசு நிலம் அல்லது பயனற்ற நிலங்களை மேம்படுத்தி விவசாய நிலங்களாக மாற்றுதல்<br>• மாநில அல்லது மத்திய அரசு திட்டங்களின் கீழ் அனுமதிக்கப்பட்ட வீடுகள் கட்டு வதற்கான திறன்சாரா செலவினத் தினை மேற்கொள்ளல்<br>• மாட்டுக் கொட்டகை ஆட்டுக் கொட்டகை, கோழிக் கொட்டகை, பன்றிக் கொட்டகை, அமைத்தல்<br>• கால்நடைத் தீவனத் தொட்டிகளை அமைத்தல்.<br>• மீன் உலர் களம்<br>• சேமிப்பு வசதிகள்<br>• பொது இடங்களில் உள்ள நீர்நிலைகளில் மீன் வளர்த்தல்<br>• தனி நபர் இல்லக் கழிப்பறைகள் | தேசிய ஊரக வாழ்வாதார இயக்கத்திற்கு இணக்கமான சுய உதவி குழுக்கள் உள்ளிட்ட சுய உதவிக் குழுக்களுக்கான பொது பணிமனை தளங்களை அமைத்தல். | • ஊரக சுகாதார பணிகள்<br>• சாலை வசதி இல்லாத ஊரகப் பகுதிகளில் இணைப்புச் சாலைகள் ஏற்படுத்துதல்<br>• விளையாட்டு மைதானம் அமைத்தல்<br>• பேரழிவினை தடுக்கும் ஆயத்தப்பணிகள், சாலைகளை சீரமைத்தல்<br>• வெள்ளக்கட்டுப்பாடு மற்றும் தடுப்புபணிகள் உட்பட பொது உட்கட்டமைப்பு பணிகள்<br>• கிராம ஊராட்சிக் கட்டிடங்கள் கட்டுதல்<br>• மகளிர் சுய உதவிக் குழு மற்றும் கூட்டமைப்பிற்கான கட்டிடங்கள் கட்டுதல்<br>• புயல் நிவாரணக் கூடங்கள்<br>• அங்கன்வாடி கட்டிடங்கள்<br>• கிராம சந்தை, கிராமங்களில் இடுகாடு மற்றும் சுடுகாட்டு கொட்டகைகளை ஊராட்சி மற்றும் வட்டார அளவில் கட்டுதல்‘<br>• உணவு சேமிப்பு கட்டிடங்கள் கட்டுதல்.<br>• சட்டத்தில் அனுமதிக்கப்பட்ட கட்டிட பணிகளுக்கு தேவையான கட்டுமானப் பொருட்களை அந்த கட்டிடத்தின் மதிப்பீட்டில் ஒரு அங்கமாக மேற்கொள்ளுதல்.<br>• இச்சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட ஊரக பொது சொத்துக்களை பராமரித்தல். |

**4.1.3. 2011–12 முதல் 2016–17 வரை எடுக்கப்பட்ட சிறப்பு முயற்சிகள்**

- அண்ணா பல்கலைக்கழக தொலை உணர் தொடர்பு நிறுவனத்தில் (Institute of Remote Sensing) உள்ள தொழில் நுட்ப உதவியாளர்கள் மூலம் வள ஆதார வரைபடங்கள் (Resource Map) தயார் செய்யப்பட்டுள்ளது. இந்த செயற்கைக்கோள் வரைபடங்கள் பணிகளை திட்டமிடுவதற்கும், செயல்படுத்துவதற்கும் உதவுகிறது.
- பலவகையான வேலைகளுக்கு உரிய கால நிர்ணய வேலை அளவீடு (Time & Motion Study) மேற்கொள்ளப்பட்டு, செய்ய வேண்டிய வேலையின் அளவு நிர்ணயிக்கப்பட்டு திருத்திய ஊரக விலைப் புள்ளிப் பட்டியலின் படி ஊதிய விகிதத்தினை உயர்த்தி வழங்கப்படுகிறது.
- பசுமைப்பகுதிகளை அதிகரிக்கும் பொருட்டு அரசுக்கு சொந்தமான இடங்கள், பொது இடங்கள், கிராம ஊராட்சிக்கு சொந்தமான இடங்கள் மற்றும் தனி நபர் விவசாயிகளது நிலங்களில் மரம் வளர்ப்பு பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகிறது.
- ஊராட்சி / ஊராட்சி ஒன்றிய சாலைகள், பிரதம மந்திரி கிராமச் சாலைகள் திட்டம், நபார்டு நிதியுதவித் திட்டம் ஆகிய திட்டங்களில் அமைக்கப்பட்ட சாலைகள் மற்றும் நெடுஞ்சாலைகள்

ஆகியவற்றில், சாலைகளின் இரு மருங்கிலும் மரக்கன்றுகள் நடும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- காடுவளர்ப்பு பணிகளை மேற்கொள்ள ஏதுவாக பல்வேறு மாவட்டங்களில், கிராம ஊராட்சிகள் / ஊராட்சி ஒன்றியங்களே நாற்றங்கால் அமைக்க ஊக்குவிக்கப்படுகிறது.
- அனைத்து அரசுத்துறைகளின் சேவைகளையும் எளிதில் அடையும் பொருட்டு கிராம ஊராட்சி சேவை மையங்கள் மற்றும் வட்டார ஊராட்சி சேவை மையங்கள் கட்டும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
- **2016–17** ஆம் ஆண்டில் ஏற்பட்ட கடுமையான வறட்சியால் வறட்சி தடுப்பு நடவடிக்கை மற்றும் ஊரக குடும்பங்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் விதமாக வேலை நாட்கள் **100** நாட்களிலிருந்து **150** நாட்களாக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.

### 4.1.3.1. 2011–12 முதல் 2016–17 வரை உள்ள சாதனைகள்.

- **2011–12** முதல் **2016–17** வரை இந்த அரசால் **211.85** கோடி மனித சக்தி நாட்கள் உருவாக்கப்பட்டு நிதியளவில் ரூ.**24006.33** கோடி ஊதியமாகவும் வழங்கப்பட்டுள்ளன.

### 4.1.4. எடுக்கப்பட்ட உன்னத முயற்சிகள்:—

### 4.1.4.1. பண்ணைக் குட்டைகள் அமைத்தல்.

- விவசாயிகள் பயன்பெறும் வகையில், **8** டெல்டா மாவட்டங்களில், **15,000** பண்ணைக் குட்டைப் பணிகள் தாழ்த்தப்பட்டோர் / பழங்குடியினர், சிறு மற்றும் குறு விவசாயிகளின் நிலங்களிலும் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டுள்ளது. இதன் முன்னேற்றத்தின் அடிப்படையில் டெல்டா மாவட்டங்களில் டெல்டா அல்லாத பகுதிகளிலும், டெல்டா அல்லாத **23** பிற மாவட்டங்களிலும், **50,000** பண்ணைக் குட்டைகள் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### 4.1.4.2. பிற துறைகளுடன் ஒருமுகப்படுத்துதல்

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தினை பிற துறைகளுடன் ஒருங்கிணைப்பதன் மூலம் பல்வேறு வகையான சேவைகளை பெற இயலும். நில மேம்பாட்டு நடவடிக்கைகள் மற்றும் தனி நபர்கள் பண்ணைக் குட்டைகள் அமைத்தல், பட்டு வளர்ச்சித் துறையின் கீழ் செயல்படும் பட்டுப் பண்ணைகளில் பண்ணைக் குட்டைகள் அமைத்தல், மல்பெரி செடி வளர்த்தல் உள்ளிட்ட பணிகள் மூலம் கிராம புற மக்களின் வாழ்வாதாரம் மேம்படுத்தப்படுகிறது.

**4.1.4.3. மரக்கன்றுகள் நடும் பணிகள் மேற்கொள்ளுதல்**

ஊரகப் பகுதிகளை பசுமை மயமாக்கும் முயற்சியாக, ஊராட்சி சாலைகள், ஊராட்சி ஒன்றிய சாலைகள், நெடுஞ்சாலைகள், பிரதம மந்திரியின் கிராம சாலைகள் ஆகியவற்றின் இருமருங்கிலும் **2015–16** ஆம் ஆண்டில் **2,000** கி.மீ நீளத்திற்கு மற்றும் **2016–17** ஆம் ஆண்டில் **16,959.72** கி.மீ நீளத்திற்கும் மரக்கன்றுகள் நடும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மாபெரும் மரம் நடவு (Massive Tree Plantation) பணிகள் வனத்துறையுடன் ஒருங்கிணைந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன் மூலம் பசுமையாக்குதல் அதிகரிக்கப்படுவதுடன், சுற்றுச் சூழல் மாசுபடுத்தும் காரணிகள் கட்டுப்படுத்தப்பட்டு மனிதன் மற்றும் விலங்கினங்களின் வாழ்க்கை பாதுகாக்கப்பட்டுள்ளது. அரசு நிலங்கள், அரசு மற்றும் பொது நிறுவனங்கள், பள்ளிகள், கல்லூரிகள், தொழிற்சாலைகள், இதர அரசு நிறுவனங்கள், பொது பூங்காக்கள் மற்றும் பொருத்தமான இடங்களில் மரக்கன்றுகள் நடும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. **2014–15** ஆம் ஆண்டில் **25.70** இலட்சம் மரக்கன்றுகள் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் நடப்பட்டுள்ளன, **2015–16** ஆம் ஆண்டு **32.63** இலட்சம் மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளது மற்றும் **2016–17** ஆம் ஆண்டில் **68** இலட்சம் மரக்கன்றுகள் இத்திட்டத்தில் நடப்பட்டுள்ளது. செடிகளுக்கு தண்ணீர் ஊற்றுவதற்கு தனியாக ஊரக விலைப் புள்ளி பட்டியல் வழங்கப்பட்டுள்ளது.

குடியிருப்புகளுக்கான பிரத்யேக மரம் வளர்க்கும் திட்டத்தின் மூலம் **54,000** இந்திரா நினைவு குடியிருப்பு திட்டப் பயனாளிகள் மற்றும் **60,000** முதலமைச்சரின் சூரிய ஒளியுடன் கூடிய பசுமை வீடுகள் திட்டப் பயனாளிகளின் வீடுகளில் ஒரு வீட்டிற்கு **4** மரக்கன்றுகள் வீதம் மொத்தம் **4.56** இலட்சம் மரக்கன்றுகள் நடும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பெருமளவு மரம் வளர்க்கும் திட்டத்திற்கான செடிகளின் (Saplings) தேவையை பூர்த்தி செய்யும் வகையில், **385** ஊராட்சி ஒன்றியங்களிலும் நாற்றங்கால்கள் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### 4.1.4.4. ஊரக விலைப்புள்ளி பட்டியல் (Rural Schedule of Rates)

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட திருத்திய அட்டவணை I பத்தி 7ன்படி தொழிலாளர்களுக்கான ஊதியம் அவர்கள் செய்கின்ற பணி அளவின் அடிப்படையில் வழங்கப்பட வேண்டும் எனில் ஒவ்வொரு ஆண்டும் மாநில வேலை உறுதி மன்றத்தினை கலந்தாலோசித்து பல்வேறு பணிகளுக்கு ஊரக விலைப் புள்ளி பட்டியல் நிர்ணயம் செய்து மாநில அரசு ஊதியம் வழங்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. கால நிர்ணய வேலை அளவு (Time and Motion Study) நடத்தப்பட்டு, முதலில் ஊரக விலைப் புள்ளி பட்டியல் (அரசாணை (நிலை) எண்.110 ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சி

(ம.அ.தி.1) துறை, நாள். 05.11.2012 ல்) வெளியிட்டுள்ள மாநிலங்களில் தமிழ்நாடு ஒரு மாநிலமாகும்.

மரக்கன்றுகள் நடும் பணிக்கு தனியாக ஊரக விலை புள்ளி பட்டியல் அரசாணை (நிலை) எண்.104, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மஅதி.1) துறை, நாள்.09.11.2012 ன்படி வெளியிடப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு ஊரக விலைப் புள்ளி பட்டியல் சிறப்பு வகை வேலைகளுடன் நிர்ணயிக்கப்பட்டுள்ளதை பெரும்பாலான மற்ற மாநிலங்களும் ஏற்றுக்கொண்டுள்ளன மற்றும் மத்திய அரசால் திருத்திய அட்டவணை–1 ல் மாற்று திறனாளிகளுக்கு தனியாக ஊரக விலை புள்ளி பட்டியல் கொண்டுவரப்பட்டுள்ளது.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் 83% தொழிலாளர்கள் பெண்கள் என்பதால், மண் எடுக்கும் உயரம் மற்றும் கொட்டும் தூரம் ஆகியவற்றினை கருத்தில் கொண்டும் புதிய ஊரக விலைப்புள்ளி பட்டியல் தயாரிக்கப்பட்டு அரசாணை (நிலை) எண்.29 ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சி (ம.அ.தி.1) துறை, நாள். 28.03.2013 உத்தரவிடப்பட்டுள்ளது. அதன்படி, கடின மண் உள்ள இடங்களில் செய்ய வேண்டிய மண் வேலையின் அளவு 57 கன அடியிலிருந்து 42 கன அடியாக குறைக்கப்பட்டுள்ளது. தற்போது, அரசாணை (நிலை) எண். 25 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (ம.அ.தி.1) துறை நாள் –

27.2.2014ன்படி, ஒரு பணியாளர் 37 கனஅடி மண் வேலை செய்தாலே முழு ஊதியம் பெற இயலும்.

**4.1.5.1. கட்டிட பணிகள்:**

2015–16ம் ஆண்டில் 3890 கிராம ஊராட்சி சேவை மையங்கள், 7.50 லட்சம் தனி நபர் இல்லக் கழிப்பறைகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. மேலும் 2016–17 ஆம் ஆண்டில் 7.50 இலட்சம் தனி நபர் இல்லக் கழிப்பறைகள், 1000 அங்கன்வாடி கட்டங்கள் கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**4.1.5.2. திடக்கழிவு மேலாண்மை திட்டத்துடன் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தினை ஒருங்கிணைத்தல்.**

மத்திய அரசின் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சகம் அட்டவணை I மற்றும் II ல் திருத்தங்கள் மேற்கொண்டு ஜனவரி 3, 2014 ம் தேதியிட்ட அறிவிக்கை மூலம் வகைப்பாடு D ல் ஊரக உட்கட்டமைப்பு (i) ஊரக தூய்மை பணி பிரிவு 4(1) (IV) ன் கீழ் “திட மற்றும் திரவ கழிவு மேலாண்மை” பணிகளை எடுத்துச் செய்ய அனுமதியளிக்கப்பட்டுள்ளது. மேலே குறிப்பிட்டுள்ள வழிகாட்டு செயல்முறைகளில், பின் இணைப்பு 2ல் திட மற்றும் திரவ கழிவு மேலாண்மை பணிகளை செயல்படுத்த மத்திய அரசு அனுமதியளித்துள்ளது.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதிச் சட்டம் 2005ல் அட்டவணை–I ல் கூறப்பட்டுள்ள விதிகளின்படி திடக்கழிவு மேலாண்மை பணிகளை செயல்படுத்த தனியாக ஊரக விலைப்புள்ளி பட்டியலை நிர்ணயிக்கும் பொருட்டு கால நிர்ணய வேலை அளவீடு ஒன்று நடத்தப்பட்டுள்ளது.

தமிழக அரசு வெளியிட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளின்படி 2015–16 ஆம் ஆண்டில் முதற்கட்டமாக 2,000 கிராம ஊராட்சிகளிலும், இரண்டாம் கட்டமாக 7,000 கிராம ஊராட்சிகளிலும் மற்றும் மூன்றாம் கட்டமாக 3,524 கிராம ஊராட்சிகளிலும் திடக் கழிவு மேலாண்மை திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டப் பணியாளர்கள், தூய்மைக் காவலர்களாக ஈடுபடுத்தப்பட்டு 150 குடும்பங்களுக்கு ஒரு தூய்மைக் காவலர் வீதம் தூய்மை காவலர்கள் 100 நாட்களுக்கு மட்டும் சுழற்சி முறையில் பணியில் ஈடுபடுத்தப்படுவர். தூய்மைக் காவலர்கள் வீடு வீடாக சென்று குப்பைகளை சேகரித்தல், பிரித்தல் மற்றும் கிடங்கில் சென்று கொட்டுதல் போன்ற திட கழிவு மேலாண்மை பணிகளில் ஈடுபடுத்தப்படுகின்றனர்.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் தொடர்ச்சியான 2 குழிகள் மக்கும் குப்பைகளுக்கும், ஒரு குழி மக்காத குப்பைகளுக்கும் தோண்டப்படுகிறது.

திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு விரிவான கால நிர்ணய வேலை அளவீடு மேற்கொள்ளப்பட்டு ஊரக விலைப்புள்ளிப் பட்டியல் நிர்ணயிக்கப்பட்டது. (அரசாணை (நிலை) எண்.87, ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சி (ம.அ.தி.1) துறை, நாள்.08.06.2015). அதனடிப்படையில் அதிக நெருக்கமான வீடுகள் கொண்டிருக்கும் சமவெளி பகுதியில் ஒவ்வொரு தூய்மைக் காவலரும் 75 குடியிருப்புக்களுக்குச் சென்று 40 கி.கி. எடை குப்பையினையும், மலைப்பாங்கான பகுதியில் ஒவ்வொரு தூய்மைக் காவலரும் 50 குடியிருப்புகளுக்கு சென்று 30 கி.கி எடையுள்ள குப்பையினையும் சேகரிக்க வேண்டும்.

பரவலான மக்கள் தொகை கொண்ட சமவெளி பகுதியில் ஒவ்வொரு தூய்மைக் காவலரும் 50 குடியிருப்புக்களுக்குச் சென்று 30 கி.கி எடையுள்ள குப்பையினையும் மலைப்பாங்கான பகுதியில் ஒவ்வொரு தூய்மைக் காவலரும் 30 குடியிருப்புகளுக்குச் சென்று 20 கி.கி எடையுள்ள குப்பையினையும் சேகரிக்க வேண்டும்.

### 4.1.5.3. பொதுப்பணித்துறை கால்வாய்களை தூர்வாருதல்

மழைநீரை சேகரிக்கவும், அதனை பொதுப்பணித்துறை ஏரிகள், கண்மாய்களுக்கு கால்வாய்கள் வாயிலாக வழிந்தோட செய்திடவும் மற்றும் நீர் ஆதார அமைப்புகள் முந்தைய கொள்ளளவை பெற்றிடவும், நிலத்தடி நீரின் அளவை உயர்த்தும் பொருட்டும் 10,000 கி.மீ

தூரத்திற்கு பொதுப்பணித்துறையின் C மற்றும் D பிரிவு கால்வாய்களை தூர்வாரும் பணி மேற்கொள்ளப்பட்டது.

### 4.1.6. 2016–17 ல் மேற்கொள்ளப்பட்ட புதிய முயற்சிகள்

#### 4.1.6.1. கிணறுகள்

விவசாயம் சார்ந்த பணிகளை ஊக்குவிக்க, தாழ்த்தப்பட்டோர் / பழங்குடியினர், சிறு மற்றும் குறு விவசாயிகளின் நிலங்களில் 250 தனிநபர் கிணறுகள் மற்றும் அரசு / பொது நிலங்களில் 250 குழு கிணறுகள் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டது.

#### 4.1.6.2. மண்புழு உர அலகு அமைத்தல்

மண்புழு உரம், உயிரி உரத்தினை உருவாக்கும் ஒரு முறையாகும். இந்த உயிரி உரம் மண்புழு உரத்தில் மூலப்பொருளாக பயன்படுத்தப்படும். இந்த உயிர் உரம் பெருமளவு மரம் வளர்க்கும் திட்டத்திலும், ஊராட்சிகளிலும் பயன்படுத்தப்படுகிறது. தேவைக்கு அதிகமாக உற்பத்தி செய்யப்படும் மண்புழு உரம் தமிழக ஊரக வாழ்வாதார இயக்கத்தில் செயல்படும் மாவட்ட விநியோகம் மற்றும் விற்பனை சங்கத்தின் மூலம் விற்பனை செய்யப்பட்டு அதன் மூலம் கிடைக்கும் வருவாய் கிராம ஊராட்சி கணக்கில் வரவு வைக்கப்படும். மண்புழு உரமானது விவசாயிகளுக்கும், பொது மக்களுக்கும் விற்பனை செய்யப்படுகிறது.

2016–17ம் ஆண்டில் ஒரு வட்டாரத்திற்கு ஒன்று வீதம் 385 மண்புழு உர அலகுகள் அமைக்கப்பட்டுள்ளன.

### 4.1.7. வங்கிகள் மூலம் தொழிலாளர்களுக்கு ஊதியம் வழங்குதல் / பொது நிதி மேலாண்மை மூலம் ஊதியம் வழங்குதல்

வங்கிகள் மூலம் ஊதியம் வழங்குவதில் தாமதம் ஏற்படாமலிருப்பதற்காக, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட தொழிலாளர்களுக்கு 2013–14 முதல் மின்னணு நிதி மேலாண்மை முறை (e-FMS) மூலம் ஊதியம் வழங்கப்படுகிறது. 01.04.2014 முதல் மாநிலத்திலுள்ள அனைத்து தொழிலாளர்களுக்கும் ஊதியம் மின்னணு நிதி மேலாண்மை முறையின் கீழ் மட்டுமே வழங்கப்படுகிறது.

10.4.2015 முதல் வங்கி பரிமாற்றம் ஒற்றைக் கணக்கு முறையில் மாற்றம் செய்யப்பட்டு பொது நிதி மேலாண்மை முறை (PFMS) மூலம் ஊதியம் வழங்கப்படுகிறது. 07.11.2016 முதல் மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டப் பயனாளிகளுக்கு, தேசிய மின்னணு நிதி மேலாண்மை முறை (Ne-FMS) மூலம் நேரடியாக மத்திய அரசால் பயனாளிகளின் வங்கிக் கணக்குகளில் ஊதியத்தொகை வரவு வைக்கப்படுகிறது.

### 4.1.8. தொழிலாளர்களின் கணக்குகளுடன் ஆதார் எண்ணை இணைத்தல்

மகாத்மா தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட தொழிலாளர்களது கணக்கில் ஆதாருடன் இணைந்த ஊதியம் செலுத்தும் முறையில் (Aadhar Based

Payment System) ஊதியத்தினை ஈடு செய்யும் வகையில் தேசிய ஊரக வேலை உறுதிச் சட்ட வலைதளத்தில் அனைத்து மகாத்மா தேசிய ஊரக வேலை உறுதி திட்ட தொழிலாளர்களது ஆதார் எண்களும் இணைக்கப்பட்டு வருகிறது. ஆதார் எண்களை இணைப்பதன் மூலம் மகாத்மா தேசிய ஊரக வேலை உறுதி திட்ட தகவல்தளம் சீராவதோடு தொழிலாளர்களுக்கு ஊதிய மாற்றம் செய்யப்படுவதை விரைவானதாகவும், வெளிப்படையானதாகவும் ஆக்குகிறது. இதுவரை மொத்தம் உள்ள **84.80** இலட்சம் தொழிலாளர்களில், **82.29 (97%)** இலட்சம் தொழிலாளர்களின் ஆதார் எண்கள் வலைதளத்தில் இணைக்கப்பட்டு **56.10** இலட்சம் **(66%)** தொழிலாளர்களுக்கு ஆதாருடன் இணைந்த ஊதியம் செலுத்தும் முறையில் (Aadhar Based Payment System) ஊதியம் வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

### 4.1.9. சொத்துக்களுக்கு புவிக் குறியிடுதல் (Geo tagging) :

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் புவிசார் **(Geo MGNREGA)** குறிக்கோளானது, புவிசார் தகவல் மைய தீர்வை உருவாக்கி, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் மூலம் உருவாக்கப்பட்ட சொத்துகளின் தகவல்களை காட்சிபடுத்தி ஆராய்வதேயாகும். இதன் மூலம், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் இந்தியா

முழுவதும் உருவாக்கப்பட்ட சொத்துக்களை வரைபடத்தில் காணலாம். இந்திய விண்வெளி ஆராய்ச்சி மையத்தின் (Indian Space Research Organisation) ஒரு அமைப்பான தேசிய தொலை உணர்வு மையம் (National Remote Sensing Corporation) மூலம் புவன் என்ற மென்பொருள் உருவாக்கப்பட்டு பயன்படுத்தப்படுகிறது. மத்திய ஊரக வளர்ச்சித் துறை அமைச்சகத்தின் (NREGASoft) என்ற இணையதளத்திலிருந்து சொத்து குறித்த விவரங்களை புவன் மென்பொருள் மூலம் பயன்படுத்தப்படுகிறது. NREGASoft மற்றும் புவன் மென்பொருளின் தனித்துவ திறமைகளை ஒருங்கிணைத்து, புவிசார் சொத்து மேலாண்மை கருவியாக உருவாக்கப்பட்டு அதற்கு ஜியோ எம்ஜிநரேகா (Geo MGNREGA) எனப் பெயரிடப்பட்டுள்ளது.

**4.1.10.மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டத்தின் கீழ் பெறப்பட்ட விருதுகள்:**

**அ) மாநிலத்திற்கான தேசிய விருது**

முதன்முறையாக சிறப்பாக செயல்பட்ட மாநிலங்களுக்கான விருதுகள் மூன்று வகைப்பாட்டின் கீழ் 2012–13 முதல் அறிவிக்கப்பட்டன. இவற்றில் **தமிழ்நாடு "சமூகப் பங்களிப்பு" (social inclusion) என்ற வகைப்பாட்டில் சிறந்த மாநிலமாக தெரிவு செய்யப்பட்டு மத்திய அரசால் விருது வழங்கப்பட்டுள்ளது.**

**“ஒருங்கிணைத்தல் மூலம் நிலைத்த வாழ்வாதாரத்தை ஏற்படுத்துதல்” என்கிற முயற்சிக்காக 2014–15 ம் ஆண்டில் தமிழ்நாடு தேசிய விருது பெற்றது.** மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தினை செயல்படுத்துவதில் மேற்கொள்ளப்பட்ட சிறப்பான முயற்சிகள் குறித்து நடத்தப்பட்ட கண்காட்சிக்கான தேசிய விருது தமிழ்நாட்டுக்கு அளிக்கப்பட்டது.

## ஆ) மாவட்டம் மற்றும் கிராம ஊராட்சிகளுக்கான தேசிய விருதுகள்

ஒவ்வொரு ஆண்டும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் தேசிய அளவில் நன்றாக செயல்படும் மாவட்டங்கள் மற்றும் கிராம ஊராட்சிகள் மத்திய அரசால் தெரிவு செய்யப்பட்டு விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றது. **2011–12** முதல் **2015–16–ம்** ஆண்டுவரை இத்திட்டத்தினை சிறப்பாக செயல்படுத்தியதற்காகப் பெறப்பட்ட விருதுகள் விவரம் கீழ்கண்டவாறு:

**அட்டவணை 4.2.**
**மாவட்டம் மற்றும் கிராம ஊராட்சிகளுக்கான தேசிய விருதுகள்**

| வருடம் | மாவட்ட விருது | கிராம ஊராட்சிக்கான விருது |
|---|---|---|
| 2011–12 | தஞ்சாவூர்<br>திருச்சிராப்பள்ளி | காடம்பாடி கிராம ஊராட்சி, சூலூர் ஊராட்சி ஒன்றியம்,<br>கோயம்புத்தூர் மாவட்டம். |
| 2012–13 | நீலகிரி | தாணிக்கோட்டகம் கிராம ஊராட்சி,<br>வேதாரண்யம் ஊராட்சி ஒன்றியம்,<br>நாகப்பட்டினம் மாவட்டம். |

| வருடம் | மாவட்ட விருது | கிராம ஊராட்சிக்கான விருது |
|---|---|---|
| 2013–14 | தேனி | எப். கீழையூர் கிராம ஊராட்சி, மணப்பாறை ஊராட்சி ஒன்றியம், திருச்சிராப்பள்ளி மாவட்டம். |
| 2014–15 | திருவள்ளூர்<br>புதுக்கோட்டை | – |
| 2015–16 | மதுரை | – |

### 4.1.11. 2017–18-ம் ஆண்டில் திட்ட செயலாக்கம்

மத்திய ஊரக வளர்ச்சி அமைச்சகம், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் மூலம் நீர் வளப் பாதுகாப்பு இயக்கத்தை, (Mission Water Conservation) பிரதம மந்திரி விவசாய நீர்பாசன திட்டத்தின் மொத்த கட்டமைப்பின் கீழ் மேற்கொள்வதற்கு உத்தரவிடப்பட்டுள்ளது. நீர் சேமிப்பு கட்டமைப்புகள், பண்ணைக் குட்டைகள், சிறிய தடுப்பணைகள் மற்றும் எல்லை வரப்பு (Contour Bund) போன்றவை இவற்றுள் அடங்கும்.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் நிதியினை கொண்டு நீர்வள ஆதார பாதுகாப்பை, அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தினை பயன்படுத்தி சிறப்பான முறையில் செயல்படுத்த முயற்சி மேற்கொள்ளப்படும். நீர்வளத்தினை மேம்படுத்துவதும், வறட்சியற்ற கிராம ஊராட்சிகளை உருவாக்குவதுமே இத்திட்டத்தின் நோக்கமாகும் (Ridge to Valley Treatment).

மாவட்ட நீர்பாசன திட்டம் (District Irrigation Plan) இந்திய அரசின் வழிகாட்டுதலின்படி மாவட்டத்தின் முழுமையான பாசன வளர்ச்சிக்கு முன்னோடியாக திகழும் வகையில் தயாரிக்கப்படவேண்டும். மாவட்ட நீர்பாசன திட்டம் (DIP) மாவட்டத்தில் தற்போது முன்மொழியப்பட்ட நீர் வள, நீர் ஆதார கட்டமைப்பு முறைகளை முழுமையாக உள்ளடக்கியதாகும். அதன்படி மாவட்ட நீர்பாசன திட்டம் (DIP) அனைத்து மாவட்டங்களிலும் தயாரிக்கப்பட்டுள்ளது.

நீர் வள பாதுகாப்பு இயக்க வழிகாட்டுதலின்படி, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தில் வருடாந்திர திட்டம் / தொழிலாளர் வரவு செலவு ஒதுக்கீட்டை முறையாக மாவட்ட நீர்பாசன திட்டத்துடன் இணைத்து குறைந்தபட்சம் 65% மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் இயற்கை வள மேலாண்மை பணிகளை (Natural Resources Management) அதிகமாக நீர் உறிஞ்சப்பட்ட மற்றும் மிக அதிகமாக நீராதாரம் உறிஞ்சப்பட்ட (Over exploited and critical) நிலையிலுள்ள 200 ஊராட்சி ஒன்றியங்களில் செலவினம் மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் அட்டவணை–I ன்படி 153 வகையான பணிகள் பட்டியலிடப்பட்டுள்ளன. அவற்றில் 100 இயற்கை வள மேலாண்மை பணிகளில் 71 பணிகள் நீர் சம்மந்தப்பட்ட பணிகளாகும். மாவட்ட திட்டமிடல் குழு பொதுப்பணித்துறை,

மத்திய நிலத்தடி நீர் வாரியம், விவசாயம், விவசாய பொறியியல் துறை, இந்திய தொழில் நுட்ப கல்லூரி, தமிழ்நாடு நீர்வடிகால் மேம்பாட்டு முகமை, விவசாய கல்லூரி (ம) பிற தொழில்நுட்ப கல்லூரிகள் (ம) மாவட்ட நீர் வள பாசன முகமை உள்ளடங்கிய உறுப்பினர்களுடன் கலந்து ஆலாசனை செய்து அந்தந்த பகுதிக்கு தேவையான முன்னுரிமை பணிகளை தயாரித்துள்ளது.

### 4.1.12. சமூக தணிக்கை

சமூக தணிக்கை என்பது சமூக தணிக்கை அலுவலர்களின் வழிகாட்டுதலுடன் மக்களாலேயே செய்யப்படும் ஒரு முழுமையான தணிக்கை ஆகும். நிதி செலவினம் மட்டுமல்லாது, திட்டத்தின் செயல்முறை மற்றும் சமூக அம்சங்கள் பணித்திறன் ஆகிய கோணங்களிலிருந்தும் சமூக தணிக்கையின் போது ஆய்வு செய்யப்படுகிறது. சமூக தணிக்கை தகவல் தொடர்பு மற்றும் கல்விக்கான கருவியாக இருப்பதுடன் வெளிப்படைத் தன்மை மற்றும் பொறுப்புடைமையை அமல்படுத்த உதவுகிறது. சமூக தணிக்கை வளர்ச்சித் திட்டங்களில் எல்லா நிலைகளிலும் (திட்டமிடுதல், வடிவமைத்தல், செயல்படுத்துதல் மற்றும் மதிப்பீடு செய்தல்) மக்களின் பங்கேற்பை அதிகப்படுத்த உதவும். சமூக தணிக்கையின் முக்கியத்துவத்தை உணர்த்தும் பொருட்டு, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதிச் சட்டத்தில் ஒவ்வொரு ஊராட்சியிலும் ஆறு மாதத்திற்கொருமுறை சமூக தணிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்று

கூறப்பட்டுள்ளது. மேலும், மத்திய அரசு, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதிச் சட்ட தணிக்கை விதிகள் 2011 மூலம் சமூக தணிக்கை நடைமுறைகளை நிர்ணயித்துள்ளது.

### 4.1.13. நிர்வாகம்:

1. அரசாணை (நிலை) எண்.64, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை நாள் 27.07.2012–ன் படி, ஊரக வளர்ச்சித் துறை சார்ந்த கூடுதல் இயக்குநர் பதவி நிலையிலான இயக்குநர் அவர்களைக் கொண்டு சார்பற்ற தன்மையுடன் சமூக தணிக்கை அலகு ஒன்று 2013–ம் ஆண்டு உருவாக்கப்பட்டது. இயக்குநரது பணிகளில் உதவும் வகையில் ஊரக வளர்ச்சித் துறை சார்ந்த இரு இணை இயக்குநர்கள் மற்றம் ஒரு உதவி இயக்குநருடன் அலுவலகப் பணியாளரும் பணிபுரிகின்றனர்.
2. அரசாணை (நிலை) எண்.125 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் 21.12.2012ல் தமிழ்நாடு சமூக தணிக்கைச் சங்கம் உருவாக்கிட உப விதிகளுக்கு ஒப்புதல் வழங்கி ஆணையிடப்பட்டதை தொடர்ந்து தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம் 1975–ன் கீழ் 2013 ஆம் ஆண்டு ஜனவரி 9 ஆம் தேதி தமிழ்நாடு சமூக தணிக்கைச் சங்கம் பதிவு செய்யப்பட்டது.

**மாவட்ட மற்றும் வட்டார அளவிலான பணியாளர்கள்:**

| | | |
|---|---|---|
| மாவட்ட வள அலுவலர்கள் | : 31 | சம்பந்தப்பட்ட மாவட்டங்களில் சமூக தணிக்கையை கண்காணித்து தணிக்கையின் முடிவுகள் மற்றும் அதன் மீதான சிறப்பு அறிக்கையை மாநில சமூக தணிக்கை சங்க இயக்குநருக்கு அனுப்புதல். |

| | | |
|---|---|---|
| உதவி பணியாளர்கள் | : 31 | மாவட்ட தலைமையிடத்தில் மாவட்ட வள அலுவலர்களின் அன்றாட பணிகளுக்கு உதவி புரிதல். |
| வட்டார வள அலுவலர்கள் | : 770 | வருடாந்திர நாட்காட்டியின் அடிப்படையில் கிராம ஊராட்சிகளில் சமூக தணிக்கை நடத்துவதற்கு உதவுதல் மற்றும் தணிக்கையின் முடிவுகளை கிராம சபையின் முன் வைப்பதை உறுதி செய்தல். |

### 4.1.15. திறன் வளர்த்தல்:

தமிழ்நாடு சமூக தணிக்கை சங்கம், சமூக தணிக்கையின் முக்கியத்துவம், அவசியம் மற்றும் நடைமுறை ஆகியவை அனைத்தையும் உள்ளடக்கிய பயிற்சியினை இத்துறை சார்ந்த அனைத்து அலுவலர்கள், கிராம ஊராட்சி தலைவர்கள் மூன்று அடுக்குகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஊரக உள்ளாட்சி வார்டு உறுப்பினர்கள் மற்றும் கிராம ஊராட்சி செயலாளர்களுக்கு அளித்துள்ளது. **2013–14** ஆம் ஆண்டு திட்டத்தின் பங்கேற்பாளர்கள் **24,874** நபர்களுக்கும் **2014–15** ஆம் ஆண்டு தேர்ந்தெடுக்கப்பட்ட ஊரக உள்ளாட்சி மன்ற உறுப்பினர்கள் **92,109** நபர்களுக்கும், **5** கட்டங்களாக சமூக தணிக்கை பயிற்சி அளிக்கப்பட்டது. ஆக மொத்தம் **1,16,983** நபர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

சமூக தணிக்கை சங்கத்தின் மூலம் பயிற்சியாளர்களுக்கான பயிற்சி கையேடுகள் **2**, கிராம ஊராட்சி தலைவர்களுக்கான பயிற்சி கையேடு **1**, கிராம ஊராட்சி செயலாளர்களுக்கான பயிற்சி கையேடு **1**, கிராம ஊராட்சி வார்டு உறுப்பினர்களுக்கான பயிற்சி கையேடு **1**

மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை அலுவலர்களுக்கான பயிற்சி கையேடு 1 ஆகிய 6 வகையான பயிற்சி கையேடுகள் வெளியிடப்பட்டது. சமூக தணிக்கை குறித்து பொது மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் துண்டு பிரசுரம் விநியோகம் செய்யப்பட்டது.

**4.1.16. வள அலுவலர்களுக்கு பயிற்சி அளித்தல்:**

வள அலுவலர்களின் திறமையினை மேம்படுத்தும் பொருட்டு **02.11.2016** முதல் நான்கு கட்டங்களாக சமூக பொறுப்புடைமை மற்றும் சமூக தணிக்கை தொடர்பாக **30** நாட்கள் பயிற்சி மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம் மறைமலை நகர் மற்றும் மண்டல ஊரக வளர்ச்சி ஊராட்சி நிறுவனங்கள் எஸ்.வி.நகரம், பவானிசாகர், பட்டுக்கோட்டை மற்றும் தே.கல்லுப்பட்டி ஆகிய ஐந்து மையங்களில் **29** மாவட்ட வள அலுவலர்கள், **22** உதவி பணியாளர்கள் மற்றும் **647** வட்டார வள அலுவலர்கள் என மொத்தமாக **698** நபர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

**4.1.17. சமூக தணிக்கை செயல்பாடுகள்:**

புதியதாக தேர்வு செய்யப்பட்ட மாவட்ட வள அலுவலர்கள் மற்றும் வட்டார வள அலுவலர்களுக்கு பயிற்சி அளிக்கும் விதமாக **24.01.2015** முதல் **07.03.2015** வரையிலான காலத்தில் **1,140** கிராம ஊராட்சிகளில் மாதிரி சமூக தணிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி சட்டவிதிகள் **2011**–ன் படி **2015–16** ஆம் ஆண்டிற்கான

வருடாந்திர நாள்காட்டி தயாரிக்கப்பட்டு **12,523** கிராம ஊராட்சிகளில் **2014–15**ம் நிதியாண்டிற்கான சமூக தணிக்கை **8,344** கிராம ஊராட்சிகளில் மேற்கொள்ளப்பட்டது. மீதமுள்ள **4,179** கிராம ஊராட்சிகளில் **2016–2017** ம் ஆண்டு சமூக தணிக்கை முடிக்கப்பட்டது. **2015–2016** ம் நிதியாண்டிற்கான சமூக தணிக்கை மேற்கொள்ளும் பொருட்டு, **2016–2017** ஆம் ஆண்டில் வருடாந்திர நாள்காட்டி தயாரிக்கப்பட்டு, **31.03.2017** வரை **9,821** கிராம ஊராட்சிகளில் சமூக தணிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் **2017–2018** ஆம் ஆண்டில் வருடாந்திர நாள்காட்டி தயாரிக்கப்பட்டு **23.05.2017** அன்று முடிவுற்ற நான்காம் சுற்று வரை **2016–2017** ஆம் ஆண்டிற்கான **12,523** ஊராட்சிகளில் **2,348** ஊராட்சிகளிலும் மற்றும் நிலுவையிலுள்ள **2,702** கிராம ஊராட்சிகளில் **1,514** கிராம ஊராட்சிகளில் சமூக தணிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### 4.1.18. சமூக தணிக்கையின் தாக்கம்:

சமூக தணிக்கையினை, திட்டத்தின் பயனாளிகளான மக்களே மேற்கொள்வதால் சமூக தணிக்கையானது திட்டப்பயனாளிகளிடையேயும் திட்டத்தினை செயல்படுத்துபவர்கள் மத்தியிலும் சிறப்பான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. சமூக தணிக்கைக்காக ஏற்பாடு செய்யப்படும் சிறப்பு கிராம சபையில் நடைபெறும் விவாதமானது மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்ட செயல்பாட்டின் பொது கருத்து கேட்பினை ஒத்து

இருப்பதால் இத்திட்டத்தில் பணிபுரிபவர்கள் தங்களுடைய உரிமைகள் மற்றும் பயன்களை அறிந்து கொள்ளும் விழிப்புணர்வு கூட்டமாக அமைகிறது. இந்த சிறப்பு கிராம சபையிலேயே சமூக தணிக்கையில் கண்டறியப்படும் குறைபாடுகள் உடனுக்குடன் நிவர்த்தி செய்யப்படுகிறது. மேலும் வட்டார அளவில் மற்றும் ஊராட்சி அளவில் பராமரிக்கப்படும் பதிவேடுகளின் பதிவுகள் மேம்படுத்தப்பட்டுள்ளதோடு அதன் முக்கியத்துவத்தினையும் உணர வைக்கப்பட்டுள்ளது.

## 4.2. பிரதம மந்திரி குடியிருப்புத் திட்டம் (ஊரகம்)

மத்திய அரசின் பங்களிப்பு வீட்டு வசதி திட்டமான இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டம், **2016–2017** ஆம் ஆண்டு முதல் சீரமைக்கப்பட்டு பிரதம மந்திரி குடியிருப்பு் திட்டம் (ஊரகம்) என பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

பொருத்தமான மற்றும் புதிய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி பயனாளிகளால் தரமான மற்றும் பேரிடர்களைத் தாங்கக் கூடிய வீடுகள் கட்டுவதை நோக்கமாகக் கொண்ட திட்டம் பிரதம மந்திரி குடியிருப்புத் திட்டம் (ஊரகம்) ஆகும்.

சமூக பொருளாதார கணக்கெடுப்பு பட்டியல் **2011–**ன் அடிப்படையில் கிராம சபை மூலம் பயனாளிகளைக் கண்டறிந்து, பயனாளிகள் தேர்வு செய்யப்படுகின்றனர்.

பிரதம மந்திரி குடியிருப்பு் திட்டத்தின் (ஊரகம்) கீழ் மொத்த ஒதுக்கீட்டில் **60** விழுக்காடு ஆதிதிராவிடர்கள் /

பழங்குடியினர் வகுப்பினருக்கும், 40 விழுக்காடு இதர வகுப்பினருக்கும் (சிறுபான்மையின வகுப்பினர் உட்பட) ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும். மேற்கண்ட இரு இனங்களில் 3 விழுக்காடானது, மாற்றுத் திறனாளிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும். ஒவ்வொரு வீடும் 269 சதுர அடி பரப்பளவில் கட்டப்படுகிறது.

ஒரு வீட்டிற்கான மத்திய அரசின் அலகுத் தொகை ரூ.1.20 இலட்சம் ஆகும். இத்திட்டத்தின் கீழ் மத்திய மற்றும் மாநில அரசின் நிதி பங்கீடு 60:40 என்ற விகிதத்தில் உள்ளது (மத்திய அரசு ரூ.72,000 மற்றும் மாநில அரசு ரூ.48,000). தமிழக அரசு, கான்கிரீட் மேற்கூரை அமைப்பதற்காக அலகுத் தொகையை விட ரூ.50,000 கூடுதல் நிதியாக மாநில நிதியிலிருந்து வழங்குகிறது. எனவே தமிழ்நாட்டில் 2016–17 ஆம் ஆண்டிற்கு பிரதம மந்திரி குடியிருப்புத் திட்ட (ஊரகம்) த்தின் கீழ் ஒரு வீட்டின் மொத்த அலகுத் தொகை ரூ.1.70 இலட்சம் ஆகும்.

அலகுத் தொகையுடன் கூடுதலாக, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு பயனாளிக்கும் தினக்கூலி அடிப்படையில் வீடு கட்டுவதற்காக 90 மனித நாட்களுக்கான ஊதியம் அளிக்கப்படுகிறது.

மேலும், பயனாளிக்கு தனி நபர் இல்லக் கழிப்பறை கட்ட ரூ.12,000 மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்துடன் ஒருங்கிணைந்து வழங்கப்படுகிறது.

**2015–16** ஆம் ஆண்டு முதல் பயனாளிகளுக்கு வழங்கப்பட வேண்டிய தொகை பொது நிதி மேலாண்மை முறையின் (PFMS) மூலம் பயனாளிகளின் வங்கிக் கணக்கிற்கு வரவு வைக்கப்படுகிறது.

பிரதம மந்திரி குடியிருப்புத் திட்டத்தின் (ஊரகம்) கீழ் பயனாளிகளிடமிருந்து பெறப்படும் புகார்களை பரிசீலனை செய்து, பயனாளிகளின் பெயர்களை பயனாளிகள் பட்டியலில் சேர்க்கவும் / நீக்கவும் மற்றும் தீர்வு செய்யவும் ஒரு குறை தீர்க்கும் அமைப்பாக மேல்முறையீட்டு, குழு மாவட்ட அளவில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

பிரதம மந்திரி குடியிருப்புத் திட்டத்தின் (ஊரகம்) கீழ் **2016–17** ஆம் ஆண்டு தமிழகத்திற்கு மத்திய அரசால் **1,31,831** வீடுகள் கட்ட முதலில் இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, பின்னர் **45,507** வீடுகள் கூடுதலாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. எனவே, **2016–17**–ஆம் ஆண்டிற்கு **1,76,338** வீடுகள் என ஒதுக்கீடு அதிகரிக்கப்பட்டு, ரூ.**2,997.75** கோடி மதிப்பீட்டில் வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன.

**2017–18** ஆம் நிதியாண்டில், **1,30,214** வீடுகள், ரூ.**2213.64** கோடி மதிப்பீட்டில் கட்டப்பட உள்ளன.

## 4.3 நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத்திட்டம்

நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டமானது, ஊரகம் மற்றும் நகர்ப்புற பகுதிகளில் உட்கட்டமைப்பு வசதி ஏற்படுத்துவதில் உள்ள இடைவெளியினை நிரப்புதல் என்பதே நோக்கமாகும். இத்திட்டத்திற்கான நிதியை 2011–12–ம் ஆண்டு முதல் ரூ.5 கோடியாக மத்திய அரசு உயர்த்தியுள்ளது. தமிழ்நாட்டில், இத்திட்ட செயலாக்கத்திற்கு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையே தொடர்பு துறை ஆகும். மாவட்ட ஆட்சித் தலைவர் பணிகளுக்கான நிர்வாக அனுமதி வழங்குவார். இத்திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யக்கூடிய பணிகள் குறித்த விளக்கப் பட்டியலும், தடை செய்யப்பட்ட பணிகள் குறித்தும் வழிகாட்டு நெறிமுறையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் அனைத்து வகையான பராமரிப்பு பணிகளும் தடை செய்யப்பட்டுள்ளன. குளங்கள், குட்டைகள், ஆறுகள், வாய்க்கால் தூர் வாருதல் போன்ற பணிகள் பராமரிப்பு பணிகளாக கருதப்பட்டு இத்திட்டத்தின் கீழ் எடுத்து செய்ய இயலாது.

2016–17ம் ஆண்டில், நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், ரூ. 295 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பல்வேறு பணிகள் கீழ்க்காணும் அட்டவணையில் கண்டுள்ள விவரப்படி செயல்படுத்தப்பட்டுள்ளன.

**அட்டவணை 4.3**
**நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் எடுக்கப்பட்ட பணிகள் விவரம்**

| வ.எண் | பணிகள் | பணிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | கட்டிடங்கள் | 503 |
| 2. | சாலைகள் | 807 |
| 3. | குடிநீர் வழங்கல் | 333 |
| 4. | வடிகால் மற்றும் பாசன கால்வாய் பணிகள் | 861 |
| 4. | இதர பணிகள் | 1211 |
| **மொத்தம்** | | **3715** |

இத்திட்டத்தின்கீழ், 2017–18ம் ஆண்டில் ரூ.295 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட உள்ளது.

## 4.4. பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம்

பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம், 500–க்கும் மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட இணைப்புச்சாலை வசதி இல்லாத குக்கிராமங்களுக்கு அனைத்துப் பருவகாலங்களிலும் பயன்படுத்தத் தக்க வகையில் சாலை இணைப்பு வசதியினை ஏற்படுத்தித் தருவதற்காக 2000–ம் ஆண்டில் மத்திய அரசால் தொடங்கப்பட்டது. 2015–16–ம் ஆண்டு முதல் பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம் 60% மத்திய அரசு நிதி மற்றும் 40% மாநில அரசு நிதி பங்களிப்பின் அடிப்படையில் செயல்படுத்தப்படுகிறது.

### பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம் பகுதி I முதல் VII

பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம் பகுதி VII வரை (அதாவது 2000 முதல் 2008 வரை) மொத்தம் 4,946 சாலைப்பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 4.4**
**பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம்**
**பகுதி I முதல் VII வரை**

| வ. எண் | பகுதி | வருடம் | எண்ணிக்கை | நீளம் கி.மீ | மதிப்பு (ரூ. கோடியில்) |
|---|---|---|---|---|---|
| 1 | I | 2000-01 | 862 | 1,442.12 | 152.91 |
| 2 | II | 2001-02 | 444 | 795.09 | 114.27 |
| 3 | III | 2003-04 | 491 | 1,096.40 | 159.07 |
| 4 | IV | 2004-05 | 393 | 778.31 | 111.35 |
| 5 | V | 2005-06 | 365 | 799.59 | 170.84 |
| 6 | VI | 2006-07 | 810 | 2,049.02 | 459.82 |
| 7 | VII | 2007-08 | 1,581 | 3,010.32 | 853.72 |
| **மொத்தம்** | | | **4,946** | **9,970.85** | **2021.98** |

### பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம் பகுதி VIII முதல் X வரை (2012–13 முதல் 2016–17 வரை)

கடந்த 2012–13–ம் ஆண்டிற்குப் பிறகு, மொத்தம் 5,409.17 கி.மீ. நீளமுள்ள கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகள், இதர மாவட்ட சாலைகள் மற்றும் 73 பாலங்கள் ரூ.2241.81 கோடி மதிப்பீட்டில் மேம்பாடு செய்ய எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. இதில் ரூ.755.89 கோடி மாநில அரசின் பங்குத் தொகையும் அடங்கும்.

இதுமட்டுமல்லாது, இந்த சாலைகளின் 5 வருட தொடர் பராமரிப்பிற்கு ரூ.141.54 கோடி நிதியினை மாநில அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

கடந்த 6 ஆண்டுகளில், பிரதம மந்திரி கிராம சாலை திட்டத்தின் கீழ் எடுக்கப்பட்ட பணிகள் விவரம் கீழ்க்கண்டவாறு–

**அட்டவணை 4.5**

**கடந்த 6 ஆண்டுகளில் பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டத்தின் கீழ் எடுக்கப்பட்ட சாலைகள் மற்றும் பாலங்கள் விவரம்**

| வ. எண் | பகுதி | வருடம் | எண்ணிக்கை | நீளம் கி.மீ | மதிப்பு (ரூ. கோடியில்) |
|---|---|---|---|---|---|
| 1 | VIII | 2012-13 | 1,340 | 3,090.90 | 1,128.74 |
| 2 | IX | 2014-15 | 405 | 951.47 | 354.63 |
| 3 | X | 2016-17 | 605 | 1,366.80 | 758.44 |
| **மொத்தம்** | | | **2,350** | **5,409.17** | **2,241.81** |

### பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம் II

மத்திய அரசு, பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம்–II-ஐ 2013ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தி, விரிவான வழிகாட்டி நெறிமுறைகளை வெளியிட்டுள்ளது. பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம்–II, தற்போதுள்ள ஊரகச் சாலைகள் தொகுப்பினை வலுப்படுத்துவதன் வாயிலாக, பொதுமக்கள், சரக்கு மற்றும் சேவைகளுக்கான போக்குவரத்து வசதி அளிப்பதில் ஒட்டுமொத்த செயல்திறனை மேம்படுத்த வழிவகுக்கிறது. பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம்–II–ன் குறிக்கோள், முக்கிய

வழித்தடங்கள் (Through Routes) மற்றும் பிரதான ஊரக இணைப்புகள் (Major Rural Links) ஆகியவற்றினை, அவற்றின் பயன்பாட்டின் அடிப்படையிலும், ஊரகச் சந்தைகள் மற்றும் ஊரக மையங்களின் வளர்ச்சியில் அவை ஆற்றும் பங்கின் அடிப்படையிலும் மேம்பாடு செய்ய எடுத்துக் கொள்வதே ஆகும்.

பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம்–II–ன் வழிகாட்டி நெறிமுறைகளின்படி, பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம்–I–ல் இணைப்புச் சாலைகள் 100%-மும் மற்றும் சாலை மேம்பாடு பணிகள் 75%-மும் மேற்கொண்ட மாநிலங்கள் பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம்–II–ற்கு தகுதி பெறுகின்றன. மேற்குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளை பூர்த்தி செய்ததன் காரணமாக தமிழ்நாடு பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம்–II–ன்கீழ் சாலைப் பணிகள் மேற்கொள்ள தகுதி பெற்றுள்ளது.

பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம்–II–ன் வழிகாட்டி நெறிமுறைகளின் படி, இத்திட்டத்தின் கீழ் முன்மொழிவுகள் 2011–ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட மாவட்ட ஊரகச் சாலைகள் திட்டத்தின் (DRRP) மூலமாகவே மேற்கொள்ளவேண்டும்.

அதற்கிணங்க, 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, மாவட்ட ஊரகச் சாலைகள் (DRRP) திட்டம், விரிவான மேம்பாடு மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட

முன்னுரிமைப் பட்டியல் (CUCPL) ஆகியவற்றை, தமிழ்நாடு அரசு, தயாரித்துள்ளது. இந்த DRRP மற்றும் CUCPL-க்கு மாநில அளவிலான நிலைக்குழுவினால் (SLSC) 13.3.2017ல் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இதனடிப்படையில், தமிழ்நாடு ஊரகச் சாலைகள் மேம்பாடு மற்றும் பாலங்கள் கட்டும் பணிகளுக்கு பிரேரணை மத்திய அரசிற்கு சமர்ப்பித்துள்ளது.

### 4.5. தூய்மை பாரத இயக்கம் ( ஊரகம்)

சுகாதாரம் மற்றும் சுத்தமான சுற்றுச் சூழல் ஆகியவை வளர்ச்சிக்கு உதவும் முக்கிய குறியீடாக கருதப்படுவதால், முழு சுகாதார திட்டம் 1999ம் ஆண்டு அறிமுகம் செய்யப்பட்டது. 2012க்குள் அனைத்து வீடுகளுக்கும் தனிநபர் இல்லக் கழிப்பறை வசதிகளை ஏற்படுத்த வேண்டும் என்ற குறிக்கோளினை அடைய இத்திட்டம் 2004க்குள் அனைத்து மாவட்டங்களுக்கும் படிப்படியாக விரிவுபடுத்தப்பட்டது.

இத்திட்டமானது, 1.4.2012 முதல், "நிர்மல் பாரத் அபியான்" என பெயர் மாற்றம் செய்யப்பட்டு மத்திய அரசு புதிய வழிகாட்டு நெறிமுறைகளை வெளியிடப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் தனிநபர் இல்லக் கழிப்பறைகள் கட்டுவதற்காக வழங்கப்படும் ஊக்கத் தொகை, வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள குடும்பங்கள் மட்டுமல்லாமல் வறுமைக்கோட்டிற்கு மேலுள்ள குடும்பங்களில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர், சிறு மற்றும் குறு

விவசாயிகள், வீடு உள்ள ஆனால் நிலமற்ற விவசாய உழைப்பாளிகள், மாற்றுத் திறனாளிகள் மற்றும் பெண்கள் தலைமையில் செயல்படும் குடும்பங்களுக்கு மட்டும் விரிவுபடுத்தப்பட்டது.

மகாத்மா காந்தியடிகளின் 150–வது பிறந்த நாளில் அவருக்குப் பொருத்தமான அஞ்சலி செய்யும் வகையில் மத்திய அரசால் 2014ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 2ம் நாள் முதல், "தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்)" தொடங்கப்பட்டு, அனைவருக்குமான சுகாதார வசதிகள் முழுமையாக அடைவதன் மூலம் 2019 ஆம் ஆண்டிற்குள்ளாக தூய்மை பாரதம் என்ற நிலையை எய்தும் வகையில் அனைத்து முயற்சிகளும் முடுக்கிவிடப்பட்டது.

**திட்டத்தின் நோக்கங்கள்**

**தூய்மை பாரத இயக்கத்தின் (ஊரகம்) முக்கிய நோக்கங்கள் பின்வருமாறு:**

அ) திறந்த வெளியில் மலம் கழித்தலை ஒழித்து, ஊரகப்பகுதிகளில் தூய்மை மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்தி, பொதுவான வாழ்க்கைத் தரத்தினை முன்னேற்றம் அடைய செய்தல்.

ஆ) 2.10.2019க்குள் தூய்மை பாரதம் என்ற இலக்கினை எய்த, ஊரகப் பகுதிகளில் முழுஅளவிலான சுகாதார செயல்பாடுகளை முடுக்கி விடுதல்.

இ) சுகாதார கல்வி மற்றும் விழிப்புணர்வு மூலம் ஊராட்சி அமைப்புகள் மற்றும் சமூகங்களுக்கிடையே ஆர்வத்தை தூண்டி, சுகாதார வசதிகள் மற்றும் நிலையான சுகாதாரப் பழக்க வழக்கங்களைக் கடைப்பிடித்திட செய்தல். நிலையான சுகாதாரம் மற்றும் சுற்றுச்சூழலுக்கு பாதுகாப்பான வகையில், சிக்கனமான மற்றும் பொருத்தமான தொழில்நுட்பத்தை ஊக்குவித்தல்.

ஈ) ஊரகப் பகுதியில் ஒட்டுமொத்த சுகாதாரத்தினை ஏற்படுத்த அறிவியல் பூர்வமான திட மற்றும் திரவக்கழிவு மேலாண்மை முறைகளை, தேவையான இடங்களில் சமூகத்தால் நிர்வகிக்கப்படும் வகையில் ஏற்படுத்துதல்.

**தூய்மை பாரத இயக்கத்தின் (ஊரகம்) கூறுகள்:**

தனிநபர் இல்லக் கழிப்பறை, சமூக சுகாதார வளாகம், திட மற்றும் திரவக் கழிவு மேலாண்மைத் திட்டம் ஆகியவை தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்) திட்டத்தின் முக்கிய கூறுகளாகும்.

**அ) தனி நபர் இல்லக் கழிப்பறை**

முறையாக முடிக்கப்பட்ட தனிநபர் இல்ல சுகாதார கழிப்பறையானது, அடித்தள கட்டுமானம், மேல்தளக் கட்டுமானம் மற்றும் தண்ணீர் வசதி ஆகியவற்றை உள்ளடக்கியதாகும். அனைத்து ஊரக குடும்பங்களும் கழிப்பறை வசதி பெறுவதை உறுதி செய்வதே இவ்வியக்கத்தின் நோக்கமாகும்.

தூய்மை பாரத இயக்கத்தின் (ஊரகம்) கீழ், வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள குடும்பங்கள் மற்றும் அடையாளம் காணப்பட்ட வறுமைக் கோட்டிற்கு மேல் உள்ள குடும்பங்களுக்கு தனி நபர் இல்லக்கழிப்பறை கட்ட ரூ. 12,000 ஊக்கத் தொகையாக வழங்கப்படுகிறது. இந்த தொகை 2015–16 ஆண்டு முதல் மத்திய மற்றும் மாநில அரசுகளின் பங்குத் தொகையினை 60:40 என்ற விகிதத்தில் அதாவது மத்திய அரசு ரூ. 7,200 மற்றும் மாநில அரசு ரூ. 4,800 ஆக மாற்றியமைத்துள்ளது.

2013–14 முதல் 2016–17ம் ஆண்டு வரை, 27.48 இலட்சம் தனிநபர் இல்லக் கழிப்பறைகள் கட்டப்பட்டுள்ளன. இத்திட்டம் 2017–18ம் ஆண்டில், தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

**மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழும் தனிநபர் இல்லக் கழிப்பறைகள் கட்டுதல்**

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழும், தனிநபர் இல்லக் கழிப்பறைப் பணிகள், 2017–18ம் ஆண்டில் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

**(ஆ) திட மற்றும் திரவக் கழிவு மேலாண்மை**

திட மற்றும் திரவ கழிவுக் மேலாண்மை இத்திட்டத்தின் ஒரு கூறாகும். தூய்மை பாரத இயக்கத்தின் (ஊரகம்) கீழ், திட மற்றும் திரவக் கழிவு மேலாண்மைத் திட்ட செயலாக்கத்திற்கான மொத்த உதவித் தொகை ஒவ்வொரு

கிராம ஊராட்சியின் மொத்த தனிநபர் இல்லங்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப கணக்கிடப்படும்.

**(இ) சமூக சுகாதார வளாகங்கள்**

போதிய எண்ணிக்கையிலான கழிப்பறைகள், குளியலறைகள், துணி துவைக்கும் மேடைகள், கை கழுவுவதற்கான வசதி மற்றும் இதர வசதிகளை உள்ளடக்கிய சமூக சுகாதார வளாகங்கள் கிராம மக்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளக் கூடிய மற்றும் எளிதில் அணுகக் கூடிய இடத்தில் இத்திட்டத்தின் கீழ் அமைக்கலாம். ஒவ்வொரு சமூக சுகாதார வளாகம் அமைப்பதற்கு நிதி உதவி அதிகபட்சமாக ரூ. 2 லட்சம் வரை, மத்திய அரசு, மாநில அரசு மற்றும் சமுதாயப் பங்குத் தொகை **60:30:10** என்ற விகிதத்தில் மேற்கொள்ளப்படுகிறது.

## 4.6. தேசிய ரூர்பன் இயக்கம் (National Rurban Mission)

கிராமத் தொகுப்புகளை உருவாக்கி, அதில் பொருளாதார, சமூக மற்றும் அடிப்படை வசதிகளையும், நகர்புறங்களுக்கு இணையான வளர்ச்சியையும் ஏற்படுத்த **“தேசிய ரூர்பன் இயக்கம்”** (National Rurban Mission) என்ற திட்டம் மத்திய அரசால் **16.09.2015** அன்று துவக்கப்பட்டது. இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் கிராமங்களில் பொருளாதார வளர்ச்சியை ஊக்கப்படுத்தி சமூக, பொருளாதார உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்கி

சரியான திட்ட வடிவமைப்புடன் கூடிய **“ரூர்பன் தொகுப்பினை”** உருவாக்குவதாகும்.

**ரூர்பன் தொகுப்பினை தேர்வு செய்வதற்கான வழிமுறைகள்**

தேசிய ரூர்பன் இயக்க வழிக்காட்டுதலின்படி **“ரூர்பன் தொகுப்பு”** என்பது பூகோள அடிப்படையில் தொடர்ச்சியான நிலப்பரப்பில் உள்ள ஊராட்சிகளில் **25000** முதல் **50000** வரை மக்கள் தொகை கொண்ட ஊராட்சிகளின் தொகுப்பாகும்.

தேசிய ரூர்பன் இயக்க திட்டத்தின்படி பழங்குடியினர் தொகுப்பு மற்றும் பழங்குடியினர் அல்லாத தொகுப்பு என இரண்டு பிரிவுகளில் ரூர்பன் தொகுப்புகள் உள்ளன. தமிழ் நாட்டிற்கு பழங்குடியினர் அல்லாத தொகுப்புகளை தேர்வு செய்ய புதுடெல்லி, ஊரக வளர்ச்சி அமைச்சகத்தால் கீழ்க்கண்ட அளவுகோலின் படி ரூர்பன் தொகுப்புகள் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| • 10 ஆண்டுகளில் ஊரக மக்கள் தொகை வளர்ச்சி | **முக்கியத்துவம்** |
| • நிலங்களின் மதிப்பு உயர்வு<br>• 10 ஆண்டுகளில் விவசாயம் சாராத பணிகளில் மக்களின் பங்களிப்பு<br>• நடுநிலை பள்ளிகளில் பெண்களின் சேர்க்கை சதவீதம் | 80 % |
| • பிரதம மந்திரி ஜன்தன் யோஜனா திட்டத்தின் கீழ் (PMJDY) வங்கி கணக்குகள் துவங்கப்பட்டுள்ள குடும்பங்களின் சதவீதம்<br>• தூய்மை பாரத இயக்கம் (கிராமின்) திட்டத்தின் செயல்பாட்டு சாதனை | 20 % |

அதன்படி மத்திய அரசு முதற்கட்டமாக (Phase - I) 5 தொகுப்புகளை (Cluster) உருவாக்கிட அனுமதி வழங்கி உள்ளது. அவைகள் திருவள்ளூர் மாவட்டம் (குத்தம்பாக்கம்), சிவகங்கை மாவட்டம் (வாணியன்குடி), திருப்பூர் மாவட்டம் (வேலாயுதம்பாளையம்), கோயம்புத்தூர் மாவட்டம் (மதுக்கரை) மற்றும் திருநெல்வேலி மாவட்டம் (சுத்தமல்லி) ஆகும்.

மேலும் தேசிய ரூர்பன் இயக்கம் இரண்டாம் கட்டமாக, தமிழ்நாட்டிற்கு காஞ்சிபுரம் மாவட்டம் (சிங்கபெருமாள் கோவில்), மதுரை மாவட்டம் (கோவில்பாப்பாக்குடி) மற்றும் தஞ்சாவூர் மாவட்டம் (திருமலை சமுத்திரம்) என மூன்று தொகுப்புகளுக்கு மத்திய அரசால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

**மாநில அளவிலான அதிகாரக் குழு அமைத்தல்**

மத்திய அரசாங்கத்தின் அறிவுறுத்தலின்படி மாநில அளவிலான அதிகாரக் குழு அமைக்கப்பட்டு அரசாணை எண் 14 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (ம.அ.தி –2) துறை நாள் 30.01.2016 அன்று வெளியிடப்பட்டுள்ளது.

**மாவட்ட அளவிலான குழு அமைத்தல்**

ரூர்பன் இயக்க திட்ட செயல்பாடுகளை செயல்படுத்த மாவட்ட திட்ட நிர்வாக அலகு மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவரை தலைவராக கொண்ட மாவட்ட அளவிலான குழு அமைக்கப்பட்டுள்ளது. மாவட்ட அளவிலான குழு திருவள்ளூர், சிவகங்கை, திருப்பூர்,

கோயம்புத்தூர் மற்றும் திருநெல்வேலி தேசிய ரூர்பன் இயக்க மாவட்டங்களில் அமைக்கப்பட்டுள்ளது. இந்தக் குழுவானது, திட்ட அலுவலர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மற்றும் முக்கிய மாவட்ட அளவிலான அலுவலர்களை உள்ளடக்கியதாகும்.

**ஒருங்கிணைந்த தொகுப்பு செயல் திட்டம்**

இத்திட்டத்திற்கான இடைநிரவல் நிரப்பு நிதி (Critical Gap Fund) மற்றும் மத்திய, மாநில அரசு திட்டங்களின் நிதியினை ஒருமுகப்படுத்தி (Convergence) ஒருங்கிணைந்த தொகுப்பு செயல்திட்டத்திற்கு (ICAP) திருவள்ளூர், சிவகங்கை, திருப்பூர், கோயம்புத்தூர் மற்றும் திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர்களால் ஒப்புதளிக்கப்பட்டுள்ளது. **27.09.2016** ம் அன்று நடைபெற்ற தேசிய அளவிலான அதிகாரக் குழு கூட்டத்தில் **5** ஒருங்கிணைந்த தொகுப்பு செயல் திட்டத்திற்கு மத்திய அரசால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும், மாநில அளவிலான அதிகாரக் குழு, ஒருங்கிணைந்த தொகுப்பு செயல் திட்டம் மற்றும் விரிவான திட்ட அறிக்கை ஆகியவற்றிற்கு அனுமதி வழங்கியுள்ளது.

**நிதி செயல்பாடு**

ஒரு தொகுப்பிற்கு தேவையான நிதிகள், மாநில மற்றும் மத்திய அரசால் செயல்படுத்தப்படும் திட்டங்களின் மூலம் ஒருங்கிணைப்பு செய்யப்பட்டு பணிகள் மேற்கொள்ளவும், மீதமுள்ள பணிகளை நிறைவேற்றிட

இடைநிரவல் நிரப்பு நிதியினை மத்திய அரசு வழங்குகிறது. இடைநிரவல் நிரப்பு நிதி திட்ட மதிப்பீடு செலவில் 30 சதவீதம் அல்லது ரூபாய் 30 கோடி இவற்றில் எது குறைவோ அத்தொகை ஒவ்வொரு தொகுப்புகளுக்கும் வழங்கப்படுகிறது.

தேசிய ரூர்பன் இயக்கத்தின் இடைநிரவல் நிரப்பு நிதி (Critical Gap Fund) பகிர்வானது மத்திய அரசின் பங்கு 60 சதவீதம் மற்றும் மாநில அரசின் பங்கு 40 சதவீதம் என்ற விகிதாச்சார அடிப்படையில் செயல்படுத்தப்படுகிறது. முதற்கட்டத்தின் கீழ் அனுமதிக்கப்பட்ட 5 தொகுப்புகளுக்கு ஒருங்கிணைந்த தொகுப்பு செயல்திட்டம் தயாரிக்க ரூபாய் 1.75 கோடியும், நிலை 2 ன் கீழ் அனுமதிக்கப்பட்ட மூன்று தொகுப்புகளுக்கு ரூபாய் 1.05 கோடியும் ஒரு தொகுப்பிற்கு ரூபாய் 35 இலட்சம் வீதம் மத்திய அரசால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேலும் தேசிய ரூர்பன் இயக்கத் திட்ட செயல்பாட்டு ஆண்டான மூன்றாண்டுகளுக்கு (2016–2017, 2017–2018 மற்றும் 2018–2019) கீழ்க்கண்டவாறு நிதி விடுவிக்கப்படும்.

(ரூபாய் கோடியில்)

| வ . எண் | நிதி ஆண்டு | மத்திய அரசு பங்கு (ஒரு தொகுப்பிற்கு) | மாநில அரசு பங்கு (ஒரு தொகுப்பிற்கு) | மொத்தம் (ஒரு தொகுப்பிற்கு) | மொத்தம் (ஐந்து தொகுப்பிற்கு) |
|---|---|---|---|---|---|
| 1. | 2016– 2017 | 5.40 | 3.60 | 9.00 | 45.00 |
| 2. | 2017–2018 | 5.40 | 3.60 | 9.00 | 45.00 |
| 3. | 2018–2019 | 7.20 | 4.80 | 12.00 | 60.00 |
| **மொத்தம்** | | **18.00** | **12.00** | **30.00** | **150.00** |

2016–2017 ம் ஆண்டிற்கு இடைநிரவல் நிரப்பு நிதியின் கீழ் மத்திய அரசின் 60 சதவீதம் பங்குதொகையாக ரூபாய் 27 கோடி மாநில அரசுக்கு விடுவிக்கப்பட்டுள்ளது. மாநில அரசின் 40 சதவீத பங்குதொகையான ரூபாய் 18 கோடி மற்றும் மத்திய அரசின் நிதி ரூ. 27 கோடியுடன் ஆக கூடுதலாக ரூ.45 கோடி விடுவிக்கப்பட்டுள்ளது.

மத்திய, மாநில அரசு திட்டங்களின் ஒருங்கிணைப்பு நிதி மற்றும் இடைநிரவல் நிரப்பு நிதியின் மூலம் மேற்கொள்ளப்படும் பணிகள், பொருளாதார மேம்பாட்டுடன் கூடிய திறன் வளர்ப்பு பயிற்சி, வேளாண்மை தொடர்பான திட்டப்பணிகள், கல்வி, சுகாதாரம், குடிநீர், திட மற்றும் திரவ கழிவு மேலாண்மை, கிராம தெருக்கள் மற்றும் வடிகால், தெரு விளக்கு, சாலை வசதிகள், போக்குவரத்து, சமையல் எரிவாயு இணைப்பு, டிஜிட்டல் எழுத்தறிவு மற்றும் மக்கள் சேவை மையம் போன்ற பணிகளுக்கு பயன்படுத்தப்படுகின்றது.

## 4.7. நாடாளுமன்ற உறுப்பினர் மாதிரி கிராமத் திட்டம்

நாடாளுமன்ற உறுப்பினர் மாதிரி கிராமத் திட்டம் 11.10.2014ல் மத்திய அரசால் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின் வழிகாட்டு நெறிமுறைகள் www.saanjhi.gov.in வலைதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

தேர்வு செய்யப்படும் கிராமங்களில் அனைத்து துறைகளின் திட்டங்களையும் ஒருங்கிணைத்து, ஒருமுகப்படுத்தி, மாதிரி கிராமங்களில் செயல்படுத்தி

அனைத்து மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். கிராம ஊராட்சியே இத்திட்ட செயலாக்கத்தின் அடிப்படை அலகாகும். சமவெளிப்பகுதிகளில் மக்கள் தொகை 3000 முதல் 5000 வரையும், மலைப்பகுதி மற்றும் பழங்குடி கிராமங்கள் எனில் மக்கள் தொகை 1000 முதல் 3000 வரையும் உள்ள கிராம ஊராட்சியை ஒவ்வொரு நாடாளுமன்ற உறுப்பினரும் தேர்ந்தெடுக்க வேண்டும். மாவட்டங்களில் இந்த அலகு அளவுக்கு மக்கள் தொகை கிடைக்கவில்லை என்றால் ஏறக்குறைய இதே அளவுக்கு மக்கள் தொகை உள்ள கிராம ஊராட்சிகளை தேர்வு செய்யலாம். நாடாளுமன்ற உறுப்பினர் தனது (அ) தனது மனைவியின் / கணவனின் சொந்த கிராமத்தை தவிர்த்து இதர கிராமங்களிலிருந்து மாதிரி கிராமமாக உருவாக்க வேண்டிய கிராம ஊராட்சியை தங்கள் விருப்பப்படி கண்டறியலாம். மக்களவை உறுப்பினர் தனது தொகுதிக்குள்ளும், மாநிலங்களவை உறுப்பினர் தனது மாநிலத்திற்குள்ளும், நியமன உறுப்பினர் இந்திய அளவில் எந்த ஒரு மாநிலத்திலும், ஒரு கிராமத்தை தேர்ந்தெடுக்கலாம். நகர்ப்புற தொகுதியை பொறுத்தவரையில் கிராம ஊராட்சிகள் இல்லையெனில் சம்பந்தப்பட்ட மக்களவை உறுப்பினர் அருகிலுள்ள ஊரகத் தொகுதியிலிருந்து கிராமத்தை தேர்ந்தெடுக்க வேண்டும். நாடாளுமன்ற உறுப்பினர் மாதிரி கிராமமாக உருவாக்க வேண்டிய ஒரு கிராம ஊராட்சியை உடனடியாகவும் மற்ற இரண்டு கிராம ஊராட்சிகளை பின்னரும் தெரிவு செய்ய

வேண்டும். முக்கியமாக, 2019 மார்ச் மாதத்திற்குள் மூன்று மாதிரி கிராமங்களை உருவாக்க வேண்டும், அதில் ஒன்று 2016க்குள் உருவாக்கப்படுதல் வேண்டும். இவ்வாறாக 2024–க்குள் 5 மாதிரி கிராம ஊராட்சிகளை (ஆண்டிற்கு ஒன்று வீதம்) தேர்வு செய்து மேம்படுத்த வேண்டும்.

அரசு தலைமை செயலாளரின் தலைமையிலான உறுப்பினர்கள் அடங்கிய மாநில அளவிலான அதிகாரம் அளிக்கப்பட்ட குழு அரசாணை நிலை எண்.23, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (ம.அ.தி 2) துறை நாள் 13.02.2015ன்படி அமைக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ், தேர்ந்தெடுக்கப்பட்ட மாதிரி கிராமங்களில் பல்வேறு துறைகளின் ஏற்கனவே நடைமுறையில் உள்ள அரசுத் திட்டங்களை ஒருங்கிணைத்து செயல்படுத்த தெரிவிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு என தனியாக நிதி ஒதுக்கீடு எதுவும் செய்யப்படவில்லை. மேலும், புதிய உட்கட்டமைப்பு மற்றும் கட்டுமானம் தொடர்புடைய திட்டங்களும் அனுமதிக்கப்படவில்லை. அனைத்து வளங்களும் ஒரே இலக்கினை நோக்கி ஒருங்கிணைந்த வகையில் அதிகபட்ச பயன்களை தரும் வகையில் உபயோகிக்கப்பட வேண்டும். மத்திய அரசால் செயல்படுத்தப்படும் திட்டங்களில் தொடர்புடைய அமைச்சகம், மத்திய அரசுத் துறைகள் / மத்திய அரசு நிதிப் பங்களிப்போடு செயல்படுத்தப்படும் திட்டங்களில் மாதிரி கிராங்களுக்கு முன்னுரிமை அளிக்கும் வகையில் வழிகாட்டு

நெறிமுறைகளில் தகுந்த மாற்றங்கள் ஏற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

இத்திட்டத்தில் அதிகபட்ச பலன்களை அடைய மாநில அரசால் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்களை ஒருங்கிணைத்து செயல்படுத்த வேண்டும்.

## 4.8. தேசிய கரிமவாயு மற்றும் உர மேலாண்மைத் திட்டம் (NBMMP)

மத்திய அரசினால் செயல்படுத்தப்படும் இத்திட்டத்தின் நோக்கம், இயற்கை கழிவுகளை பயன்படுத்தி, புதுப்பிக்கவல்ல எரிசக்தியாக மாற்றம் செய்து திறம்பட பயன்படுத்துவதே ஆகும்.

**இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்கள்**

i) ஊரக மற்றும் நகர்ப்புற பகுதிகளில் உள்ள இல்லங்களில் இயற்கை கழிவுகளை மாசற்ற எரிபொருளை உருவாக்கிட, முக்கியமாக சமையல் செய்வதற்கு கரிமவாயு எரி கலன்கள் அமைத்தல்.

ii) ஊரக பகுதிகளில் உள்ள மகளிர், காடுகளுக்கு சென்று எதிர்கொள்ளும் கடினமான சுமையை குறைத்து சமூக நன்மைகளுக்கு முக்கியத்துவம் அளித்தல்.

iii) கிராமப் புற பகுதிகளில் சுகாதாரத்தை மேம்படுத்திட கழிவறைகளுடன் கூடிய கரிம வாயு கலன்கள் அமைத்தல்.

iv) மேம்படுத்தப்பட்ட உயிர் செரிமானம் மூலம் (திட திரவ நிலையில் மற்றும் உலர்த்தப்பட்ட) இரசாயன உரங்களை செறிவூட்டல் / அல்லது அவற்றுக்கு இணையாக இரசாயன உரங்களைப் பயன்படுத்தும் அளவினை குறைத்தல் / உயிர் செரிமானக் குழம்பினை செறிவூட்டும் அலகான மண்புழு உர அலகுகளுடன் இணைத்தல்.

v) திட்ட குழுவின் ஒருங்கிணைந்த ஆற்றல் கொள்கை அறிக்கையில் தெரிவித்துள்ளவாறு சமைப்பதற்கான உயிர்சக்தி ஆற்றல் தேவைகளை பூர்த்தி செய்தல்.

இத்திட்டம் 100 விழுக்காடு மத்திய அரசு மானியத்துடன் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

**அனுமதிக்கப்படும் மானிய விவரம் பின்வருமாறு**

| வ. எண் | பிரிவுகள் | தேசிய கரிமவாயு மற்றும் உர மேலாண்மைத் திட்டத்தின் கீழ் சமையல் எரிவாயு கலன்களின் மானிய விவரங்கள் ( 1 முதல் 6 கன அடி வரை) | |
|---|---|---|---|
| | | 1 கன அடி (ரூ.) | 2–6 கன அடி (ரூ.) |
| 1 | பொது பிரிவு | 5,500 | 9,000 |
| 2 | ஆதிதிராவிடர் / பழங்குடியினர் | 7,000 | 11,000 |
| 3 | மலைப்பகுதி | 7,000 | 11,000 |
| 4 | கழிவறைகளுடன் கூடிய கரிம வாயு கலன்களுக்கு கூடுதல் மானியம் | ஒரு கலனுக்கு ரூ.1,200 வீதம் | |
| 5 | பணி கட்டணம் (Turn key Cost) | ஒரு கலனுக்கு ரூ.1,500 வீதம் | |

**2016 –17**ம் நிதி ஆண்டில் **300** கரிமவாயுக் கலன்கள் அமைத்திட செயல் இலக்காக நிர்ணயிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றது.

# 5. மனித வள மேம்பாடு

## 5. மனித வள மேம்பாடு

### 5.1. அரசிதழ் பதிவு பெற்ற அலுவலர்கள் பணியமைப்பு

ஊரக கட்டமைப்பு, அடிப்படை வசதிகள் பராமரிப்பு, இணைப்பு சாலைகள், சுகாதாரம், வீட்டு வசதி மற்றும் வாழ்வாதாரத்தை உருவாக்குதல், உள்ளாட்சி நிர்வாகம் ஆகியன ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் பொறுப்பாகும். இப்பணிகள் அனைத்தும் இத்துறை அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் மூலம் திட்டமிடப்பட்டு, செயல்படுத்தப்பட்டு கண்காணிக்கப்படுகிறது.

**அட்டவணை 5.1.**
**வகை வாரியான பணியாளர்கள் விவரம்**

அரசு பணியாளர்கள் – அரசிதழ் பதிவு பெற்றவர்கள்

| வ. எண் | பதவியின் பெயர் | அனுமதிக்கப்பட்ட பணியாளர்கள் எண்ணிக்கை | ஊதிய விகிதம் |
|---|---|---|---|
| 1 | கூடுதல் ஊரக வளர்ச்சி இயக்குநர் | 19 | ரூ.37400–67000+8800 தர ஊதியம் |
| 2 | இணை இயக்குநர் | 89 | ரூ.15600–39100+7600 தர ஊதியம் |
| 3 | உதவி இயக்குநர் | 406 | ரூ.15600–39100+5400 தர ஊதியம் |
| 4 | வட்டார வளர்ச்சி அலுவலர் | 1,036 | ரூ.9300–34800+5100 தர ஊதியம் + 1000 சிறப்பு படி |
| மொத்தம் | | 1,550 | |

அரசு போதுமான பணியிடங்களை அனுமதித்து உத்தரவிட்டும், பணியாளர்களுக்கு கிடைக்க வேண்டிய பலன்கள் வழங்கப்படுவதையும் உறுதி செய்கிறது.

1. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில், கூடுதல் இயக்குநர் நிலையில் 19 அலுவலர்கள்

பணிபுரிகின்றனர். அவர்களில் 3 கூடுதல் இயக்குநர்கள் பிற துறைகளில் மாற்றுப் பணியில் பணிபுரிகின்றனர்.

2. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறைJ¡ நிர்வாக கட்டுப்பாட்டில் இணை இயக்குநர் நிலையில் 89 அலுவலர்கள் பணிபுரிகின்றனர். அவர்களில் 14 இணை இயக்குநர்கள் பிற துறைகளில் மாற்றுப் பணியில் பணிபுரிகின்றனர்.
3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில், உதவி இயக்குநர் நிலையில் 406 அலுவலர்கள் பணிபுரிகின்றனர். அவர்களில் 2 உதவி இயக்குநர்கள் பிற துறைகளில் மாற்றுப் பணியில் பணிபுரிகின்றனர்.

விழுப்புரம், திருவண்ணாமலை, வேலூர், காஞ்சிபுரம் மற்றும் கடலூர் மாவட்டங்களில் 600,கும் அதிகமான ஊராட்சிகள் உள்ளதால் கூடுதலாக உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) மற்றும் உதவி இயக்குநர் (தணிக்கை) பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டு நிரப்பப்பட்டுள்ளது

## 5.2. பொறியியல் பணியமைப்பு

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பொறியியல் பிரிவில் மொத்தம் 5,280 பொறியியல் பணியாளர்கள் பணியாற்றி வருகின்றனர்.

## அட்டவணை 5.2.

## வகைவாரியாக பொறியியல் பணியாளர்கள் விவரம்

| வ. எண். | பதவியின் பெயர் | அனுமதிக்கப்பட்ட பணியிடங்கள் | ஊதிய விகிதம் |
|---|---|---|---|
| 1. | கண்காணிப்பு பொறியாளர் | 2 | ரூ.37400-67000+ தர ஊதியம் ரூ. 8700 |
| 2. | செயற்பொறியாளர் | 45 | ரூ.15600-39100+ தர ஊதியம் ரூ.6600 |
| 3. | உதவி செயற்பொறியாளர் | 189 | ரூ.15600-39100+ தர ஊதியம் ரூ.5400 |
| 4. | உதவிப் பொறியாளர் | 947 | ரூ.9300-34800+ தர ஊதியம் ரூ.5100 |
| 5. | முதுநிலை வரைதொழில் அலுவலர் | 34 | ரூ.9300-34800+ தர ஊதியம் ரூ.5100 |
| 6. | இளநிலைப் பொறியாளர் | 311 | ரூ.9300-34800+ தர ஊதியம் ரூ.4400 |
| 7. | பணிப்பார்வையாளர் / இளநிலை வரைதொழில் அலுவலர் | 2603 | ரூ.9300-34800+ தர ஊதியம் ரூ.4200 |
| 8. | சாலை ஆய்வாளர் | 1149 | ரூ.5200-20200+ தர ஊதியம் ரூ.2400 |
| | **மொத்தம்** | **5,280** | |

- ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் **38** செயற்பொறியாளர்களும் இதர துறைகளில் **7** செயற்பொறியாளர்களும் பணிபுரிந்து வருகின்றனர்.
- ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் **178** உதவி செயற்பொறியாளர்களும், மாற்றுப்பணியில் இதர துறைகளில் **11** உதவி செயற்பொறியாளர்களும் பணிபுரிந்து வருகின்றனர்.

- தொழில்நுட்ப துறையில் பல்வேறு பிரிவுகளில் **947** உதவிப் பொறியாளர்களும், **311** இளநிலைப் பொறியாளர்களும், **34** முதுநிலை வரைதொழில் அலுவலர்களும், **2,603** பணிப்பார்வையாளர்கள் / இளநிலை வரைதொழில் அலுவலர்களும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் பணிபுரிந்து வருகின்றனர். மேலும், அரசாணை (நிலை) எண். 49 ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சித் துறை (இ3) நாள் **31.03.2015**ல் சாலை ஆய்வாளர் நிலை–2 மற்றும் சாலை ஆய்வாளர் நிலை–1 ஆகியவற்றை ஒருங்கிணைத்து சாலை ஆய்வாளர் என ஆணையிடப்பட்டு, **1,149** சாலை ஆய்வாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

## 5.3. முதுநிலை அலுவலர்களை பிற துறைக்கு மாற்றுப் பணியில் அனுப்புதல்

இத்துறையைச் சார்ந்த கூடுதல் இயக்குநர், இணை இயக்குநர், செயற்பொறியாளர், உதவி இயக்குநர் மற்றும் உதவி செயற்பொறியாளர் நிலையில் உள்ள முதுநிலை அலுவலர்களை சிறப்பு திட்டங்கள் நிறைவேற்றல் துறை, தமிழ்நாடு குடிநீர்வடிகால் வாரியம், மாநில திட்டக்குழு, கால்நடை பராமரிப்புத் துறை, பால்வளம் மற்றும் மீன்வளத் துறை, மின் வாரியம், தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை, மோனோ ரயில் திட்டம், தொழில்முனைவோர் மேம்பாட்டு நிறுவனம், மன்னார் வளைகுடா உயிர்க்கோளக் காப்பகம், சமூகநலம் மற்றும் சத்துணவுத் துறை, தமிழ்நாடு

ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (TAHDCO), தமிழ்நாடு கால்நடை மற்றும் விலங்கு அறிவியல் பல்கலைக் கழகம் (TANUVAS) தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கம் (ஆவின்), சென்னை பெருநகர வளர்ச்சி கழகம் (CMDA), பேரூராட்சிகள் இயக்ககம், மாநில நலவாழ்வு சங்கம் (TNHSP), தேசிய ஊரக சாலை மேம்பாட்டு முகமை (NRRDA) போன்ற துறைகளில் மாற்றுப் பணியில் பணிபுரிய உத்தரவிடப்பட்டுள்ளது. இத்தகைய பல்துறைப் பட்டறிவு, அலுவலர்களது அறிவாற்றல் மற்றும் அனுபவத்தைப் பெருக்கி, அவர்கள் உயர் பொறுப்புக்களை வகிக்க வழி வகுக்கிறது.

### 5.4 அரசிதழ் பதிவு பெறா பணியமைப்பு

அரசிதழ் பதிவு பெறா பணியமைப்பின் கீழ் துணை வட்டார வளர்ச்சி அலுவலர், உதவியாளர், இளநிலை உதவியாளர், சுருக்கெழுத்து தட்டச்சர், தட்டச்சர், பதிவுரு எழுத்தர், அலுவலக உதவியாளர், ஓட்டுநர், மற்றும் இதர அடிப்படை பணியாளர்களின் பணியமைப்பு கவனிக்கப்பட்டு வருகிறது. இவை மட்டுமின்றி, ஊராட்சி ஒன்றிய / ஊராட்சி பணியாளர்கள் நலன் சார்ந்த நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பபட்டு வருகிறது. அரசிதழ் பதிவு பெறா பணியமைப்பின் கீழ் வரும் பணியாளர்களின் வகை, அனுமதிக்கப்பட்ட பணியிடங்கள் மற்றும் அவற்றின் ஊதிய கட்டு விகிதம் கீழே அட்டவணையிடப்பட்டுள்ளது.

# அட்டவணை 5.3.

## I.வகைவாரியாக பணியாளர்களின் விபரம்

| வ. எண். | பதவியின் பெயர் | அனுமதிக்கப்பட்ட பணியிட எண்ணிக்கை | ஊதிய விகிதம் |
|---|---|---|---|
| **அ) அரசுப் பணியாளர்கள்** | | | |
| 1 | துணை வட்டார வளர்ச்சி அலுவலர் | 3938 | ரூ.9300–34800<br>தர ஊதியம் 4800 + தனி ஊதியம் 500/– |
| 2 | உதவியாளர் | 5563 | ரூ.5200–20200 +<br>தர ஊதியம் 2800/– |
| 3 | இளநிலை உதவியாளர் | 3137 | ரூ.5200–20200 +<br>தர ஊதியம் 2400/– |
| 4 | சுருக்கெழுத்து தட்டச்சர் | 182 | ரூ.5200–20200 +<br>தர ஊதியம் 2800/– |
| 5 | தட்டச்சர் | 1042 | ரூ.5200–20200 +<br>தர ஊதியம் 2400/– |
| 6 | ஓட்டுநர் | 899 | ரூ.5200–20200 +<br>தர ஊதியம் 2400/– |
| 7 | பதிவுரு எழுத்தர் | 137 | ரூ4800–10000 +<br>தர ஊதியம் 1400/– |
| 8 | அலுவலக உதவியாளர் | 716 | ரூ4800–10000 +<br>தர ஊதியம் 1300/– |
| 9 | இரவுக் காவலர் | 128 | ரூ4800–10000 +<br>தர ஊதியம் 1300/– |
| 10 | மசால்ஜி | 14 | ரூ4800–10000 +<br>தர ஊதியம் 1300/– |
| **உள்ளாட்சிப் பணியாளர்கள் விவரம்** | | | |
| **ஆ)ஊராட்சி ஒன்றியப் பணியாளர்கள்** | | | |
| 1 | ஓட்டுநர் | 770 | ரூ.5200–20200 +<br>தர ஊதியம் 2400/– |
| 2 | பதிவுரு எழுத்தர் | 387 | ரூ4800–10000 +<br>தர ஊதியம் 1400/– |
| 3 | அலுவலக உதவியாளர் | 1521 | ரூ4800–10000 +<br>தர ஊதியம் 1300/– |
| 4 | இரவுக் காவலர் | 377 | ரூ4800–10000 +<br>தர ஊதியம் 1300/– |
| 5 | மசால்ஜி | 9 | ரூ4800–10000 + தர ஊதியம் 1300/– |
| **இ)கிராம ஊராட்சிப் பணியாளர்கள்** | | | |
| 1 | ஊராட்சி செயலர் | 12,524 | ரூ.2500–5000 +<br>தர ஊதியம் 500/– + சிறப்புப்படி ரூ.500/– |
| 2 | துப்புரவு பணியாளர் | 25,155 | ரூ.1300–3000 +<br>தர ஊதியம் 300/–<br>(3 வருடம் பணி முடித்தவர்களுக்கு)<br>ரூ.2000/–தொகுப்பு ஊதியம் +<br>அகவிலைப்படி ரூ.40/– ஒரு அரையாண்டிற்கு) (மற்றவர்களுக்கு) |
| 3 | மேல்நிலை நீர்தேக்க தொட்டி இயக்குபவர் | 35,548 | ரூ.2000/– தொகுப்பு ஊதியம் –<br>அகவிலைப்படி ரூ.40/– ஒரு அரையாண்டிற்கு. |

**1) காலிப் பணியிடங்களை நிரப்புதல்**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் 2016–2017–ஆம் ஆண்டில், 161 இளநிலை உதவியாளர், 101 தட்டச்சர் மற்றும் 4 சுருக்கெழுத்து தட்டச்சர் ஆகிய காலிப்பணியிடங்கள் நேரடியாக நிரப்பப்பட்டுள்ளன. மேலும், அடிப்படை பணியிட நிலைகளில் ஏற்படும் காலிப்பணியிடங்கள், வேலைவாய்ப்பு அலுவலகம் மூலமாகவும், பத்திரிகை விளம்பரங்கள் மூலம் விளம்பரப்படுத்தியும் நேரடியாக நிரப்பப்பட்டுள்ளன. அலுவலக உதவியாளர் / பதிவறை எழுத்தர் / இரவுக் காவலர் மற்றும் ஊராட்சி செயலர்களுக்கு முறையே 10% மற்றும் 20% இட ஒதுக்கீட்டின் அடிப்படையில் இளநிலை உதவியாளர் நிலை பதவி உயர்வுகள் வழங்கப்பட்டு வருகிறது. இதில் 2016–17ம் ஆண்டில் அலுவலக உதவியாளர் / பதிவறை எழுத்தர் / இரவுக் காவலராக பணியாற்றிய 35 நபர்கள் 10% இட ஒதுக்கீட்டின் கீழும், 127 ஊராட்சி செயலர்கள் 20% இட ஒதுக்கீட்டின் கீழும் இளநிலை உதவியாளர்களாக பதவி உயர்வு பெற்றுள்ளனர்.

மேற்கண்ட பதவி உயர்வுகள் மட்டுமின்றி, 2011–12 முதல் 2016–17 வரை 1,236 துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் வட்டார வளர்ச்சி அலுவலர்களாகவும், 1,795 உதவியாளர்கள் துணை வட்டார வளர்ச்சி அலுவலர்களாகவும் மற்றும் 2,610 தட்டச்சர் / இளநிலை

உதவியாளர்கள் உதவியாளர்களாகவும் பதவி உயர்த்தப்பட்டுள்ளனர்.

**2) கருணை அடிப்படை பணி நியமனம்**

பணியிடைக்காலமான அரசுப் பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு, அவர்களின் தகுதியின் அடிப்படையில், அடிப்படை பணிகள் / இளநிலை உதவியாளர் / தட்டச்சர் ஆகிய அரசுப் பணியிடங்கள் வழங்கப்படுகிறது. பணியிடைக்காலமான அரசு பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு வழங்கப்படும் இச்சலுகை, 2016–17ம் ஆண்டு முதல் பணியிடை காலமாகும் ஊராட்சி செயலாளர்களின் வாரிசுதாரர்களுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது. கருணை அடிப்படை பணி நியமனத்தின்கீழ் 2011–12 முதல் 2016–17 ஆம் ஆண்டு வரை பணியிடைக்காலமான அனைத்து நிலை அரசு பணியாளர்களின், 649 வாரிசுதாரர்களுக்கு அரசுப் பணி வழங்கப்பட்டுள்ளது.

**3) கிராம ஊராட்சி செயலர்களுக்கான சலுகைகள்**

கிராம ஊராட்சி செயலர்களின் நலனை உறுதி செய்யும் பொருட்டு, சிறப்பு காலமுறை ஊதியம், சிறப்பு படிகள், நிரந்தர பயணபடி, வேலைவாய்ப்பு, பெண் ஊராட்சி செயலருக்கு மகப்பேறு விடுப்பு 180 நாள்கள் நீட்டிப்பு, சிறப்பு ஓய்வூதியம், பணியிடை காலமான ஊராட்சி செயலர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் பணி போன்ற

பல சலுகைகளை 2011 முதல் 2016 வரையான ஆண்டுகளில் அரசு பல ஆணைகள் மூலம் வழங்கியுள்ளது.

ஊராட்சி செயலர்களுக்கு ஓய்வு பெறும் போது வழங்கப்படும் ஒட்டு மொத்த தொகையான ரூ.50,000 ஐ ரூ.60,000 ஆக உயர்த்தியும், சிறப்பு ஓய்வூதிய தொகையான பிரதி மாதம் ரூ.1,000 ஐ ரூ.1,500 ஆக உயர்த்தியும் அரசாணை (நிலை) எண்.141, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (இ5) துறை, நாள்.25.11.2016 வெளியிடப்பட்டுள்ளது.

**4) மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர் பணியிடம் – ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறையியில் ஒரு மைல் கல்**

நிர்வாகத் திறனை மேம்படுத்துவதற்காகவும், துணை வட்டார வளர்ச்சி அலுவலர்களிடையே தொடர்புடைய மாவட்ட மற்றும் வட்டார அளவிலான வேலைப்பளுவை சரிசமமாக பகிர்ந்து வழங்குவதற்காகவும் துணை வட்டார வளர்ச்சி அலுவலர் பணியிடங்கள், தலைமையிடத்து துணை வட்டார வளர்ச்சி அலுவலர் மற்றும் மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர் என அரசால் மறுசீரமைக்கப்பட்டுள்ளது.

இதன் பயனாக, கிராம ஊராட்சியின் நிர்வாகத் திறனை மேம்படுத்திடவும், அரசின் பல திட்டங்களை செயல்படுத்திடவும், கிராம ஊராட்சிகளை மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திறம்பட வழிநடத்துகின்றனர். அதுமட்டுமல்லாமல், கிராம ஊராட்சி நிர்வாகத்திற்கும், ஊராட்சி ஒன்றிய நிர்வாகத்திற்கும் ஒரு

பாலமாக மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் செயல்படுகின்றனர்.

## 5) அரசு அலுவலர் பயிற்சி நிலையத்தில் அடிப்படை பயிற்சி

அலுவலக நடைமுறையினை அறிவது மற்றும் அவை தொடர்பான திறன்களை அடிப்படை பயிற்சி மூலம் பெறுவது ஆகியவை அரசுப் பணியில் முக்கியமானதாகும். பணியாளரின் அலுவலக ரீதியான முன்னேற்றத்திற்கும் அது தேவையாகும். எனவே, இப்பயிற்சியினை அடைவதற்கான பின்னடைவுகளை களைய சிறப்பு முயற்சிகள் எடுக்கப்பட்டதன் விளைவாக, 1200 பணியாளர்கள் அடிப்படைப் பயிற்சியினை தாமதமின்றி நிறைவு செய்துள்ளனர்.

## 6) கணினி உதவியாளர்களை இளநிலை உதவியாளர்களாக ஈர்த்துக் கொள்ளுதல்

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் வேலை வாய்ப்பகம் மூலம் பணியமர்த்தப்பட்டு, தொகுப்பூதியத்தில் பணிபுரிந்து 30.09.2015 தேதியன்று 5 ஆண்டுகள் பணிமுடித்த கணினி உதவியாளர்களை தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலமாக சிறப்புத் தேர்வு வைத்து முறையான காலமுறை ஊதியத்தில் இளநிலை உதவியாளர்களாக ஈர்த்துக் கொள்ள அரசாணை (நிலை) எண். 37, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்(பஅ5) துறை, நாள். 22.03.2017ன்படி உத்தரவிடப்பட்டுள்ளது.

## 5.5. திறன் மேம்பாடு

கிரேக்க தத்துவஞானி அரிஸ்டாட்டில் பொருத்தமாக கூறியவாறு, ‘‘சிறப்புடமை என்பது பயிற்சி மற்றும் பழக்க வழக்கங்களால் வென்றெடுக்கப்படும் கலையாகும். நாம் எதை மீண்டும் மீண்டும் செய்கிறோமோ அதுவாகவே ஆகிறோம்’’.

எந்த ஒரு செயலாக்கத்திற்கும், அல்லது திட்டத்திற்கும் பயிற்சியானது முதுகெலும்பு ஆகும். அரசின் திட்டங்கள் வெற்றி பெறுவது பெருமளவில் சிறப்பான **திறன் வளர்ப்பு மற்றும் அதனைச் சிறப்பாக செயல்படுத்துவது ஆகியவற்றை சார்ந்ததாகும்.** பயிற்சியாளர்களது திறன், அறிவு, செயல்திறன், திறன் வெளிப்பாடு மற்றும் செயல்பாட்டினை பயிற்சி மேம்படுத்துகிறது.

ஊராட்சி நிர்வாகத்தில், தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்களது திறன் மேம்பாடு என்பது தேவையான அம்சமாகும். பல்வேறு திட்டங்களை ஊரக மக்களின் சமூகப் பொருளாதார வளர்ச்சிக்காக செயல்படுத்துவதில் அவர்கள் முக்கிய பங்கு வகிக்கின்றனர்.இப்பயிற்சியானது, அவர்களின் திறன் மற்றும் அறிவினை மேம்படுத்தவும், அவர்தம் பொறுப்புகளை, அவர்கள் சிறப்பாக செயல்படுத்துவதற்கும் உதவுகிறது. மேலும் ஊரகப் பகுதியின் வளர்ச்சி மற்றும் ஊரக மக்களின் நலன் ஆகியவற்றை குறிக்கோளாகக் கொண்ட பல்வேறு முயற்சிகளை செயல்படுத்துவதற்கான சிறந்த

தொழில் நுட்ப ஆலோசகராகவும், செயல்படுத்துபவராகவும் விளங்கிட பயிற்சி உதவி செய்கிறது.

திறன் மேம்பாடு என்பது பயிற்சிக்குத் தேவையான முன்னேற்பாட்டு நடவடிக்கைகள், கட்டமைப்பு வசதிகள், பயிற்சிகளை தொகுத்து வைத்தல், பயிற்சி பாடத்திட்ட பகுதிகளை தயார்படுத்துதல், பயிற்சி வழிமுறைகள், பயிற்சியின் போது வழங்கப்படும் கையேடுகள் மற்றும் பயிற்சி சார்ந்த செயல்பாடுகள், பயிற்சியினை செயல்படுத்த திட்டமிடல், கண்காணித்தல், ஆய்வு மற்றும் மதிப்பீடு ஆகியவற்றை உள்ளடக்கியதாகும்.

மாநில அளவில், மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம் மற்றும் திருவண்ணாமலை மாவட்டத்தில் சத்தியவிஜயநகரம், ஈரோடு மாவட்டத்தில் பவானிசாகர், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கிருஷ்ணகிரி, தஞ்சாவூர் மாவட்டத்தில் பட்டுக்கோட்டை மற்றும் மதுரை மாவட்டத்தில் தே.கல்லுப்பட்டி ஆகிய மண்டலங்களில் அமைந்துள்ள **5** மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்கள் மூலம், பல்வேறு நிலை ஊரக வளர்ச்சித் துறை அலுவலர்கள் மற்றும் ஊராட்சி பிரதிநிதிகள் மற்றும் இதர பொறுப்பாளர்களுக்கு பயிற்சிகள் வழங்கும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது,

## அட்டவணை 5.4

## ஐந்து மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்கள் குறித்த அடிப்படை விவரங்கள்

| வ. எண். | மண்டல ஊரக வளர்ச்சி நிறுவனத்தின் பெயர் | மாவட்டத்தின் பெயர் | எல்லைக்குட்பட்ட மாவட்டங்கள் | துவங்க பட்ட ஆண்டு |
|---|---|---|---|---|
| 1. | ச.வி.நகரம் | திருவண்ணாமலை | காஞ்சிபுரம், விழுப்புரம், திருவள்ளூர்,கடலூர், திருவண்ணாமலை (5 மாவட்டங்கள்) | 1956 |
| 2. | கிருஷ்ணகிரி அணை | கிருஷ்ணகிரி | கிருஷ்ணகிரி, நாமக்கல், சேலம்,தர்மபுரி, வேலூர் (5 மாவட்டங்கள்) | 1958 |
| 3. | பட்டுக்கோட்டை | தஞ்சாவூர் | தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டிணம், திருச்சி, புதுக்கோட்டை, சிவகங்கை (6 மாவட்டங்கள்) | 1954 |
| 4. | பவானிசாகர் | ஈரோடு | ஈரோடு, கோயம்புத்தூர், திண்டுக்கல், நீலகிரி, கரூர், பெரம்பலூர், அரியலூர், திருப்பூர் (8 மாவட்டங்கள்) | 1972 |
| 5. | டி.கல்லுப்பட்டி | மதுரை | மதுரை, தேனி, விருதுநகர், இராமநாதபுரம், திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி (7 மாவட்டங்கள்) | 1948 |

### 5.5.1. மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்களில் பயிற்சி பெறுபவர்கள்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள், கிராம ஊராட்சித் தலைவர்கள், ஊராட்சி செயலாளர்கள் மற்றும் அனைத்து உள்ளாட்சி பணியாளர்கள், சுய உதவிக் குழு உறுப்பினர்கள் மற்றும் பிற துறையில் பணிபுரியும் அலுவலர்கள்

ஆகியோருக்கு மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்களில் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

### 5.5.2. பயிற்சி திட்டங்கள்

மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்களில் நடைபெறும் பயிற்சிகளில், தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994, ஊராட்சி நிர்வாகம், கணக்குகள், தணிக்கை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் திட்டங்கள், சுகாதாரம், திடக்கழிவு மேலாண்மை, மரபு சாரா எரிசக்தி, ஆளுமை வளர்ச்சி, மனவியல் மேலாண்மை, சமூகˆ தணிக்கை திட்டம், கணினி மற்றும் தகவல் அறியும் உரிமைச் சட்டம் ஆகிய பொருள்கள் குறித்து பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. சாலைகள் அமைத்தல், பாலங்கள் கட்டுதல் போன்ற தொழில்நுட்ப பணிகள் குறித்த பயிற்சிகளுக்கும் முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. ஒவ்வொரு மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனமும் ஓர் ஆண்டிற்கு குறைந்தபட்சம் 5,000 நபர்களுக்கு உள் வளாகப் பயிற்சியும், அதிகபட்சம் 25,000 நபர்களுக்கு வெளி வளாகப் பயிற்சியும் அளிக்க இயலும்.

### 5.5.3. பணியமைப்பு

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் கூடுதல் இயக்குநர்/ இணை இயக்குநர் நிலையிலான முதல்வர்கள் தலைமையில் மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்கள் நிர்வகிக்கப்படுகின்றன.

### 5.5.4. நிதி

தமிழ்நாடு அரசு, மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்களுக்கு நிதி வழங்குகிறது. மத்திய அரசு ஒவ்வொரு மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்திற்கும் ஒவ்வொரு ஆண்டும் பயிற்சி திட்டம் தொடர்பான செலவினங்களை மேற்கொள்ள ரூ.20 இலட்சம் தொடர் செலவின மானியமாக வழங்குகிறது. மேலும் இந்நிறுவனங்களின் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திடவும் மற்றும் பயிற்சி உபகாரணங்களுக்காகவும் தேவையின் அடிப்படையில் மத்திய அரசு தொடரா செலவினத்தின் கீழ் 100% நிதியினை வழங்குகிறது.

**2016–17ம் ஆண்டின் சாதனைகள்**
**அட்டவணை.5.5.**
**ஐந்து மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்களில் எய்தப்பட்ட பயிற்சி சாதனைகள் (வழக்கமான பயிற்சி , கணினி பயிற்சி மற்றும் சிறப்பு பயிற்சிகள்)**

| வ. எண். | பயிற்சியின் பெயர் | அணிகள் | | பயிற்சியாளர்கள் | |
|---|---|---|---|---|---|
| | | இலக்கு | சாதனை* | இலக்கு | சாதனை |
| 1. | வழக்கமான பயிற்சி | 300 | 297 | 9000 | 8802 |
| 2. | கணினி பயிற்சி | 130 | 135 | 3250 | 3300 |
| | **இதர பயிற்சிகள்** | | | | |
| 3. | தேசிய ஊரக வாழ்வாதார இயக்கம்–பயிற்றுநர் பயிற்சி | 10 | 10 | 300 | 300 |
| 4. | ஊரக மேம்பாட்டு திட்டம் (VPDP) பயிற்சி அட்டவணை தயாரித்தல் பற்றிய கருத்தரங்கு | 1 | 1 | 75 | 75 |
| 5. | ஆர்ஜிபிஎஸ்ஏ–விபிடிபி *மற்றும் திறன் மேம்பாடு | 102 | 58 | 3621 | 1992 |
| 6 | தூய்மை இந்தியா இயக்கம் தொடர்பான வெளிவளாக பயிற்சி | 3 | 3 | 230 | 224 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 7 | சமூக நல தணிக்கை சான்றிதழ் பயிற்சி | 13 | 13 | 558 | 543 |
| 8 | புது வாழ்வு திட்டத்தின் திறன் வளர்க்கும் பயிற்சி | 9 | 9 | 450 | 474 |
| 9 | பண மதிப்பிழத்தல் மற்றும் பணமில்லாத பரிவர்த்தனை தொடர்பான பயிற்சி | 2 | 2 | 70 | 68 |
| 10 | மையப்படுத்தப்பட்ட இணையதள மென்பொருள் உபயோகப்படுத்துதல் தொடர்பான பயிற்சி | 32 | 32 | 1120 | 1117 |
| 11 | சமூக நலம் தொடர்பான புத்தறிவு பயிற்சி | 2 | 2 | 71 | 71 |
| 12 | தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் | 19 | 19 | 732 | 570 |
| | **மொத்தம்** | **623** | **572** | **19477** | **17435** |

2016–17 ஆம் ஆண்டில், மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்களில், மாநில அரசு, மத்திய அரசின் ஊரக வளர்ச்சி அமைச்சகம், பணியாளர் மற்றும் பயிற்சி துறைநிதி உதவியுடன் அலுவலர்கள், தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சி பிரதிநிதிகள் உட்பட 17,435 நபர்களுக்கு 623 அணிகளில் பலவகையான பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளது. 2017–18 ஆம் ஆண்டில் 20,000 நபர்களுக்கு 730 அணிகளில் 5 மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்களில் பயிற்சிகள் வழங்கப்படும்.

### 5.5.5. மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம் (மா.ஊ.வ. (ம) ஊ.நி.)

மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனமானது தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சி பிரதிநிதிகளுக்கும், அலுவலர்களுக்கும், மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்களின் செயல்

அலுவலர்களுக்கும், மாநில அளவில் பயிற்சி அளிக்கும் தலைமை நிறுவனமாகும். இந்நிறுவனமானது, **1961**ம் ஆண்டில் நிறுவப்பட்டு தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம் 1975ன் கீழ் ஓர் சங்கமாக **1990**–ம் ஆண்டில் பதிவு செய்யப்பட்டுள்ளது. 1991 ஆம் ஆண்டு முதல் காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள மறைமலைநகரில் தனது சொந்த இடத்தில் இயங்கி வருகிறது. இதன் மொத்த பரப்பளவு **25** ஏக்கர் ஆகும்.

### 5.5.6. மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்தின் குறிக்கோள்

பல்வேறு நிலையிலான இலக்கு மக்கள் பயிற்சியாளர்களின் அறிவினை மேம்படுத்துவதும், அவர்களின் தனிநபர் திறனை உயர்த்துவதும் மற்றும் அவர்களின் செயல்பாடுகளை மாற்றுவதன் மூலமும் அரசின் திட்டங்களைச் சிறப்பாக செயல்படுத்த வைப்பதே இந்நிறுவனத்தின் முதன்மை குறிக்கோளாகும்.

ஊரகப் பகுதி மற்றும் ஊரக மக்களின் சமூக பொருளாதார வளர்ச்சிக்கான காரணிகளை கண்டறிந்து தொடர்புடைய துறைகளுக்கு ஆய்விற்கு ஆலோசனை மற்றும் உதவிகள் வழங்குவதல்.

- பயிற்சிகளை ஏற்பாடு செய்தல் மற்றும் பயிற்சி வகுப்புகளை நடத்துதல், கூட்டங்கள், கருத்தரங்குகள் மற்றும் சொற்பொழிவுகளை நடத்துதல்.

- மத்திய மற்றும் மாநில அரசுகளின் நிதி உதவியுடன், மாநில ஊரக வளர்ச்சி நிறுவனம் தனித்தோ, அல்லது இதர பல்கலைக்கழகங்கள் மற்றும் பயிற்சி நிறுவனங்களுடன் சேர்ந்தோ ஆய்வுகளை மேற்கொள்ளுதல் அல்லது அதற்கான உதவிகளை வழங்குதல்.
- ஊரக வளர்ச்சித் துறையின் மூலமாக செயல்படுத்தப்படும் திட்டங்கள் மற்றும் அது போன்ற பிற திட்டங்களை வகுக்கும் போதும்/செயல்படுத்தும்போது ஏற்படும் பிரச்சினைகளை கண்டறிந்து அதற்கான காரணங்களை ஆராய்ந்து தீர்வளித்தல்.
- மாநில ஊரக வளர்ச்சி நிறுவனத்தின் குறிக்கோளை அடைவதற்கு கீழ்கண்ட பிரிவுகள் தோற்றுவிக்கப்படும்;

  i) திட்டங்களை ஆராய்ந்து அறிமுகப்படுத்த பள்ளிகள் நிறுவுதல்

  ii) பயிற்சி மற்றும் அறிவுரை வழங்குதல்

  iii) ஆராய்ச்சி மற்றும் மதீப்பீடு போன்ற இதர பல பிரிவுகளை தோற்றுவித்தல்

  iv) இந்தியா மற்றும் வெளிநாடுகளில் இது போன்ற ஒத்த நோக்கத்தினை உடைய பிற நிறுவனங்கள், அமைப்புகள், சங்கங்கள் ஆகியவற்றுடன் இணைந்து பணிபுரிதல்

  v) தமிழக அரசின் கொள்கை வகுத்தல் மற்றும் முறைப்படுத்துவதில் உதவி செய்தல்

## 5.5.7. விரிவுரையாளர்கள் / தொழில் முறை உறுப்பினர்கள் மற்றும் நிர்வாகப் பணியாளர்கள்

இந்நிறுவனத்தில் ஊரக வளர்ச்சித் துறை அலுவலர்கள் உள்ளாட்சி நிறுவன பிரதிநிதிகள் மற்றும் செயல் அலுவலர்களுக்கு பயிற்சிகள் நடத்துதல் மற்றும் அது சார்ந்த பணிகளை மேற்கொள்ள விரிவுரையாளர்கள், தொழில் முறை உறுப்பினர்கள் மற்றும் நிர்வாகப் பணியாளர்கள் பணியிடங்களை தமிழ்நாடு அரசு அனுமதித்துள்ளது. மேலும், மத்திய அரசின் ஊரக வளர்ச்சி அமைச்சகம் ஐந்து சிறப்பு விரிவுரையாளர்களை ஒப்பந்த அடிப்படையில் மேலாண்மை, வாழ்வாதாரம், சுகாதாரம் தகவல் தொழில்நுட்பம்(கணினி வல்லுநர்) கூட்டுறவு மற்றும் விரிவாக்க கல்வி ஆகிய பிரிவுகளில் பயிற்சிகள் எடுக்க மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்திற்கு அனுமதி அளித்துள்ளது.

## 5.5.8. பயிற்சிக்கான நிதி ஆதாரம்

மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம் மாநில/மத்திய அரசு மற்றும் இதர நிறுவனங்களிடமிருந்து பயிற்சிகள் நடத்துவதற்கு கீழ்க்கண்ட விவரப்படி நிதி உதவியினை பெறுகிறது.

**அ. மத்தியஅரசின் ஊரக வளர்ச்சி அமைச்சகம்**

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதிˆ திட்டம் மற்றும் பல்வேறு மத்திய அரசு திட்டங்களின் 100 சதவீத நிதி உதவியுடன் பயிற்சித் திட்டங்களை ஏற்பாடு செய்தல்.

**ஆ. மத்திய அரசின் பஞ்சாயத்து ராஜ் அமைச்சகம்,**

தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு 100 சதவீத அரசின் நிதி உதவியுடன் திறன் மேம்பாட்டு பயிற்சி வழங்க ஏற்பாடு செய்தல்.

**இ. தேசிய ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம், ஐதராபாத்**

இந்நிறுவனம் கீழ்க்கண்ட தலைப்பில் நடத்தப்படும் பயற்சிகளுக்கு 100 சதவீத நிதி உதவி வழங்குகிறது.

- ஒருங்கிணைந்த நீர் ஆதார மேம்பாட்டு திட்டங்கள்.
- அலுவலர்கள் மற்றும் பணியாளர்களின் நிர்வாக திறன் மேம்பாடு
- கணினி பயன்பாட்டிற்கு மேம்படுத்தப்பட்ட பயிற்சிகள்
- மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்ட பயிற்சிகள்
- பிரதம மந்திரி கிராம சாலைகள்
- பிரதம மந்திரி குடியிருப்பு திட்டம்

- புவி சார்ந்த தகவல் முறை பயிற்சி
- பேரிடர் மேலாண்மை பயிற்சி
- கிராமப்புறங்களில் பணமில்லா பரிவர்த்தனை குறித்த பயிற்சி.
- ஆராய்ச்சி செயல்பாடுகள் குறித்த பயிற்சி

**ஈ. மத்திய புள்ளியியல் மற்றும் திட்ட செயலாக்கத் துறை, அமைச்சகம்**

நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் மேம்பாட்டுத் திட்டத்தில் பயிற்சிகள் மேற்கொள்ள நிதி உதவி அளிக்கிறது.

**உ. மத்திய அரசின் பணியாளர்கள் மற்றும் பயிற்சி` துறை**

மத்திய அரசுத் துறை மற்றும் அமைச்சகத்தில் உள்ள சார்பு செயலர்கள் மற்றும் முதுநிலை பிரிவு அலுவலர்களுக்கு களப்பணியுடன் கூடிய பயிற்சிகளுக்கான நிதி உதவி அளிக்கிறது.

மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம் அதன் பணியாளர்களுக்கான ஊதியம் மற்றும் ஊதியமில்லாத செலவினங்களுக்கு நிதி உதவியினை(Grants-in-aids)தொடர் செலவினத் தலைப்பில் மத்திய மற்றும் மாநில அரசு பங்குத்தொகையாக 50 : 50 என்ற அடிப்படையில் பெறுகின்றது. பயிற்சி தொடர்பான அடிப்படை ஆதார வசதிகளான பயிலரங்கு கூடங்கள், பயிற்சியாளர் தங்கும் விடுதிகள் கட்டுதல் மற்றும் பயிற்சி உபகரணங்கள் வாங்குதல் ஆகியவற்றிற்கு மத்திய

அரசின் ஊரக அமைச்சகம் 100 % நிதி உதவி வழங்குகிறது.

**5.5.9. பயிற்சி பங்கேற்பாளர்கள்**

மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம், மூன்றடுக்கு ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையில் பணியாற்றும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள், சுய உதவிக் குழு உறுப்பினர்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு உறுப்பினர்கள் (PLF), சமுதாய பயிற்றுநர்கள், கிராம தன்னார்வலர்கள், பயிற்சி வல்லுநர்கள், பயிற்றுநர்கள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மற்றும் இதர பிற துறை அலுவலர்களுக்கும் பயிற்சி வழங்குகிறது.

**5.5.10. பயிற்சி முறைகள்**

இந்நிறுவனத்தில் நடத்தப்படும் பங்கேற்பாளர் பயிற்சிகளில் விரிவுரை மற்றும் கலந்துரையாடல் அடிப்படையிலான பயிற்சி முறை கடைபிடிக்கப்படுகிறது. இந்நிறுவனத்தில் இதர பயிற்சி அணுகு முறைகளான பொருளடக்கத்தினை அறிமுகப்படுத்தும் முறை, விளையாட்டுகள், தனி நடிப்பு, புத்துணர்வு நடவடிக்கைகள், மனஇறுக்கத்தை தளர்த்தும் பயிற்சிகள், பங்கேற்பு அணுகுமுறைகள், வல்லுநர் விவாதங்கள், களப்பணி வெற்றி, கதைகளை கூறுதல், அனுபவப் பகிர்வு, பட்டறிவுப் பயணங்கள், பயிற்சி அட்டைகள் (Charts

Preparation)தயாரித்தல் மற்றும் குழு விவாதங்கள் ஆகிய முறைகளும் கடைப்பிடிக்கப்படுகின்றன.

### 5.5.11. பயிற்சிகள் நடத்துதல்

இந்நிறுவனமானது உறைவிடப் பயிற்சிகளை மறைமலை நகரில் உள்ள அதன் நிறுவன வளாகத்தில் நடத்துகின்றது. பிற பயிற்சிகள் வெளி வளாக பயிற்சிகளாக மாவட்ட, வட்டார மற்றும் கிராம ஊராட்சி அளவில் மாவட்ட நிர்வாகம் மற்றும் மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்கள் மூலம் வழங்கப்படுகிறது

### 5.5.12. வல்லுநர்கள்

இந்நிறுவனத்தில் பணிபுரியும் பல்வேறு விரிவுரையாளர்கள் தவிர தேசிய ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம் ஐதராபாத், தேசிய தகவல் தொழில்நுட்ப மையம் சென்னை, அண்ணா பல்கலைக் கழகத்தில் உள்ள தொலையுணர்வு மையம், சென்னை அண்ணா மேலாண்மை பயிற்சி நிறுவனம் போன்ற நிறுவனங்களிலிருந்து வல்லுநர்கள் பயிற்சிக்கு பயன்படுத்தப்படுகின்றனர். இவர்களைத் தவிர சிறப்பாக பணியாற்றும் கிராம ஊராட்சித் தலைவர்கள், பிற துறையில் பணியில் உள்ள மற்றும் பணி ஓய்வு பெற்ற அலுவலர்கள், மகளிர் திட்டம் மற்றும் புதுவாழ்வு திட்டத்தின் மாவட்ட முதன்மை பயிற்றுநர்கள், சமுதாய வள பயிற்றுநர்கள் ஆகியோரும் பயிற்சிகளில் பயிற்றுநராக பயன்படுத்திக் கொள்ளப்படுகின்றனர்.

### 5.5.13. நிறுவன உட்கட்டமைப்பு

பயிற்சிகளை நடத்துவதற்குத் தேவையான குளிரூட்டப்பட்ட பயிற்சி அரங்குகள், ஒலி, ஒளி அமைப்பு சாதனங்கள், படிப்பகத்துடன் கூடிய நூலகம், இணைய தள வசதியுடன் கூடிய கணினி பயிற்சி கூடங்கள், பயிற்சியாளர்கள் தங்கி உணவருந்தக் கூடிய வகையில் விடுதி வசதி, தானியங்கி மின்னாக்கி ஆகிய உட்கட்டமைப்பு வசதிகள் மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்தில் உள்ளன.

### 5.5.14. 2016–17-ஆம் ஆண்டிற்கான பயிற்சிகள் விவரம்

இந்நிறுவனம் 2016–17ம் ஆண்டில் கீழ்க்கண்ட அட்டவணையில் தெரிவித்துள்ளபடி ஊராட்சி துறை அலுவலர்களுக்கு களப்பயிற்சி, பிற துறை பணியாளர்களுக்கான பயிற்சி மற்றும் வள அலுவலர்களுக்கு பயிற்றுநர் பயிற்சி ஆகிய பயிற்சிகளை அளித்துள்ளது.

**அட்டவணை 5.6**

**மாநில ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சி நிறுவனத்தின் 2016–17ம் ஆண்டு சாதனைகள்**

| திட்டம் | பயிற்சி பெற்றவர்கள் விவரம் | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | அணிகளின் எண்ணிக்கை | அலுவலர்கள் | பணியாளர்கள் | சுய உதவி குழு உறுப்பினர்கள் | இதரர்கள் | பயிற்ச்சி பெற்ற மொத்த நபர்கள் விவரம் |
| பயிற்சி வைப்பு நிதி | 1 | 11 | | | | 11 |
| ராஜிவ் காந்தி கிராம சுயராஜ்ய யோஜனா தகவல் தொழில் நுட்பம் | 6 | 173 | 0 | 0 | 0 | 173 |

| திட்டம் | பயிற்சி பெற்றவர்கள் விவரம் | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | அணிகளின் எண்ணிக்கை | அலுவலர்கள் | பணியாளர்கள் | சுய உதவி குழு உறுப்பினர்கள் | இதரர்கள் | பயிற்ச்சி பெற்ற மொத்த நபர்கள் விவரம் |
| பணியாளர் மற்றும் பயிற்சித் துறை | 2 | 60 | | | | 60 |
| தேசிய ஊரகவளர்ச்சி (ம) ஊராட்சி பயிற்சி நிறுவனம் | *4* | 121 | | | | 121 |
| மகா.தே.ஊ.வ. திட்டம் | 9 | 331 | | | | 331 |
| வெளியிட பயிற்சி | 14 | 792 | | | | 792 |
| மண்புழு உரம் தயாரிப்பு | 5 | | | 253 | | 253 |
| சுகாதாரம் | 4 | | | 350 | | 350 |
| தேசிய ஊரக வளர்ச்சி (ம) பயிற்சி நிறுவனம் இணைய தளப் பயிற்சி | 3 | 93 | | | | 93 |
| சமுக தணிக்கையின் ஒரு மாத கால சான்றிதழ் பயிற்சி | 12 | | 519 | | | 519 |
| கிராம தொழில் நட்ப வள மையம் | 14 | | | 455 | | 455 |
| உள்ளாட்சி பிரதிநிதிகள் பயிற்சி II | 5 | 93 | | | | 93 |
| சமுதாய அடிப்படையிலான பேரிடர் மேலாண்மை திட்ட பயிற்சி | 981 | | 51172 | | | 51172 |
| ராஜிவ் காந்தி ஊராட்சிகளை வலிமைப் படுத்தும் திட்டம் | 5 | 151 | | | | 151 |
| **மொத்தம்** | **1065** | **1825** | **51691** | **1058** | | **54574** |

மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி பயிற்சி நிறுவனம் **2016–17** –ஆம் ஆண்டில் மொத்தம் **54,574** நபர்களுக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட மத்திய, மாநில அரசு உள்ளாட்சி பிரதிநிதிகள், மத்திய அரசின் பணியாளர்கள் மற்றும் தேசிய ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி பயிற்சி நிறுவனம் ஐதராபாத் ஆகிய நிறுவனங்களில் அலுவலர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள

பயிற்சி திட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றது. இவைகள் **2017–18ம் ஆண்டில் முடிக்கப்படும்.**

இதில் ராஜீவ்காந்தி பஞ்சாயத்து சசக்திகரன் அபியான் (RGPSA)திட்டத்தின் கீழ், ரூபாய் **44.74** கோடியும், சமுதாய அடிப்படையிலான பேரிடர் மேலாண்மைத் திட்டத்தின் கீழ், ரூபாய் **4.58** கோடியும் திறன் வளர்ப்பு பயிற்சிக்காக **2017–18**ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட அறிக்கையில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 5.5.15. சமுதாய அடிப்படையிலான பேரிடர் மேலாண்மைத்திட்டம்

சமுதாய அடிப்படையிலான பேரிடர் மேலாண்மைத் திட்டம் என்பது கடலோர பேரிடர் இன்னல் குறைப்பு திட்டத்தின் ஒரு பகுதி ஆகும். இத்திட்டத்தினை உலக வங்கி உதவியுடன் தமிழக அரசு **12** கடலோர மாவட்டங்களில் செயல்படுத்தி வருகிறது. ஊரக வளர்ச்சித் துறையில் மாநில ஊரக வளர்ச்சிமற்றும் ஊராட்சி நிறுவனம் இத்திட்டத்தினை செயல்படுத்தும் அமைப்பாக உள்ளது.

இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோள், இயற்கை சீற்றங்கள் மற்றும் பேரிடர் கால கட்டங்களில் கடலோர பகுதி வாழ் மக்களின் பாதிப்புகளைக் குறைக்க மற்றும் அவ்வாறான காலங்களில் ஏற்படும் இடையூறுகளை சமாளிக்க அவர்களுக்குத் தேவையான திறன்களை வலுப்படுத்த ஆபத்து குறைப்பு திட்ட வரைவினை தயார் செய்தல் ஆகும். கடலோர பகுதிகளில் வசிக்கக் கூடிய

பாதிப்புக்குள்ளாகும் சமுதாயத்தினர் மற்றும் பள்ளி மாணவர்கள் இத்திட்டத்தின் முதன்மை பங்காளர்களாக உள்ளனர். மேலும் ஊரக உள்ளாட்சி அமைப்புகளும், சமுதாயம் சார்ந்த அமைப்புகளும் அப்பகுதியில் பணியாற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், பயிற்றுநர்கள், அரசுத்துறை அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் ஆகியோர் இத்திட்டத்தின் இரண்டாம் தர பங்காளர்கள் ஆவர்.

தமிழ்நாட்டில் 12 கடலோர மாவட்டங்களில் 45 வட்டார வளர்ச்சி அலுவலக எல்லைக்குட்பட்ட 561 கடலோர கிராமங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்திற்கான மொத்த மதிப்பீட்டுத்தொகை ரு.15.00 கோடி ஆகும். ஜுன் 2013 முதல் ஜுலை2018 வரையிலான காலகட்டத்திற்கு இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது

இத்திட்டத்தின் கீழ் கிராம பேரிடர் மேலாண்மை குழு ஒவ்வொரு ஊராட்சியிலும் மற்றும் கிராம ஊராட்சி அளவில், 5 வகை குழுக்களை கடலோர கிராமங்களிலும் அமைத்து, இவர்களை கொண்டு பேரிடர் காலங்களில் மேற்கொள்ள வேண்டிய உத்திகளை கையாளும் முறைகள் குறித்து, சமுதாய அடிப்படையிலான பேரிடர் மேலாண்மை திட்டம் தயாரித்து, அதனை பேரிடர் அபாய காலத்தில் செயல்படுத்த வேண்டும். இத்திட்டத்தில் பேரிடர் காலங்களில் சவால்களை எதிர் கொள்ளக்கூடிய திறனுடையவர்களில்

முதன்மையானவர்களாக உருவாக்குதல் போன்ற செயல்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

கிராம பேரிடர் மேலாண்மை குழு உறுப்பினர்கள் (VDMC) மற்றும் ஐந்து கிராமப் பேரிடர் மேலாண்மை அணி உறுப்பினர்களுக்கும் (VDMT) முன்னெச்சரிக்கை, இடம்பெயர்தல், தேடுதல் மற்றும் மீட்பு, பாதுகாப்பு புகலிடம் மற்றும் முதல் உதவி ஆகியவற்றில் அந்தந்த துறை வல்லுநர்கள் மூலம் பயிற்சி அளிக்கப்படுகிறது. இதன் மூலம் VDMT அணிகளில் உள்ள முதல் பொறுப்பாளர்கள் பேரிடர் காலங்களில் சவால்களை எதிர் கொண்டு மேலாண்மை செய்வார்கள்.

மிகவும் பாதிப்புக்கு உள்ளாகக் கூடிய கடலோரக் கிராமங்களிலிருந்து, நல்ல திறமை வாய்ந்த 1500 இளைஞர்களை முதன்மை பொறுப்பாளர்களாக கண்டறிந்து அவர்களுக்கு தேசிய பேரிடர் மீட்பு படை, மாநில பேரிடர் மீட்புப்படை மற்றும் தீயணைப்புத்துறை மூலமாக 2017–18 ஆம் ஆண்டில் பயிற்சிகள் அளிக்கப்பட உள்ளன.

2016-17 ஆம் ஆண்டில் சமுதாய அடிப்படையிலான பேரிடர் மேலாண்மை திட்டத்தில் 981 பயிற்சிகளின் மூலமாக 51,172 நபர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

**5.5.16 ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு மையம்.**

தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு மையத்தின் உதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டத்தில் ஊரக வளர்ச்சித்துறை,திறன் வளர்ப்பு மற்றும் இத்திட்டம் தொடர்பான பயிற்சியினை மேற்கொள்ள உள்ளது. இந்த பயிற்சியானது ஒகேனக்கல் குடிநீர் மற்றும் புளோரோஸிஸ் அபாயத்தை குறைக்கும் திட்டத்தின் கீழ் வருகிறது.

**5.5.17 ஊரக வளர்ச்சி பயிற்சி நிறுவனங்கள் மற்றும் பயிற்சிகளை மறு சீரமைத்தல்.**

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை தெளிவான மூன்றடுக்குப் பிரிவுகளைக் கொண்டதாகும். மக்களின் வாழ்வாதாரத்தினை உயர்த்தும் வகையில் தினக்கூலி வேலைகளை வழங்குவதுடன், மக்களின் அடிப்படைத் தேவைகளான வீட்டு வசதி, சாலைவசதிகள், குடிநீர், தெருவிளக்கு சுகாதாரம் ஆகியவற்றை கொடுப்பதற்கான உரிய முயற்சிகள் எடுப்பதே இந்தத் துறையின் கட்டாயக் கடமையாகும். கிராம, வட்டார, மாவட்ட ஊராட்சி என்ற மூன்றடுக்கு உள்ளாட்சி அமைப்புகளின் மூலம் நல்ல உள்ளாட்சி நிர்வாகத்தை கொடுக்க இத்துறை உதவுகிறது. மேலும் இத்துறையில் வாழ்வாதாரத்தை மையமாக வைத்துச் செயல்படும் பிரிவுகளாக தமிழ்நாடு புதுவாழ்வு திட்டம், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தைச்

செயல்படுத்தும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகம், பன்னாட்டு விவசாய வளர்ச்சி நிதியுதவியுடன் செயல்படும் சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் ஆகியன உள்ளன. இப்பிரிவுகளின் மூலம் சமுதாயத்தின் பல்வேறு வகையான பிரிவினரும் இலக்காக நிர்ணயிக்கப்படுவதுடன் அவர்களின் நிலைத்த வாழ்வாதாரத்திற்கான நிறுவன கட்டமைப்பு, நிதி உள்ளாக்கம் போன்றவைகளை முன்னேற்ற முயற்சிகள் மேற்கொள்ளப்படுகிறது. ஒவ்வொரு செயல்பாடுகளிலும் செயல்பாட்டுத் திறன் மேம்பாடு என்பது ஒரு அங்கமாக உள்ளது. ஊரகப் பகுதிகள் குறைந்து வருதல், நகரமயமாக்குதல், ஊரக வளர்ச்சியின் நோக்கத்தில் மாறுபாடு போன்றவற்றின் அடிப்படையில் திறன் வளர்ப்பு பயிற்சி நடவடிக்கைளிலும் ஒரு மாறுதல் தேவைப்படுகிறது. மேற்குறிப்பிட்ட சூழ்நிலையில் மாநில ஊரக வளர்ச்சி நிறுவனத்தை சீர்மிகு மையமாக மாற்றவும், பலப்படுத்தவும் நடடிக்கைகள் துவக்கப்பட்டுள்ளது. இந்த நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு கீழ்காணும் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

1. ஊரக வளர்ச்சித் துறையில் மேற்கொள்ளப்படும் அனைத்து பயிற்சிகளையும் திறன் மேம்பாட்டு பயிற்சிகளாக சீரமைத்து குறிப்பாக மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம் மற்றும் மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை நிறுவனங்களில் மேற்கொள்ளும் பயிற்சிகளை ஐதராபாத்தில் இயங்கிவரும் தேசிய ஊரக

வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்துராஜ் நிறுவனம் ஆய்வு செய்து ஆலோசனைகள் வழங்க கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

**2.** கள அளவில் உள்ள அலுவலர்கள்/ பணியாளர்கள், மக்கள் பிரதிநிகள் மற்றும் இதர பங்கேற்பாளர்களுடன் பல்வேறு நிலைகளில் கலந்தாய்வு செய்த அனுபவத்தின் அடிப்படையில் பயிற்சிகளின் தேவைகள் கண்டறியப்பட்டுள்ளன.

**3.** உயர் நிலை கல்வி நிறுவனங்கள் மற்றும் அனுபவமிக்க வள ஆதார அமைப்புகள் மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்துடன் இணைந்து ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சித் துறையில் பங்கேற்பாளர்களின் திறனை மேம்படுத்தவும், அந்நிறுவனங்களின் பணியின் தரத்தை ஊரகப் பகுதிகளில் மேம்படுத்தவும் ஆலோசனைகள் நடத்தப்பட்டது.

**4.** ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சி துறையில் உள்ள பல்வேறு பயிற்சி நிறுவனங்கள் தற்போது நடத்தும் பயிற்சிகள், பயிற்சி பாடத் திட்டங்கள், பயிற்சி முறைகள், உரிமைக் கட்டண பயிற்சிகள் பயிற்றுனர்களின் திறன் வளர்ப்பு ஆகியவற்றை ஆராய்ந்து, மேம்படுத்தி, மாற்றங்களை கொணடு வர தேவையான ஆலோசனைகளை வழங்க துறை சார்ந்த ஒரு குழு அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**5.**இவ்வாறு துறை அலுவலர்களைக் கொண்டு அமைக்கப்படும் குழுவானது மண்டல ஊரக வளர்ச்சி நிறுவனங்களை பார்வையிட்டு நிறுவனத்தின்

எல்லைக்குட்பட்ட மாவட்டங்கள், பங்கேற்பாளர்கள், தற்போதுள்ள கட்டமைப்பு வசதிகள், சொந்த வருவாய் தன்மை உள்ள வழிவகைகள், நிலம் மற்றும் பண்ணை போன்ற உட்கட்டமைப்பு வசதிகளை முழுமையாகப் பயன்படுத்தவதற்கான வழிமுறைகள் மற்றும் பயிற்சி பாடத்திட்டங்கள் ஆகியவற்றை ஆய்ந்து அறிக்கையினை சமர்ப்பிக்கும்.

**6.**மண்டல ஊரக வளர்ச்சி நிறுவனங்களை வலுப்படுத்த மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்தை உயர்நிலை திறன் வளர்ப்பு மையமாக உருவாக்குவதன் மூலம் **2017–18**ஆம் ஆண்டில் ஊரக வளர்ச்சி துறை சார்ந்த திறன் வளர்ப்பு மற்றும் பயிற்சி நடவடிக்கைகள் அடுத்த உயர்நிலைக்கு கொண்டு செல்லப்படும். இதற்காக ஒரு தனிப்பிரிவு ஊரக வளர்ச்சி இயக்ககத்தில் உருவாக்கப்பட்டு அதன் மூலம் விரிவான திட்ட அறிக்கை தயாரித்து மாநில ஊரக வளர்ச்சி நிறுவனத்தை உயர்நிலை திறன் வளர்ப்பு மையமாக்கவும் மற்றும் மண்டல ஊராட்சி நிறுவனங்களை வலுப்படுத்துதவும் அரசு உத்திரவுகள் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**7.** கண்காட்சி மற்றும் பொது அறிவை பரப்புவதற்கான மையம் ஒன்றை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்தில் நிறுவி அதனை உள்ளாட்சி அமைப்புகள், பொதுமக்கள் மற்றும் அலுவலர்களுக்கான வள மற்றும் ஆலோசனை மையமாக செயல்பட வைப்பதற்கு தேவையான முயற்சிகள் **2017–18**ம் ஆண்டில் மேற்கொள்ளப்படும்.

8. ஊரக வளர்ச்சித் துறையின் அலுவலர்கள் மற்றும் உதவிப் பொறியாளர்களுக்கு ஊரக திட்டப் பணிகளை நிறைவேற்ற தேவையான தொழில் நுட்ப பயிற்சி மையம் மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்தில் தோற்றுவிக்கப்படும்.

2017–18 ஆம் ஆண்டில் வழங்கப்பட உள்ள வழக்கமான பயிற்சிகள் மற்றும் கணினி பயிற்சிகள் தவிர கீழ்க்காணும் சிறப்பு பயிற்சிகள் வழங்கப்பட உள்ளன. இதில் தேசிய ஊரக வாழ்வாதார திட்டத்தின் பயிற்றுநர் பயிற்சி, வட்டார வளர்ச்சி அலுவலர்கள், பொறியாளர்கள், பணி மேற்பார்வையாளர்கள், சாலை ஆய்வாளர்கள், தொண்டு நிறுவனங்கள், சுய உதவிக் குழு உறுப்பினர்கள் ஆகியோருக்கு கிராம ஊராட்சி வளர்ச்சித் திட்டத்தின் கீழ் பயிற்சி, கிராம அளவில் திட்டங்களை ஒருங்கிணைக்கும் பயிற்சி, கிராம ஊராட்சி வளர்ச்சி திட்டத்தில் பயிற்சியின் தேவைகள் குறித்த ஆய்வு, முழு சுகாதார திட்டத்தில் வெளி வளாகப்பயிற்சி, பிரதம மந்திரி குடியிருப்பு திட்டம் (ஊரகம்), பழங்குடியினர் மற்றும் பட்டியல் இனத்தவருக்கான ஊராட்சி நிர்வாகம் பற்றிய பயிற்சி, பெண் ஊராட்சி மன்றத் தலைவர்களுக்கான ஊராட்சி நிர்வாகம் பற்றிய பயிற்சி, சமூகத் தணிக்கை சான்றிதழ் பயிற்சி, புதுவாழ்வுத் திட்டத்தில் திறன் வளர்த்தல் பயிற்சி மற்றும் ஆறு மாவட்டங்களில் பணமில்லா பரிவர்த்தனை பற்றிய பயிற்சி ஆகிய பயிற்சிகள் மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்திலும், அனைத்து ஐந்து மண்டல ஊரக வளர்ச்சி பயிற்சி நிறுவனங்களிலும், மேற்கொள்ளப்படும்.

**மாநில மற்றும் மண்டல ஊராட்சி நிறுவனங்களில் கட்டமைப்பை வலுப்படுத்துதல்**

**2017–18** ஆம் ஆண்டில், **6,06,354** பயிற்சியாளர்களுக்கு பல்வேறு தலைப்புகளில் பயிற்சி வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**2017–18**ம் ஆண்டில், **1,04,732** நபர்களுக்கு ரூ.**4.58** கோடி நிதியில் **2242** அணிகளில் சமுதாய பேரிடர் மேலாண்மை திட்டத்தின் கீழ் **12** கடலோர மாவட்டங்களில் பயிற்சி அளிக்க மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்தால் திட்டமிடப்பட்டுள்ளது.

**2017–18**ம் ஆண்டில் தோராயமாக மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம் மூலம் **6,06,354** நபர்களுக்கு **14,954** அணிகளில் பயிற்சி நடத்தவும் மற்றும் **5** மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்களில் **20,000** நபர்களுக்கு **730** அணிகளில் பயிற்சி நடத்தவும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

நிறைவாக **2017–18**ம் ஆண்டில் மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம் மற்றும் **5** மண்டல ஊரக வளர்ச்சி நிறுவனங்கள் மூலம் ஊரக வளர்ச்சி துறையில் **6,26,354** நபர்களுக்கு **15,684** அணிகளில் பயிற்சிகள் நடத்தப்பட உள்ளது. இதற்கு **2017–18**ஆண்டில் ரூ. 7.94 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்தை மேலும் மேம்படுத்தி, வலுவான அமைப்பாக மாற்றி, பயிற்சிகளை செம்மைப்படுத்தி அகில இந்திய அளவில் முதன்மை நிறுவனங்களில் ஒன்றாக உருவாக்கிட உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

# 6. தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம்

## 6. தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், மகளிருக்கு நிதி சார்ந்த நடவடிக்கைகளுக்கு உதவி அளிப்பதின் மூலம் அவர்களின் சமூக பொருளாதார நிலையை மேம்படுத்தி மகளிரை அதிகாரப்படுத்துவதற்காக **1983** ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் பல ஆண்டுகளாக அதன் இலக்கு மற்றும் நோக்கங்களை மறுஆய்வு செய்து அவற்றை அடைவதற்காக திறன் வளர்த்தல், தொடர்ச்சியாக திறனை மேம்படுத்துதல் மற்றும் சமுதாய அடிப்படையிலான அமைப்புகளை உருவாக்கி, பல்வேறு வறுமை ஒழிப்புத் திட்டங்களின் வாயிலாக பெண்களது சமூக பொருளாதார மேம்பாட்டினை உறுதி செய்யும் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் கீழ்க்காணும் மூன்று முக்கிய திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

I. **மகளிர் திட்டம்:** பெண்கள் சமூக மற்றும் பொருளாதார அதிகாரம் பெறுவதற்காக மாநில அரசின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டம்.

II. **தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்:** ஊரகப் பகுதிகளில் வறுமை ஒழிப்பு மற்றும் வாழ்வாதார மேம்பாட்டிற்காக மத்திய மற்றும் மாநில அரசுகளால் **60:40** என்ற நிதி விகிதத்தில் செயல்படுத்தப்படும் திட்டம்.

III. **தேசிய நகர்ப்புர வாழ்வாதார இயக்கம்:** நகர்ப்புர ஏழை மக்களுக்காக மத்திய மற்றும் மாநில அரசுகளால் **60:40** என்ற நிதி விகிதத்தில் செயல்படுத்தப்படும் திட்டம்.

## 6.1. மகளிர் திட்டம்

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், தர்மபுரி மாவட்டத்தில் பன்னாட்டு வேளாண்மை வளர்ச்சி நிதியத்தின் (IFAD) நிதியுதவியுடன் வேளாண் சார் தொழில்களில் ஈடுபட்டிருந்த மகளிரை சுய உதவிக் குழுக்களாக அமைத்து **தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு திட்டத்தை** செயல்படுத்தியது. இத்திட்டம் முதலில் தர்மபுரி மாவட்டத்திலும் பின்னர் சேலம், இராமநாதபுரம், விழுப்புரம் மற்றும் மதுரை மாவட்டங்களுக்கு படிப்படியாக விரிவு படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் வெற்றியினை அடிப்படையாகக் கொண்டு இத்திட்டத்தில், தேவைக்கு ஏற்ப சில மாற்றங்களை செய்து 'மகளிர் திட்டம்' என்ற பெயரில் அனைத்து மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் மகளிரைக் கொண்டு சுய உதவிக் குழுக்களை உருவாக்கி, அவர்களுக்கு முறையான பயிற்சிகள் வழங்கி, வருமானம் ஈட்டும் தொழில் தொடங்க தேவையான வங்கிக்கடன் இணைப்புகள் ஏற்படுத்தித் தரப்படுகிறது. சுய உதவிக் குழு இயக்கத்தை வலுப்படுத்தவும், செயல்திறனை மேம்படுத்தவும், வாழ்வாதார நடவடிக்கைகளில் உயர்வு பெற்று பயனடைந்திடவும் சுய

உதவிக் குழுக்களை ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளாக ஒருங்கிணைத்து அவர்களை சமூக மற்றும் பொருளாதார சுய சார்பு அடையச்செய்து ஆற்றல்படுத்துகிறது. இத்தகைய முயற்சிகளின் காரணமாக பெண்கள் பொது சேவையில் பங்குபெறுவது உயர்ந்து வருகிறது.

### 6.1.1. சுய உதவிக் குழுக்கள்

ஒரே பகுதியில் வசிக்கும் 18 முதல் 60 வயதுக்கு உட்பட்ட 12 முதல் 20 மகளிரை உறுப்பினர்களாகக் கொண்டு சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்படுகின்றன. குழு உறுப்பினர்களிடையே சேமிப்பு பழக்கத்தை ஊக்கப்படுத்துதல் மற்றும் ஒருமித்த முடிவுகள் மூலம் உட்கடன் வழங்குதல் ஆகியவை சுய உதவிக் குழுக்களின் நோக்கமாகும். பொருளாதார சுரண்டலை ஏற்படுத்தக்கூடிய கந்துவட்டிக்காரர்கள், அடகுக்கடைக்காரர்கள் மற்றும் இதர சமுதாய கொடுமைகளிலிருந்து மகளிரை விடுவிப்பதை நோக்கமாகக் கொண்டு, சுய உதவிக் குழுக்களுக்கு சேமிப்பு பழக்கம், முறையான கணக்குப் பதிவேடுகள் பராமரித்தல், வங்கிக்கடன் பெற்றுத்தருதல் மற்றும் கடன்களை திரும்ப செலுத்துதல் ஆகியவற்றில் பயிற்சியும் வழங்கப்படுகிறது.

**அட்டவணை – 6.1**

**சுய உதவிக் குழுக்கள் பற்றிய விவரம்**

| | | |
|---|---|---|
| 1 | சுய உதவிக் குழுக்களின் மொத்த எண்ணிக்கை | 6.30 இலட்சம் |
| | மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை | 95.02 இலட்சம் |

| | | |
|---|---|---|
| 2 | ஊரகப் பகுதி சுய உதவிக் குழுக்களின் எண்ணிக்கை | 4.38 இலட்சம் |
| | மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை | 65.54 இலட்சம் |
| 3 | நகர்ப்புற பகுதி சுய உதவிக் குழுக்களின் எண்ணிக்கை | 1.93 இலட்சம் |
| | மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை | 29.49 இலட்சம் |
| 4 | மொத்த சேமிப்பு | ரூ.6,839.21 கோடி |
| 5 | சுழல் நிதி/ஆதார நிதி பெற்ற சுய உதவிக்குழுக்களின் எண்ணிக்கை | 5.35 இலட்சம் |
| 6 | சுய உதவிக்குழுக்கள் பெற்ற ஒட்டு மொத்த கடன் இணைப்பு | ரூ.44,452.08 கோடி |

## 6.2. தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் என்ற சிறப்பு திட்டத்தினை தமிழ்நாடு அரசு 2012–13 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தி வருகிறது. இந்த திட்டத்தின் செயல்பாடுகளுக்கான நிதி, மத்திய மற்றும் மாநில அரசுகளால் 60:40 என்ற விகிதத்தில் வழங்கப்படுகிறது. ஊரக ஏழை மக்களுக்காக வலுவான மற்றும் துடிப்பான அமைப்புகளை உருவாக்கி, வாழ்வாதாரத்தை உயர்த்தி, நிதி மற்றும் பல்வேறு சேவைகளை முறையாகப் பெற வழிவகை செய்து, குடும்ப வருமானத்தை பெருக்குவதே இவ்வியக்கத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தின் கீழ் சமுதாயத்தில் உள்ள ஏழைகள் மற்றும் நலிவுற்ற பிரிவினர் இலக்கு மக்கள் ஆவர்.

### 6.2.1. தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் முக்கிய அம்சங்கள்

1) பிற திட்டங்களைப் போல் அல்லாது ஏழைகள், நலிவுற்றோர் மற்றும் மாற்றுத்திறனாளிகள் ஆகியோரிடத்து சிறப்பு கவனம் செலுத்துதல்.

2) விடுபட்ட ஏழை மக்களை கண்டறிந்து அவர்களை சுய

உதவிக் குழுவில் ஒருங்கிணைத்தல்.

3) ஊரகப் பகுதிகளில் ஏழைகளைக் கொண்ட சமுதாய நிறுவனங்களை உருவாக்கி வலுப்படுத்துதல்.

4) சமூக மேம்பாட்டிற்கான திறம் வளர்ப்புப் பயிற்சிகளின் மூலம் ஊரக ஏழை மக்களை மேம்பாடு அடையச் செய்தல்.

5) சுய உதவிக் குழு உற்பத்திப் பொருட்களின் தரத்தினை மேம்படுத்தி சந்தைப்படுத்துதலை எளிதாக்குதல்.

6) சுய உதவிக் குழு உறுப்பினர்கள் பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொள்ள அவர்களுக்கு கடன் வழங்கும் பொருட்டு குழுக்களுக்கு நிதியுதவி வழங்குதல்.

7) ஊரக இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புடன் கூடிய திறன்மேம்பாடு பயிற்சி அளித்தல்.

8) அரசுத்துறைகள் மூலம் கிடைக்கப் பெறும் பல்வேறு நிதி மற்றும் நிதி சாரா சேவைகளை ஒருங்கிணைத்து திறம்பட பயன்படுத்திட வழிவகை செய்தல்.

9) கிராமப்புற ஏழை மக்கள் அனைவரும் அடிப்படை வசதிகளைப் பெறக்கூடிய வாய்ப்புகளை உருவாக்குதல், சுகாதாரம் மற்றும் சுற்றுச் சூழலைப் பாதுகாப்பதற்கான பயிற்சிகள் வழங்குதல்.

### 6.2.2. திட்டச் செயலாக்கப் பகுதி

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், சென்னை நீங்கலாக, தமிழ் நாட்டின் 31 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மொத்தமுள்ள 385 வட்டாரங்களில், புதுவாழ்வுத் திட்டம் 120 வட்டாரங்களிலும்,

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மீதமுள்ள **265** வட்டாரங்களிலும் மூன்று கட்டங்களாக செயல்படுத்தப்படுகிறது. அவற்றுள் **4** மாவட்டங்களில் உள்ள **16** வட்டாரங்களில் உலக வங்கி நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் தேசிய ஊரக வாழ்வாதாரத் திட்டமும் (NRLP) அடங்கும்.

**அட்டவணை – 6.2**
**திட்டம் வாரியாக செயல்படுத்தப்படும் வட்டாரங்களின் விபரம்**

| வ. எண் | திட்டம் | மாவட்டங்கள் | வட்டாரங்கள் | பகுதிகள் | ஊராட்சி கள் |
|---|---|---|---|---|---|
| 1 | தேசிய ஊரக வாழ்வாதார திட்டம் – முதற் கட்டம் | 4 | 16 | 48 | 450 |
| 2 | தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் – முதற் கட்டம் | 11 | 44 | 151 | 1800 |
| 3 | தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் – இரண்டாம் கட்டம் | 27 | 110 | 317 | 3391 |
| 4 | தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் – மூன்றாம் கட்டம் | 21 | 95 | 226 | 2451 |
| **மொத்தம்** | | **31** | **265** | **742** | **8,092** |

**முதற் கட்டம்:–** முதல் கட்டத்தின் கீழ் மொத்தமுள்ள **1,873** கிராம ஊராட்சிகளில் **1,800** கிராம ஊராட்சிகள் தமிழ்நாடு ஊரக வாழ்வாதார இயக்கத்தின் மூலமும், **73** கிராம ஊராட்சிகள் சுனாமிக்குப்பின் நிலைத்த வாழ்வாதாரத்

திட்டத்தின் மூலமும், **450** கிராம ஊராட்சிகள் தேசிய ஊரக வாழ்வாதார திட்டத்தின் மூலமும் செயல்படுத்தப்படுகிறது.

**இரண்டாம் கட்டம்:–** 27 மாவட்டங்களிலுள்ள **110** வட்டாரங்களை சார்ந்த **3,491** கிராம ஊராட்சிகளில் **3,391** கிராம ஊராட்சிகள் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார திட்டத்தின் மூலம் **2013–14** ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்படுகிறது. மீதமுள்ள **100** கிராம ஊராட்சிகள் சுனாமிக்குப்பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் மூலம் செயல்படுத்தப்படுகிறது.

**மூன்றாம் கட்டம்:– 2014–15** ஆம் ஆண்டு முதல் **2,451** கிராம ஊராட்சிகளில் இத்திட்டம் மூன்றாம் கட்டமாக செயல்படுத்தப்படுகிறது.

**6.2.3. இயக்க செயலாக்க அமைப்பு**

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தை செயல்படுத்த மாநில இயக்க மேலாண்மை அலகாக, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தை மாநில அரசு நியமித்துள்ளது. இந்த இயக்கத்தின் செயல்பாடுகளுக்கு கொள்கை வடிவிலான வழிகாட்டுதல் மற்றும் திட்டச் செயல்பாடுகளை கண்காணித்தல் பணிகளுக்காக மாண்புமிகு அமைச்சர், நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை மற்றும் சிறப்பு திட்ட செயலாக்கத்துறை அவர்களின் தலைமையில் உயர்நிலை அதிகாரம் பெற்ற குழு அமைக்கப்பட்டுள்ளது. இவ்வியக்கத்தின் இயக்குநராக அரசு கூடுதல் தலைமைச்

செயலர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அவர்களும், முதன்மைச் செயல் அலுவலராக தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநரும் நியமிக்கப்பட்டுள்ளனர். இவ்வியக்கத்தின் நடவடிக்கைகளை செயல்படுத்துவதற்காக மாநில, மாவட்ட, வட்டார மற்றும் தொகுதி அளவில் தனி நிர்வாக அமைப்புகள் அமைக்கப்பட்டுள்ளன.


### 6.2.4. தமிழ்நாடு ஊரக வாழ்வாதார இயக்கத்தின் முக்கிய செயல்பாடுகள்

1) தகவல் கல்வி மற்றும் தொடர்பு செயல்பாடுகள்
2) சுய உதவிக் குழுக்கள் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் நிலவரங்கள் தொடர்பான அடிப்படைத் தகவல் சேகரித்தல் (செயல்பாட்டிலுள்ள, செயலிழந்த மற்றும் கலைந்த குழுக்கள்)
3) மக்கள் நிலை ஆய்வு
4) கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் அமைத்தல்
5) திட்டப் பணியாளர் மற்றும் சமுதாயத்திற்கான திறன் வளர்ப்பு பயிற்சிகள்
6) விடுபட்ட ஏழை மக்களைக் கொண்டு புதிய சுய உதவிக் குழுக்கள் அமைத்தல்
7) கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களுக்கு சமுதாய முதலீட்டு நிதி வழங்குதல்
8) வங்கி இணைப்பின் மூலம் நிதி உள்ளாக்கம்
9) வேலை வாய்ப்புடன் கூடிய திறன் பயிற்சி

10) வாழ்வாதார மேம்பாடு

11) சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்களுக்கு சந்தை வாய்ப்பை மேம்படுத்துதல்

### 6.2.5. வரிசைப்படுத்தப்பட்ட நடவடிக்கைகள்




## 6.3. திட்ட செயல்பாடுகள்

### 6.3.1. தகவல் கல்வி மற்றும் தொடர்பு மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்துதல்

பேரணி, தெரு நாடகங்கள், கலை நிகழ்ச்சிகள், ரதம், சுவர் விளம்பரங்கள், சுவரொட்டிகள், இயக்க தகவல் பலகைகள் மற்றும் துண்டு பிரசுரங்கள் போன்ற பல செயல்பாடுகளின் மூலம் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் அனைத்து கிராமங்களிலும்

விழிப்புணர்வை ஏற்படுத்தி இலக்கு மக்களை கண்டறிவதற்கும் அவர்களை பயன்பெற செய்வதற்கும் வழிவகை செய்கிறது.

### 6.3.2. அடிப்படை விவரக் கணக்கெடுப்பு

புது வாழ்வு திட்ட சமூக வல்லுநர்களைக் கொண்டு, அனைத்து கிராம ஊராட்சிகளிலும் செயல்பாட்டில் உள்ள சுய உதவிக் குழுக்கள், செயலிழந்த மற்றும் கலைந்துவிட்ட சுய உதவிக் குழுக்களின் விவரங்களின் கணக்கெடுப்பு நடத்தப்பட்டது. அனைத்து கிராம ஊராட்சிகளிலும் இந்த அடிப்படை விவரக் கணக்கெடுப்பு முடிக்கப்பட்டுள்ளது. செயல்பாட்டில் இல்லாத சுய உதவிக் குழுக்களை திறன் வளர்ப்பு பயிற்சிகள் மூலமாக மீண்டும் செயல்பாட்டிற்கு கொண்டுவர இப்புள்ளி விவரங்கள் பயன்படுத்தப்படுகிறது.

### 6.3.3. மக்கள் நிலை ஆய்வு

அனைத்து கிராம ஊராட்சிகளிலும் உள்ள ஏழைகள், மிகவும் ஏழைகள், மாற்றுத்திறனாளிகள், நலிவுற்றோர், பழங்குடியினர் மற்றும் விளிம்புநிலை சமூகத்தினரை கண்டறிந்திட அனைத்து சமுதாயத்தினரின் பங்கேற்புடன் கூடிய மக்கள் நிலை ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. ஏழைக் குடும்பங்கள் எதுவும் விடுபடாமல் இருப்பதை உறுதி செய்ய தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வதார இயக்கம், பங்கேற்புடன் கூடிய ஊரக மதிப்பீட்டு முறை மற்றும் பிற யுக்திகளான நடைப்பயணம், சமுதாய வரைபடம், பொருளாதார மதிப்பீடு மற்றும் மூன்று வெவ்வேறு பகுதிகளில் அதனை சரிபார்த்தல்

போன்ற வழிமுறைகளை பின்பற்றி மேற்கொள்ளப்பட்டது. தேர்வு செய்யப்பட்ட இலக்கு மக்கள் பட்டியலை அனைத்து குக்கிராமத்திலுள்ள முக்கியமான இடத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டு, எதிர்ப்புகள் மற்றும் புதியதாக சேர்ப்பது போன்ற விவரங்கள் ஏதேனும் இருப்பின் அவற்றையும் பெற்று இறுதி இலக்கு மக்கள் பட்டியல் கிராம சபையில் ஒப்புதல் பெறப்படுகிறது.

இத்தகைய மக்கள் நிலை ஆய்வு முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் கட்டங்களை சார்ந்த அனைத்து கிராம ஊராட்சிகளிலும் முடிக்கப்பட்டுள்ளது.

### 6.3.4. கிராம வறுமை ஒழிப்புச் சங்கம்

கிராம வறுமை ஒழிப்புச் சங்கம், இலக்கு மக்களை உள்ளடக்கிய ஒரு சுய சார்பு அமைப்பாகவும், கிராம அளவில் இயக்கத்தின் செயல்பாடுகளை நிறைவேற்றுவதற்கு முழுப் பொறுப்பு ஏற்பதோடு கிராம சபைக்கு விளக்கம் அளிக்கக்கூடிய அமைப்பாகவும் திகழ்கிறது. இந்த அமைப்புகள் சமுதாயத்திற்கும், திட்டத்திற்கும் இடையே மிக முக்கிய இணைப்பாக செயல்படுகிறது. ஊராட்சி மன்றத் தலைவர் கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்தின் தலைவராகவும் பதவியில் இருப்பார்.

ஒவ்வொரு கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்திலும் 10 முதல் 20 உறுப்பினர்கள் கீழ்க்கண்டவாறு கிராம சபை ஒப்புதலுடன் தேர்வு செய்யப்படுகின்றனர்.

1. ஒவ்வொரு குடியிருப்பிலும் உள்ள இலக்கு மக்கள் பட்டியலிலிருந்து ஒரு சுய உதவிக் குழு உறுப்பினர்.
2. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின இனத்தவர் 30 விழுக்காடு.
3. மாற்றுத்திறனாளி மற்றும் இளைஞர் பிரதிநிதி ஒருவர்.
4. 50 விழுக்காடு பெண்களாக இருத்தல் வேண்டும்.

இதுவரை மூன்று கட்டங்களை சார்ந்த 8,269 கிராம ஊராட்சிகளிலும் கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

## அட்டவணை 6.3

## வறுமை ஒழிப்புச் சங்கங்களின் விவரங்கள்

| கட்டங்கள் | ஊராட்சிகளின் எண்ணிக்கை | கனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்ட ஊராட்சிகளின் எண்ணிக்கை | பொது கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களின் எண்ணிக்கை | பழங்குடியினர் கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களின் எண்ணிக்கை | மொத்த கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| முதற் கட்ட மாவட்டம் | 2,323 | 73 | 2,250 | 66 | 2,316 |
| இரண்டாம் கட்ட மாவட்டம் | 3,491 | 100 | 3,388 | 85 | 3,473 |
| மூன்றாம் கட்ட மாவட்டம் | 2,499 | 48 | 2,451 | 29 | 2,480 |
| **மொத்தம்** | **8,313** | **221** | **8,089** | **180** | **8,269** |

### 6.3.5. சமுதாய முதலீட்டு நிதி

சுய உதவிக் குழுக்களுக்கு பொருளாதார செயல்பாடுகளுக்காக கடனாக வழங்கப்படும் தொகை சமுதாய முதலீட்டு நிதி.

சமுதாய முதலீட்டு நிதியானது கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களிலிருந்து ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு மாற்றப்பட்டு பிறகு ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளிலிருந்து சுய உதவிக் குழுக்களுக்கு பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக விடுவிக்கப்படுகிறது. சுய உதவிக் குழுவிற்கு அதிகபட்ச தொகையாக ரூ.75,000 வீதம் ஆண்டிற்கு 9% வட்டியுடன் கடனாக வழங்கப்படுகிறது. இத்தொகை சுய உதவிக் குழு உறுப்பினர்களின் வாழ்வாதார மேம்பாட்டிற்காக ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட தவணைகளில் சுய உதவிக் குழு மூலம் கடனாக விடுவிக்கப்படுகிறது.

**சுய உதவிக் குழுக்கள் சமுதாய முதலீட்டு நிதியினை ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளிடமிருந்து பெறுவதற்கான தகுதிகள்**

அ) தரம் பிரித்தலில் வெற்றி பெற்ற சுய உதவிக் குழுக்கள்.

ஆ) வெளிக் கடனை தவணை தவறாமல் முறையாக திரும்ப செலுத்தும் சுய உதவிக் குழுக்கள்.

இ) சுய உதவிக் குழுக்களால் நுண்நிதி திட்டம் தயாரித்திருத்தல்.

ஈ) கடன் பெற தகுதியிருந்தும் வங்கியிலிருந்து கடன் பெற இயலாத சுய உதவிக் குழுக்களுக்கு முன்னுரிமை வழங்குதல்.

உ) புதியதாக அமைக்கப்பட்ட மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வாழ்வாதார திட்டத்திற்காக கடன் வழங்க முன்னுரிமை அளித்தல்.

### 6.3.6 சமூகத் தணிக்கை குழு

கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் அமைக்கப்பட்ட அனைத்து ஊராட்சிகளிலும் சமூகத் தணிக்கை குழு அமைக்கப்பட்டுள்ளது. சமூகத் தணிக்கை குழுவில் 5 முதல் 7 உறுப்பினர்கள் தேர்வு செய்யப்படுகின்றனர். மாற்றத்தகாத கோட்பாடுகளை திட்ட செயலாக்கத்தில் முறையாகப் பின்பற்றப்படுவதை சமூகத் தணிக்கை குழு கண்காணித்து கிராம சபைக்கு அறிக்கை சமர்ப்பிக்கும் நடைமுறை உள்ளது.

### 6.3.7. புதிய சுய உதவிக் குழுக்கள் அமைத்தல்

மக்கள் நிலை ஆய்வின் மூலம் கண்டறிந்த, விடுபட்ட ஏழை மகளிரைக் கொண்டு புதிய சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்படுகின்றன. 2016–17 ஆம் ஆண்டில் 7,839 புதிய சுய உதவிக் குழுக்கள் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தினால் அமைக்கப்பட்டுள்ளப். குழுவிலுள்ள ஊக்குநர் மற்றும் பிரதிநிதிகளுக்கும் மற்றும் குழுவின்

உறுப்பினர்களுக்கும் குழு செயல்பாடுகள் மற்றும் கணக்குப் புத்தகம் பராமரிப்பு பயிற்சியும் வழங்கப்படுகிறது. ஆறு மாதங்கள் முழுமையடைந்த சுய உதவிக் குழுக்கள் தரமதிப்பீடு செய்யப்பட்டு, பொருளாதார செயல்பாடுகளை மேற்கொள்வதற்காக நிதியுதவி வழங்கப்படுகிறது.

### 6.3.8. ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு

சுய உதவிக் குழு இயக்கத்தினை வலுப்படுத்தி பல்வேறு நிதி சார்ந்த மற்றும் இதர சேவைகளை சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கி வழி நடத்திட ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு ஒரு சமுதாயம் சார்ந்த அமைப்பாக உருவாக்கப்பட்டுள்ளது. இந்த ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம் 1975ன் கீழ் பதிவு பெற்ற அமைப்பாகும். சுய உதவிக் குழுக்களின் பொருளாதார மேம்பாட்டிற்கு ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் அடிப்படைத் தளமாக விளங்கும்.

## 6.4. திறன் வளர்ப்பு

### 6.4.1. திட்டப் பணியாளர்களுக்கான பயிற்சிகள்

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் அதன் திட்டக் கூறுகள் மற்றும் கோட்பாடுகளை பணியாளர்கள் அறிந்து கொள்ளவும் மற்றும் சீரான முறையில் செயல்படுத்தவும் திட்டம் குறித்த பல்வேறு பயிற்சிகளை கீழ் கண்டவாறு வழங்குகிறது:

- தூண்டல் பயிற்சி I

- தூண்டல் பயிற்சி II
- கருப்பொருள் சார்ந்த பயிற்சி

### 6.4.2. சமுதாய அடிப்படையிலான அமைப்புகள்

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், சமுதாய அளவில் கவனம் செலுத்தி, ஏழை நல அமைப்புகளின் திறனை அறிந்து அவற்றை வலுப்படுத்தும் வகையில் செயல்படுகிறது. மேலும் சமுதாய அடிப்படையிலான அமைப்புகளின் ஆளுமை திறன், நிதி மேலாண்மை மற்றும் கூட்டு முயற்சி ஆகியவற்றையும் மேம்படுத்திட பயிற்சி அளிக்கப்படுகிறது.

வழங்கப்படும் சில பயிற்சிகளின் விவரங்கள் பின்வருமாறு:

- சமுதாய செயல்பாட்டிற்கான விளக்கக் கையேடு குறித்து கிராம வறுமை ஒழிப்புச் சங்க உறுப்பினர்களுக்கான பயிற்சி.
- புதிதாக உருவாக்கப்பட்ட சுய உதவிக் குழுக்களுக்கு ஊக்குநர் மற்றும் பிரதிநிதிகளுக்கான பயிற்சி மற்றும் குழு உறுப்பினர்களுக்கான பயிற்சி.
- ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு நிர்வாகிகளுக்கு, நிர்வாகம் மற்றும் நிதி மேலாண்மை சார்ந்த பயிற்சி.
- ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் செயற்குழு உறுப்பினர்களுக்கான பயிற்சி.
- ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் துணைக் குழுக்களுக்கும், குடியிருப்பு அளவிலான

கூட்டமைப்பின் நிர்வாகிகளுக்கான பயிற்சி மற்றும் சமூகத் தணிக்கை குழு உறுப்பினர்களுக்கான பயிற்சி.

### 6.4.3. முதன்மைப் பயிற்றுநர்கள் மற்றும் சமுதாய வளப் பயிற்றுநர்களை உருவாக்குதல்

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் பல்வேறு கருப்பொருள்களில் வள பயிற்றுநர்களை உருவாக்குவதற்காக பயிற்றுநர்களுக்கான பயிற்சிகளை வழங்கி அவர்களை பயிற்சியாளர்களாக பட்டியலிட்டுள்ளது. இத்திட்டத்தினை செயல்படுத்தும் வகையில் மாவட்ட, மாநில, வட்டார அளவில் சமுதாய வள பயிற்றுநர்களை தேர்ந்தெடுத்து அவர்களை முதன்மை பயிற்றுநர்களாக உருவாக்குவதற்காக பல்வேறு வகையான பயிற்சிகளை முனைப்புடன் செயல்படுத்துகிறது.

சமுதாய வளப் பயிற்றுநர் மற்றும் சமுதாய வள உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் பயிற்சிகள் பற்றிய விவரங்கள் பின்வருமாறு:

**சமுதாய சுய உதவிக்குழு பயிற்றுநர்கள் –** ஒவ்வொரு 10 முதல் 15 சுய உதவிக் குழுக்களுக்கு ஒரு சமுதாய சுய உதவிக் குழு பயிற்றுநர் என்ற விகிதத்தில் பயிற்றுநர்களை கிராம அளவில் கண்டறிந்து பயிற்றுவித்தல்.

**சமுதாய வல்லுநர் (வேலைவாய்ப்பு) –** இளைஞர்களுக்கான பல்வேறு திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளை கண்காணித்திட ஊராட்சிக்கு ஒருவர் என்ற அளவில், இளைஞர்களை கண்டறிந்து அவர்கள் சமுதாய வல்லுநர்களாக

உருவாக்கப்படுகின்றனர். அவர்கள் ஊராட்சியிலுள்ள இளைஞர்களின் புள்ளிவிவரங்களை பராமரித்து பல்வேறு திறன் வளர்ப்பு பயிற்சிகளுக்காக தகுதியான இளைஞர்களை தேர்ந்தெடுக்கின்றனர்.

**சமுதாய மாற்றுத்திறனாளிகளுக்கான வழிநடத்துநர் –** மாற்றுத்திறனாளிகளின் சிறப்புத் தேவைகளை அவர்களுக்கு பெற்றுத்தந்திடும் பொருட்டு ஒரு ஊராட்சிக்கு ஒருவர் என்ற விகிதத்தில், மாற்றுத்திறனாளிகள் பற்றிய புள்ளி விவரங்களை பராமரிக்கவும், அவர்களின் தேவையை கண்டறியவும் மற்றும் இதர அரசுத்துறை நிறுவனங்களுடன் இணைந்து செயல்பட்டு பல்வேறு திட்டப் பயன்களை மாற்றுத்திறனாளிகள் ஒருங்கிணைந்து பெற்றிடவும், சமுதாய மாற்றுத்திறனாளிகளுக்கான வழிநடத்துநர்களுக்கு பயிற்சி வழங்கப்படுகிறது.

**சமுதாய வங்கி ஒருங்கிணைப்பாளர் –** ஒரு தொகுப்பிற்கு 4 நபர்கள் வீதம் சுய உதவிக் குழுக்களிலிருந்து, சமுதாய வங்கி ஒருங்கிணைப்பாளர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். அவர்களுக்கு வங்கி மற்றும் சுய உதவிக் குழுக்களுக்கு இடையே இணைப்பை ஏற்படுத்துதல், உறுப்பினர்களுக்கு கடன் பெற வழிகாட்டுதல், கடன் திரும்ப செலுத்துதல் மற்றும் காப்பீடு ஆகியவற்றில் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. அத்துடன் நிதி சார்ந்த கல்வியறிவு மற்றும் ரொக்கமில்லா பணப் பரிவர்த்தனை சார்ந்த கருத்துக்கள் பற்றி சுய உதவிக்குழுக்களுக்கு எடுத்துரைக்கும் பொருட்டு பயிற்சிகள் வழங்கப்படுகின்றது.

**6.4.4 வங்கியாளர்கள்**

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் நிதி உள்ளாக்கத்திற்கு பல்வேறு நிலைகளில் முக்கியத்துவம் வழங்கி வருகிறது. மாவட்ட வாரியாக சுய உதவிக்குழு வங்கி இணைப்பு, நிதி உள்ளாக்கம் மற்றும் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் குறித்த பயிற்சிகள் வழங்கிட பயிற்சியாளர்கள் உருவாக்கப்பட்டு மாவட்ட மற்றும் வட்டார அளவில் வங்கியாளர்களுக்கான கூட்டங்கள் நடத்தப்படுகின்றன.

**6.4.5. 2016–17 ஆம் ஆண்டின் திறன் வளர்ப்பு செயல்பாடுகள்:**

- **1,64,860** கிராம வறுமை ஒழிப்புச் சங்க உறுப்பினர்களுக்கு இயக்க வழிகாட்டி கையேடு குறித்த பயிற்சி முதல் 4 தொகுதிகளில் வழங்கப்பட்டுள்ளது.
- மூன்றாம் கட்ட வட்டாரங்களில் அமைக்கப்பட்ட **7,569** சுய உதவிக் குழுக்களுக்கு ஊக்குநர் மற்றும் பிரதிநிதிகளுக்கான பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.
- மூன்றாம் கட்ட வட்டாரங்களில் அமைக்கப்பட்ட **7,558** சுய உதவிக் குழுக்களுக்கு உறுப்பினர்களுக்கான பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.
- **4,803** வங்கியாளர்கள், சமுதாய வங்கி ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு அலுவலக நிர்வாகிகள் நிதி உள்ளாக்கம் குறித்த பயிற்சி பெற்றுள்ளனர்.

- தேசிய ஊரக வாழ்வாதார திட்டத்தின் கீழ் செயல்படும் 4 மாவட்டங்களில் உள்ள 458 ஊராட்சி அளவிலான கூட்டமைப்பிலுள்ள அனைத்து அலுவலக நிர்வாகிகளும் கூட்டமைப்பு தொடர்பான பயிற்சிகளைப் பெற்றுள்ளனர்.
- 845 கிராம வறுமை ஒழிப்புச் சங்க உறுப்பினர்கள் புத்தகப் பராமரிப்பு குறித்த பயிற்சி பெற்றுள்ளனர்.

## 6.5. திறன் மற்றும் பணியமர்வு பயிற்சி திட்டம்

### 6.5.1. வேலைவாய்ப்புடன் கூடிய திறன் பயிற்சி

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கமானது வரும் 2023 ஆம் ஆண்டிற்குள் தமிழ்நாட்டை ஊரகப் பகுதியிலுள்ள ஏழை எளிய இளைஞர்கள் அனைவருக்கும் திறன் மேம்பாட்டு பயிற்சி அளிப்பதின் வாயிலாக ஒரு திறன் பெற்ற மாநிலமாக மாற்ற திட்டமிடப்பட்டுள்ளது. தீன் தயாள் உபாத்தியாய கிராமின் கௌசல்யா யோஜனா திட்டமானது 2012–13 ஆம் ஆண்டிலிருந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டமானது மத்திய மற்றும் மாநில அரசுகளால் 60:40 என்ற விகிதத்தில் நிதி பங்களிப்புடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மாநில அரசானது இத்திட்டத்தை மத்திய ஊரக வளர்ச்சி அமைச்சகத்தின் மூலம் நிரந்தர பதிவெண் பெற்ற பொது மற்றும் தனியார் நிறுவனங்களின் பங்களிப்போடு செயல்படுத்தி வருகிறது.

மாநிலத்தில் கீழ்க்கண்ட முக்கிய பிரிவுகளில் திறன் மேம்பாடு பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

| | |
|---|---|
| ஆட்டோ மொபைல் | விருந்தோம்பல் |
| சுகாதாரம் | மின் மற்றும் மின்னணு |
| தோல் மற்றும் தோல் பொருட்கள் | கட்டுமானம் |
| தகவல் தொழில்நுட்பம் | விவசாய உபகரணங்கள் பராமரிப்பு |
| சில்லறை வர்த்தகம் | வெல்டிங் |
| ஆயத்த ஆடைகள் | தொழிற்சாலைகளில் உற்பத்தி சம்பந்தமானவை |

**திறன் பயிற்சியின் தனித்துவ சிறப்பம்சங்கள்:**

1. சந்தை தேவையின் அடிப்படையிலும், வேலைவாய்ப்புடன் கூடியதாகவும் திறன் பயிற்சிகள் நடத்தப்படுகிறது.
2. பயிற்சி பெற்றவர்களில் குறைந்தது 70% இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பிற்கான உத்தரவாதம்.
3. வேலைவாய்ப்புச் சந்தையிலுள்ள தொழில் மற்றும் திறன் தேவைகளுக்கு ஏற்ப பயிற்சியானது 3 முதல் 12 மாதங்கள் வரை வழங்கப்படுகிறது.
4. பயிற்சிகளானது உண்டு உறைவிட பயிற்சியாகவும் அவை அல்லாமலும் வழங்கப்பட்டு வருகிறது.
5. ஊரகப் பகுதியில் உள்ள ஏழை குடும்பங்களில் உள்ள 18 முதல் 35 வயது வரையிலான ஆண், பெண் இருபாலரும் இப்பயிற்சிக்கு தகுதியானவர்களாக கருதப்படுவார்கள். (பெண்கள், பழங்குடியினர், விதவைகள்,

கொத்தடிமை முறையிலிருந்து மீட்கப்பட்டவர்கள். மற்றும் திருநங்கைகள் ஆகியவர்களுக்கான அதிகபட்ச வயது வரம்பு 45 ஆகும்).

6. சமூக உள்ளாக்கத்தின் கீழ் சமுதாயத்தில் பின்தங்கிய பிரிவினர்களுக்கான ஒதுக்கீடு கட்டாயமாக்கப்பட்டுள்ளது (அட்டவணை வகுப்பினர் 50%, சிறுபான்மையினர் 15%, மாற்றுத்திறனாளிகள் 3%, பெண்கள் (அனைத்து பிரிவுகளையும் உள்ளடக்கி) –33%
7. ஆங்கிலத்தில் பேசுதல், அடிப்படை கணினி அறிவு, மென் திறன் மற்றும் வேலை சார்ந்த பயிற்சிகள் போன்ற கள அறிவு மற்றும் கள அறிவு சாராதவைகளும் பயிற்சி திட்டங்களுக்குள் உள்ளடங்கியதாகும்.
8. பயிற்சியில் தேர்ச்சியுற்ற மாணவர்களுக்கு அரசு சான்றிதழ்கள் தேசிய தொழிற்சார் பயிற்சி கவுன்சில் (NCVT) மற்றும் துறை திறன் கவுன்சில் (SSC) மூலம் வழங்கப்படுகிறது.
9. இத்திட்டப் பயனாளிகள் பயிற்சிக்குப் பின்னர் குறைந்தபட்ச மாத வருமானம் ரூ.6000 அல்லது மாநிலத்தில் நிர்ணயிக்கப்பட்ட குறைந்தபட்சம் ஊதியம் பெறுகின்றனர்.
10. பயிற்சிக்கு பின் வேலைவாய்ப்பு, பணி முன்னேற்றம் மற்றும் இடப்பெயர்வு ஆதரவு மையம் (Migration Support Centre).

11. உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் வேலைவாய்ப்பு கிடைத்திட வழிவகை செய்கிறது.
12. இளைஞர்கள் வேலைவாய்ப்பு பெற்ற பின்னரும் பணியில் தொடர்ந்து நீடிப்பதை உறுதி செய்ய ஒரு வருடத்திற்கு கண்காணிப்பு செய்யப்படுகிறது.
13. பெற்றோர்களுக்கு இளைஞர்கள் மேம்பாடு சம்பந்தமாக ஆலோசனை வழங்கப்படுகிறது.

## அட்டவணை 6.4
## மாவட்ட வாரியாக கிராமப்புற இளைஞர்களுக்கான திறன் வளர்ப்பு இலக்கு மற்றும் சாதனை 2012 – 13 முதல் 2015–16 வரை )

| வ. எண் | மாவட்டம் | இலக்கு | முடிவுற்றது | பணி அமர்த்தப்பட்ட நபர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1 | அரியலூர் | 285 | 285 | 221 |
| 2 | கோயம்புத்தூர் | 2,245 | 2,245 | 1,753 |
| 3 | கடலூர் | 1,560 | 1,560 | 1,288 |
| 4 | தர்மபுரி | 325 | 325 | 282 |
| 5 | திண்டுக்கல் | 1,180 | 1,180 | 910 |
| 6 | ஈரோடு | 1,745 | 1,745 | 1,509 |
| 7 | காஞ்சிபுரம் | 1,914 | 1,914 | 1,308 |
| 8 | கன்னியாகுமரி | 620 | 620 | 330 |
| 9 | கரூர் | 510 | 510 | 445 |
| 10 | கிருஷ்ணகிரி | 960 | 900 | 739 |
| 11 | மதுரை | 660 | 660 | 302 |
| 12 | நாகப்பட்டினம் | 907 | 907 | 716 |
| 13 | நாமக்கல் | 1,156 | 1,156 | 913 |
| 14 | நீலகிரி | 345 | 345 | 271 |
| 15 | பெரம்பலூர் | 492 | 492 | 414 |
| 16 | புதுக்கோட்டை | 1,410 | 1,410 | 1,067 |
| 17 | இராமநாதபுரம் | 1,200 | 1,200 | 946 |
| 18 | சேலம் | 1,055 | 939 | 662 |
| 19 | சிவகங்கை | 840 | 840 | 709 |

| வ. எண் | மாவட்டம் | இலக்கு | முடிவுற்றது | பணி அமர்த்தப்பட்ட நபர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 20 | திருவண்ணாமலை | 1,910 | 1,910 | 1,614 |
| 21 | தஞ்சாவூர் | 1,533 | 1,513 | 1,166 |
| 22 | தேனி | 613 | 613 | 533 |
| 23 | திருவள்ளூர் | 1,720 | 1,720 | 1,377 |
| 24 | தூத்துக்குடி | 150 | 150 | 42 |
| 25 | திருநெல்வேலி | 980 | 980 | 650 |
| 26 | திருப்பூர் | 2,850 | 2,850 | 2,553 |
| 27 | திருவாரூர் | 745 | 745 | 506 |
| 28 | திருச்சி | 1,060 | 1,060 | 642 |
| 29 | வேலூர் | 2,340 | 2,340 | 1,637 |
| 30 | விழுப்புரம் | 1,775 | 1,745 | 1,420 |
| 31 | விருதுநகர் | 1,570 | 1,570 | 1,302 |
| புதுவாழ்வுத் திட்டம் | | 3,600 | 3,600 | 2,940 |
| மொத்தம் | | 40,255 | 40,029 | 31,167* |

* மீதமுள்ள இளைஞர்களுக்கு சம்மந்தப்பட்ட பயிற்சி நிறுவனங்கள் மூலம் வேலையில் அமர்த்திட நடவடிக்கைமேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## அட்டவணை 6.5
## திறன் மற்றும் பணியமர்வு திட்டத்தின் கீழ் தொழில் வாரியான இலக்கு மற்றும் சாதனை (2012–13 முதல் 2015–16 வரை)

| வ. எண் | தொழில் வர்த்தகம் | பயிற்சி பெற்றவர்கள் | பணியமர்வு செய்யப்பட்டவர்கள் |
|---|---|---|---|
| 1 | தொழில்கள் | 3,783 | 2,934 |
| 2 | தகவல்தொழில்நுட்பம் | 12,876 | 10,957 |
| 3 | ஆடைகள்மற்றும் ஆயத்த ஆடை | 9,423 | 7,273 |
| 4 | விருந்தோம்பல் | 2,837 | 2,134 |
| 5 | கட்டுமானம் | 771 | 573 |
| 6 | ஆட்டோமொபைல் | 3,938 | 2,717 |
| 7 | அழகு, கலை | 786 | 653 |
| 8 | தீ மற்றும் பாதுகாப்பு | 8 | 7 |
| 9 | சுகாதாரம் | 1,539 | 1,247 |
| 10 | சில்லறைவணிகம் | 1,683 | 1,153 |

| | | | |
|---|---|---|---|
| 11 | தோல் பொருட்கள் | 270 | 233 |
| 12 | ஓட்டுநர் | 2,115 | 1,286 |
| **மொத்தம்** | | **40,029** | **31,167** |

இது வரை **20,859** இளைஞர்களுக்கு திறன் பயிற்சிகள் வழங்கப்பட்டு, இதுவரை **15,839** இளைஞர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

## 6.5.2. வேலை வாய்ப்பு முகாம் வாயிலான பணியமர்வு

வேலை தேடுபவர்களுக்கும் வேலை வழங்குபவர்களுக்கும் ஒரு தொடர்பை ஏற்படுத்திட தீன் தயாள் உபாத்தியாய கிராமின் கௌசல்யா யோஜனா திட்டத்தின் கீழ் வட்டார மற்றும் மாவட்ட அளவிலான வேலை வாய்ப்பு முகாம்கள் நடத்தப்படுகிறது. வேலை வாய்ப்பு முகாம்கள் நடைபெறும் இடம், தேதி மற்றும் பங்கேற்கும் நிறுவனங்களின் விபரங்கள் ஆகியவை மாவட்ட நிர்வாகத்தினால் பல்வேறு தகவல் தொடர்பு முறைகளின் வாயிலாக பொது மக்களிடையே தெரிவிக்கப்படுகிறது.

வேலை வாய்ப்பு முகாம்களின் போது பங்கேற்கும் நிறுவனங்கள், இளைஞர்கள் வேலையில் சேர்ந்த பிறகு அவர்களுக்கு வழங்கப்படும் சலுகைகள் மற்றும் பயன்கள் பற்றிய விவரங்களை தெரிவிக்கின்றன. ஒவ்வொரு இளைஞரின் தகுதிக்கும், ஆர்வத்திற்கும் ஏற்ற சரியான வேலையை தேர்ந்தெடுக்க இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு முகாம்களிலேயே தனியாக அறிவுரை பகர்தல் / வழிகாட்டுதல் வழங்கப்படுகிறது.

2015–16 ஆம் ஆண்டில் 190 வேலை வாய்ப்பு முகாம்கள் நடத்தப்பட்டு 68,180 இளைஞர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர். 2016–17 ஆம் ஆண்டில் வட்டாரத்திற்கு ஒன்று வீதம் 385 வேலை வாய்ப்பு முகாம்கள் நடத்திட இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டு அதில் நாளதுவரை 328 வட்டாரங்களில் வேலை வாய்ப்பு முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன. இம்முகாம்களின் வாயிலாக 24,850 இளைஞர்கள் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்க பகுதிகளிலும் 7,177 இளைஞர்கள் புதுவாழ்வு திட்டத்தின் பகுதிகளிலும் பல்வேறு நிறுவனங்களில் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

## அட்டவணை 6.6
## வேலைவாய்ப்பு முகாம்கள் 2016–17

| வ. எண் | மாவட்டம் | தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் | | | புதுவாழ்வு திட்டம் | | | மொத்தம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | நடத்தப்பட்ட வேலை வாய்ப்பு முகாம்களின் எண்ணிக்கை | பூர்த்தி செய்யப்பட்ட வட்டாரங்களின் எண்ணிக்கை | பணியமர்த்தப்பட்ட நபர்களின் எண்ணிக்கை | நடத்தப்பட்ட வேலை வாய்ப்பு முகாம்களின் எண்ணிக்கை | பூர்த்தி செய்யப்பட்ட வட்டாரங்களின் எண்ணிக்கை | பணியமர்த்தப்பட்ட நபர்களின் எண்ணிக்கை | நடத்தப்பட்ட வேலை வாய்ப்பு முகாம்களின் எண்ணிக்கை | பூர்த்தி செய்யப்பட்ட வட்டாரங்களின் எண்ணிக்கை | பணியமர்த்தப்பட்ட நபர்களின் எண்ணிக்கை |
| 1 | அரியலூர் | 2 | 4 | 377 | 3 | 2 | 312 | 5 | 6 | 689 |
| 2 | கோயம்புத்தூர் | 2 | 4 | 232 | 3 | 2 | 316 | 5 | 6 | 548 |
| 3 | கடலூர் | 4 | 8 | 982 | 4 | 2 | 298 | 8 | 10 | 1,280 |
| 4 | தர்மபுரி | 3 | 3 | 60 | 4 | 3 | 298 | 7 | 6 | 358 |
| 5 | திண்டுக்கல் | 4 | 10 | 585 | 3 | 2 | 213 | 7 | 12 | 798 |
| 6 | ஈரோடு | 7 | 12 | 2,321 | 0 | 0 | 0 | 7 | 12 | 2,321 |
| 7 | காஞ்சிபுரம் | 2 | 4 | 601 | 7 | 3 | 487 | 9 | 7 | 1,088 |
| 8 | கன்னியாகுமரி | 3 | 9 | 512 | 0 | 0 | 0 | 3 | 9 | 512 |
| 9 | கரூர் | 2 | 8 | 35 | 3 | 3 | 265 | 5 | 11 | 300 |
| 10 | கிருஷ்ணகிரி | 4 | 7 | 534 | 3 | 3 | 294 | 7 | 10 | 828 |
| 11 | மதுரை | 5 | 10 | 154 | 3 | 3 | 301 | 8 | 13 | 455 |
| 12 | நாகப்பட்டினம் | 3 | 10 | 846 | 3 | 2 | 296 | 6 | 12 | 1,142 |
| 13 | நாமக்கல் | 6 | 15 | 957 | 3 | 3 | 302 | 9 | 18 | 1,259 |
| 14 | நீலகிரி | 4 | 4 | 495 | 0 | 0 | 0 | 4 | 4 | 495 |

| வ. எண் | மாவட்டம் | தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் | | | புதுவாழ்வு திட்டம் | | | மொத்தம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | நடத்தப்பட்ட வேலை வாய்ப்பு முகாம்களின் எண்ணிக்கை | பூர்த்தி செய்யப்பட்ட வட்டாரங்களின் எண்ணிக்கை | பணியமர்த்தப்பட்ட நபர்களின் எண்ணிக்கை | நடத்தப்பட்ட வேலை வாய்ப்பு முகாம்களின் எண்ணிக்கை | பூர்த்தி செய்யப்பட்ட வட்டாரங்களின் எண்ணிக்கை | பணியமர்த்தப்பட்ட நபர்களின் எண்ணிக்கை | நடத்தப்பட்ட வேலை வாய்ப்பு முகாம்களின் எண்ணிக்கை | பூர்த்தி செய்யப்பட்ட வட்டாரங்களின் எண்ணிக்கை | பணியமர்த்தப்பட்ட நபர்களின் எண்ணிக்கை |
| 15 | பெரம்பலூர் | 1 | 4 | 83 | 3 | 2 | 287 | 4 | 6 | 370 |
| 16 | புதுக்கோட்டை | 2 | 9 | 408 | 3 | 2 | 296 | 5 | 11 | 704 |
| 17 | இராமநாதபுரம் | 1 | 3 | 160 | 4 | 2 | 253 | 5 | 5 | 413 |
| 18 | சேலம் | 5 | 10 | 1,317 | 3 | 2 | 265 | 8 | 12 | 1,582 |
| 19 | சிவகங்கை | 3 | 8 | 782 | 3 | 3 | 312 | 6 | 11 | 1,094 |
| 20 | திருவண்ணாமலை | 6 | 11 | 1,054 | 2 | 3 | 136 | 8 | 14 | 1,190 |
| 21 | தஞ்சாவூர் | 3 | 9 | 534 | 0 | 0 | 0 | 3 | 9 | 534 |
| 22 | தேனி | 3 | 5 | 301 | 3 | 2 | 238 | 6 | 7 | 539 |
| 23 | திருவள்ளூர் | 3 | 10 | 376 | 5 | 3 | 357 | 8 | 13 | 733 |
| 24 | திருவாரூர் | 8 | 10 | 700 | 3 | 2 | 205 | 11 | 12 | 905 |
| 25 | தூத்துக்குடி | 3 | 12 | 1,108 | 4 | 2 | 275 | 7 | 14 | 1,383 |
| 26 | திருநெல்வேலி | 6 | 12 | 785 | 4 | 3 | 287 | 10 | 15 | 1,072 |
| 27 | திருப்பூர் | 6 | 11 | 804 | 0 | 0 | 0 | 6 | 11 | 804 |
| 28 | திருச்சி | 6 | 12 | 869 | 0 | 0 | 0 | 6 | 12 | 869 |
| 29 | வேலூர் | 4 | 17 | 2,032 | 3 | 3 | 258 | 7 | 20 | 2,290 |
| 30 | விழுப்புரம் | 1 | 4 | 4,531 | 3 | 2 | 274 | 4 | 6 | 4,805 |
| 31 | விருதுநகர் | 3 | 11 | 315 | 3 | 3 | 352 | 6 | 14 | 667 |
| | **மொத்தம்** | **115** | **266** | **24,850** | **85** | **62** | **7,177** | **200** | **328** | **32,027** |

# அட்டவணை 6.7
# வேலை வாய்ப்பு முகாம்கள் மூலம் வேலை வழங்கப்பட்ட பிரிவு வாரியான பட்டியல் 2016–17

| வ. எண் | தொழிலின் பெயர் | பணி அமர்த்தப்பட்ட நபர்களின் எண்ணிக்கை | | |
|---|---|---|---|---|
| | | தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் | புது வாழ்வு திட்டம் | மொத்தம் |
| 1 | கைபேசி ஒருங்கிணைத்தல் | 644 | 32 | 676 |
| 2 | ềணினி | 1,607 | 218 | 1,825 |
| 3 | கட்டிடப் பணி | 1,192 | 420 | 1,612 |
| 4 | ஆயத்த ஆடைகள் | 5,172 | 2,213 | 7,385 |
| 5 | தொழில் நிறுவனங்கள் | 3,101 | 2,588 | 5,689 |
| 6 | ஓட்டுநர் | 907 | 1,042 | 1,949 |
| 7 | மருத்துவ பயன்பாடுகள் | 848 | 5 | 853 |

| வ. எண் | தொழிலின் பெயர் | பணி அமர்த்தப்பட்ட நபர்களின் எண்ணிக்கை | | |
|---|---|---|---|---|
| | | தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் | புது வாழ்வு திட்டம் | மொத்தம் |
| 8 | அழகுக்கலை | 12 | 11 | 23 |
| 9 | கோழி வளர்ப்பு | 9 | 0 | 9 |
| 10 | சமையல் கலை | 347 | 312 | 659 |
| 11 | சில்லறை வர்த்தகம் | 2,245 | 75 | 2,320 |
| 12 | சேவை சார்பு | 1,932 | 0 | 1932 |
| 13 | பொதுவான தொழில்கள் | 6,834 | 261 | 7,095 |
| | **மொத்தம்** | **24,850** | **7,177** | **32,027** |

## 6.6. நிதி உள்ளாக்கம்

### 6.6.1. சுய உதவிக் குழுக்களுக்கு ஆதார நிதி

மூன்று மாதம் முடிவு பெற்று தரமதிப்பீடு செய்யப்பட்ட சுய உதவிக் குழுக்களுக்கு ஒரு சிறிய தொகையாக ரூ.15,000 வீதம் ஆதார நிதி வழங்கப்படுகிறது. இந்த ஆதார நிதியானது அவர்களை ஊக்குவிப்பதற்கு ஒரு காரணியாகவும், அவர்களின் சேமிப்போடு தொகுப்பு நிதியை அதிகப்படுத்தி அதிகமான உறுப்பினர்கள் உட்கடனை பெறுவதற்கும் வழிவகை செய்கிறது.

### 6.6.2. சுய உதவிக் குழு – வங்கி இணைப்பு

சுய உதவிக் குழு வங்கி இணைப்பு திட்டத்தில் அகில இந்திய அளவில் தமிழ்நாடு ஒரு சிறந்த மாநிலமாக திகழ்கிறது. போதுமான கடனுதவியை உரிய நேரத்தில் குறைந்த வட்டி விகிதத்தில் வழங்குவதன் வாயிலாக பெண்களை பொருளாதாரத்தில் அதிகாரப்படுத்த வழிவகை செய்கிறது.

2016–17 ஆம் ஆண்டில் வங்கிக் கடன் இணைப்பு இலக்காக 6,000 கோடி ரூபாய் நிர்ணயம் செய்யப்பட்டு 2,16,738 சுய உதவிக் குழுக்களுக்கு 6,387.52 கோடி ரூபாய் எய்தப்பட்டுள்ளது. கடந்த 6 ஆண்டுகளில் மட்டும் 32,848.25 கோடி ரூபாய் வங்கிகளின் மூலமாக சுய உதவிக் குழுக்களுக்கு கடனாக வழங்கப்பட்டுள்ளது.

**6.6.3. சுய உதவிக் குழுக்களுக்கு வட்டி மானியம்**

வட்டி மானிய திட்டம் மத்திய அரசால் தர்மபுரி, வேலூர், விழுப்புரம், திருவண்ணாமலை, கடலூர், நாகப்பட்டினம், தஞ்சாவூர், திருச்சி மற்றும் திண்டுக்கல் ஆகிய 9 மாவட்டங்களில் நேரடியாக செயல்படுத்தப்படுகிறது. மீதமுள்ள 22 மாவட்டங்களில் இத்திட்டம் தமிழ்நாடு அரசால் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மூலம் செயல்படுத்தப்படுகிறது. மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிகளிடமிருந்து பெறப்படும் 3 லட்சம் ரூபாய் வரையிலான கடன் தொகையின் மீது 7 விழுக்காட்டிற்கு மேல் விதிக்கப்படும் வட்டித் தொகையில் அதிகபட்சமாக 5.5 விழுக்காடு வரை வட்டி மானியமாக மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கப்படுகிறது. இதுவரை பொதுத்துறை வங்கிகள், வட்டார கிராம வங்கிகள், மற்றும் மத்திய கூட்டுறவு வங்கிகளின் மூலம் கடன் பெற்ற 1,19,920 சுய உதவிக் குழுக்களுக்கு 25.85 கோடி ரூபாய் வட்டி மானியத் தொகையாக விடுவிக்கப்பட்டுள்ளது. 2016–17ஆம் ஆண்டு, 6,606 சுய உதவிக் குழுக்களுக்கு வட்டி மானியத்

தொகையாக 0.99 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. தனியார் வங்கிகள் மற்றும் விவசாய கூட்டுறவு சங்கங்கள் மூலம் வழங்கப்படும் சுய உதவிக் குழுக்களுக்கான கடன்களையும் வட்டி மானியத் திட்டத்தில் சேர்த்து பயன் பெற ஏதுவாக மாநில அரசால் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### 6.6.4. ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கான பெருங்கடன்

சுய உதவிக் குழுக்களின் வளரும் தேவைகளையும் மற்றும் அவர்களுடைய நிதி ஆதாரங்களையும் இணைக்கும் வகையில், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் வங்கியிடமிருந்து பெருங்கடனைப் பெற்று தேவையான கடன் வசதிகளை வழங்குவதை உறுதி செய்கிறது. கடந்த 6 ஆண்டுகளில் 563 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு பல்வேறு வங்கிகள் மூலம் பெருங்கடனாக 129.04 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. 2016–17 ஆம் ஆண்டு 42 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு 14.92 கோடி ரூபாய் பெருங்கடன் வழங்கப்பட்டுள்ளது.

## 6.7. வாழ்வாதார மேம்பாடு

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும் உள்ள பண்ணை மற்றும் பண்ணை சாரா தொழிலில் ஈடுபடும் மகளிரின் வருமானத்தை அதிகப்படுத்தும் பொருட்டு பல்வேறு

வாழ்வாதார நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. அவை பின்வருமாறு:

### 6.7.1. பண்ணைத் தொழில் (Farm Activity) முதன்மை உற்பத்தியாளர் குழு:

விவசாயத்தில் ஒரே வகையான பயிர் சாகுபடி செய்யும் 30 மகளிரை ஒருங்கிணைத்து முதன்மை உற்பத்தியாளர் குழு அமைக்கப்படுகிறது. பயிர் உற்பத்திக் குழுக்களைப் போலவே ஆடு வளர்ப்பு மற்றும் மாடு வளர்ப்பு மகளிரையும் ஒருங்கிணைத்து உற்பத்தியாளர் குழுக்கள் அமைக்கப்படுகின்றன.

இக்குழு உறுப்பினர்களுக்கு, அவர்கள் விளைவிக்கும் பயிருக்கு ஏற்றாற்போலும் மற்றும் அவர்கள் வாழும் பகுதிக்கு ஏற்றாற்போலும் (Crop and area specific) திறன் பயிற்சி மற்றும் நவீன தொழில்நுட்ப பயிற்சிகள், வேளாண் மற்றும் பிற துறை அலுவலர்களைக் கொண்டு நடத்தப்படுகிறது.

மேலும், ஒவ்வொரு குழுவிற்கும், தேவையான பொது வசதிகளான விவசாயக் கருவிகள், விதைகள், மருந்துகள் போன்ற இடு பொருள்கள் கொள்முதல் செய்தல் மற்றும் சந்தை வாய்ப்பு உருவாக்கம் ஆகியவற்றிற்காக ரூ.30,000 நிதி உதவி அளிக்கப்படுகிறது. இத்திட்டம், 758 கிராம ஊராட்சிகளில் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் மொத்தம் 22,740 மகளிர் பயன்பெறுவர்.

### 6.7.2. பண்ணை சாரா தொழில் மேம்பாடு: (Non - Farm Activity)

பண்ணை சாரா தொழிலை ஊக்குவிக்கும் பொருட்டு, ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும் 10 நபர்கள் கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் மூலம் தேர்வு செய்யப்பட்டு, ஒவ்வொருவருக்கும் தலா ரூ.10,000 கடனுதவி வழங்கப்படுகிறது. இத்தொகையினை அவர்கள் புதிதாக தொழில் தொடங்கவோ, ஏற்கனவே செய்து வரும் தொழிலை மேம்படுத்தவோ அல்லது மாற்றி அமைக்கவோ பயன்படுத்தலாம். இத்திட்டமானது 800 கிராம ஊராட்சிகளில் முதல் கட்டமாக செயல்படுத்தப்படுகிறது. இதற்கென தேசிய ஊரக வாழ்வாதார திட்டம் செயல்படுத்தப்படும் மாவட்டங்களுக்கு 4.58 கோடி ரூபாயும், தேசிய ஊரக வாழ்வாதார இயக்கம் செயல்படுத்தப்படும் மாவட்டங்களுக்கு சமூக முதலீட்டு நிதியிலிருந்து 3.42 கோடி ரூபாயும் செலவிட அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் மொத்தம் 8,000 மகளிர் பயன்பெறுவர்.

### 6.7.3. ஒத்த தொழில் குழு

ஒரு கிராம ஊராட்சியைச் சார்ந்த, ஒரே தொழில் புரியும் மகளிரை ஒருங்கிணைத்து ஒத்த தொழில் குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. பண்ணை மற்றும் பண்ணை சாரா பல தொழில் குழுக்கள் உருவாக்கப்பட்டு ஒவ்வொரு குழுவிற்கும் தலா ஒரு லட்சம் நிதி உதவி அளிக்கப்படுகிறது. இந்நிதியானது பொது கட்டமைப்பு உருவாக்கம், திறன்

வளர்ச்சி, சந்தை இணைப்பு மற்றும் மூலப்பொருட்கள் கொள்முதல் செய்வதற்கும் பயன்படுத்தப்படுகிறது. சென்னை நீங்கலாக **31** மாவட்டங்களில் இதுவரை **919** ஒத்த தொழில் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

### 6.7.4. வாழ்வாதார சமூக வள பயிற்றுநர்கள்:

சமூக மக்களே தங்கள் சமூகத்தை திறம்பட மேலாண்மை செய்திட வேண்டும் என்பது தேசிய ஊரக வாழ்வாதார வழிகாட்டு நெறிமுறை ஆகும். இக்குறிக்கோளை அடையும் வகையில் ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும் வாழ்வாதார நடவடிக்கைகளைக் கண்காணிக்கும் பொருட்டு ஒருவர் கண்டறியப்பட்டு அவரை சமூக வள பயிற்றுநராக்க (CRP) பயிற்சி அளிக்கப்படுகிறது. **2016–17** ஆம் ஆண்டில் வாழ்வாதார திட்டம் செயல்படுத்தப்படும் கிராமங்களில் மொத்தம் **758** சமூக வள பயிற்றுநர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

### 6.7.5. பெண் விவசாயிகள் மேம்பாட்டு திட்டம் – மகிளா கிசான் சசக்திகரன் பரியோஜனா (MKSP)

தேசிய ஊரக வாழ்வாதார இயக்கத்தின் ஒரு துணைக் கூறாக “பெண் விவசாயிகள் மேம்பாட்டு திட்டம்” மத்திய அரசால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ், விவசாய தொழிலில் ஈடுபடும் மகளிரைக் கண்டறிந்து விவசாயத்தில் அவர்களது பங்கேற்பினை அதிகப்படுத்தவும் அவர்கள் விளைவிக்கும் பயிருக்கு ஏற்றாற்போல் நவீன யுக்திகள் மற்றும் நிலைத்த

வேளாண்மை (Sustainable Agriculture) உள்ளிட்ட பல தொழில்நுட்ப பயிற்சிகளை அளித்து அதன் மூலம் உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை அதிகரித்து, அவர்களின் வருமானத்தை பெருக்குவதும் இத்திட்டத்தின் நோக்கமாகும்.

இத்திட்டம் காஞ்சிபுரம், திருவள்ளூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களைச் சார்ந்த 10 ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள 166 கிராம ஊராட்சிகளில் செயல்படுத்தப்படுகிறது. மொத்தம் 15.96 கோடி ரூபாய் மதிப்பிலான இத்திட்டம் மூன்று ஆண்டுகளில் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின் கீழ் மொத்தம் 16,800 மகளிர் பயன்பெறுவர்.

### 6.7.6. ஏழை மகளிரை தலைவராகக் கொண்ட குடும்பங்களுக்கான சிறப்பு வாழ்வாதாரத் திட்டம்

2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின் படி 25.88 இலட்சம் குடும்பங்கள் மகளிரை குடும்பத் தலைவராகக் கொண்டுள்ளனர். இக்குடும்பங்களுக்கு நேரடியாக உதவி செய்யும் வகையில், சுய தொழில் பயிற்சி மற்றும் வேலைவாய்ப்புடன் கூடிய பயிற்சி அளித்திடும் சிறப்புத் திட்டம் அரசு ஆணை எண்.82 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை (ம.அ.தி 3) துறை நாள் 25.05.2015 மூலம் தமிழக அரசால் மகளிரை குடும்பத் தலைவராகக் கொண்டுள்ள குடும்பங்கள் பயன்பெறும் வகையில் துவக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கு தேவைப்படும் நிதியானது தமிழ்நாடு திறன் வளர்ச்சி இயக்கம் மூலமாகவும், ஊரக மற்றும் நகர்ப்புற பகுதிகளில் செயல்படுத்தப்படும் மற்ற வாழ்வாதார திட்டங்களில் இருந்தும் பெறப்பட்டு செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்திற்கென பிரத்யேகமாக **2,522** பெண்களுக்கு பயிற்சி அளிக்கும் பொருட்டு **3.14** கோடி ரூபாய் தமிழ்நாடு திறன் வளர்ச்சி இயக்கத்தின் மூலம் ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது. இதன் மூலம் **2016–17** ஆம் ஆண்டில் **1940** மகளிர் பயன்பெற்றுள்ளனர். இத்திட்டத்தின்கீழ், இதுவரை மொத்தமாக **56,394** பெண்கள் பயன்பெற்றுள்ளனர்.

### 6.7.7. சந்தைப்படுத்துதலுக்கு ஆதரவு

#### i) கண்காட்சிகள்

மகளிர் சுய உதவிக் குழு பொருட்களின் விற்பனையை அதிகரிக்கவும், பிரபலப்படுத்தவும் ஒவ்வொரு ஆண்டும் மாநில அளவில் பொங்கல், சித்திரை மற்றும் நவராத்திரி சமயங்களில் “மகளிர் மேளா” என்ற பெயரில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தால் கண்காட்சிகள் நடத்தப்படுகின்றன. சுய உதவிக் குழு பொருட்களின் விற்பனையை உயர்த்துவதற்கும், சுய உதவிக் குழு பெண்களின் விற்பனைத் திறனை மேம்படுத்துவதற்கும், மொத்த கொள்முதல், தரம் மற்றும் விலை நிர்ணயம் ஆகியவற்றில் திறனை வளர்ப்பதற்கும் இப்பொருட்காட்சிகள் வாய்ப்புகளை உருவாக்குகிறது. கைவினைப் பொருட்கள், கைத்தறிப் பொருட்கள்,

மூலிகைப்பொருட்கள், உணவுப்பொருட்கள், இதர பிற வீட்டு உபயோகப்பொருட்கள் ஆகியவை இக்கண்காட்சிகளில் விற்பனை செய்யப்படுகின்றன. **2016–17** ஆம் ஆண்டில் **262** மகளிர் சுய உதவிக் குழுக்கள் இக்கண்காட்சிகளில் கலந்து கொண்டு **97.02** இலட்சம் ரூபாய் மதிப்பிலான பொருட்களை விற்பனை செய்துள்ளனர்.

ஊரக மகளிர் சுய உதவிக் குழுக்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை விற்பனை செய்வதற்கு வசதியாக மாவட்டங்களில் நடைபெறும் கோயில் திருவிழாக்கள் மற்றும் இதர முக்கிய பண்டிகை காலங்களில் கண்காட்சிகள் நடத்தப்படுகிறது.

தேசிய அளவில், புதுதில்லியில் நடைபெறும் இந்திய சர்வதேச வர்த்தகக் கண்காட்சிகள் மற்றும் பிற மாநிலங்களில் நடத்தப்படும் மண்டல அளவிலான ‘‘சாராஸ்’’ கண்காட்சிகள் ஆகியவற்றில் சுய உதவிக் குழுக்கள் பங்கேற்கின்றனர்.

**2016–17** ஆம் ஆண்டில், தேசிய அளவில் நடைபெற்ற **6** ‘‘சாராஸ்’’ கண்காட்சிகளின் மூலம் **499** மகளிர் சுய உதவிக் குழுக்கள் **88.32** இலட்சம் ரூபாய் மதிப்பிலான உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்துள்ளனர்.

**ii) மாநில / மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனைச் சங்கம்**

தேசிய மற்றும் மாநில அளவில் சுய உதவிக்குழுக்களின் உற்பத்தி பொருட்களின் விற்பனையை

மேம்படுத்தும் பொருட்டு, மாநில, மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனை சங்கங்கள் தோற்றுவிக்கப்பட்டு, தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம் 1975ன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளன. அவை அனைத்தும் மாநில வழங்கல் மற்றும் விற்பனைச் சங்கத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

### iii) மதி அங்காடி (Mathi KIOSK)

மதி அங்காடி என்பது மகளிர் சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்களின் விற்பனையை மேம்படுத்த ஏற்படுத்தப்பட்ட பிரத்யேகமான விற்பனை மையம் ஆகும். இதுவரை 137 அங்காடிகள் நகர்ப்புற பகுதிகள், குறிப்பாக சுற்றுலா இடங்கள், பேருந்து நிலையங்கள், கோயில்கள், அரசு அலுவலகங்கள் மற்றும் இதர நிறுவனங்கள் போன்ற இடங்களில் நிறுவப்பட்டுள்ளன. மூலிகைப் பொருட்கள், கைவினைப்பொருட்கள், நவீன சணல் பொருட்கள். செயற்கை ஆபரணங்கள், சிறுதானியங்கள், பொம்மைகள் ஆகியவை சுய உதவிக் குழுக்களால் உற்பத்தி செய்யப்படும் முக்கிய பொருட்கள் ஆகும். இதுவரை 224.90 இலட்சம் ரூபாய் மதிப்பிலான பொருட்கள் இந்த மதி அங்காடிகள் மூலம் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

## 6.8. தமிழ்நாடு மகளிர் மேட்பாட்டு நிறுவனத்தின் இதர திட்டங்கள்

### 6.8.1. கலாச்சாரப் போட்டிகள்

மகளிர் சுய உதவிக் குழுக்கள் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் உறுப்பினர்களிடையே

மறைந்துள்ள திறனை கண்டறிவதற்கும், அவர்களிடையே ஒற்றுமை மற்றும் கூட்டு முயற்சியை ஏற்படுத்தவும் கலாச்சாரப் போட்டி நிகழ்வுகள் வட்டார மற்றும் மாவட்ட அளவில் வருடந்தோறும் பொங்கல் திருநாள் சமயத்தில் போட்டிகள் நடத்தப்படுகின்றன. அதிகமான சுய உதவிக் குழு உறுப்பினர்கள் பல்வேறு விளையாட்டு மற்றும் கலாச்சார நிகழ்ச்சிகளில் பங்கேற்கின்றனர்.

### 6.8.2. கல்லூரிச் சந்தைகள்

கல்லூரிச் சந்தைகள் இளைஞர்களிடையே மகளிர் சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்களை பிரபலப்படுத்தும் ஒரு விற்பனை தளமாகும். இளைய சமுதாயத்தின் மத்தியில் பிரபலமடைந்துள்ள மற்றும் புதுமையான பொருட்களை கண்டறிந்து உருவாக்குவதற்கும் மற்றும் தரத்தை நிலைப்படுத்துவதற்கும் புதுமையான யுக்திகளை மகளிர் சுய உதவிக் குழுக்கள் பெறுவதற்கு இது போன்ற சந்தைகள் ஒரு தளமாக அமைகிறது. 2016–17 ஆம் ஆண்டில், 14 கல்லூரிச் சந்தைகள் நடத்தப்பட்டு, அவற்றில் 244 சுய உதவிக் குழுக்கள் கலந்து கொண்டு 13.93 இலட்சம் ரூபாய்க்கு உறுப்பினர்கள் தங்களது பொருட்களை விற்பனை செய்துள்ளனர்.

### 6.8.3. பிளாஸ்டிக் கழிவுகள் மறுசுழற்சி மையம்

சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு ஏற்படுத்தாத பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபட சுய உதவிக் குழுக்கள் மற்றும்

ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் ஊக்கப்படுத்தப்படுகின்றன. சமூக பொருளாதார மேம்பாடு மற்றும் திறன் வளர்ப்பில் கவனம் செலுத்துவது மட்டுமல்லாமல் சுற்றுச்சூழல் தொடர்பான விழிப்புணர்வு ஏற்படுத்தி சுற்றுச்சூழலை பாதுகாப்பதிலும் கவனம் செலுத்துகிறது. சுற்றுச்சூழலை பாதுகாப்பதில் சிறப்பு முயற்சியாக மாநிலத்தில் **35** பிளாஸ்டிக் கழிவுகள் மறுசுழற்சி மையங்கள் தலா **4** இலட்சம் ரூபாய் செலவில் நிறுவப்பட்டுள்ளன. இந்தச் செயல்பாடுகளுக்கு சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறையின் "பாதுகாப்பு மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மேம்பாட்டு நிதி" பயன்படுத்தப்பட்டுள்ளது.

இதுவரை **221.84** இலட்சம் ரூபாய் மதிப்பிலான **791.10** டன் பிளாஸ்டிக் கழிவுகள் துகள்களாக்கப்பட்டு, அவற்றைக் கொண்டு **1,212.63** கி.மீ பிளாஸ்டிக் தார்ச் சாலைகள் போடப்பட்டுள்ளன.

## 6.9. தமிழ்நாடு மாநில அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் மற்றும் தன்னார்வலர்களின் ஆதார மையம்

பல்வேறு முக்கிய பங்காளர்களுக்கு திறன் பயிற்சி அளிக்கும் நோக்கத்திற்காக **2001** ஆம் ஆண்டில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் ஓர் அங்கமாக தமிழ்நாடு மாநில அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் மற்றும் தன்னார்வலர்களின் ஆதார மையம் என்ற பெயரில் உருவாக்கப்பட்டது. இம்மையமானது, தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம் – **1975**ன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மாநில அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் மற்றும் தன்னார்வலர்களின் ஆதார மையம், திட்டப் பணியாளர்கள், சமுதாயம் சார்ந்த அமைப்புகள், பல்வேறு நிலைகளில் உள்ள முதன்மை பயிற்றுநர்களுக்கு பயிற்சி வழங்குதல் போன்ற பல்வேறு பயிற்சிகளை ஏற்பாடு செய்து நடத்துதல் மற்றும் பயிற்சிப் புத்தகங்கள் / வழிகாட்டி கையேடுகள் தயாரித்தல், போன்ற முக்கியப் பணிகளை மேற்கொள்கிறது. மேலும், இம்மையம் திறன் வளர்ப்பு மற்றும் பணியமர்த்துதல் அலகாக தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் செயல்பட்டு வருகிறது.

### 6.10. முற்றம் – மாத இதழ்

முற்றம், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தால் **1998** ஆம் ஆண்டிலிருந்து பிரத்யேகமாக வெளியிடப்படும் மாத இதழாகும். மகளிருக்கான உடல் நலம், சுகாதாரம், மகளிர் மேம்பாடு, கல்வி, வறுமை ஒழிப்பு, நுகர்வோர் உரிமைகள் மற்றும் கடமைகள், பெண்களுக்கான சட்ட உரிமைகள் போன்ற பல்வேறு விபரங்களை தெரியப்படுத்துவதற்கு முற்றம் மாத இதழ் உதவி புரிகிறது. இவ்விதழ் பகுதி வாரியான சமூக பொருளாதார மேம்பாட்டின் வெற்றிக் கதைகள், மகளிர் அதிகார பகிர்வு, சுய உதவிக் குழுக்களின் சாதனைகள் மற்றும் நடவடிக்கைகளின் சிறப்புகளை வெளிக்கொணர்கிறது.

**15** இலட்சம் சுய உதவிக் குழு மகளிர் படித்து பயன்பெறும் வகையில் **75,000** மகளிர் சுய உதவிக்

குழுக்களை சந்தாதாரர்களாக முற்றம் இதழ் கொண்டுள்ளது. பல்வேறு அரசுத் துறைகள் மற்றும் இதர நிறுவனங்கள் முற்றம் இதழ்களுக்காக சந்தா செலுத்துவதோடு மட்டுமல்லாமல் பல்வேறு கருப்பொருள்களில் தகவல்களையும் வழங்குகின்றன.

## 6.11. தீன்தயாள் அந்தியோதய யோஜனா–தேசிய நகர்ப்புர வாழ்வாதார இயக்கம் (DAY-NULM)

தீன்தயாள் அந்தியோதய யோஜனா–தேசிய நகர்ப்புர வாழ்வாதார இயக்கமானது (DAY-NULM) நகர்ப்புர ஏழைகளுக்கான ஒரு வறுமை ஒழிப்புத் திட்டமாகும். இவ்வியக்கம் நகர்ப்புர ஏழைக் குடும்பங்களை இலக்காகக் கொண்டு அடித்தட்டு அளவில் ஏழைகளுக்கு வலுவான சமுதாய அமைப்புகளை உருவாக்கித் தருவதன் மூலம், இலாபம் தரக்கூடிய சுய வேலைவாய்ப்பு மற்றும் திறன் வேலைவாய்ப்புகளைப் பெற்றுத் தர வழிவகை செய்து, அதன் பயனாக தொடர் வாழ்வாதார மேம்பாட்டினை உறுதி செய்கிறது. இத்திட்டம் **2014–15** ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மத்திய நிதியுதவி திட்டமான தீன்தயாள் அந்தியோதய யோஜனா–தேசிய நகர்ப்புர வாழ்வாதார இயக்கம், மத்திய மற்றும் மாநில அரசுகளால் **60:40** என்ற நிதி விகிதாச்சார அடிப்படையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தேசிய நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் கூறுகள் பின்வருமாறு:

1. சமூக அணி திரட்டல் மற்றும் நிறுவன மேம்பாடு (SM&ID)
2. திறன் மேம்பாடு மற்றும் பயிற்சி (CB&T)
3. வேலைவாய்ப்புடன் கூடிய திறன் மற்றும் பணியமர்வுப் பயிற்சி (EST&P)
4. சுய வேலை வாய்ப்புத் திட்டம் (SEP)
5. நகர்ப்புர நடைபாதை வியாபாரிகளுக்கு வாழ்வாதாரம் (SUSV)
6. நகர்ப்புர வீடற்றோருக்கு உறைவிடம் (SUH) மற்றும் புதிய முயற்சிகள் மற்றும் சிறப்புத்திட்டங்கள் (I&SP) என்ற பிரத்தியேகத் திட்டக் கூறினையும் கொண்டுள்ளது.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், நான்கு முக்கிய திட்டக்கூறுகளான சமூக அணி திரட்டல் மற்றும் நிறுவன மேம்பாடு (SM&ID), திறன் மேம்பாடு மற்றும் பயிற்சி (CB&T) வேலைவாய்ப்புடன் கூடிய திறன் மற்றும் பணியமர்வு பயிற்சி (EST&P) மற்றும் சுய வேலை வாய்ப்புத் திட்டம் (SEP) ஆகியவற்றை செயல்படுத்தும் நிறுவனமாக அரசால் நியமிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள மூன்று திட்டக்கூறுகள் நகராட்சி நிர்வாக ஆணையரகத்தினால் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**அட்டவணை 6.8**

**2016–17ல் இத்திட்டத்தினால் எய்தப்பட்ட சாதனைகள்**

| வ. எண் | விபரம் | இலக்கு | சாதனை |
|---|---|---|---|
| 1 | நகர்ப்புரங்களில் சுய உதவிக்குழுக்கள் அமைத்தல் | 15,000 | 8,514 |
| 2 | சுய உதவிக் குழுக்களுக்கு ஆதார நிதி வழங்குதல் எண்ணிக்கை | 15,000 | 1,214 |

| வ. எண் | விபரம் | இலக்கு | சாதனை |
|---|---|---|---|
| 3 | சுய உதவிக் குழுக்களுக்கு ஆதார நிதி வழங்கியத் தொகை (ரூ. கோடியில்) | 15.00 | 1.21 |
| 4 | பகுதி அளவிலான கூட்டமைப்புகள் எண்ணிக்கை | 458 | 161 |
| 5 | நகர அளவிலான கூட்டமைப்புகள் எண்ணிக்கை | 49 | 10 |
| 6 | சுய வேலைவாய்ப்புத்திட்டத்தின் கீழ் உதவி பெற்ற தனிநபர்கள் எண்ணிக்கை | 13,000 | 1,895 |
| 7 | சுய வேலைவாய்ப்புத்திட்டத்தின் கீழ் தனிநபர்கள் பெற்ற தொகை (ரூ.கோடியில்) | – | 13.31 |
| 8 | சுய வேலைவாய்ப்புத்திட்டத்தின் கீழ் உதவி பெற்ற குழுக்கள் எண்ணிக்கை | 3,680 | 403 |
| 9 | சுய வேலைவாய்ப்புத்திட்டத்தின் கீழ் குழுக்கள் பெற்ற தொகை (ரூ.கோடியில்) | – | 14.17 |
| 10 | நகர்ப்புரங்களில் சுய உதவிக்குழுக்கள் பெற்ற வங்கிக்கடன் எண்ணிக்கை | – | 71,577 |
| 11 | நகர்ப்புரங்களில் சுய உதவிக்குழுக்கள் பெற்ற வங்கிக்கடன் தொகை (ரூ.கோடியில்) | – | 2,236.33 |
| 12 | EST&Pன் கீழ் பயிற்சி பெற்ற இளைஞர்கள் எண்ணிக்கை | 15,000 | 2,200 |

## 6.12. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட தொடர் வேலைவாய்ப்பிற்கான வாழ்வாதார திட்டம் (MGNREGS – Project LIFE)

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதிச் சட்டம் 2005ன் படி ஊரக குடும்பங்களுக்கு நிரந்தர வருவாய் ஈட்டிட வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதனை கருத்தில் கொண்டு மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தில் பயன்பெற்ற பயனாளி குடும்பங்களுக்கு நிரந்தர வருமானத்தை ஏற்படுத்தும் நோக்கில் இப்பயிற்சி திட்டம் உருவாக்கப்பட்டது ஆகும்.

இத்திட்டமானது **2015–16** முதல் இம்மாநிலத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன் மூலம் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்ட குடும்பங்களைச் சேர்ந்த இளைஞர்களுக்கு தொழிற்திறன் பயிற்சிகள் வழங்கி வேலையில் அமர்த்தப்பட்டு அக்குடும்பங்களின் குறைவான வருவாய் நிலையிலிருந்து நிரந்தர வருவாய் நிலைக்கு செல்வதை உறுதி செய்கிறது.

**இத்திட்டத்தின் முக்கிய அம்சங்கள்**

- இத்திட்டமானது மக்கள் பங்கேற்பு முறையிலான திட்ட உருவாக்க செயலாக்கம் (IPPE -II) நடைமுறைப்படி மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட பணியில் ஈடுபட்ட பணியாளர்களின் குடும்பங்களைச் சார்ந்த இளைஞர்களுக்கு பகுதி நேர வேலை வாய்ப்பை மாற்று முழுநேர வேலை வாய்ப்பு பெறும் நிலைக்கான திறன் பயிற்சி வழங்கப்படுகிறது.

- மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட தொடர் வேலைவாய்ப்பிற்கான வாழ்வாதார திட்டத்தை (**MGNREGS – Project LIFE**) செயல்படுத்திடும் பொறுப்பு தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

- **இப்பயிற்சியின் மூன்று முக்கிய கூறுகள்:** ஊதியம் சார்ந்த வேலைவாய்ப்பு பயிற்சிகள், சுய வேலைவாய்ப்பு திறன் சார்ந்த பயிற்சிகள் மற்றும் வாழ்வாதார முன்னேற்ற பயிற்சிகள்

- இத்திட்டமானது ஏற்கனவே நடைமுறையில் உள்ள தீனதயாள் உபத்யாய கிராமின் கௌசல்யா

யோஜனா (DDU-GKY) திட்டத்தின் கோட்பாடுகளின் அடிப்படையில் செயல்படுத்தப்படுகிறது.

- பயிற்சி நிறுவனங்களான (PIA's) திட்ட செயலாக்க நிறுவனங்களை அவற்றின் உள்கட்டமைப்பு மற்றும் வேலை வாய்ப்பு பெற்றுத்தரும் திறனை அடிப்படையாகக் கொண்டு தேர்வு செய்யப்படும்.
- பயிற்சியாளர்களுக்கு நாளொன்றுக்கு ரூ.100 வீதம் ஊக்கத்தொகையாக அவர்களுடைய உணவு மற்றும், போக்குவரத்து செலவாக வழங்கப்படுகிறது.
- பல்வேறு வகையான திறன்மேம்பாட்டு பயிற்சிகள்: ஒட்டுநர் பயிற்சி, தகவல் தொழில் நுட்பம், ஆடைகள் மற்றும் ஆயத்த ஆடை, விருந்தோம்பல், கட்டுமானம், சுகாதாரம், சில்லறை வணிகம் மற்றும் அழகு, கலை.
- சுய வேலை வாய்ப்பிற்கான பயிற்சிகள் அந்தந்த மாவட்டங்களில் உள்ள முன்னோடி வங்கிகளால் நடத்தப்படும் ஊரக சுய வேலைவாய்ப்பு பயிற்சி நிறுவனம் (RSETI's) மூலமாக வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தில் கீழ்கண்டவாறு மூன்று வகையான திட்டக் கூறுகளுக்கு இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

**அட்டவணை 6.9**

| வ. எண். | திட்ட கூறுகள் | பயனாளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | ஊதியம் சார்ந்த வேலைவாய்ப்பு பயிற்சிகள் | 20,941 |
| 2 | சுய வேலைவாய்ப்பு திறன் பயிற்சிகள் | 7,500 |
| 3 | வாழ்வாதார முன்னேற்ற பயிற்சிகள் | 3,500 |
| **மொத்தம்** | | **31,941** |

ஊதியம் சார்ந்த வேலைவாய்ப்பு பயிற்சிகளை நடத்திட ஏதுவாக இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறையால் **46.14** கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது.

- இது வரையில் ஊதியம் சார்ந்த வேலைவாய்ப்பு பயிற்சிகளுக்காக **12,724** பயனாளிகளுக்கு பயிற்சிகள் வழங்க நிர்வாக அனுமதி கொடுக்கப்பட்டுள்ளது. நாளது தேதி வரை **8,560** பயனாளிகளுக்கு பயிற்சிகள் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகிறது.
- சுய வேலைவாயப்பு திறன் பயிற்சியின் கீழ் **4,395** பயனாளிகளுக்கு கிராம ஊரக சுய வேலைவாய்ப்பு பயிற்சி நிறுவனத்தின் மூலம் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளது.
- வாழ்வாதார முன்னேற்ற திறன் பயிற்சியின் கீழ் **3,376** பயனாளிகளுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளது.

## 6.13. அம்மா இருசக்கர வாகனத் திட்டம்

தொலை தூரத்திலுள்ள வேலை செய்யும் இடங்களுக்கும் எளிதில் சென்று வேலை பார்ப்பது மகளிர் அதிகாரப்படுத்துதலில் ஒரு முக்கிய அம்சமாகும். அம்மா இருசக்கர வாகனத் திட்டமானது மகளிர் மேம்பாட்டிற்காக மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் அவர்களின் தொலைநோக்குத் திட்டமாகும். இந்த தொலைநோக்குத்

திட்டத்தை பூர்த்தி செய்யும் விதமாக “அம்மா இருசக்கர வாகனத் திட்டம்” என்ற பெயரில் ஒரு சிறப்புத் திட்டத்தை தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மூலம் செயல்படுத்த அரசு ஆணையிட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் ஆண்டு தோறும் 200 கோடி ரூபாய் மானிய உதவியுடன் ஒரு இலட்சம் பணிபுரியும் ஏழை மகளிர் பயன்பெறுவர்.

# 7. தமிழ்நாடு புதுவாழ்வு திட்டம்

**7. தமிழ்நாடு புது வாழ்வு திட்டம்**

தமிழ்நாடு புது வாழ்வு திட்டம் 2005 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 15 ஆம் நாள் துவங்கப்பட்டு, உலக வங்கி நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் சமுதாயப் பங்கேற்பு முறையில் செயல்பட்டு வறுமையை ஒழிப்பதும் இலக்கு மக்களை சமூக, பொருளாதார ரீதியாக ஆற்றல் பெறவும் மற்றும் வளர்ச்சியடையச் செய்தலுமே ஆகும். இத்திட்டம் ஏழை மக்களை மேம்படுத்தும் வலிமை மிக்க, துடிப்புமிக்க சமுதாய அமைப்புகளை ஏற்படுத்துதல், அவர்களது தகுதி மற்றும் திறன் ஆகியவற்றை உயர்த்துதல், தேசிய மயமாக்கப்பட்ட மற்றும் வணிக வங்கிகளின் வாயிலாக நிதியாதாரங்களைப் பெற வழிவகை செய்தல் மற்றும் அவர்களுக்கு நிலையான வாழ்வாதாரங்களை ஏற்படுத்தி வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல் ஆகியவற்றை இலக்காகக் கொண்டு செயல்படுத்தப்படுகிறது. ஏழை மக்கள் மேலும் வளர்ச்சியடையும் வண்ணம் சமுதாய பாதுகாப்பு திட்டங்களையும், அவர்களுக்கு உரிய உரிமைகளையும் பெறுவதற்கு இத்திட்டம் வழிவகுக்கிறது. புது வாழ்வுத் திட்டம் செயல்படுத்தப்படும் பகுதிகளில் வறுமையில்லா தமிழ்நாடு என்னும் குறிக்கோளை உருவாக்கவும் தேவையானவர்களுக்கு இலாபகரமான வேலைவாய்ப்பை உறுதிப்படுத்தவும் மிகவும் ஏழை, எளியோர், நலிவுற்றோர், மாற்றுத் திறனாளிகள் மற்றும் மலைவாழ் சமுதாயத்தினர் நலத்தில் உரிய அக்கறை காட்டவும் இத்திட்டம்

வழிவகுக்கிறது. புது வாழ்வு திட்டம் மாண்புமிகு முன்னாள் தமிழக முதலமைச்சர் அவர்களின் தொலைநோக்குப் பார்வையான "தமிழகத்தை இந்தியாவிலேயே ஏழ்மை இல்லாத வளர்ச்சி அடைந்த வளமான மாநிலமாக உருவாக்க வேண்டும்" என்ற இலட்சியத்தை நனவாக்கும் வண்ணம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

சுய உதவிக் குழுக்கள், கிராம வறுமை ஒழிப்பு சங்கங்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள், ஒத்த தொழில் குழுக்கள், ஒத்த தொழில் கூட்டமைப்புகள் மற்றும் மக்கள் கற்றல் மையங்கள் போன்ற வலுவான, துடிப்பான செயல்பாடுகள் கொண்ட சமுதாய அமைப்புகளை உருவாக்கியதிலும் அவைகளை வலுப்படுத்தியதிலும் புது வாழ்வு திட்டத்தின் வெற்றி அமைந்துள்ளது. இலக்கு மக்களின் திறன் வளர்த்து, நீடித்த நிலைத்த வாழ்வாதாரங்களை உருவாக்கவும், வெளிப்படையான நிர்வாக செயல்பாடுகள் மற்றும் சமுதாய பங்கேற்பினை உறுதிபடுத்துவதிலும் இச்சமுதாய அமைப்புகள் மிகவும் முக்கியப் பங்காற்றுகின்றன.

### 7. 1. செயலாக்க பகுதிகள்

இத்திட்டம் 2005ம் ஆண்டில் முதல்கட்டமாக 16 மாவட்டங்களில் 70 வட்டாரங்களில் உள்ள 2,509 கிராம பஞ்சாயத்துகளில் துவக்கப்பட்டது. திட்டத்தின் வெற்றியை தொடர்ந்து 2011 ஆம் ஆண்டில் மேலும் 10 மாவட்டங்களில் 50 வட்டாரங்களில் உள்ள 1,665 கிராம ஊராட்சிகளுக்கு

விரிவாக்கப்பட்டு, தற்போது 26 மாவட்டங்களில் மிகவும் பின்தங்கிய 120 வட்டாரங்களில் உள்ள 4,174 கிராம ஊராட்சிகளில் செயல்படுத்தப்படுகிறது. புதுவாழ்வு திட்டம் 9.8 இலட்சம் ஏழை, குடும்பங்கள் பயனடையும் வகையில் ரூ.1,871.85 கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

### 7.2. திட்டத்தின் முக்கிய நோக்கங்கள்

- வலுவான மற்றும் துடிப்புடன் கூடிய சமுதாய அமைப்புகள் மூலம் வறுமையை நீக்குதல், ஏழை மற்றும் நலிவுற்றோரின் வாழ்க்கைத்தர மேம்பாடு மற்றும் சமூக பொருளாதார வளர்ச்சி அடைய வழிவகை செய்தல்.
- ஏழை, எளிய, நலிவுற்ற மக்களின் ஆற்றலை மேம்படுத்தி அவர்களின் நிலைத்த வாழ்வாதார வளர்ச்சிக்குத் தேவையான நிதி உதவியினை "மாறா கோட்பாடு அணுகுமுறையினை" பின்பற்றி வழங்குதல்.
- ஏழை மக்கள் குறிப்பாக பெண்கள் மற்றும் நலிவுற்றோர் தகுதி மற்றும் திறன் மேம்பாட்டினை உயர்த்துதல்.

## 7.3. சமுதாயம் சார்ந்த வளர்ச்சி அணுகுமுறை

புது வாழ்வு திட்டம் ஏழை மக்களின் தேவைகளை கண்டறிந்து மக்களுக்காக மக்களே திட்டமிட்டு செயலாற்றும் சமுதாயம் சார்ந்த வளர்ச்சி அணுகுமுறையைப் பின்பற்றி, நிலையான வாழ்வாதாரம் மூலம் வருவாய் பெருகிட முனைப்புடன் செயல்படுகிறது. மேலும், இத்திட்டம் இலக்கு மக்களை பல்வேறு அரசு திட்டங்களின் மூலம் வழங்கப்படும் பயன்களை மற்றும் தங்கள் உரிமைகளை பெற்றிட ஆற்றல்படுத்தவும் பிற துறைகளுடன் சீரிய முறையில் இணைந்து செயலாற்றவும் வழிவகை செய்கிறது.

**புதுவாழ்வு திட்ட நோக்கங்களை அடைந்திட கீழ்க்கண்ட வழிமுறைகள் பின்பற்றப்படுகின்றன.**

- சமூக திரட்சி மற்றும் சமூக அமைப்புகளை ஏற்படுத்துதல்.
- திறன் மேம்பாடு
- நிதி சேவை
- திறன் வளர்ப்புப் பயிற்சிகள் மற்றும் வேலைவாய்ப்பு
- வாழ்வாதார மேம்பாடு
- நலிவடைவு நீக்கம்
- நீர், சுத்தம், சுகாதார வளர்ச்சித் திட்டங்கள் மூலம் ஆரோக்கிய வாழ்வு மற்றும் சுற்றுச் சூழல் மேம்பாடு குறித்த விழிப்புணர்வு அளித்தல்.

## 7.4.திட்ட செயலாக்க அமைப்பு

### 7. 4.1. மாநில திட்ட செயலாக்க அலகு

தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம் 1975ன் கீழ் பதிவு செய்யப்பட்ட சங்கமான தமிழ்நாடு மாநில புது வாழ்வு சங்கம், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் அரசு கூடுதல் தலைமை செயலர் தலைமையில் செயல்படுகிறது. திட்ட இயக்குநர் தலைமையில் மாநில திட்ட மேலாண்மை அலகு செயல்படுகிறது. அவருக்கு உறுதுணையாக திட்ட செயல்பாடுகளை சரியான முறையில் வழிநடத்த கூடுதல் திட்ட இயக்குநர்கள் மற்றும் பல்துறை வல்லுநர் குழு பணியமர்த்தப்பட்டுள்ளனர். இச்சங்கம் மாநில அளவில் திட்டத்தின் நிர்வாகம், செயலாக்கம், வழிநடத்துதல், நிதி விடுவித்தல் மற்றும் கண்காணிப்பு ஆகிய பணிகளை மேற்கொள்கிறது.

### 7.4.2.மாவட்ட திட்ட செயலாக்க அலகு

புது வாழ்வு மாவட்ட சங்கங்கள், மாவட்ட அளவில் தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டு மாவட்ட ஆட்சியர்களது தலைமையில் செயல்படுகின்றன. மாவட்ட திட்ட அலகின் மூலம் மாவட்ட திட்ட மேலாளர் மற்றும் உதவித் திட்ட மேலாளர்கள் மற்றும் திட்ட செயலாக்க அணியினரை கெண்டு இத்திட்டத்தின் செயல்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

### 7.4.3. பகுதி அலகு

கிராம மக்கள் அமைப்புகளுக்கு உறுதுணையாக செயல்பட 10 முதல் 15 கிராம ஊராட்சிகளை இணைத்து களப்பகுதிகள் உருவாக்கப்பட்டுள்ளன. இக்களப்பகுதி அமைப்புகளை ஒரு அணித்தலைவர் மற்றும் 4 ஒருங்கிணைப்பாளர்கள் கொண்ட திட்ட ஒருங்கிணைப்பு குழு நிர்வகிக்கிறது.

### 7.4.4.அடித்தள அளவிலான சமுதாய அமைப்புகள்

கிராம ஊராட்சி அளவில் வலுவான சமுதாய அமைப்புகளான கிராம வறுமை ஒழிப்பு சங்கம், சுய உதவிக் குழுக்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள், சமூக தணிக்கை குழு, ஒத்த தொழில் குழு மற்றும் ஒத்த தொழில் கூட்டமைப்புகள் உருவாக்கப்பட்டு இலக்கு மக்களின் முன்னேற்றத்திற்காக பல்வேறு திட்ட செயல்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

## 7.5.திட்ட செயல்பாடுகள்

### 7.5.1.தகவல், கல்வி மற்றும் தொடர்பு

புது வாழ்வு திட்டத்தின் நோக்கங்கள் மற்றும் இலக்குகளைக் பரப்புவதில் தகவல், கல்வி மற்றும் தொடர்பு பிரச்சாரம் மிகவும் முக்கிய பங்காற்றுகிறது. தேவையின் அடிப்படையில் தகவல், கல்வி மற்றும் தொடர்பு பிரச்சாரம் தெருமுனை நாடகங்கள், கொள்கை பரப்பு ரதம், சிறு புத்தகங்கள், துண்டுப்பிரசுரங்கள் மற்றும் சுவர் ஓவியங்கள் போன்றவற்றின் வாயிலாக மேற்கொள்ளப்படுகின்றன.

### 7.5.2. மக்களின் பங்கேற்புடன்  மக்கள் நிலை ஆய்வு

மக்கள் நிலை ஆய்வு என்பது மிகவும் ஏழைகள், ஏழைகள், நலிவுற்றோர் மற்றும் மாற்றுத் திறனாளிகள் ஆகிய மக்கள் பங்கேற்புடன் இலக்கு மக்களை கண்டறிவதற்காக மக்கள் பங்கேற்புடன் கிராமம் முழுவதிலும் நடைப்பயணம், சமூக வரைபடம், மும்முனை ஆய்வு  மற்றும் பொருளாதார நிலை மதிப்பீடு ஆகியவற்றை மேற்கொண்டு அதன் அடிப்படையில் செயல்படுத்தப்படும் ஒரு முறையாகும். மக்கள் பங்கேற்புடன் கூடிய வெளிப்படையான இலக்கு மக்கள் தேர்வு பட்டியல் கிராம சபையில் ஒப்புதல் பெறப்படுகிறது. இந்த இலக்கு மக்கள் பட்டியல் அனைத்து தரப்பு மக்கள் மற்றும் பிறதுறைகளின் அங்கீகாரத்தை பெற்றுள்ளது.

### 7.5.3. கிராம வறுமை ஒழிப்பு சங்கங்கள்

கிராம வறுமை ஒழிப்பு சங்கமானது இலக்கு மக்களின் அனைத்துப் பிரிவு உறுப்பினர்கள் பிரதிநிதித்துவத்தைக் கொண்ட சுய சார்பு மிக்க சமூக அமைப்பாகும். 11  முதல் 19 உறுப்பினர்களை கொண்டு ஏற்படுத்தப்பட்ட இந்த அமைப்பானது திட்ட செயல்பாடுகளை நிறைவேற்றவும் கண்காணிக்கவும் திட்டப் பயன்களை கடைநிலை ஏழை எளிய மக்களுக்கு கொண்டு சேர்ப்பதை உறுதி செய்யவும் கிராம அளவில் உறுதுணையாக உள்ளது. இச்சங்கத்தில் ஊராட்சி மன்ற தலைவர் அலுவல்சாரா மரபுவழித் தலைவராக செயல்படுவார்.

கிராம வறுமை ஒழிப்பு சங்கம், கிராம கற்றல் மையமாகவும் செயல்பட்டு மின் அளுமை சேவை மற்றும் மின் வணிக சேவை வழியாக மக்கள் தங்களுக்கு உரியவற்றைப் பெறுவதற்கும் பல்வேறு அரசு நலத்திட்டங்களை அறிவதற்கும் உதவி வருகிறது.

திட்ட நிதி கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களுக்கு மக்கள் தொகை அடிப்படையில் விடுவிக்கப்படுகின்றது. சராசரியாக ரூ.15 இலட்சம் நிதி 3 தவணைகளில் விடுவிக்கப்படுகிறது. இந்நிதியில் 40 விழுக்காடு திறன் மேம்பாட்டிற்காகவும், 40 விழுக்காடு மாற்றுத் திறனாளிகள் மற்றும் நலிவுற்றோர் சிறப்பு உதவிக்கும், 20 விழுக்காடு இளைஞர்கள் திறன் வளர்ப்புக்கும் திட்ட இலக்குகளின் படி பயன்படுத்தப்படுகிறது.

**அட்டவணை 7.1**

**கிராம வறுமை ஒழிப்பு சங்க நிதி செலவினம் 31.05.2017 வரை**

| ஊராட்சிகளின் எண்ணிக்கை | கிராம வறுமை ஒழிப்பு சங்கங்களின் எண்ணிக்கை | கிராம வறுமை ஒழிப்பு சங்கங்களுக்கான நிதி செலவினம் 31.05.2017 வரை | |
|---|---|---|---|
| | | எண்ணிக்கை | நிதி செலவினம் (ரூ. கோடியில்) |
| 4,174 | 4,465 | 4,465 | 711.67 |

### 7.5.4. சமூகத் தணிக்கை குழுக்கள்

திட்டத்தின் உயிர் மூச்சு கொள்கைகளான அனைவரும் சேர்ந்து முடிவு எடுத்தல், நலிவுற்றோருக்கு முன்னுரிமை அளித்தல், பொறுப்புணர்வுடன் நடத்தல் மற்றும்

வெளிப்படைத் தன்மை ஆகியவற்றை பின்பற்றி மக்கள் அமைப்புகள் செயல்படுகின்றனவா என்பதை உறுதி செய்வதற்காக **5** முதல் **7** உறுப்பினர்கள் கொண்ட 'காவல் குழுவாக' சமூகத் தணிக்கை குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. திட்டப்பகுதிகளில் **4,465** சமூக தணிக்கை குழுக்கள் உருவாக்கப்பட்டு திட்ட செயலாக்கம் கண்காணிக்கப்படுகிறது.

### 7.5.5. சுய உதவிக் குழுக்கள்

இத்திட்டத்தின் கீழ் ஏழை எளிய மக்களை கொண்டு சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்படும்போது இலக்கு மக்கள் அனைவரையும் குழுக்களில் இணைக்கப்படுவதில் கவனம் செலுத்தப்படுகிறது. சுய உதவிக் குழுக்களைப் பொறுத்தவரை **12** முதல் **20** நபர்களைக் கொண்டு அமைக்கப்படுகிறது. மாற்றுத்திறனாளிகளுக்கென குழுக்கள் அமைக்கும்பொழுது உறுப்பினர்களின் எண்ணிக்கை அளவு தளர்த்தப்படுகிறது. சேமிப்பிற்கு முக்கியத்துவம் அளிக்கவும் உறுப்பினர்களின் திறனை வளர்க்கவும் கடன் இணைப்பு பெற்று உறுப்பினர்கள் வாழ்வாதாரம் மேம்படவும் சிறப்பு கவனம் செலுத்தப்படுகிறது. புது வாழ்வுத் திட்டம் புதிய குழுக்களை அமைப்பதோடு மட்டுமல்லாமல், ஏற்கனவே செயல்படும் குழுக்களையும் ஒருங்கிணைத்து வலுப்படுத்தி வருகிறது. திட்டப்பகுதியில் **1,07,436** சுய உதவிக் குழுக்கள் செயல்படுகிறது. இதில் **3,709** பழங்குடியினர் குழுக்களும் அடங்கும்.

## அட்டவணை 7.2

### சுய உதவிக்குழுக்களின் விவரம் 31.05.2017 வரை

| விவரம் | 31.05.2017 வரை சாதனை |
|---|---|
| **அ.புதிய குழுக்கள்** | |
| பெண்களுக்கான சுய உதவிக்குழுக்கள் | 22,861 |
| மாற்றுத் திறனாளிகளுக்கான சுய உதவிக்குழுக்கள் | 13,286 |
| **திட்டத்தினால் உருவாக்கப்பட்ட மொத்த சுய உதவிக் குழுக்கள்** | **36,147** |
| **ஆ. ஏற்கனவே செயல்பட்டு வரும் சுய உதவிக் குழுக்கள்** | **71,289** |
| **மொத்தம் (அ+ஆ)** | **1,07,436** |

### 7.5.6.ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள்

ஒரு ஊராட்சியில் உள்ள அனைத்து சுய உதவிக் குழுக்களையும் உள்ளடக்கிய அமைப்பான ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு, சுய உதவி குழுக்களுக்கான நிதி மற்றும் பிற சேவைகளை பெற்றுத்தரும் இடைநிலை அமைப்பாக செயலாற்றுகிறது. திட்ட இலக்கீடுகளின் அடிப்படையில் ஒவ்வொரு ஊராட்சி அளவிலான கூட்டமைப்பிற்கும் சராசரியாக ரூ.12 இலட்சம் அமுத சுரபி நிதியாக திட்டத்திலிருந்து இரண்டு தவணைகளில் விடுவிக்கப்படுகிறது. இந்த அமைப்பு உறுதியான மற்றும் சிறப்பான சேவையின் மூலம் வட்டிக் கடைக்காரர்கள் மற்றும் நுண்நிதிக்கடன் நிறுவனங்களது பிடியிலிருந்து மிகவும் ஏழ்மையில் உள்ளவர்களை விடுவிப்பது இத்திட்டத்தின்

பெருமைமிக்க சாதனைகளுள் ஒன்றாகும். குழுக்களை வலுப்படுத்தி அதன் செயல்பாடுகளை கண்காணிப்பதுடன் இதுவரை இக்கூட்டமைப்புகளுக்கு விடுவிக்கப்பட்ட திட்ட நிதி ரூ.**519.40** கோடி சுழற்சி முறையில் **7,75,378** உறுப்பினர்களுக்கு கடனாக வழங்கப்பட்டு, அத்தொகை ரூ.**1693.49** கோடியாக சுழற்சி பெற்றுள்ளது. கூட்டமைப்புகள் புதுவாழ்வு திட்டத்தின் வாயிலாக தான் பெற்ற நிதியை **3.26** மடங்கு சுழற்சி செய்துள்ளன.

**அட்டவணை 7.3**

**ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கான நிதி செலவினம் 31.05.2017 வரை**

| ஊராட்சிகளின் எண்ணிக்கை | கூட்டமைப்புகள் எண்ணிக்கை | அமுதசுரபி நிதி விடுவிப்பு 31.05.2017 வரை செலவினம் | |
|---|---|---|---|
| | | எண்ணிக்கை | நிதி செலவினம் (ரூ. கோடியில்) |
| 4,174 | 4,464 | 4,463 | 519.40 |

### 7.5.7. சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடன் இணைப்பு

பெண்கள் சமூக எழுச்சி மற்றும் பொருளாதார ரீதியிலான சுயசார்பு மற்றும் சுயஆற்றல் பெறுவதற்கு முக்கிய பங்காற்றும் அமைப்புகளில் வங்கிகளும் ஒன்றாகும். சுய உதவிக் குழுக்களுக்கு சுலப கடனுதவி வழங்குவதன் மூலமும், கூட்டமைப்புகளுக்கு பெருங்கடன் அளிப்பதன் மூலமும் ஏழைகளுக்கு உதவுகின்ற ஒரு சிறந்த வாய்ப்பை வங்கிகளுக்கு புது வாழ்வு திட்டம் வழங்கியுள்ளது.

## அட்டவணை 7.4

## சுய உதவிக்குழுக்கள் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் வங்கிக் கடன் இணைப்பு 31.05.2017 வரை

| விவரம் | 31.05.2017 வரை சாதனை | |
|---|---|---|
| | குழுக்களின்/ எண்ணிக்கை | நிதி சாதனை (ரூ. கோடியில்) |
| **அ.** முதல் வங்கி கடன் இணைப்பு பெற்ற சுய உதவி குழுக்கள் | 1,06,211 | 696.20 |
| **ஆ.** வங்கிலிருந்து இரண்டாம் மற்றும் அதற்கு மேல் வங்கிக் கடன் இணைப்பு பெற்ற குழுக்கள் | 98,376 | 4789.73 |
| **வங்கி கடன் இணைப்பு பெற்ற மொத்த குழுக்கள் விவரம் (அ+ஆ)** | | **5485.93** |
| ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் பெருங்கடன் | 847 | 234.19 |
| **மொத்த கடன் நுகர்வு** | | **5720.12** |

2016–2017 ம் ஆண்டிற்க்கான வங்கிக் கடன் இணைப்பு இலக்கு ரூ.1211.61 கோடியாக நிர்ணயிக்கப்பட்டு. ரூ.1376.36 கோடி சாதனை எய்தப்பட்டது. சாதனை சதவீதம் 122 ஆகும்.

### 7.5.8. திறன் மேம்பாடு

புது வாழ்வு திட்ட பணியாளர்கள், சமூக அமைப்புகள் மற்றும் அதன் உறுப்பினர்களுக்கு திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் அளித்து ஆற்றலை மேம்படுத்தி வறுமையொழிப்பு பணிகளை செய்வது திட்டத்தின் அடிப்படை நோக்கமாகும்.

திட்ட பணியாளர்கள் மற்றும் சமூக அமைப்புகளின் உறுப்பினர்களுக்கு தகுந்த திட்ட வழிகாட்டி பயிற்சிகள், கருத்துரு பயிற்சிகள், தேவையின் அடிப்படைலான பயிற்சிகள் சரியான கால இடைவெளியில் வழங்கப்பட்டுள்ளது. இப்பயிற்சிகள் திட்டப் பணிகளை விரைந்து நிறைவேற்றவும் இலக்கு மக்களுக்கான சேவைகளை சமுதாய அமைப்புகள் மூலம் வழங்கவும் உதவுகின்றன. திறன் மேம்பாட்டுப் பரிமாற்றம் மற்றும் அறிவுப் பகிர்வு முறைகள் மூலம் கிராம வறுமை ஒழிப்பு சங்கம், ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு, சுய உதவிக் குழுக்கள், ஒத்த தொழில் குழுக்கள், ஒத்த தொழில் கூட்டமைப்புகள் மற்றும் மகமை ஆகிய சமூக அமைப்புகள் திறம்பட சுயமாகச் செயல்படும் வகையில் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

இலக்கு மக்களைக் கண்டறிந்து அவர்களின் திறன்களை மேம்படுத்தி சமூக வல்லுநர்களாக உருவாக்கி வலிமையான சமூக சொத்துகளாக அவர்களை உருவாக்குதல் திறன் மேம்பாட்டுப் பயிற்சியின் குறிக்கோள்களில் ஒன்றாகும். அவ்வாறு உருவாக்கப்பட்ட சமூக வல்லுநர்கள், தற்போது திட்டத்தில் சமுதாய வள பயிற்றுநர்களாகப் செயல்பட்டு வருகின்றனர். இச்சமூக வல்லுநர்கள் சமூக அமைப்புகளுக்கு வழிகாட்டுபவர்களாவும் உறுதுணை மிக்கவர்களாவும் அவ்வமைப்புகள் பொறுப்புணர்வுடனும், வெளிப்படைத் தன்மையுடனும் திறம்பட செயல்பட உதவுகின்றனர்.

## அட்டவணை 7.5

## திறன் மேம்பாடு பயிற்சி விவரங்கள் 31.05.2017 வரை

| வ.எண் | பயிற்சிகள் விவரம் | எண்ணிக்கை | நிதி பயன்பாடு (ரூ. கோடியில்) |
|---|---|---|---|
| 1 | திட்ட பணியாளர்களுக்கு வழங்கப்பட்ட பல்வேறு பயிற்சிகள் | 3,270 | 4.54 |
| 2 | திட்டத்தின் மூலம் உருவாக்கப்பட்ட சமூக அமைப்புக்களுக்கு மற்றும் உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட திறன் வளர்ப்பு பயிற்சிகள் | 17,90,002 | 180.17 |
| | **மொத்தம்** | **17,93,272** | **185.07** |

### 7.5.9. ஒத்த தொழில் குழுக்கள்

ஒரே மாதிரியான அல்லது ஒத்த வாழ்வாதார நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளோரை ஊராட்சி அளவில் ஒருங்கிணைத்து அவர்களுக்கு தேவைப்படும் பொது உட்கட்டமைப்பு, பொதுவான கொள்முதல், சந்தைபடுத்துதல் மற்றும் திறன் வளர்ப்பு ஆகிய தேவைகளை பெற்று தருவதற்காக புதிய முயற்சியாக ஒத்த தொழில் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஒத்த தொழில் குழுக்கள், உறுப்பினர்களின் வாழ்வாதாரம் மற்றும் வருமானத்தை உயர்த்துவதன் மூலம் பொருளாதார மேம்பாட்டிற்கு வழி வகுக்கின்றன. இவ்வகையில் திட்ட நிதியிலிருந்து பொது உட்கட்டமைப்பு வசதியை உருவாக்கவும் பிற ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளுக்காகவும் ஒவ்வொரு குழுவிற்கும் அதிக பட்சமாக 1 லட்சம் ரூபாய் வரை வழங்கப்படுகிறது.

## அட்டவணை 7.6

## ஒத்த தொழில் குழுக்கள் நிதி செலவினம் 31.05.2017 வரை

| ஊராட்சிகளின் எண்ணிக்கை | ஒத்த தொழில் குழுக்களின் எண்ணிக்கை | குழுக்களுக்கு விடுவிக்கப்பட்ட நிதி 31.05.2017 வரையிலான செலவினம் | |
|---|---|---|---|
| | | எண்ணிக்கை | நிதி செலவினம் ரூ. கோடியில் |
| 4,174 | 5,264 | 5,264 | 45.65 |

### 7.5.10. ஒத்த தொழில் கூட்டமைப்பு

ஒரே மாதிரியான தொழிலில் ஈடுபடுகின்ற ஒத்த தொழில் குழுக்களை வட்டாரம், மாவட்ட அளவில் ஒருங்கிணைத்து ஒத்த தொழில் கூட்டமைப்புகள் ஏற்படுத்தப்படுகின்றன. இக்கூட்டமைப்பின் கீழ் உள்ள குழுக்களுக்கு மூலப்பொருட்கள் கொள்முதல், உற்பத்தி வளர்ச்சி, சந்தைப்படுத்துதல் உள்ளிட்ட பல்வேறு சேவைகள் மற்றும் தொழில் வளர்ச்சிக்கான மேல் நிலை ஆலோசனைகள் கூட்டமைப்பின் மூலம் வழங்கப்படுகிறது. ஒத்த தொழில் கூட்டமைப்புகள் தமிழ்நாடு சங்கங்களின் பதிவுச் சட்டத்தின்கீழ், பதிவு செய்யப்படுகின்றன. ஒவ்வொரு கூட்டமைப்பிற்கும் அவற்றின் செயல் திட்ட அறிக்கை அடிப்படையில் 75 விழுக்காடு திட்ட நிதி, 20 விழுக்காடு இதர ஒருங்கிணைப்பு நிதி மற்றும் 5 விழுக்காடு உறுப்பினர்கள் பங்களிப்பு என்ற வகையில் நிதி ஆதாரம் ஏற்படுத்தப்படுகிறது. விவசாயம், பால் பண்ணை தொழில், வெள்ளாடு வளர்ப்பு, காபி, ஆயத்த ஆடை தயாரிப்பு போன்ற

23 ஒத்த தொழில் கூட்டமைப்புகள் இதுவரை அமைக்கப்பட்டு ரூ.5.39 கோடி நிதி வழங்கப்பட்டுள்ளது.

### 7.5.11.மற்ற துறைகளுடன் வாழ்வாதார ஒருங்கிணைப்பு

### அ. அகத்தி மரக்கன்று வளர்ப்புத்திட்டம்

இத்திட்டத்தின் கீழ் கால் நடை பராமரிப்புத்துறை ஒருங்கிணைப்பு மூலமாக வழங்கப்பட்ட ரூ.1.54 கோடி நிதியினை பயன்படுத்தி சுய உதவி குழு உறுப்பினர்கள் மற்றும் ஒத்த தொழில் குழு மூலமாக புது வாழ்வு திட்டம் செயல்படுத்தப்படும் 26 மாவட்டங்களில் 19.24 லட்சம் அகத்தி மர கன்றுகள் வளர்க்கப்பட்டன. இதன் மூலம் கால்நடைப் பாரமரிப்புத் துறை, கால்நடைகளுக்கு தேவையான அகத்தி மரக்கன்று தீவனத்தை உற்பத்தி செய்து உதவியதுடன், திட்ட உறுப்பினர்கள் வருமானம் ஈட்டியும் பயனடைந்துள்ளனர். இதனால், ஒத்த தொழில் குழுக்கள் மற்றும் சுய உதவி குழு உறுப்பினர்களுக்கு வருமானமும், நாற்றங்கால் பண்ணை அமைப்பதற்கு அனுபவமும் கிடைக்கப்பெற்றுள்ளது. வளர்க்கப்பட்ட 19.24 இலட்சம் அகத்தி மரக்கன்றுகளும் மாவட்டங்களில் உள்ள கால் நடை பராமரிப்பு துறை இணை இயக்குநர் மூலமாக பயனாளிகளின் நிலங்களில் நடுவதற்காக ஒப்படைக்கப்பட்டுள்ளது.

### ஆ. நாட்டுக்கோழி வளர்ப்புத் திட்டம்

கால்நடை பராமரிப்புத்துறையின் ஒருங்கிணைப்பு உதவியுடன் இத்திட்டத்தின் கீழ், தருமபுரி, தேனி,

திண்டுக்கல், கரூர், கிருஷ்ணகிரி, மதுரை, நாகப்பட்டினம், புதுக்கோட்டை, சிவகங்கை, ராமநாதபுரம், திருவாரூர், வேலூர் திருவண்ணாமலை, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்ட புதுவாழ்வுத் திட்ட பகுதிகளைச் சேர்ந்த சுய உதவிக் குழு மற்றும் ஒத்த தொழில் குழுக்களில் இருந்து 1,880 பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டு அவர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு நாட்டுக்கோழி வளர்க்க நிதி உதவி வழங்கப்பட்டது.

இத்திட்டத்தின் கீழ் மொத்த நிதி உதவியாக ஒரு பயனாளிக்கு ரூ.61,800 என நிர்ணயிக்கப்பட்டு அதில் ரூ.37,550 கடனாகவும் ரூ.24,250 அரசு மானியமாகவும் வழங்கப்பட்டு ஒரு பயனாளி ஒரு முறை 100 கோழிகள் வீதம் 3 முறை வளர்க்க உதவி செய்யப்படுகிறது. இதன் மூலமாக, சுய உதவி குழு மற்றும் ஒத்த தொழில் குழு உறுப்பினர்களுக்கு நிரந்தர கூடுதல் வருமானம் கிடைக்க வழி வகுக்கப்பட்டுள்ளது.

### 7.5.12.வாழ்வாதார மேம்பாட்டு முன் முயற்சிகள்

**வேளாண் வணிக மையம்**

வேளாண் வணிக மையங்கள் காஞ்சிபுரம், தேனி, திருவள்ளூர், வேலூர், திருவண்ணாமலை, நாமக்கல், விழுப்புரம், சேலம், தூத்துக்குடி மற்றும் இராமநாதபுரம் ஆகிய பத்து மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. வேளாண் பொருட்கள் விற்பனையில் இடைத்தரகர்களை நீக்கி நேரடி விற்பனையை ஊக்குவித்து வேளாண்

மக்களுக்கு அவர்கள் உற்பத்தி செய்யும் காய்கறிகள், சிறு தானியங்கள் மற்றும் காபி, நறுமண பொருட்கள் போன்ற வேளாண் பொருட்களில் இருந்து அதிக லாபம் பெற வழிவகை செய்வதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இதற்காக ரூ.44.30 லட்சம் நிதி வழங்கப்பட்டு 10 மையங்கள் துவங்கப்படுள்ளப். ஒவ்வொரு மையத்திலும் வேளாண் மக்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை பெற்று அவற்றினை சேமிப்பு கிடங்கில் தரம் பிரித்து பாதுகாத்து விற்பனை செய்ய வழிவகுக்கப்பட்டுள்ளது.

### 7.5.13. மக்கள் கற்றல் மையம் (மகமை)

மக்கள் கற்றல் மையம் உயர்நிலை மையமாக உருவாக்கப்பட்டு, தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்கள் பதிவு சட்டம் 1975ன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது. இம்மையங்கள் புதுவாழ்வு திட்டத்தின் கீழ் 16 முதற்கட்ட மாவட்டங்களில் ஏற்படுத்தப்பட்டு, சிறப்பான நடவடிக்கைகள் மற்றும் அறிவுத்திறன்களைக் கண்டறிந்து, அதனை பயிற்சிகள் மூலம் இலக்கு மக்களின் வாழ்வாதார நிலையை மேம்படுத்த பயன்படுத்துகின்றன. மக்கள் கற்றல் மையங்களில் உள்ள சமூக வல்லுநர்களுக்கு நிறுவன கட்டமைப்பு, வாழ்வாதார மேம்பாடு, கணக்கு மற்றும் தணிக்கை, வரவு செலவு கணக்கு பராமரித்தல், நிதி மேலாண்மை, உடல் நலம் மற்றும் சுகாதாரம் குறித்த பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. மகமைகள் வட்டார மற்றும் மாவட்ட அளவில் செயல்பட்டு வருகின்றன.

## 7.5.14. மாற்றுத் திறனாளிகள் மற்றும் நலிவுற்றோருக்கான உதவிகள்

கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள், நலிவுற்ற தன்மை குறைப்பு மற்றும் சமூக பாதுகாப்பினை உறுதி செய்ய முனைப்புடன் கூடிய சிறப்பான சேவைகளை மாற்றுத் திறனாளிகள் மற்றும் நலிவுற்ற நபர்களுக்கு வழங்குகின்றன. புது வாழ்வுத் திட்டத்தில் கிராம வறுமை ஒழிப்புச் சங்க நிதியில் இருந்து 40 விழுக்காடு நிதி நலிவுற்ற தன்மை குறைப்பு மற்றும் மாற்றுத் திறனாளிகள் வாழ்வாதார நலம் பேணுவதற்கும், உடனடி தேவைகளுக்கும் செலவிடப்படுகிறது. அவர்களுடைய ஆயுள், உடைமைகள், சுகாதாரம் மற்றும் பிற அரசு துறைகளில் உள்ள சமூகப் பாதுகாப்புத் திட்டங்களை இணைத்தல் மூலம் புது வாழ்வுத் திட்டம் அவர்களின் சமூகப் பாதுகாப்பினை உறுதி செய்கிறது. நலிவுற்றோர் மற்றும் மாற்றுத் திறனாளிகளின் ஆற்றல் மேம்பாடே திட்டத்தின் முதன்மைக் குறிக்கோளாகும் இதற்காக திட்ட செயல்பாடுகள் மூலம் அவர்களுக்கு போதுமான உதவிகள் வழங்கப்படுகிறது.

### அட்டவணை 7.7

### மாற்றுத் திறனாளிகள் மற்றும் நலிவுற்றோருக்கான திட்டம் மற்றும் பிற துறை உதவிகள் 31.05.2017 வரை

| விவரம் | 31.05.2017 வரை சாதனை | |
|---|---|---|
| | எண்ணிக்கை | நிதி சாதனை (ரூ. கோடியில்) |
| நிதி உதவி | 3,59,179 | 216.89 |
| உபகரணங்கள் | 43,837 | 16.24 |
| பராமரிப்பு நிதி | 22,471 | 3.37 |

| விவரம் | 31.05.2017 வரை சாதனை | |
|---|---|---|
| | எண்ணிக்கை | நிதி சாதனை (ரூ. கோடியில்) |
| ஓய்வூதியம் | 1,72,045 | 145.46 |
| சிறப்பு சுய உதவிக் குழுக்களுக்கான கடன் உதவி | 12,185 | 77.55 |

### 7.5.15.மாற்றுத் திறனாளிகள் திட்டத்தில் முன் முயற்சி

திட்டத்தின் மூலம் மாற்றுத் திறனாளிகளை தொழில் முனைவோராக மாற்றும் நோக்கத்தில் 76 வட்டாரங்களில் வட்டார அளவிலான தொழில் நுட்ப மையங்கள் ஏற்படுத்தப்பட்டு, மையம் ஒன்றிற்கு ரூ.1,50,000 துவக்க நிதியாக திட்டத்திலிருந்து வழங்கப்பட்டுள்ளது. பயிற்சியளிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகள் இந்த மையத்தில் இருந்து கிராம கற்றல் மையம் உட்பட உள்ளூரில் உள்ள கணினி, கைபேசி மற்றும் வீட்டு உபயோகப் பொருட்களைப் பழுது நீக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

### 7.5.16. புது வாழ்வு மனநலத் திட்டம்

புது வாழ்வு மனநலத் திட்டம் ஜப்பான் மனிதவள மேம்பாட்டு திட்ட நிதியுதவியுடன் அக்டோபர் 2012 முதல் செப்டம்பர் 2016 வரை செயல்படுத்தப்பட்ட பெருமைக்குரிய முன் முயற்சித் திட்டமாகும். இத்திட்டம், கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் மூலம் மனநலம் பாதிக்கப்பட்டோர், மனநலம் குன்றியோர் மற்றும் அவர்கள் குடும்பத்தார் பயன்பெறும் விதமாக மக்கள் பங்கேற்பு முறையில் செயல்படுத்தப்பட்ட திட்டமாகும். இத்திட்டம் 15 மாவட்டங்களில்/ஒன்றியங்களில் 578 கிராம ஊராட்சிகளில்

உள்ள **609** கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களின் வாயிலாக செயல்படுத்தப்பட்டது. மனநலம் பாதிக்கப்பட்டவர்கள் தனிநபர் தகவல் தொடர்பு மூலம் தானாக சிகிச்சை எடுத்துக் கொள்ளும் செயல், தொடர்ந்து மருந்து உட்கொள்ளுதல் மற்றும் சிகிச்சை பெறுதல் ஆகியவற்றை உறுதி செய்வதன் மூலம் மனநலம் பாதிக்கப்பட்டோரின் பாதிப்பிலிருந்து விடுபட நடவடிக்கை எடுக்கப்படுவதோ பாதிக்கப்பட்டவரின் குடும்ப உறுப்பினர்கள், முழுமையாக குணம் அடைந்தவர்கள் சுய உதவிக் குழுவில் உறுப்பினர்களாக சேர்க்கப்பட்டது நல்ல விளைவுகளைத் தந்தது. வாழ்வாதார செயல்பாட்டு உதவிகள் மூலம் தங்களுடைய வாழ்வை பொருள் பொதிந்த வாழ்வாகவும் நேர்மறையான வளர்ச்சி அடையவும் மனநலம் பாதிக்கப்பட்டோருக்கு உதவி செய்கிறது.

## அட்டவணை 7.8
## மனநலம் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் மனநலம் குன்றிவர்களுக்கான உதவிகள் 31.05.2017 வரை

| வ. எண் | விவரம் | மன நோய் | மனநலம் குன்றியவர் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1 | கண்டறியப்பட்ட மனநலம் பாதிக்கப்பட்டோர்கள் | 2,741 | 4,336 | 7,077 |
| 2 | மனநல ஆலோசனை பெற்றவர்கள் | 2,690 | 3,954 | 6,644 |
| 3 | மருத்துவ உதவி பெற்றவர்கள் | 2,633 | 1,734 | 4,367 |
| 4 | வாழ்வாதார உதவி பெற்றவர்கள் | 2,612 | 3,502 | 6,114 |
| 5 | மருத்துவமனை சிகிச்சை | 810 | 602 | 1,116 |

| வ. எண் | விவரம் | மன நோய் | மனநலம் குன்றியவர் | மொத்தம் |
|---|---|---|---|---|
| | பெற்றவர்கள் | | | |
| 6 | சிகிச்சை பெற்று நல்வாழ்விற்கு கொண்டுவரப்பட்டவர்கள் | 810 | - | 810 |
| **மொத்த நிதி செலவினம்** | | **ரூ.18.06 கோடி** | | |

## 7.5.17. புதுவாழ்வுத் திட்டத்தில் பழங்குடியினர்களுக்கான மேம்பாட்டு பணிகள்

புது வாழ்வு திட்டமானது **26** மாவட்டங்களில் வாழும் பழங்குடியினர்களுக்கும் பல வகையான முன்னேற்றம் மற்றும் ஆற்றல்படுத்துதல் போன்ற பணிகளை மேற்கொண்டு வருகிறது. அதில் **212** ஊராட்சி ஒன்றியங்களில் **351** பழங்குடியினர் கிராம வறுமை ஒழிப்பு சங்கங்களும் **3,613** சுய உதவிக் குழுக்களும், **351** ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் (வாழ்வாதார துணைக் குழுக்கள் உட்பட) **259** ஒத்த தொழில் குழுக்களும், **6** ஒத்த தொழில் கூட்டமைப்புகளும் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. **106** பழங்குடியினர் ஊராட்சிகளில் கிராம கற்றல் மையங்கள் ஏற்படுத்தப்பட்டு மின் ஆளுமை திட்டத்தில் உள்ள பயன்களை பழங்குடியினர் பெற்று வருகின்றனர். இத்திட்டத்தில் ரூ.**29.77** கோடி நிதி உதவியின் மூலம் **84,343** குடும்ப உறுப்பினர்கள் பயன் பெற்றுள்ளனர்.

மேலும் இத்திட்டத்தில், திட்ட நிதியுடன் பிற துறைகளின் மூலமாகவும் பழங்குடியினர் பல உதவிகளை பெற்று வருகின்றனர். கிராம வறுமை ஒழிப்பு சங்க உதவியோடு பழங்குடியினர் நல அட்டைகள், மகாத்மா காந்தி தேசிய வேலை உறுதியளிப்பு திட்ட அட்டைகள் மற்றும் ஜாதி சான்றிதழ்கள் பெற்று பயன் அடைந்து வருகின்றனர். குறிப்பாக முதியோர் மற்றும் விதவைகள் உதவித் தொகையும் பெற்று வருகின்றனர். மேலும் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை உதவியோடு முதலமைச்சரின் சூரிய சக்தி பசுமை வீடுகள் மற்றும் பாரத பிரதமர் குடியிருப்பு வீடுகள் பெற்று பயனடைந்துள்ளனர்.

## அட்டவணை 7.9

## திட்டம் மற்றும் பிற துறைகள் மூலம் பழங்குடியினர்களுக்கு வழங்கப்பட்ட நல திட்ட உதவிகள் 31.05.2017 வரை

| வ. எண் | விபரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | திறன் வளர்ப்பு பயிற்சி பெற்ற பழங்குடி இளைஞர்கள் | 18,069 |
| 2 | திட்டத்தின் மூலம் வாழ்வாதார உதவி பெற்ற பழங்குடியினர்கள் | 36,161 |
| 3 | பழங்குடியினர் சாதி சான்றிதழ் பெற்றவர்கள் | 30,842 |
| 4 | நலவாரிய அட்டை பெற்றவர்கள் | 19,734 |
| 5 | மகாத்மா காந்தி தேசிய ஊரக உறுதியளிபு திட்ட அட்டை பெற்றவர்கள் | 47,984 |
| 6 | முதியோர் உதவித் தொகை மற்றும் விதவைகள் உதவித் தொகை பெற்றவர்கள் | 8,853 |
| 7 | பசுமை வீடுகள் மற்றும் இந்திரா நினைவு குடியிருப்பு திட்டம் மூலம் பயன் பெற்றவர்கள் | 14,474 |
| | **மொத்தம்** | **1,76,117** |

### 7.5.18. இளைஞர்கள் திறன் வளர்ப்பு பயிற்சி மற்றும் பணியமர்த்துதல்

தமிழ்நாடு, இந்தியாவில் தொழிற் துறையில் வளர்ச்சி பெற்ற மாநிலங்களில் ஒன்றாகத் திகழ்கிறது. இருப்பினும் வறுமை மற்றும் போதிய திறன் பயிற்சியின்மையும் இளைஞர்களின் வாழ்க்கையில் முன்னேறத் தடையாக உள்ளது. ஆகையால், வேலைவாய்ப்பு மற்றும் சந்தைத் தேவையின் அடிப்படையில் இளைஞர்களின் திறனை மேம்படுத்துவதும் மற்றும் அவர்களுக்கு வழிகாட்டுவதும் புதுவாழ்வுத்திட்டத்தின் ஒரு அங்கமாக விளங்குகிறது. இதற்காக, அனைத்து ஊராட்சிகளிலும் வேலைவாய்ப்பற்ற மற்றும் தகுதிக்கு ஏற்ப வேலைவாய்ப்பினை பெற இயலாத 18 முதல் 35 வயது வரையிலான இளைஞர்களைக் கண்டறிந்து அவர்களின் சொந்த விபரங்களை சேகரித்து இளைஞர்புள்ளி விபரப்பட்டியல் தயார் செய்யப்படுகிறது. இளைஞர்களின் விருப்பம், தேவை மற்றும்அவர்களின் ஆர்வத்திற்கேற்ப பல்வேறு துறைகளில் அடிப்படை மற்றும் மேல்நிலை பயிற்சிகளும் வழங்கப்படுகிறது.

மேலும், புதுவாழ்வுத்திட்டம், வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்துவதன் மூலம் வேலைவாய்ப்பு இல்லாத இளைஞர்களுக்கும் சிறந்த தொழில் நிறுவனங்களுக்கும் இடையேவேலை வாய்ப்பினை பெற்றுத்தரும் பாலமாக செயல்படுகிறது. பிரபல தொழில் நிறுவனங்களான எல்&ட்டி, ஹுண்டாய், டி.வி.எஸ், செயின்ட் கோபெயின், இன்டிமெட்

பேஷன், ட்ரயம்ப், நிஸ்சான் போன்ற நிறுவனங்களை, வேலைவாய்ப்பு முகாம்களில் பங்குகொள்ள செய்து இளைஞர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பு பெற்றுத் தரப்படுகிறது. ஒவ்வொரு ஊராட்சியிலும் தன்னார்வமுள்ள குறைந்தது ஒரு நபரை தேர்வு செய்து அவருக்கு உரிய பயிற்சி வழங்கி சமூக வல்லுநராக்கப்பட்டு (வேலைவாய்ப்பு) இளைஞர்களை திறன் வளர்ப்பு பயிற்சிக்கு அனுப்புதல், வேலைவாய்ப்புப் பெற்றுத் தருதல் போன்றவற்றில் ஈடுபடுத்தப்படுகிறார்கள்.

2016–17 ஆம் நிதியாண்டில், 30,326 இளைஞர்களுக்கு பயிற்சி கொடுக்கப்பட்டு 27,074 வேலைவாய்ப்பு பெற்றுள்ளார்கள்.

**அட்டவணை 7.10**

**இளைஞர் திறன் வளர்ப்புப் பயிற்சி 31.05.2017 வரை**

| விபரம் | 2016–17 | 31.05.2017 வரை |
|---|---|---|
| | எண்ணிக்கை | எண்ணிக்கை |
| பயிற்சி பெற்ற இளைஞர்கள் | 30,326 | 4,63,597 |
| வேலை வாய்ப்பு பெற்ற இளைஞர்கள் | 27,074 | 3,96,441 |

## அட்டவணை 7.11

## துறை வாரியாக பயிற்சி பெற்ற இளைஞர்களின் எண்ணிக்கை

| வ. எண் | துறை /பயிற்சியின் பெயர் | இளைஞர் மொத்தபயிற்சி பெற்றவிபரம் (எண்ணிக்கை) | இளைஞர் வேலைவாய்ப்பு பெற்றவிபரம் (எண்ணிக்கை) | வேலை வாய்ப்பு சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | வாகனம் ஓட்டுநர் பயிற்சி | 1,64,997 | 1,44,591 | 88 |
| 2 | ஆயத்த ஆடை தயாரித்தல் | 77,422 | 66,801 | 86 |
| 3 | கணினிப்பயிற்சி | 67,734 | 55,163 | 81 |
| 4 | தொழில்துறை இயக்கப் பயிற்சி | 45,353 | 37,537 | 83 |
| 5 | கட்டுமானப் பயிற்சி | 20,352 | 17,581 | 86 |
| 6 | செவிலியர் பயிற்சி | 14,285 | 11,682 | 82 |
| 7 | அழகுக் கலை பயிற்சி | 8,814 | 7,182 | 81 |
| 8 | கைபேசிபழுதுபார்த்தல் மற்றும் தயாரித்தல் பயிற்சி | 6,880 | 5,908 | 86 |
| 9 | தோல்பொருள்தயாரித்தல் பயிற்சி | 6,346 | 5,552 | 87 |
| 10 | விருந்தோம்பல் சேவை பயிற்சி (உணவு தயாரித்தல் மற்றும் ஹோட்டல் மேலாண்மை) | 6,107 | 4,776 | 78 |
| 11 | சில்லரை வணிகப் பயிற்சி | 364 | 296 | 81 |
| 12 | இதரப் பயிற்சிகள் | 45,033 | 39,372 | 87 |
| | மொத்தம் | **4,63,687** | **3,96,441** | **86** |

ஏழை மகளிரை குடும்பத் தலைவராக கொண்ட குடும்பங்களுக்கு தேவையான பயிற்சிகளை வழங்கி, சுய அல்லது நிறுவனம் மூலம் வேலைவாய்ப்பினை ஏற்படுத்த

புதிய சிறப்பு வாழ்வாதார திட்டத்தை அரசு செயல்படுத்தி வருகிறது. இந்த சிறப்பு வாழ்வாதார திட்டத்தின் கீழ் 2016–17ஆம் ஆண்டில் இதுவரை 6,576 மகளிரை குடும்பத் தலைவராக கொண்ட பயனாளிகளுக்கு வாழ்வாதார நடவடிக்கைகளை மேற்கொள்ள பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

**மகளிர் ஆட்டோ ஓட்டுநர் திட்டம்**

மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் அவர்கள் 2016 ம் ஆண்டு மே மாதம் 100 மகளிர்க்கு ஆட்டோ ஓட்டுநர் பயிற்சி வழங்கி, ஆட்டோ வாங்குவதற்கு தேவையான நிதியுதவியை மானியத்துடன் கூடிய வங்கி கடனாக வழங்கப்படும் என்று அறிவித்தார்கள். அதன் அடிப்படையில் 100 மகளிருக்கு பயிற்சி அளிக்கப்பட்டு இதுவரை 60 மகளிருக்கு ஆட்டோ வழங்கப்பட்டுள்ளது.

**7.5.19. கிராம கற்றல் மையங்கள்**

புது வாழ்வுத் திட்டப் பகுதியில் உள்ள 4,174 ஊராட்சிகளிலும் கிராம வறுமை ஒழிப்பு சங்கங்கள் கிராம கற்றல் மையங்களாகவும் செயல்பட வலுப்படுத்தப்பட்டுள்ளன. அனைத்து கிராம கற்றல் மையங்களுக்கும் இணையதள வசதியுடன் கூடிய கணினி, வலைத்தள புகைப்படக் கருவி, பயோமெட்ரிக் கருவி, கல்வி கற்பதற்கான குறுந்தகடுகள், போட்டித் தேர்வுகளுக்கான புத்தகங்கள், ஆகியன மக்களின் பயன்பாட்டிற்காக வழங்கப்பட்டுள்ளன. இதன் மூலம் கடைநிலை மக்களும் சந்தை நிலவரம், தொலைதூர மருத்துவ வசதி,

இளைஞர்களுக்கான தொழில் மற்றும் வேலைவாய்ப்பு வழிகாட்டல் மற்றும் மாணவர்களுக்கான உயர்கல்வி பற்றிய தகவல்களை பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

கிராம கற்றல் மையங்கள் மின் ஆளுமை மையங்களாக செயல்பட்டு. சாதி, வருமானம், பிறப்பு, இறப்பு மற்றும் மதிப்பெண் சான்றிதழ்கள் உதவித் தொகை மற்றும் நலத்திட்டப் பயன்களைக் பெற ஏதுவாகவும் இந்திய அரசின் மின் வணிக செயல்பாடுகளை மேற்கொள்ளவும் வழிவகை செய்கின்றன. இதுவரை **6,05,654** மின் ஆளுமைச் செயல்பாடுகள் மக்களைச் சென்றடைந்து பயனளித்துள்ளன. மேலும், அலைபேசி கட்டணம் செலுத்துதல், ஆதார் அட்டை அச்சடித்தல் ஆதார் வழி பணம் வழங்கும் முறை மற்றும் பல்வேறு சேவைகளுக்கான கட்டணம் செலுத்துதல் போன்ற மின் வணிக பரிவர்த்தனைகள் மூலமாக மேற்கொள்ளப்பட்டு இதுவரை **44,133** நபர்கள் சேவைகளைப் பெற்றுள்ளனர். ஆதார் அட்டை பணப்பரிவர்த்தனை மூலம் எளிய முறையில் **5,815** மக்கள் தங்களது வங்கி கணக்கில் இருந்து பணம் பெறுவதற்கான சேவை மூலம் பயனடைந்துள்ளனர். கிராமப்புற மக்கள் தங்களின் மின் கட்டணத்தை எளிய முறையில் செலுத்துவதற்காக தமிழக அரசின் மின் சேவை வாயிலாக **81,947** மின் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது.

இதுவரை கிராம கற்றல் மையம் வாயிலாக சுமார் ரூ.**1.76** கோடி கிராம வறுமை ஒழிப்புச்சங்கங்களுக்கு வருவாயாக கிடைக்கப்பெற்றுள்ளது.

### 7.5.20. சுற்றுச் சூழல் மற்றும் சுகாதாரம்

**அ) சுற்றுச் சூழல்**

தமிழ் நாடு புது வாழ்வுத் திட்டம் வறுமை ஒழிப்பு மற்றும் ஆற்றலளிப்புப் பணியில் சுற்றுச் சூழலும் மற்றும் சுகாதாரமும் ஓர் பிரிக்க முடியாத அங்கம் என்பதை முன்னிலைப்படுத்துகிறது. இத்திட்டம் பயனாளிகளுடைய வீடு, அதன் சுற்றுப்புறம் மற்றும் கிராமங்களை சுத்தமாகவும் பசுமையாகவும் வைத்திருக்க ஊக்கம் அளிக்கிறது.

சுற்றுச் சூழல் பாதுகாப்பில் ஒரு பகுதியாக **5,264** ஒத்த தொழில் குழுக்களின் மூலம் மேற்கொள்ளப்படும் தொழில்களுக்கான உட்கட்டமைப்பு நிதியினை விடுவிக்கும் முன் இத்தொழில்கள் சுற்றுப்புறச் சூழலுக்கு தகுதியானதா என்று ஆய்வு செய்யப்பட்ட பின்னரே விடுவிக்கப்படுகிறது.

சுற்று சூழலை பாதுகாக்கும் நடவடிக்கையாக திட்டப் பகுதிகளில் சுமார் **1.33** இலட்சம் மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன. **26** மாவட்டங்களில் உள்ள விவசாயிகளுக்கு உரிய பயிற்சி அளிக்கப்பட்ட பின், **963** சிறு விவசாயிகளுக்குச் சொந்தமான **1,342** ஏக்கர் நிலத்தில் இயற்கை வேளாண்மையும் மற்றும் **6,271** எண்ணிக்கையில் அசோலா சாகுபடி, மண் புழு உரம் தயாரித்தல், பஞ்சகவ்யா தயாரித்தல் மற்றும் இயற்கை உரம் தயாரித்தல் போன்ற சுற்றுப்புறச் சூழலுக்கு ஏதுவான செயல்பாடுகள் ஊக்குவிக்கப்பட்டுள்ளன.

**ஆ) நீர், சுத்தம் மற்றும் சுகாதார முன் முயற்சிகள்**

1. இத்திட்டத்தின் கீழ் வறுமை ஒழிப்பு சங்கத்தின் மூலம் **4,174** கிராம ஊராட்சிகளில் சுகாதாரம் மற்றும் திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தினை செயல்படுத்த **4,311** சமூக வல்லுநர்கள் (சுகாதாரம்) ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.
2. இத்திட்டத்தின் மூலம் தனி நபர் இல்ல கழிப்பறை கட்ட **91,680** பயனாளிகளுக்கு துவக்க நிதியாக நபருக்கு **ரூ.5000** வீதம் **ரூ.45.84** கோடி கடன் உதவி வழங்கப்பட்டுள்ளது.
3. புது வாழ்வு திட்டத்தின் கீழ் சுகாதாரம் மேம்பாட்டிற்காக,சுகாதார கடன் உதவி என்ற திட்டத்தை உருவாக்கி சுத்தம் செய்யும் உபகரணங்கள், கருவிகள், மருத்துவ வசதி, கட்டுமான பணிகள், தண்ணீர் தொட்டி நிறுவுதல், கழிப்பறை சீரமைத்தல் மற்றும் தொடர்புடைய சுகாதார பொருட்கள் தயாரிக்க **2,514** பயனாளிகளுக்கு **ரூ.1.73** கோடி ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மூலம் கடனாக வழங்கப்பட்டுள்ளது.
4. இத்திட்டத்தில் கடந்த **2** ஆண்டுகளில் **4.48** இலட்சம் பயனாளிகள் தனிநபர் இல்லக் கழிப்பறை கட்டி உபயோகிக்க ஊரக வளர்ச்சி துறை திட்டங்களுடன் இணைந்து வழிவகை செய்யப்பட்டுள்ளது.
5. திட்ட பகுதிகளில் **1,050** கிராம ஊராட்சிகள் திறந்தவெளி கழிப்பிடம் அற்ற ஊராட்சிகளாக மாற்றப்பட்டுள்ளதற்கு ஊரக வளர்ச்சித் துறைக்கு இத்திட்டம் உறுதுணையாக உள்ளது.

6. இத்திட்டம் ரூ.8 கோடி செலவில் 2,524 கிராம வறுமை ஒழிப்பு சங்கங்களில் நீர், சுகாதாரம் மற்றும் தூய்மை செயல் விளக்க மாதிரிகளை நிறுவி மக்களிடம் சுத்தம் மற்றும் சுகாதாரம் பற்றிய விழிப்புணர்வினை 4,465 வறுமை ஒழிப்பு சங்கங்களிலும் ஏற்படுத்தி வருகிறது.
7. மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் அவர்கள் மே மாதம் 2016 ம் ஆண்டில் அறிவித்ததன்படி சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு சுகாதாரம் மற்றும் தன் சுத்தம் சார்ந்த பொருட்கள் தயாரிக்கும் பயிற்சிகள் வழங்கப்படுள்ளன. இத்திட்டத்தின் கீழ் இதுவரை 796 மகளிர்க்கு பயிற்சிகள் அளிக்கப்பட்டு அவர்களில் 315 உறுப்பினர்களுக்கு ரூ.53.52 லட்சம் கடனுதவி வழங்கப்பட்டு 397 சுகாதாரம் சார்ந்த சிறு தொழில்கள் துவங்கப்பட்டுள்ளன. இவர்கள் தயாரிக்கும் பொருட்களை உள்ளாட்சி அமைப்புகளின் தேவைக்கேற்ப வாங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

### 7.5.21.தேசிய வள நிறுவனம்

தமிழக அரசின் புது வாழ்வு திட்டத்தினை வெற்றிகரமாக செயல்படுத்தி, அதன் பயனாக கிடைக்கப் பெற்ற அனுபவத்தாலும், வளர்ச்சித் திட்டங்களை செயல்படுத்திட ஏதுவாக முன் மாதிரிகளை ஏற்படுத்தியதன் விளைவாகவும் தேசிய வாழ்வாதார இயக்கம், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அமைச்சகத்தின் மூலம் புது வாழ்வு திட்டத்தினை தேசிய வள நிறுவனமாக 2012 ஆம் ஆண்டு அங்கீகரித்தது. இதன் பின்பு உலக வங்கி நிதியுதவி பெறும்

பிற மாநில திட்டப் பயனாளிகளுக்கும் பணியாளர்களுக்கும் பிற மாநில ஊரக வாழ்வாதார இயக்கப பணியாளர்களுக்கும் பல்வேறு கட்ட புத்தாக்கப்பயிற்சிகள் மற்றும் களப்பயணம் மூலம் பட்டறிவு நிகழ்வுகளையும் தேசிய வள நிறுவனம் மேற்கொண்டுள்ளது.

நாளது வரை புது வாழ்வு திட்ட தேசிய வள நிறுவனம் புதுச்சேரி, மேற்கு வங்காளம் மற்றும் பீகார் ஆகிய 3 மாநிலங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொண்டு நிறுவனங்களை அமைத்தல், திறன் வளர்த்தல், நிறுவனக் கூட்டமைப்புகளை உருவாக்குதல் மற்றும் வாழ்வாதார மேம்பாடு உள்ளிட்ட பணிகளை மேற்கொண்டு வருகிறது. மேலும் தேசிய வள நிறுவன அமைப்புக்கும் பராமரிப்புக்கும் தேசிய ஊரக வாழ்வாதார இயக்கம் ரூ.1 கோடி நிதியினை அனுமதித்துள்ளது.

## 7.6.திட்டத்தின் தாக்கம்

உலக வங்கியின் சமூக கண்காணிப்புக் குழு ஆய்வு மேற்கொண்ட அறிக்கையில் புது வாழ்வு திட்டத்தின் தாக்கம் குறித்த முக்கிய முடிவுகள்

- வேளாண்மை சாராத வாழ்வாதார நடவடிக்கைகளின் முன்னேற்றத்திற்காக பெறப்பட்ட கடன்களின் விகிதம் 49 சதவீதம் அதிகரித்துள்ளது.
- வீட்டு உபயோகப் பொருட்கள், பழுது பார்ப்பதற்க்காக செலவிட்ட குடும்பங்களின் விகிதம் 29 சதவீதம் அதிகரித்துள்ளது.

- குடும்ப உறுப்பினர்களில் திறன் பெற்ற தொழிலாளர்களின் விகிதம் **37** சதவீதம் அதிகரித்துள்ளது.
- கிராம சபைகளில் பெண்களின் பங்கேற்பு **60** சதவீதம் உயர்ந்துள்ளது.
- குடும்பங்களில் வாழ்வாதார நடவடிக்கைகள் குறித்து மகளிர் முடிவு எடுக்கும் விகிதம் **14** சதவீதம் அதிகரித்துள்ளது.

## 7.7.நிதி செயலாக்கம்

அமெரிக்க டாலர்– இந்திய ரூபாய் இடையிலான மதிப்புகளில் ஏற்பட்ட மாற்றத்தின் விளைவாக திட்டத்தின் ஆரம்ப மதிப்பீடு ரூ.**1667.10** கோடியிலிருந்து ரூ.**1871.85** கோடியாக உயர்ந்து ரூ. **204.75** கோடி கூடுதலாகக் கிடைத்துள்ளது. தற்போதைய திட்ட ஒதுக்கீடான ரூ.**1871.85** கோடியில் **2017** மே மாதம் வரை ரூ.**1818.16** கோடி அளவிற்கு திட்டம் செலவினம் மேற்கொண்டுள்ளது.

**2005** ஆம் ஆண்டு நவம்பர் திங்கள், உலக வங்கி நிதியுதவியுடன் தொடங்கப்பட்ட தமிழ்நாடு புதுவாழ்வுத் திட்ட இலக்கு ஏழை மக்கள் பயன்பெறும் வகையில் **12** ஆண்டுகளாக செயல்பட்டு, **30.06.2017** அன்று நிறைவடைய உள்ளது.

**7.8. தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டம் (TNRTP) புதுவாழ்வுத் திட்டம் II**

புது வாழ்வுத் திட்டத்தினைத் தொடர்ந்து, தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டம் (TNRTP)- புதுவாழ்வுத் திட்டம் II என்ற புதிய திட்டம் ஊரக தொழில்களை உருவாக்கவும், மேம்படுத்தவும் மற்றும் வேலைவாய்ப்புகளை உருவாக்கவும், புதுவாழ்வுத் திட்டம் அல்லாத 120 புதிய வட்டாரங்களில் உலக வங்கி நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட உள்ளது.

# 8. பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதியத்தின் உதவியுடன் கூடிய

# சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டம்

## 8. பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதியத்தின் உதவியுடன் கூடிய

## சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டம்

தமிழ்நாட்டின் 13 கடலோர மாவட்டங்களை 26 டிசம்பர் 2004 ஆம் ஆண்டு எதிர்பாராதவிதமாக தாக்கிய ஆழிப்பேரலையால் பல்லாயிரக்கணக்கான மனித உயிர்கள், கால்நடைகள், அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளான சாலைகள், மின் விநியோகம், வீடுகள் மற்றும் குடிநீர் இணைப்புகளும் பெரிதும் சேதமாகி செயலற்றுப் போயின. மக்களின் நல் வாழ்வையே தனது கடமையாகக் கருதும் மாநில அரசால், பாதிக்கப்பட்ட சமூகத்திற்கு விரைவான துயர் துடைப்பு மற்றும் மறுவாழ்வு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. கடலோர சமுதாய மக்களின் நிலைத்த வாழ்வாதாரத்தை உறுதி செய்ய அரசின் உன்னத மற்றும் தொலைநோக்குப் பார்வையின் அடிப்படையில், பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதியத்தின் உதவியுடன் சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் துவங்கப்பட்டது.

இத்திட்டத்தின் மூன்று முக்கிய உட்கூறுகள் 1) கடலோர வள ஆதார மேலாண்மை, 2) ஊரக நிதி மற்றும் இடர்பாடு நீக்கும் நடவடிக்கைகள், 3) வேலைவாய்ப்பு உருவாக்குதல் மற்றும் தொழில் திறன் பயிற்சி போன்றவைகள் ஆகும்.

## 1. திட்டப் பகுதிகள் :

இத்திட்டம், 2007 – 08 ஆண்டில் முதற் கட்டமாக ஆறு கடலோர மாவட்டங்களில் மேம்படுத்தப்பட்டு தற்போது, தமிழ்நாட்டில், சென்னை தவிர ஆறு கடலோர மாவட்டங்களுக்கும் 2016–17 லிருந்து விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

### அ. ஏற்கனவே திட்டம் செயல்பட்டு வரும் மாவட்டங்கள்

| | | |
|---|---|---|
| திட்டக் காலம் | : | 2007 –08 முதல் 2018–19 வரை |
| திட்ட மதிப்பீடு | | ரூ.283.69 கோடி |
| திட்டப் பகுதிகள் | : | திருவள்ளூர், காஞ்சிபுரம், விழுப்புரம், கடலூர், நாகப்பட்டினம் மற்றும் கன்னியாகுமரி |

### ஆ. கூடுதலாக திட்டம் செயல்படுத்தப்படும் புதிய மாவட்டங்கள்

| | | |
|---|---|---|
| திட்டக் காலம் | : | 2016 – 17 முதல் 2018–19 வரை |
| திட்ட மதிப்பீடு | | ரூ.279.49 கோடி |
| திட்டப்பகுதி | : | திருவாரூர், தஞ்சாவூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி |

## 2. செயலாக்க அமைப்பு :

ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சித் துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்கள் தலைமையில் ‘‘மாநில திட்ட

வழிகாட்டுக் குழு'' அமைக்கப்பட்டு திட்ட செயல்பாடுகள் நிர்வகிக்கப்பட்டு வருகின்றது. மத்திய திட்ட மேலாண்மை அலகில் முதன்மை செயலாளர் அவர்கள் திட்ட இயக்குநராக தலைமையேற்க, கூடுதல் இயக்குநர், நிதி (ம) நிர்வாக மேலாளர், முதுநிலை ஊரக நிதி மேலாளர், செயற்பொறியாளர், நிறுவன வளர்ச்சி மேலாளர், கண்காணிப்பு (ம) மதிப்பீடு மேலாளர் மற்றும் தகவல் (ம) தொழில் நுட்ப மேலாளர் ஆகியோரைக் கொண்டு திட்ட மேலாண்மை அலகு மாநில அளவில் செயல்பட்டு வருகின்றது. மாவட்ட ஆட்சியர் தலைமையில் ''மாவட்ட அளவிலான செயல்பாட்டு ஆலோசனைக் குழு'' அமைக்கப்பட்டு, மாவட்ட செயலாக்க அலுவலர், உதவி செயற் பொறியாளர், கணக்கு அலுவலர், சமுதாய வளர்ச்சி அலுவலர், நிறுவன வளர்ச்சி அலுவலர், கண்காணிப்பு (ம) மதிப்பீடு அலுவலர் மற்றும் உதவிப் பொறியாளர் ஆகியோருடன் மாவட்ட செயலாக்க அலகு மாவட்ட அளவில் செயல்பட்டு வருகின்றது.

**3. நோக்கங்கள் :**

கடலோர சமுதாய மக்களின் தற்சார்புடைய நீடித்த வாழ்வாதாரத்தை கூட்டு முயற்சியுடன் ஏற்படுத்துவதே இத்திட்டத்தின் முக்கிய அம்சமாகும். ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் சமுதாய மக்களின் ஒத்துழைப்புடனும், பல்வேறு நிறுவனங்களின் உதவியுடனும், நீடித்து செயல்படக்கூடிய நுண் தொழில்களை ஏற்படுத்தி, திறன் மேம்பாட்டு பயிற்சிகளை வழங்கி, கடன் வசதிகளை

ஏற்படுத்தி, இடர்பாடுகளை தவிர்க்க காப்பீடு வசதிகள் செய்து தருவதுடன், மீன்வள ஆதாரத்தை மேம்படுத்தும் முயற்சிகளையும் உருவாக்கி நிலைத்த வாழ்வாதார நடவடிக்கைகளை ஏற்படுத்துவதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்களாகும்.

**4. திட்டப் பயனாளிகள்:**

சுனாமியால் நேரடியாகவோ, மறைமுகமாகவோ பாதிக்கப்பட்ட கடலோர கிராமங்களில் வசிக்கும் கீழ்க்கண்ட பிரிவினர்:–

- வள்ளம், சிறு படகு போன்றவற்றை பயன்படுத்தி கரையோரங்களில் மீன்பிடிக்கும் மீனவர்கள்
- சிறிய அளவில் வியாபாரம் செய்யும் பெண் மீன் வியாபாரிகள் மற்றும் பதப்படுத்துவோர்
- கடலோரப் பகுதிகளில் மீன்பிடி தொழில் மற்றும் விவசாயத்தில் ஈடுபட்டுள்ள கூலித் தொழிலாளர்கள்
- சிறு மற்றும் குறு விவசாயிகள்
- பிற சிறு தொழில் செய்வோர் (உ.ம் :– சங்கு, சிப்பி சேகரிப்போர்)
- சமுதாய பங்கேற்புடன் கண்டறியப்பட்ட மிகவும் ஏழைகள் மற்றும் ஏழைகள்

**5. கடலோர வள ஆதார மேலாண்மை :**

**அ. சமுதாய ஆதரவு :**

திட்ட செயலாக்கத்திற்கு உறுதுணையாக கள அளவில் 5 முதல் 7 வரையிலான கடலோர ஊராட்சிகளை

உள்ளடக்கிய கூட்டு வள மையம் அரசு சாரா நிறுவனங்களின் உதவியுடன் உருவாக்கப்பட்டுள்ளன. தற்போது திட்டம் செயல்பட்டு வரும் **6** மாவட்டங்களில் **28** கூட்டு வள மையங்கள் நிறுவப்பட்டுள்ளது. இந்த ஆண்டில் கூடுதல் மாவட்டங்களில் **36** கூட்டு வள மையங்கள் துவக்கப்படும். ஒவ்வொரு கூட்டு வள மையத்திலும், திட்ட ஒருங்கிணைப்பாளர், திட்ட செயலாக்குநர், வியாபார ஊக்குநர் மற்றும் கூடுதல் வியாபார ஊக்குநர் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர். கூட்டு வள மையங்களுக்கு அலுவலகக் கட்டிடம், தகவல் தொழில்நுட்ப வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தை கள அளவில் செயல்படுத்தக்கூடிய சமுதாய அமைப்பாக ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு அலுவலகக் கட்டிடம், தகவல் தொழில்நுட்ப வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. சுய உதவிக் குழு மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு உறுப்பினர்களுக்கு இதர மாவட்டங்களில் செயல்பட்டு வரும் சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டம், புது வாழ்வு திட்டம், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் போன்ற திட்டங்களின் மூலம் வெற்றிகரமாக செயல்பட்டு வரும் நுண்தொழில்கள் மற்றும் சமுதாயம் சார்ந்த நிறுவனங்களை திறமையான நிர்வாகம் செய்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் இடங்களுக்கு பட்டறிவுப் பயணங்கள் ஆண்டுதோறும் அழைத்து செல்ல ஏற்பாடு செய்யப்படுகின்றன. இதன் மூலம் தகவல் பரிமாற்றம், அறிவு

சார் பரவல், சுய உதவிக் குழு மற்றும் கூட்டமைப்பு உறுப்பினர்களுக்கு ஏற்படுத்தப்படுகின்றது. 2016– 17 ல் ரூ.34.60 இலட்சம் செலவில் நான்கு கூட்டமைப்பு கட்டிடங்களும், ரூ.139.20 இலட்சம் செலவில் 17 வலை பின்னும் கூடங்களும், ரூ.16.75 இலட்சம் செலவில் மூன்று மீன் உலர் களங்களும், ரூ.30.00 இலட்சம் செலவில் இரண்டு குடிநீர் சுத்திகரிப்பு நிலையங்களும் கட்டித் தரப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளன.

**ஆ. சமுதாய வள ஆதாரங்களுக்கான திட்டமிடுதல் :**

திட்ட செயல்பாடுகள் ஆரம்பிக்குமுன், அடிப்படை வள ஆதாரக் கணக்கெடுப்பு, வாழ்வாதார வரைபடம், தர மதிப்பீடு போன்ற பணிகள் கடலோர சமுதாய பங்கேற்புடன் மேற்கொள்ளப்பட்டன. ஒவ்வொரு கடற்கரையோர கிராம சமுதாய மக்களின் சுற்றுச்சூழல் பாதுகாக்கும் வகையில் வாழ்வாதார நடவடிக்கைகளை மேம்படுத்த தேவையான உட்கட்டமைப்பு வசதிகளான வலை பின்னும் தளம், மீன் உலர் களம், மீன் கொள்முதல் நிலையம், மீன் ஏலக்கூடம், கூட்டமைப்பு அலுவலகக் கட்டிடம் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்கும் கலன்கள் போன்ற நுண்திட்டங்கள் மூலம் தேர்வு செய்யப்படுகின்றன. 2017 – 18 ல் இரண்டாம் கட்ட மாவட்டங்களில் நடப்பு ஆண்டில் 129 திட்ட ஊராட்சிகளில் ரூ.38.70 இலட்சம் மதிப்பீட்டில் வாழ்வாதார வரைபடம் தயாரித்தல், ரூ.12.90 இலட்சம் மதிப்பீட்டில் நுண் திட்டம் தயாரித்தல், ரூ.20.64 இலட்சம் மதிப்பீட்டில் அரையாண்டு

திட்டமிடல் ஆகிய பணிகள், ரூ.21.60 இலட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

**இ. மீன் வள ஆதார மேலாண்மை :**

மீன் வளத்தைப் பெருக்கும் பொருட்டு, மத்திய கடல்சார் மீன் வள ஆராய்ச்சி நிலையத்தின் தொழில் நுட்ப உதவியுடன் செயற்கை பவளப் பாறைகள் 3 வடிவில் தயார் செய்யப்பட்டு 6 இடங்களில் கடற்கரையிலிருந்து 5 கி.மீ.தொலைவில் நிறுவப்பட்டுள்ளன. மேலும், 2016 – 17 ஆம் ஆண்டில் செயற்கை பவளப்பாறைகள் நிறுவ 12 இடங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன. மீன் வள மேலாண்மை தொடர்பான பிரச்சினைகளை கண்டறிந்திட மாநில மற்றும் மாவட்ட அளவிலான கருத்தரங்குகள் நடத்தப்படுவதுடன், கண்டறியப்படும் பிரச்சினைகளுக்கு தக்க வல்லுநர்களின் உதவியுடன் தீர்வு காணப்படுகின்றன.

**6. ஊரக நிதி மற்றும் இடர்பாடு நீக்கும் நடவடிக்கைகள் :**

**அ. சுய உதவிக் குழுக்களுக்கு நுண் கடனுதவி :**

சுய உதவிக் குழுக்களின் நிலைத்த வாழ்வாதாரத்திற்கு எவ்வித தடையின்றி குறித்த காலத்தில் கடன் வழங்வதே முக்கிய காரணியாக அமைகிறது. மாவட்ட அளவிலான கருத்தரங்குகள் மூலம் திட்டப் பகுதியிலுள்ள திறன்மிகு சுய உதவிக் குழுக்களை வங்கியாளர்களுக்கு அறிமுகப்படுத்தி தர மதிப்பீடு செய்து எளிதில் கடன் இணைப்பு பெற்று தரப்படுகின்றன. ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் செயல்பாடுகள் மற்றும் சீரிய நுண்தொழில்களை நேரடியாக

அறிந்து கொள்ளும் பொருட்டு வங்கியாளர்களுக்கு பட்டறிவுப் பயணம் ஏற்பாடு செய்யப்படுகிறது. ஐசிஐசிஐ வங்கி, தேசிய வேளாண் வளர்ச்சி வங்கியின் துணை நிறுவனமான நாபின்ஸ், பல்லவன் கிராம வங்கி போன்ற வங்கிகளின் வியாபார மேம்பாட்டு முகவர்களாக ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் நியமனம் செய்யப்பட்டு சமுதாய கண்காணிப்புடன் கூடிய கடன் வழங்குதல் மற்றும் திரும்ப செலுத்துதல் செயல்பாட்டில் உள்ளது. **2016 – 17** ல் **1,204** சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிகளின் மூலம் ரூ. **4,094.77** இலட்சம் கடன் வழங்கப்பட்ட வகையில் **16,756** உறுப்பினர்கள் பயனடைந்துள்ளனர். மேலும், **656** கூட்டுப் பொறுப்பு குழுக்களுக்கு ரூ.**1,561** இலட்சம் மதிப்பில் வாழ்வாதாரக் கடன் உதவி மூலம் **3,280** உறுப்பினர்கள் பயனடைந்துள்ளனர்.

## ஆ. இடர்பாடு மேலாண்மை :

- **துயர் குறைப்பு நிதி :** ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மூலம் துயர் குறைப்பு நிதி நிர்வகிக்கப்பட்டு, எதிர்பாராமல் ஏற்படும் இடர்பாடுகளால் வாழ்வாதாரப் பாதிப்பு, சுகாதார பாதிப்பு, விபத்து மற்றும் குடியிருப்பு சேதம் ஆகிய இழப்புகளுக்கு இந்நிதி பயன்படுத்தப்படுகிறது. இதற்கான வட்டி விகிதம் **6** சதவீதமாகவும், திருப்பி செலுத்தும் காலம் **12** முதல் **18** மாத தவணைகளாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்த நிதியின் 5ல் 4 பகுதி (4/5) திட்ட நிதியாகவும், **1/5** பங்கு

பயனாளிகளின் பங்குத் தொகையாகவும் வரையறுக்கப்படுகிறது. இக்கடன் தொகை ரூ.1000/– முதல் ரூ.7500/– வரை வழங்கப்படுகிறது.

**துயர் குறைப்பு நிதியின் பயன்பாடு விவரம்**

| வருடம் வாரியாக | பயனடைந்த பயனாளிகள் | தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 2010 – 11 | 1875 | 61.02 |
| 2011 – 12 | 1622 | 66.72 |
| 2012 – 13 | 3391 | 151.96 |
| 2013 – 14 | 3860 | 206.78 |
| 2014 – 15 | 6582 | 324.28 |
| 2015 – 16 | 6786 | 345.75 |
| 2016 – 17 | 3660 | 225.71 |
| **மொத்தம்** | **27776** | **1382.22** |

- **நுண் தொழில் மேம்பாடு மற்றும் புதிய உத்திகளுக்கான நிதி :** புதிய உத்தியை கையாளும் விதமாக சமையலறைக் கழிவுகளிலிருந்து 564 எரிவாயு உற்பத்தி செய்யும் கலன்கள் கடலோரப் பகுதிகளில் நிறுவப்பட்டுள்ளன. பயனாளிகள் ஒரு கலன் அமைப்பதற்கான மதிப்பீடு தொகை ரூ.20,900/–ல், 30 சதவீதம் திட்ட மானியமாகவும், 24 சதவீதம் குறைந்த வட்டிக்கும், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புக் கடனாக 36 விழுக்காடாகவும் மற்றும் பயனாளிகளின் பங்குத் தொகை 10 சதவீதமாகவும் உள்ளது. சமையலறைக் கழிவுகளை மறுசுழற்சி செய்யப்பட்டு உபயோகப்படுத்துவதால், சுற்றுச் சூழல் தூய்மையாக பராமரிக்கப்படுகின்றது. 2016 – 17 ஆம் ஆண்டில்

ரூ.**40.96** இலட்சம் மதிப்பீட்டில் சமையலறைக் கழிவுகளிலிருந்து எரிவாயு தயாரிக்கும் **196** கலன்கள் நிறுவப்பட்டு உபயோகத்தில் உள்ளன.

- **நலிவுற்ற தொழில் முனைவோர் மூலதன நிதி :** நலிவுற்ற தொழில் முனைவோர் மூலதன நிதி மூலம் கடன் வழங்க ரூ.**7.00** கோடி சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்திலிருந்து நாபின்ஸ் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டு, இதிலிருந்து ஒவ்வொரு தொழில் கடன் மொத்த தொகையில் **25** சதவீதத் தொகைக்கு **4** சதவீத வட்டி விகிதமும், **70** சதவீதத் தொகைக்கு பாரத ரிசர்வ் வங்கியால் அனுமதிக்கப்பட்ட வட்டி விகிதமும், நிர்ணயிக்கப்பட்டுள்ள இத்தொகையில் **5** விழுக்காடு பயனாளிகளின் பங்குத் தொகையாகும். இதன் மூலம் அதிகமான குறுந்தொழில்கள் கூட்டுப் பொறுப்புக் குழுக்கள் மூலமாக திட்டப்பகுதிகளில் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இதுவரை **1296** வருவாய் ஆதார நுண் தொழில்கள் ரூ.**3092.50** இலட்சம் மதிப்பீட்டில் ஏற்படுத்தப்பட்டு, **6204** மகளிர் பயனடைந்துள்ளனர்

## 7. வேலைவாய்ப்பு உருவாக்குதல் மற்றும் தொழில் திறன் பயிற்சி

### அ. சுய உதவிக் குழுக்களுக்கு ஆதரவு

திட்ட இலக்கு குழுக்களின் வாழ்வாதாரத்தை திறன் வளர்ப்பின் மூலம் நிலைப்படுத்தும் வகையில், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு நிதி மேலாண்மை, நிர்வாகம், கணினி பயிற்சி, மகளிருக்கு அதிகாரம்

வழங்குதல் தொடர்பான திறன் மேம்பாட்டு பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் பயன்பாட்டிற்காக டேலி மென்பொருள் வடிவமைக்கப்பட்டு, உறுப்பினர் சுய உதவிக் குழுக்களின் அன்றாட பரிவர்த்தனைகளை பதிவு செய்யப்படுகின்றது. சிறப்பாக செயல்படும் சுய உதவிக் குழுக்களிலிருந்து தேர்வு செய்யப்பட்ட **200** சமுதாய வள ஆதார பணியாளர்களுக்கு திட்டக் காலம் முடிவடைந்த பின்னர் திட்டச் செயல்பாடுகளைத் தொடர்ந்திட தேவையான பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன.

**ஆ. மீன் விற்பனை சங்கங்கள் உருவாக்குதல் :**

சிறு படகுகள், கட்டுமரம் மற்றும் வள்ளம் மூலம் மீன் பிடிப்போர் ஆகியோரை மட்டுமே உறுப்பினர்களாகக் கொண்ட **60** மீன் விற்பனை சங்கங்கள் தென்னிந்திய மீனவர் சங்கங்களின் கூட்டமைப்புடன் இணைந்து உருவாக்கப்பட்டுள்ளன. மீன் விற்பனை சங்க உறுப்பினர்களை இடைத்தரகர்களிடமிருந்து மீட்கும் பொருட்டு ரூ.**15,000/–** முதல் ரூ.**30,000/–** வரை கடன் மீட்பு நிதி வழங்கப்பட்டுள்ளது. மீன் விற்பனை சங்கங்களுக்கு அனைத்து கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய கட்டிடங்கள் கட்டித் தரப்பட்டுள்ளன. மாவட்ட அளவில் திருவள்ளூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் மீனவர்கள் சங்கங்களின் கூட்டமைப்புகள் உருவாக்கப்பட்டு அவற்றிற்கு மூலதன நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது. காஞ்சிபுரம், கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களை ஒருங்கிணைத்து

ஒரு கூட்டமைப்பு விழுப்புரம் மாவட்டத்தில் உருவாக்கப்பட்டுள்ளது. படகு பழுது பார்த்தலை எளிதாக்கிட வெளி பொருத்து மோட்டார் என்ஜின் பழுது நீக்கும் நிலையங்கள் மூன்றும் மற்றும் மூன்று படகு கட்டும் தளங்களும் கட்டித் தரப்பட்டுள்ளன. மேலும், மீன்களை சுகாதார முறையில் பயன்படுத்திட நான்கு மீன் ஏலக் கூடங்கள் மற்றும் நான்கு மீன் கொள்முதல் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

**இ. வருமானத்தை பெருக்கும் நடவடிக்கைகள் தொடர்பான பயிற்சி**

நுண்தொழில் வளர்ச்சியை ஊக்கப்படுத்தும் வகையில் குறிப்பாக சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு வருமானத்தைப் பெருக்கும் நடவடிக்கைகளுக்காக **17,092** சமுதாய மக்களுக்கு விழிப்புணர்வு பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

**ஈ. நுண் தொழில் மேம்பாடு** உற்பத்திக் குழுக்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள், மீன் விற்பனை சங்க உறுப்பினர்கள் மற்றும் ஏழ்மை நிலையிலுள்ளோர் நுண் தொழில்களை துவங்க ஊக்கம் அளிக்கப்படுகிறது. தகுதியான பயனாளிகளைக் கண்டறிந்து அவர்களுக்கு வெற்றிகரமாக நுண்தொழில்களை உருவாக்குவதற்கு வழிகாட்ட ஆலோசகர்கள் / இளம் வல்லுநர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இத்திட்டம் சுய வேலைவாய்ப்பு மற்றும் வருமானத்தைப் பெருக்கும் நடவடிக்கைகளிலிருந்து,

மரபு சார்ந்த மற்றும் புதுமையான உத்திகளின் அடிப்படையிலான நுண்தொழில்களை பயனாளிகள் மேற்கொள்ளச் செய்வது இத்திட்டத்தின் நோக்கமாகும். மா விவசாயம், காய்கறி மற்றும் மூலிகைச் செடிகள், மலர்த் தோட்டம், மீன் மற்றும் கருவாடு விற்பனை, கோழி வளர்ப்பு, தென்னை விவசாயம், கயிறு தயாரித்தல், தென்னை ஓலை முடைதல், பொம்மை செய்தல், கடற்சிப்பி பொருட்கள் தயாரித்தல், முந்திரி பருப்பு பதனிடுதல், புடவை வண்ணம் தீட்டுதல், மளிகை வியாபாரம், சிற்றுண்டியகம், அழகுக் கலை நிலையம், மின்னணு சேவை மையத்துடன் இணைந்த நகல் மையம் போன்ற தொழில்களுக்கு நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.

**உ. வேலையற்ற இளைஞர்களுக்கு தொழில்திறன் பயிற்சி :**

திட்டப் பகுதிகளில் உள்ள வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு தகுந்த தொழில் பிரிவுகளில் மூன்று மாதம் முதல் ஒரு வருடம் வரையிலான காலத்திற்கு வேலைவாய்ப்புடன் கூடிய தொழில் திறன் பயிற்சி வழங்கப்படுகிறது. இதுவரை **6,821** ஊரக இளைஞர்கள் பயிற்றுவிக்கப்பட்டுள்ளனர். இரண்டாம் கட்ட மாவட்டங்களில் நடப்பு ஆண்டில் ரூ.**195** இலட்சம் மதிப்பீட்டில் **1500** இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புடன் கூடிய தொழிற் பயிற்சி அளிக்கப்பட உள்ளது.

**8. கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு :**

மாநிலம், மாவட்டம், கூட்டு வள மையம் மற்றும் ஊராட்சி அளவில் கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு கட்டமைப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. திட்ட செயல்பாடுகளின் நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளின் அடிப்படையிலான முன்னேற்றம் இணையதளம் வாயிலாக தொடர்ந்து கண்காணிக்கப்படுகின்றன. இத்திட்டத்தின் முன்னேற்றங்களை கால வரையறையுடனான தனிப்பட்ட திட்ட நடவடிக்கைகளை மாதாந்திர நேரடி ஆய்வுக் கூட்டங்கள் மற்றும் காணொளி மூலம்ஆய்வு செய்யப்பட்டு வருகின்றன. மேலும், சமூக ஊடகங்களின் மூலம் தகவல் பரிமாற்றம், சிறந்த செயல்பாடுகளை கற்றுக்கொள்ளவும் மற்றும் சாதனைகளை அறிந்து கொள்ளவும் மற்றும் அறிவுசார் பகிர்வு போன்றவை ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு வரையிலும் அறிந்து கொள்ள வழி வகை செய்யப்படுகிறது.

**9. அறிவுசார் மேலாண்மை :**

சமுதாயம் மற்றும் கூட்டு வள மைய அளவில் அறிவுசார் தேவை குறித்த மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டு திட்ட அறிவுசார் மேலாண்மை யுக்தி தயாரிக்கப்பட்டுள்ளது. திட்டத்தின் நிகழ்வுகள் குறிப்பாக கூட்டங்கள், பயணங்கள், சிறந்த நடைமுறைகள் மற்றும் பயிற்சிகள் ஆகியவற்றை “முற்றம்” மாத இதழில் கட்டுரைகளாக வெளியிடப்பட்டு வருகின்றன. துண்டுப் பிரசுரங்கள், குறும்படங்கள் ஆகியவையும் தயாரிக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளன.

# 9. வரவு செலவுத் திட்டம் 2017–2018

**9. வரவு செலவுத் திட்டம் 2017–2018**

**2017–2018** ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் ரூ.16,665.426 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் வருவாய் செலவினங்களுக்காக ரூ.15,236.985 கோடியும், மூலதனச் செலவினங்களுக்காக ரூ.1,428.441 கோடியும் மற்றும் அரசு ஊழியர்களுக்கான கடன் தொகைக்காக ரூ.**0.25** கோடியும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

# 10. முடிவுரை

**முடிவுரை**

மாண்புமிகு தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தொலைநோக்குடன் கூடிய வழிகாட்டுதலின் கீழ், இந்த அரசு, ஊரக வளர்ச்சிக்கு, ஒரு முழுமையான அணுகுமுறை தேவை என்பதை நன்கு உணர்ந்து, அதற்காக, தமிழ்நாடு குக்கிராமங்கள் மேம்பாட்டுத் (தாய்) திட்டம், முதலமைச்சரின் சூரிய மின் சக்தியுடன் கூடிய பசுமை வீடுகள் திட்டம், தமிழ்நாடு ஊரகச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம், தூய்மை காவலர்கள் மூலமாக திடக்கழிவு மேலாண்மை போன்ற பல்வேறு முன்னோடித் திட்டங்களை அறிமுகப்படுத்தியுள்ளது. இதுபோன்ற தன்னிகரற்ற புதுமையான திட்டங்கள், நாடு முழுவதும் பின்பற்றக் கூடிய வகையில் அமைந்துள்ளன. ஊரக வளர்ச்சித் துறையின் முன் தற்போது உள்ள தெளிவான பணி, இத்திட்டங்களை மேம்படுத்தி, அதன் மூலமாக, ஊரக மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதே ஆகும்.

ஊரகப் பகுதியின் வளர்ச்சியில் கிராம ஊராட்சிகள் துடிப்புடன் பங்கேற்பது, கிராம ஊராட்சி அளவில் கிடைக்கக் கூடிய நிதி ஆதாரங்கள் பொறுத்தே அமைகிறது. கிராம ஊராட்சிகள் மேறிகொள்ளும் செலவினத்தில் பெரும் பகுதி மின்சார கட்டணத்திற்கே செல்வதை கருத்திற் கொண்டு, தெருவிளக்குகளை LED விளக்குகளாக மாற்றுதல், மின்சார இணைப்புகளை ஒழுங்குபடுத்துதல் மற்றும் தமிழ்நாடு மின்

உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் கணினி வழங்கியுடன் ஊரக வளர்ச்சித் துறையின் கணினி வழங்கியை இணைத்தல் போன்ற அரசால் எடுக்கப்பட்ட பல்வேறு நடவடிக்கைகள் கிராம ஊராட்சியில் உள்ள நிதி பற்றாக்குறையை கணிசமான அளவில் குறைக்கும். மேலும் ஐந்தாவது மாநில நிதிக்குழு மான்யத்தின் பரிந்துரைகளை செயல்படுத்தி, நிதி ஆதாரங்களை சிறந்த முறையில் பகிர்ந்தளித்து உள்ளாட்சி அமைப்புகளை வலுப்படுத்த இந்த அரசு உத்தேசித்துள்ளது.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்துடன் சிறந்த முறையில் ஒருங்கிணைந்து பல்வேறு தனிநபர் மற்றும் பொது சொத்துக்கள் உருவாக்கி மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட செயலாக்கத்தில் ஒரு புதிய பரிமாணத்தினை இந்த அரசு கொண்டு வந்துள்ளது. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தினை நல்ல முறையில் பயன்படுத்தி மீள் நிரப்பு குழாய் (Recharge shaft), தடுப்பணை, கற்களால் ஆன கரை அமைத்தல், மண்ணால் ஆன கரை அமைத்தல், மற்றும் இதர மழைநீர் சேகரிப்பு பணிகள் போன்ற வறட்சியை மட்டுப்படுத்தும் பணிகள் **2017–18**ம் ஆண்டில் மேற்கொள்ளப்படுவது முக்கிய குறிக்கோளாகும்.

தமிழ்நாட்டினை திறந்தவெளி மலம் கழித்தல் அற்ற மாநிலமாக மாற்றுவதற்கு மேற்கொள்ளப்படும் அணுகுமுறையில், பரவலாக்கப்பட்ட சமூகம் சார்ந்த அணுகுமுறைக்கு முக்கியத்துவம் தரும் வகையில் புதிய

கட்டமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. தொழில்நுட்ப உதவி, ஊக்குவிப்பு மற்றும் கண்காணித்தல் ஆகியவற்றின் கூட்டு முயற்சியின் வாயிலாக, சுகாதார நடவடிக்கைகள் சிறந்த முறையில் தொடர்ந்து செயல்படுத்தப்படும். அரசு மேற்கொண்ட தொடர் முயற்சியின் பலனாக, கடந்த **2** ஆண்டுகளில் **4,364** கிராம ஊராட்சிகள் திறந்த வெளி மலம் கழித்தல் அற்ற ஊராட்சிகளாக அறிவிக்கப்பட்டுள்ளன.

திடக்கழிவு மேலாண்மை முறையை செயல்படுத்துவதற்கு மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட பணியாளர்களை தூய்மை காவலர்களாக பயன்படுத்தியது நாட்டிற்கே முன்னோடியாகும். அரசு, இந்த முறையை தொடர்ந்து செயல்படுத்துவதற்குத் தேவையான கட்டமைப்பு வசதிகளை தொடர்ந்து ஏற்படுத்தி தரும்.

குடியிருப்பு வசதிகள் ஏற்படுத்துதல், பள்ளிகள், அங்கன்வாடி மையங்கள், பொது விநியோகக் கடைகள் போன்ற பல்வேறு வசதிகளை உருவாக்குதல் மற்றும் ஊரகச் சாலைகளை முழுமையான முறையில் பராமரிக்கவும் மேம்படுத்தவும் தொடர்ந்து உறுதுணை அளிப்பது இந்த அரசின் மையக் குறிக்கோளாக விளங்கும்.

தமிழ்நாடு புதுவாழ்வுத் திட்டம் (TNPVP) மற்றும் தமிழ்நாடு மாநில வாழ்வாதாரத் திட்டத்தினை (TNSRLM) செயல்படுத்துவதன் மூலம் ஊரகப் பகுதிகளிலுள்ள ஏழைகள் மற்றும் பெண்களுக்கு எண்ணற்ற வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஊரகப் பெண்களுக்கு


அதிகாரமளித்தல், திறன் மேம்படுத்துதல் மற்றும் நிதியுதவி அளிப்பதன்மூலம் அவர்களை சுயசார்பு உள்ளவர்களாக மாற்றுவதே இந்த அரசின் குறிக்கோளாகும். சமூக பங்கேற்பின் மூலம், வறுமை மற்றும் வேலையின்மை யைப் போக்குவதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுத்து வருகின்றது. இது ஏழை மற்றும் இயலாதவர்களை கண்டறிதல் என தொடங்கி, பயிற்சி அளித்தல் மற்றும் திறன் மேம்படுத்துதல், வங்கி கடன் இணைப்பு ஏற்பாடுகள் மற்றும் இறுதியாக சுய தொழில் மற்றும் வேலைவாய்ப்புகளை வழங்குதல் என முழு வடிவம் பெறுகிறது. தமிழ்நாட்டின் ஊரகப் பகுதிகளில் சுய உதவிக் குழுக்களின் மூலம் குறிப்பிடத்தக்க மாற்றத்தினை கொண்டுவர இந்த அரசு தொடர்ந்து முயற்சிக்கும்.

வறுமை ஒழிப்பு என்ற இலக்கினை அடைந்து, தமிழகத்தை நாட்டிலேயே மிகச் சிறந்த மாநிலமாக உருவாக்கிட, மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட பல்வேறு முன்னோடி ஊரக வளர்ச்சித் திட்டங்கள், இந்த அரசு பின்பற்றக் கூடிய கலங்கரை விளக்கமாக அமையும்.


**எஸ்.பி.வேலுமணி,**
**நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும்**
**சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்**





முதலமைச்சரின் சூரிய மின்சக்தியுடன் கூடிய பசுமை வீடு





**மாவட்ட வாரியாக ஊராட்சி ஒன்றியங்களின் எண்ணிக்கை**





மாவட்ட வாரியாக கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை





**மாவட்ட வாரியாக குக்கிராமங்களின் எண்ணிக்கை**





மாவட்ட வாரியாக ஊரக பரப்பளவு (ச.கி.மீ)




2011–ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி கிராம ஊராட்சிகளின் விவரங்கள்




**வருவாய் வரம்பின் அடிப்படையில் கிராம ஊராட்சிகளின் விவரங்கள்**


32,241
6,302
7,177
97,095
2,711
3,246
தார்ச் சாலை
சிமெண்ட் சாலை
ஈரடுக்கு கப்பிசாலை
ஓரடுக்கு கப்பிசாலை
சரளைக்கல் சாலை
மண்சாலை

ஊரக சாலைகள் ( கி.மீ )



புதிய அங்கன்வாடி கட்டடம்



புதிய தார்ச் சாலை அமைத்தல்



புதிய பாலம் அமைத்தல்




புதிய ஊராட்சி ஒன்றிய அலுவலகம்









மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட செயல்பாடுகள்




புதிய வட்டார சேவை மையக் கட்டடம்




புதிய கிராம ஊராட்சி சேவை மையக் கட்டடம்



நடமாடும் தரக்கட்டுப்பாட்டு ஆய்வகங்கள்









முழு சுகாதார தமிழகம் – முன்னோடி தமிழகம்






திடக்கழிவு மேலாண்மைத் திட்ட செயல்பாடுகள்



ஒத்த தொழில் குழு, தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம்



சுய உதவி குழுவின் பொருளாதாரச் செயல்பாடு



புது வாழ்வு திட்டம்



புது வாழ்வு திட்டம்




**சுனாமிக்கு பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் – மீன் வலை பின்னும் கட்டடம்**